


# கவின்தமிழ் 2001

க்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின

விழா மலர்

840.98
வட
SL IPR

# கவின் தமிழ்

## வடக்கு – கிழக்கு மாகாண
## தமிழ் மொழித்தினம்

## *2001*


**2001 ஆம் ஆண்டு**
**ஜூலை மாதம் 09ஆம் திகதி**

வடக்கு–கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம்
திருகோணமலை

# தமிழ்த்தாய் வணக்கம்



நீராடும் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே



பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்குக்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போ லுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுண்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே

-மனோன்மணியம்-

# “ கவின் தமிழ் ”


**இதழ் ஆலோசனைக் குழு**

திரு.எஸ். மகாலிங்கம்
*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்*

திரு.ந.அனந்தராஜ்
*உதவிக்கல்விப் பணிப்பாளர்*

திரு. முத்து இராதாகிருஷ்ணன்.
*உதவிக்கல்விப் பணிப்பாளர்*

திரு. எஸ் .மகேஸ்
*உதவிக் கல்விப் பணிப்பாளர்*

**முகப்பு ஓவியங்கள்**

திரு. முத்து இராதாகிருஷ்ணன்

**இதழ் ஆசிரியர்**

திரு.ந.அனந்தராஜ்

# MESSAGE FROM
# MAJOR GENERAL, ASOKA K. JEYAWARDANA
# HON.GOVERNOR, N.E.P

*Language is the backbone of any society, and the prosperity of any community is associated with its language. Ralph Waldo Emerson has said, " Language is the archives of history and fossil of Literature. " Language carries with it the history of the community and its rich literature.*

*Tamil is an age old language which has been well patronised by the kings of yester years. It has flourished with the passage of time through the rough roads of history. All must read and understand its richness.*

*Tamil language competitions of this nature will facilitate young minds to read, understand and appreciate the richness and greatness of the Tamil Language. Language development requires such healthy competitions.*

*I wish to extend my best wishes and blessings to the organizing committee for such a laudable effort. Let me congratulate the Provincial Department of Education, N.E.P. and its energetic for a job well done and wish them all the best in all their future endeavors.*

Major General Asoka K. Jayawardhana,
Hon. Governor, NEP.

## வடக்கு கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின்

# ஆசிச் செய்தி

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்'

என்ற பாரதியின் பாவரிகள் நிதர்சனமாகிக் கொண்டு வரும் இவ்வேளையில் இன்பத் தமிழ் ஓசை தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் எல்லாம் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அது, தமிழர்களாகப் பிறந்தவர்கள், தமிழ் மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என்ற வகையில் எம் நெஞ்சங்களையெல்லாம் ஒரு கணம் நிமிர வைக்கின்றது.

இத்துணைப் பெருமையும், தொன்மையும் வாய்ந்த தமிழ்மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும், வாசிக்கவும் எம் தமிழக் குழந்தைகள் பழகிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இன்பத் தமிழ்மொழி நம்மையெல்லாம் வாழ வைக்கும்.

அத்தகைய செயற்பாடுகளுக்கு உறுதுணையாக விளங்குவதற்கு மாணவர்கள் மத்தியில் நடத்தப்படுகின்ற தமிழ்மொழித்திறன் போட்டிகள் உதவுகின்றன.

தேசிய ரீதியில் நாடளாவிய ரீதியில் கொண்டாடப்படும் தமிழ்மொழித் திறன் போட்டிகளுக்கு முன்னோடியாக வடக்கு கிழக்கு மாகாணத்திலும், இத்தகைய போட்டிகளையும், தமிழ்தொழித்தின விழாக்களையும் கொண்டாடுவதனட மூலம் மாணவர்கள் மத்தியில் ஒரு எழுச்சியும், புதிது புதிதாகத் தமிழில் எதையாவது ஆக்க வேண்டும் என்ற படைப்பு இலக்கிய உணர்வுகளும் மேலோங்கி வருவதைக் காண முடிகின்றது.

அந்த வகையில் மிகச் சிறப்பாக தமிழ்மொழி விழாவைக் காண்டாடி மகிழ முன்வந்த வடக்கு கிழக்கு மாகாண கல்விச் சமூகத்துடன் சேர்ந்து நானும் பேருவகை அடைகின்றேன்.

தமிழ்மொழித் தின விழா தொடர்பாக வெளியிடப்படும் ' கவின் தமிழ்' சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

தமிழ் விழா சிறக்கவும், அதன் சிறப்பு மலரான 'கவின் தமிழ்' தமிழ் கூறும் நல்லுலகெங்கும் தமிழ் பரப்பித் தடம் பதித்து ஓங்கவும் வாழ்த்துகின்றேன்.

தலைமைச் செயலகம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
29.06.2001

**ஜி. கிருஷ்ணமூர்த்தி**
தலைமைச் செயலாளர்

## வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. க. பரமேஸ்வரன் அவர்களின்

# ஆசிச் செய்தி

அகத்திய மாமுனிவர் தலைமையில் தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் நம் முன்னைய தமிழ்ச் சான்றோர்கள். முதல் சங்கத்தின் தொடர்ச்சியாக இரண்டாயிரம் ஆண்டுகளுகளுக்கு மேற்பட்ட காலம் வரை நமதினிய தமிழ் மொழிக்கு விழா எடுத்தவர்கள் பல இலட்சம் பேர்..... அதனால் தமிழ் வளருகின்றது,தமிழ் நிலமும் செழிக்கின்றது.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா..." என்பது சங்கத்தினர் ஆய்ந்து கூறிய ஒரு பழம் தமிழ் பாடல். கணியன் பூங்குன்றனாரின் இப் பாடல் அடிகள் , நமது இன்ப துன்பங்களுக்கெல்லாம் நாமே தான் காரணம் என்பதைக் குறிப்பாகச் சுட்டி நிற்கின்றது. அந்த வகையில் தமிழால் வளர்ந்தவர்கள் அந்தத் தமிழ்த்தாயின் மூச்சுக் காற்றில் நல்லவற்றையே நினைவிலும்,செயலிலும் காட்டி வந்தவர்கள், தனக்கென்று ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தையும், நாகரிகத்தையும் கொண்டு வாழ்ந்தவர்கள் இன்று உலகமெங்கும் பரந்து வாழ்கின்றனர்.

பரந்து வாழும் தமிழ் இனத்தின் பலத்திற்கும், தமிழ் மொழியின் பெருமைக்கும் அதன் இனிமையும், அது கொண்டுள்ள செல்வமும் காரணங்களாகின்றன அதற்கு மொழியை எமது குழந்தைகளும் கற்றுத் தெளிய வேண்டும்.தமிழ் மொழியின் திறன்களை அறிந்து ஒழுக வேண்டும். என்றெல்லாம் எண்ணியவர்கள் அழியாத தமிழை அழியும் மனிதனின் செவியிலும், இதயத்திலும் தேனாகப் பாய்ச்சி வருகின்றனர். தமிழைத் தெளிவுறக் கற்பதற்கும் பிழையின்றிப் பேசுவதற்கும், நயப்பதற்கும் பள்ளிப் படிப்புகளும், வெறும் வகுப்பறைப் போதனைகளும் மட்டும் துணை நின்று விடமுடியாது என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்தே பாடசாலைகளில் பாட விதானத்திற்குப்புறம்பான செயற்பாடுகளாக தமிழ் மொழித்திறன் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

தமிழோடு பிறந்தவர்கள்,தமிழுக்காய் வாழ்ந்தவர்கள், தமிழ் மூச்சில் கலந்தவர்கள் என்ற வகையில் நாமும் அந்த உவகையில் திளைத்து நிற்கின்றோம். புதிய நூற்றாண்டின் முதலாவது தமிழ் மொழித்திறன் போட்டிகளையும், தமிழ் மொழித்தின விழாவையும் சிறப்பாக கொண்டாடும் மாகாணக் கல்விச் சமூகத்தைப் பாராட்டுகின்றேன்.

இந்த விழாவின் நினைவாக வெளியிடப்படும் "கவின் தமிழ்" சிறப்பு மலர் சிறக்கவும், பயன் மிகு ஆவணமாய் இருக்கவும் ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

**க. பரமேஸ்வரன்,**
செயலாளர்.

கல்வி, பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை இளைஞர்
விவகார அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
20001.06.30

# விழாவும் மலரும் சிறக்கட்டும்

மாறிவரும் பாட நூல்களினாலும், பெருகிவரும் இதர நடவடிக்கைகளினாலும், மாணவர்கள் புதிது புதிதாகப் பல விடயங்களை உள்வாங்கிக் கொள்கின்றனர், இப்போது தாய், மொழியாகிய தமிழ் மொழியை வழுவற்ற வகையில் எழுதவும் பேசவும் ஆற்றலைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் குறைந்து கொண்டு செல்கின்றன மொழியைப் பயன்படுத்துவதிலும் குறைபாடுகள் இருக்கின்றன இவற்றை நிவர்த்தி செய்வதற்கு மாற்று வழிகள் பலவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்ததாகும்.

"தமிழ் மொழித் தினம்" மாணவர்களின் தமிழ் மொழி அறிவை விருத்தி செய்ய வழிவகுக்கின்றது. "முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்" நினைவு தினத்தையொட்டிப் பல்வேறு போட்டிகளும் இவ் விழாவில் இடம்பெறுவது தமிழ் வளர்த்த பெரியோர்களை நினைவு கூரப் பயன்படுகிறது.

இடம்பெயர்வுகள்,புலம்பெயர்வுகள்ஆகியவற்றுக்கு மத்தியிலும் தமிழ் மொழி மூலம் கல்வி பயிலும் பெரும்பாலான மாணவர்களைக் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணம் கடந்த வருடங்களைப் போல இவ்வருடமும் தமிழ் மொழித் தின விழாவைச் சிறப்பாகக் கொண்டாட இருப்பதும், பதிவு முயற்சியாக மலர் வெளியிட இருப்பதும் மகிழ்ச்சி தரும் விடயங்களாகும்.

விழாவும் மலரும் சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன்.

**எஸ். தில்லைநடராஜா,**
மேலதிகச் செயலாளர்,
(கல்விச் சேவைகள்)

கல்வி அமைச்சு,
"இசுருபாய"
பத்தரமுல்ல.
2001-06-18.

## கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவு கல்விப் பணிப்பாளர்
## ஜி. பீ. அல்பிரட் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

உலகின் மிக மிகப் பழமை வாய்ந்த மொழிகளாகக் கொள்ளத்தக்கவை கிரேக்கம், லத்தீன், சீனம், ஹீப்று, தமிழ் ஆகியவைகளே என்றும், அவற்றுள்ளும் முன் தோன்றி மூத்த மொழியாக விளங்குவது தமிழே என்றும் கூறப்படுகின்றது. இதுபற்றியே, திங்களொடும் செழும்பரிதி தன்னொடும், பொங்கு கடல் இவற்றொடும் பிறந்த தமிழ் என்று பாடிப் பரவசம் கொள்கின்றார் பாவலர் பாரதிதாசனார். தமிழ் மொழி தொன்மை வாய்ந்தது மாத்திரமின்றி, பழந்தமிழ் இலக்கியங்கள், பழந்தமிழ் இலக்கணங்கள் ஆகியவற்றால் செழுமையுற்று வன்மையும் வாய்ந்து திகழ்கின்றது. இந்நிலைகளால் தான் வெளிநாட்டு நல்லறிஞர்கள் பலரையும் தன்பால் ஈர்த்து தனக்குத் தொண்டாற்ற வைத்தது தமிழ்.

இத்தகைய சிறப்பினையும், பெருமையினையும் கொண்டு விளங்கும் சீரிய தமிழ் " வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தோடு ஒரு காலத்தில் எல்லைப்படுத்திப் பேசப்பட்டு வந்தது. ஆனால் இன்றோ, பாரதி கண்ட கனவு நனவாகி உலகமெலாம் தமிழோசை பரவி வருகின்றது. இது வரைகாலமும் இயல்,இசை, நாடகம் என்பவற்றோடு மாத்திரம் விளங்கிய முத்தமிழ், இன்று தகவற்தொடர்பு, தொழில் நுட்ப யுகத்தில் பிரவேசித்து "கணனிப் பொறித் தமிழாகப் பெயர் பெற்று நற்றமிழாகி நன்கு பொலிந்துள்ளது."

எனவே, கணனி யுகத்துக்கேற்ற வகையில் கணனித் தமிழினை நெகிழ்வுறச் செய்ய வேண்டியது ஒரு கட்டாயத் தேவையும் ஆகிவிட்டது. நவீன விஞ்ஞான தொழில் நுட்ப தகவல் தொடர்பு யுகத்துக்கு இட்டுச் செல்லும் ஒரு மைல் கல்லாகவே தமிழ்த்திறன் போட்டி விளங்குகின்றது. மொழி என்பது வெறுமனே ஒரு கருத்துப் பரிமாற்ற ஊடகமாக மாத்திரம் உள்ளது என்று கொள்ளுதற்கில்லை. அது ஒரு சமூகத்தின் முழுமையான பண்பாட்டு விழுமியங்களின் ஒட்டுமொத்தமான திரட்சியுமாகும். தனி மனிதனுடைய ஆளுமை, சிந்தனை,கற்பனை,விவேகம்,செயற்திறன் எல்லாமே உருவாகி வளம் பெறுவது அவனது தாய்மொழி மூலமேயாகும். பல்வேறு காலங்களில் வெவ்வெரு சமுதாயங்கள் அந்நிய மொழிகளைப் போதனாமொழிகளாகக் கொண்டிருந்த காரணத்தால், தமக்கே உரியதான பண்பாட்டுக் கோலங்களை இழந்ததோடு, விஞ்ஞான, தொழிநுட்ப வளர்ச்சியிலும் பின்தங்கி நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

காலதாமதமாகினாலும் கூட தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டுக் கைக்கொள்ளப்பட்டதன் காரணமாக விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியில் அச்சமுதாயங்கள் முன்னேற்றம் காணத் தொடங்கின. எனவே நமது தமிழ்ப்பேசும் சமுதாயமும் அச்சங்கருதியும் அரசியல் லாபங்களுக்காகவும் வேறு மொழிகளில் மோகங் கொண்டு தம் முகங்களை இழந்து விடாது ஆக்க பூர்வமான முன்னேற்றத்துக்குத் தாய்மொழிக் கல்வியில் தனிநாட்டஞ் செலுத்துதல் வேண்டும்.

பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை தாய் மொழியிற் கற்கும் வாய்ப்பு நம் நாட்டில் நல்கப்பட்டுள்ளது. இந்த வகையிலே புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கேற்ப அடிப்படைத் தகைமைகளையும், தேசிய கல்விக் குறிக்கோள்களையும் இலக்காகக் கொண்டு விளங்கும் தமிழ் மொழிப் பாடத்திட்டத்தோடு சமதையாக அகில இலங்கைத் தமிழ்த்திறன் போட்டி நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை அமைந்துள்ளன. அடிப்படைத் திறன்களில் முதலாவதாக விதந்துரைக்கப்பட்ட தொடர் பாடற்றிறன் விருத்திக்கு மொழித்திறன் விருத்தி மிக முக்கியமான ஒரு அம்சமாகின்றது.

இந்த வகையிலே, ஏற்பாடு செய்யப்பட்டு வரும் அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டிகள் மாகாண மட்டங்களில் மிகவும் கச்சிதமாகவும், கனகாத்திரமாகவும் நடைபெற்று வருகின்றன. வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையிலே, பல்வேறு அநர்த்தங்களாலும் சிக்குண்டு சிதறுண்டு நிற்கும் அவல நிலையிலுங்கூட ஆண்டு தோறும் தமிழ் மொழித்தினப் போட்டிகளும், பரிசளிப்பு விழாக்களும் மிகப் பவ்வியமாக நடைபெற்று வருகின்றன. வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ்த்தின விழாக்குறித்து மலர்ந்து மணம் வீசும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதற்குக் கிடைத்த வாய்ப்புக் குறித்து நன்றியுடன் நல்லாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இயக்குநர்கள், ஏற்பாட்டாளர் அனைவருக்கும் கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜி.பி. அல்பிரட்,**
பணிப்பாளர்
தமிழ் மொழிப் பிரிவு,
கல்வி அமைச்சு

## மாகாணக் கல்விப் பணிப்பாளர்
## இ. சிவானந்தன் அவர்களின்

# ஆசிச் செய்தி

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் 2001 ஆம் ஆண்டில் நடத்தப்படும் தமிழ்மொழித் தினப்போட்டிகள் தொடர்பாக கவின் தமிழ்' மலர் வெளியிடப்படுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது மாணவர்களின் கலை, கலாசார விழுமியங்களின் வெளிப்பாடாக மிளிரும் தமிழ் மொழித்தின விழாவில் பங்குபற்றும் சகல மாணவர்களும் ஊக்குவிக்கப்பட வேண்டியவர்கள். போர்க்காலச் சூழலில் பலவிதமான இன்னல்கள், இறுக்கங்கள் மத்தியில் வாழ்ந்த போதிலும், தமது கலை, கலாசார அம்சங்களில் அவர்கள் கொண்ட பற்று இன்னும் மங்காமல் மென்மேலும் பிரகாசித்து வருவது மிக்க மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

எமது மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளோடு இசைந்த வகையில் தமிழ்மொழித் திறன்களை வளர்க்க எடுக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும். அவர்களது முயற்சி பெறுமதி மிக்கவை.

தமிழ்மொழித் தினச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களது மொழித்திறன்களை விருத்தி செய்வதோடு தமிழ் மக்களுக்கே உரித்தான கலாசார விழுமியங்களையும் எமது இளம் சந்ததியினர் அறிந்து கொள்வதற்கு வழி கோலப்பட்டுள்ளது.

இம்மலரில் வெளிவரும் அம்சங்கள் யாவும் கடைந்தெடுத்த பொக்கிஷங்களாகும். பல்வேறு துறைகளிலும் தேர்ந்தோர்களின் ஆய்வுகளும், ஆக்கங்களும் நிறைந்து, முழுமையான மலராக வெளிவருகின்றது.

இம்மலரை முகிழ்வித்து மலரச் செய்யத் தங்களை அர்ப்பணித்த சகலருக்கும் எனது பாராட்டுக்களும் நன்றிகளும்.

மாகாணக் கல்வித் திணைக்களம்
திருகோணமலை
30.06.2001

**இ. சிவானந்தன்**
மாகாணக் கல்விப்பணிப்பாளர்

# வடக்கு-கிழக்கு மாகாண
# தமிழ்மொழித் தினம் -2001

## விழாக் குழுவினர்

**காப்பாளர்** : **திரு. க. பரமேஸ்வரன்**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு.

**தலைவர்** : **திரு. இ. சிவானந்தன்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு – கிழக்கு மாகாணம்.

**இணைப்பாளர்** : **திரு. எஸ். மகாலிங்கம்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு – கிழக்கு மாகாணம்.

**பொருளாளர்** : **திரு. ஆர். சுகுணதீரன்**
பிரதம கணக்காளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்.

**செயலாளர்** : **திரு. ந. அனந்தராஜ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக்கல்வித் திணைக்களம்.

# வடக்கு-கிழக்கு மாகாண
# தமிழ்மொழித் தினம் -2001

## விழா ஆலோசகர்கள்

**திரு.சி.புலேந்திரன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

**திரு. எஸ் பவளகாந்தன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு.வி.மகேந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி.எம். .பவளகாந்தன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**ஜனாப் கே.எம்.ஹனிபா**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம்**
உதவிப் பணிப்பாளர் (கலாசாரம்)

**திரு.எஸ்.சின்னத்துரை**
நிர்வாக உத்தியோகத்தர்

**திரு.எஸ்.சந்திரமோகன்**
பிரதம எழுதுநர்

**திரு.வி.தங்கவேல்**
ஓய்வுபெற்ற அதிபர்

**ஜனாப் ஏ.ஆர்.எம்.ராபி**
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.வி.எஸ்.சிவசுப்பிரமணியம்**
உதவிக்கல்விப் பணப்பாளர்

**திரு.ஏ.விஜியானந்தமூர்த்தி**
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திரு. செ. மகேஷ்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.மு.இராதாகிருஷ்ணன்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.கே.முருகுப்பிள்ளை**
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திருமதி.பி.செல்வின் இரேனியஸ்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திருமதி.எஸ்.சூரியமூர்த்தி**
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.வி. ஸ்ரீஸ்கந்தராஜா**
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.கே.கலாநிதி**
உதவிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.கே.துரைரெட்ணசிங்கம்**
ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பானர்

**செல்வி ஞானா.குமாரசாமி**
உதவிக்கல்விப்பணிப்பாளர்

# விழா சிறப்புற உதவியவர்கள்

| | |
|---|---|
| திரு.கே. திலகரட்ணம் | வ.க.பணிப்பாளர் |
| திருமதி. தே.முருகுப்பிள்ளை | பி.க.பணிப்பாளர் |
| திரு.எஸ் சிவநிர்த்தானந்தா | உ.க.பணிப்பாளர் |
| திரு.எஸ். நவரட்ணம் | அதிபர் |
| திரு.எஸ். தண்டாயுதபாணி | அதிபர் |
| திருமதி எஸ். பாலசுப்பிரமணியம் | அதிபர் |
| அருட்சகோதரி எம்.திரேசாராணி | அதிபர் |
| அருட்சகோதரர் ஏ.சூசைதாசன் | அதிபர் |
| திரு.என். ராஜநாதன் | அதிபர் |
| திரு வ. கீதபொன்கலன் | அதிபர் |
| செல்வி. எஸ். பொன்னம்பலம் | அதிபர் |
| திரு.ஏ. செல்வநாயகம் | அதிபர் |
| திரு.எஸ்.எம். முகமட் அலி | அதிபர் |
| திரு.எம். ஸாபிர் | நிதி உதவியாளர் |
| திரு.ஏ.ஆர். மைக்கல் | மேற்பார்வையாளர் |
| செல்வி.எம். பாலநந்தினி | எழுதுநர் |
| ஜனாப் எஸ்.எம் கலிம் | எழுதுநர் |
| திருமதி.ஜெ. நிர்மலா | தட்டச்சாளர் |
| திருமதி சி. பரமேஸ்வரன் | தட்டச்சாளர் |
| திரு.எஸ்.ரமணன் | உதவியாளர் |
| திரு.எஸ். கமலநாதன் | உதவியாளர் |

# வடக்கு-கிழக்கு மாகாண
# தமிழ்மொழித் தினம் -2001

## தமிழ் மொழித் தின விழா நிகழ்வு நிலையம்
**தி/சென்மேரிஸ் மகளிர் கல்லூரி திருகோணமலை**

## தமிழ்மொழித்தினப் போட்டி நிலையங்களும் நிலைய அமைப்பாளர்களும்

- **திரு. எஸ். தண்டாயுதபாணி**
  அதிபர்,
  தி/ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி

- **அருட். திரு. சகோதரர் ஏ. சூசைதாசன்**
  அதிபர்,
  தி/புனித சூசையப்பர் கல்லூரி

- **திரு. எஸ் .கீதபொன்கலன்**
  அதிபர்,
  தி/புனித சவேரியார் மகா வித்தியாலயம்

- **திருமதி. எஸ். பாலசுப்பிரமணியம்**
  அதிபர்
  தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி

- **அருட்சகோதரி எம். திரேசாராணி**
  அதிபர்,
  தி/சென்.மேரிஸ் மகளிர் கல்லூரி

## தமிழ் மொழித் தினம் மத்திய நிலையம் (அலுவலகம்)

## தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

# வடக்கு-கிழக்கு மாகாண
# தமிழ்மொழித் தினம் -2001

## தமிழ்மொழித்தின விழா நிகழ்ச்சிகள்
## (09.07.2001)

- **விருந்தினரை வரவேற்றல்**
- **மங்கல விளக்கேற்றல்**
- **தமிழ்த்தாய் வணக்கம் :** **தி/சென் மேரிஸ் மகளிர் கல்லூரி**
- **வரவேற்புரை--** : **திரு. எஸ் மகாலிங்கம்**
  மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்
- **தலைமையுரை-** : **திரு. இ. சிவானந்தன்**
  மாகாணக் கல்விப்பணிப்பாளர்
- **மலர் அறிமுக உரை** : **திரு. எஸ் எதிர்மன்னசிங்கம்** உதவிப் பணிப்பாளர்,
  பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
  வடக்கு கிழக்கு மாகாணம்
- **சான்றிதழ் வழங்கல்** : **திருமதி ஜெயமலர் பரமேஸ்வரன்**
- **பிரதம விருந்தினர் உரை:** **திரு. க. பரமேஸ்வரன்,**
  செயலாளர்., வடக்கு கிழக்கு மாகாண கல்வி
  பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
  இளைஞர் விவகார அமைச்சு
- **நன்றியுரை** : **திரு. ந. அனந்தராஜ்,**
  உதவிக்கல்விப்பணிப்பாளர்,தமிழ்மொழிப் பிரிவு,
  நூலக அபிவிருத்திப்பிரிவு
- **தேர்ந்த நிகழ்ச்சிகளின் அரங்கேற்றம்**
- **தமிழ்மொழி வாழ்த்து** : **தி/சென் மேரிஸ் மகளிர் கல்லூரி**

# உள்ளே நுழையுமுன்.......

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவாகள் தமிழையே தம் உயிர் மூச்சாய்க் கொண்டவர்கள் இன்று உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர் தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் எல்லாம் தமது மொழியையும், பண்பாடுகளையும், பாரம்பரியக் கலைவடிவங்களையும் எடுத்துச் சென்று பரப்பி வருவதால் தமிழ் இன்று ஒரு உலக மொழி என்ற உயர்நிலையை அடைந்து வருகின்றது.

உலகில் வாழும் தமிழர்களுக்கெல்லாம் தூய தமிழைக் கற்றுக் கொடுப்பவர் களாகவும் பழந்தமிழ்ப் பண்பாட்டை எடுத்துச் செல்பவர்களாகவும் ஈழத்துத் தமிழர்களே விளங்குகின்றனர். அந்த வகையில் தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டு விழுமியங்களையும் மொழித்திறன்களையும், ஆற்றல்களையும் எடுத்துக்காட்டும் வகையில் வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின விழா அமைகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் வழமைபோல் கொண்டாடப்படும் தமிழ்மொழித்தின விழா மூலம் வளரும் குழந்தைகளின் உள்ளத்தில் தமிழின் இனிமை ஊட்டப்படுகிறது. அவற்றின் ஊடாக அவர்களது மொழித்திறன்களும், படைப்பிலக்கிய ஆற்றல்களும் வளர்த்தெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு சிறப்பாகக் கொண்டாடப்படும் தமிழ்மொழித்தின விழாவுக்கு மகுடம் வைத்தாற்போல் வெளியிடப்படும் கவின் தமிழ்' இவ்வருடமும் சிறப்பாக வெளியிடப்படுகிறது.

'கவின் தமிழ்' தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களைப் புலப்படுத்தும் குறிகாட்டியாக விளங்கப் போகின்றது.

'கவின் தமிழ்' வடக்கு கிழக்கு மாகாணத்தின் பாரம்பரியத்தையும், தமிழர் வாழ்விடங்களின் பெருமைகளையும் ஆவணப்படுத்தும் ஒரு பெட்டகமாக மிளிரப்போகின்றது.

இத்தனை பெருமைகளையும் ஒன்று சேர்த்துக் கவின் தமிழ் உங்கள் கைகளில் தவழ்வதற்கும் நல்லதொரு தமிழ் விழாவைக் கண்டு களிப்பதற்கும் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் திரு.க.பரமேஸ்வரன், மாகாணக்கல்விப்பணிப்பாளர் திரு.இ.சிவானந்தன், தமிழ்மொழித் தின விழா இணைப்பாளராக அரும்பணியாற்றி விழாச் சிறக்க வழி நடத்தும் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் திரு.சு.மகாலிங்கம் மற்றும் மேலதிகக் கல்விப்பணிப்பாளர் திரு.சி.புலேந்திரன், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஏனைய பதவி நிலை அலுவலர்கள், அலுவலக ஊழியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

கவின் தமிழின் பக்கங்களை அலங்கரித்து அறிவூட்டும் ஆக்கங்களைத் தந்துதவிய கல்விமான்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள் அனைவரதும் உழைப்பும் அழகிய முகப்பு ஓவியத்தை வரைந்து உயிர் ஊட்டிய திரு.முத்து இராதாகிருஷ்ணனின் கைவண்ணமும் கவின் தமிழைப் புறநானூற்றுக் காலத்திற்கு இட்டுச் செல்கின்றது.

அதனை அழகுற அச்சில் பதித்து எம் கைகளில் தவழ விட்ட உதயன் பதிப்பகத்தினருக்கு நன்றி கூறி கவின் தமிழின் சுவையைப் பருகுவதற்கும், தமிழ் உணர்வில் திளைப்பதற்கும் வழிவிட்டு விலகுகின்றோம்.

அன்புடன்,
**ந. அனந்தராஜ்**
இதழ் ஆசிரியர்

# தமிழ் மொழித்தினச் செய்தி

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் எமது முன்னோர்கள் காலத்தாற் செழிப்புற்ற தாய் மொழியாம் தமிழ் மொழியின் சிறப்புக்கள் உலகெங்கும் பரவி நின்று நிலைத்திட நமது பணிகளைத் தொடர வேண்டியதன் அவசியத்தை நாம் நன்கு உணர்ந்துள்ளோம்.

அறநெறி புகட்டும் ஔவைத் தமிழும், பொய்யா மொழிப் புலவன் புனைந்த திருக்குறளும், தமிழ் மொழியின் செல்வங்களாயின. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, ஆதியாம் ஐம்பெருங்காப்பியங்களும் தமிழ் மொழியை அலங்கரிக்கும் ஆபரணங்களாயின.

சங்கப் புலவன் நக்கீரன் முதலாக சுதந்திர இந்தியா தந்த மகாகவி பாரதியோடு, தமிழ் பேசும் நல்லுலகம் தோற்றுவித்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் யாவருமே தமிழ் சிறக்க ஆற்றிய பணிகளை மனத்திருத்தி எமது தமிழ் மொழித்தின விழாவின் மூலம் மாணவர்தம் ஆற்றல்களை வெளிக் கொணர முயலுகின்றோம்.

இன்றைய எமது மாணவர்கள் தமிழ் மொழியையும் தமிழ் பேசும் இனத்தையும், தமிழர் வாழ் நிலத்தையும் செழிப்பூட்டுவதில் முன் நின்றுஉழைக்கின்றனர். அவர்களின் வீரியம் மிக்க செயற்பாடுகளுக்கு ஊக்கம் தரும் வகையில் எமது வடக்கு கிழக்குமாகாணத் தமிழ் மொழித்தின விழா நிகழ்வுகள் விளங்கும் என நம்புகின்றோம்.

பாரிய பொறுப்பும், பண்புடன் கூடிய செயற்பாடுகளும் தமிழ் மொழித்தின விழாச் சிறப்புக்கு உறுதுணையாக நிற்கின்றன. அத்தகு நோக்குடன் இணைந்தும் , மகிழ்ந்தும் வழிகாட்டும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன் அவர்களின் மேதகு ஆலோசனைகளால் நாம் பெருமையடைகின்றோம்.

அவ்வாறே வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் அவர்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளால் நாம் ஊக்கம் பெறுகின்றோம்.

பொலிவுறு தமிழால் உயிர்ப்புறும் கலை வடிவங்களுக்கு எமது மாகாணத் தமிழ் மொழித்தின விழா அரங்கம் இடந்தந்து பெருமையுற, வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் எழுதுவினைஞர்கள், ஊழியர்கள் ஆகிய பல்நிலை உத்தியோகத்தர்களும் வழங்கி நிற்கின்ற ஆதரவினைக் கண்டு பூரிப்பும் பெருமிதமும் அடைகின்றோம்.

மாகாணத்தின் வளந்தரு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரினதும் ஒத்துழைப்பின் வெளிப்பாடே இவ்விழாவின் மகத்துவத்திற்கான பெருஞ்சான்று என்பதை எண்ணிக்களிப்படைகின்றோம்.

நன்னெறி நின்று மாணவர்தம் வெளிப்பாட்டின் சிறப்பாய்ந்து தரமுரைத்த நடுவர்கள் யாவரையும் பாராட்டி நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

விழாச் சிறப்புக்கு ஏற்ற இடந்தந்து நல்லன புரிந்த யாவரையும் பராட்டுகின்றோம். மாணவச் சிறார்கள் எதிர்காலச் சிற்பிகளாய்த் தலைவர்களாய் மிளிர ஒரு துளியேனும் உதவியோர் எனில் அவ்வொவ்வொரு நெஞ்சங்களையும் எண்ணி இன்புறுவதோடு அவர்கள் யாவருக்கும் எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

விழா நிகழ்வுகளினூடாக எமது தமிழ் வாழும் நிலமனைத்தும் நலம் பெறவும், வீறுடன் தேடும் வெற்றிகள் கூடவும் வாழ்த்திக் கரம் குவிக்கின்றோம்.

நன்றி

**சு. மகாலிங்கம்**
வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ்மொழித்தின இணைப்பாளர்,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்




# "கவின் தமிழ்" அட்டை விளக்கும் காட்சி

"களத்திலே வீழ்ந்துபட்டான்" தன் மகன் என்ற சேதி கேட்ட தாய் களத்திற் கிடந்த மகனது உடலைக் கண்டு உவகையும், சோகமும், பகைவர் மீது கோபமும் ஒருங்கே சேர வீரமகனின் உடலைத் தூக்கித் தன் மடிமீது தாங்கி நின்றாள்.

அஞ்சி ஓடாது நெஞ்சிலே வேல் தாங்கி வீழ்ந்த மகனது வீரங்கண்டு பெருமிதங் கொண்டாள். வற்றிக் கிடந்த அவள் முலைகளிலோ பால் சுரந்தது வெற்றிக் களிப்புற்றாள்.

இது தகடூர்ப் போரிடைச் சம்பவம் ஒன்றைக் குறித்து நிற்கின்றது. இதனை விளக்கும் புறநானூற்றுச் செய்யுள் ஒளவையாரால் பாடப் பெற்றது அன்றைய பெண்களின் வீரத்தைப் பறை சாற்றும் இப் பாடலடிகளை இன்றைய வீரத்தாய்மார்களுக்கும் காணிக்கையாக்குகின்றோம்.

**கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்**
**வெந்து வாய் மடித்து வேல்தலைப் பெயரித்**
**தோடு உகைத்து எழுதருஉ துரந்துஎறி ஞாட்பின்**
**வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி**
**இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய**
**சிறப்புடையாளன் மாண்புகண் டருளி**
**வாடுமுலை ஊறிச் சுரந்தன.**
**ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே**

-செய்யுள் 295-

# கவின் தமிழின் உள்ளே.....


- தமிழ் மணம் கமழும் மட்டக்களப்பு மீனவர் பாடல்.....
  கு.சண்முகம்

- பாரதியின் வசன கவிதைகளும் காற்றும்.....
  கலாநிதி. செ. யோகராசா

- தமிழில் மருத்துவ அறிவியல் நூல்கள்.....
  வல்வை. ந. அனந்தராஜ்

- இலங்கையின் மாறிவரும் சனத்தொகையும் வரலாற்றுச் சிதைவுகளும்.....
  சிவானந்தி நடராஜா

- அரக்கர் குலத்திலும் ஒர் அற்புத ஆன்மா.....
  ச. கு. கமலசேகரன்

- விபுலானந்தரின் கல்விக் கொள்கை
  எஸ். எதிர்மன்னசிங்கம்

- காலத்தால் அழிந்து விட்ட கந்தளாய்ப் பிரம்மதேயம்.....

- அடங்காப் பற்றின் செட்டிக்குளப் பிரதானிகளும் அவர்தம் வழிபாட்டு மரபுகளும்.....
  ந. ஞானவேல்

- "சிறுவருக்கு உகந்த சிறுவர் அரங்கு".....
  முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன்

- புறநானூற்றில் அறக்கருத்துக்கள்.....
  தமிழ்மணி அகளங்கன்

- நாவலும் காவியமும்.....
  ஏ.எஸ் உபைத்துல்லா

- பழம் மொழிகள்.....
  தா.பி சுப்பிரமணியம்

- குழந்தையின் உடல் உள மேம்பாட்டில் நாட்டார் பாடல்கள்.....
  செ.மெற்றாஸ் மயில்

- பாரம்பரியக் கலைகளை பேணிப்பாதுகாப்பதில் கல்வியியல் கல்லூரிகளின் பணிகள்.....
  ச. இரமணீகரன்

✪ கவிதைக் களம்.....

பாரதியார்
நெடுந்தீவு மகேஸ்
தாமரைத் தீவான்
பு.சத்தியமூர்த்தி
அ. கௌரிதாசன்
க. ஜெயவீரசிங்கம்
கவிஞர் புரட்சிபாலன்
நிலாந்தன்

✪ மாணவர் ஆக்கங்கள்.....

இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா
ச.எனிடா
தட்சணாமூர்த்தி அகிலன்
சிவலிங்கம் தாட்சாயினி
எம்.எம்.சர்ஹான்

✪ வரலாற்றுக் குறிப்புகள்.

## திருக்கேதீஸ்வரம்

மன்னார் நகரில் இருந்து சுமார் 9 கிலோ மீற்றர் தூரத்தில் மன்னார் – பூநகரி சாலையில் அமைந்துள்ள இவ்வாலயம் கேதுவால் வணங்கப்பட்ட தலமானதால் இத் தலம் திருக் கேது ஈஸ்வரம் என அழைக்கப்பட்டது. தொன்மை வாய்ந்த இச் சிவன் கோயில் திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய சைவ நாயன்மார்களினால் பாடல் பெற்ற புனித தலமான ஒரு தலமாகும். இத் தல வரலாற்றினை தட்சிண கைலாய மான்மியம் சிறப்பாக குறிப்பிடுகின்றது. இவ் ஆலயத்தின் புண்ணிய தீர்த்தமாகப் பாலாவி விளங்குகின்றது. மகா சிவராத்திரி என்றதும் திருக்கேதீஸ்வரமே நினைவில் வரும் .இன்று இக் கோயில் நித்திய பூசை வழிபாட்டிற்குத் தடை செய்யப்பட்டு கோயில் மடங்களும் சிதைக்கப்பட்டுப் பராமரிப்ப இன்றிக் காணப்படுகின்றது.

# தமிழ் மணம் கமழும் மட்டக்களப்பு மீனவர் பாடல்கள்

*கு.சண்முகம்*
*அதிபர்,*
*மட் / சிங்காரத்தோப்பு சரஸ்வதி வித்தியாலாம்,*
*களுவன்கேணி*

மீன் பாடும் தேன் நாடு எனப் புகழப்படும் மட்டக்களப்புப் பிரதேசம் நானிலத்தையும் தன் அங்கமாகக் கொண்டு மிளிர்வது சிறப்பம்சமாகும். மட்டக்களப்பு பிரதேசத்தின் கிழக்கு எல்லையில் வங்காள விரிகுடாக் கடல் விரிந்து தெரிகிறது. இந்தக் கடல் வெளியை அண்டிய கிராமங்களில் வாழுகின்ற மக்கள் மீன்பிடியையே தமது தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். இவற்றில் களுவன்கேணி, தளவாய்,சவுக்கடி, புன்னைக்குடா, பாலையடித்தோணா கல்குடா போன்ற கிராமங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளுகின்ற கடற்றொழிலாளர்கள் தொன்று தொட்டுப் பாடி வரும் மீன்பிடித் தொழிலோடு இணைந்த இந்தப் பாடல்கள் கவிச்சுவையும், கழிவிரக்கமும் கொண்டவையுமாகும்.

மருத நில மக்கள் தமது விவசாயத் தொழில் நிமித்தம் பாடுகின்ற பாடல்கள் வெளிக் கொணரப்பட்டமை போல், மட்டக்களப்பு மீனவர் பாடல்கள் வெளிக் கொணரப்பட்டமை குறைவாகவே உள்ளன என்றே கூற வேண்டும்.

வாய்மொழி இலக்கியமாகப் பாரம்பரியமாகப் பாடப்படும் இப்பாடல்களில் சொல்லாட்சியும், சந்தச்சுவையும் மலிந்து கிடக்கின்றன. கல்வியறிவில்லாத, பாமர மக்களால் சாகாவரம் பெற்ற வாய்மொழி இலக்கியங்களைப் படைக்க முடியும் என்பதையும், புராண, இதிகாச சம்பவங்களை அறிந்தவர்களாக அவர்கள் இருந்துள்ளனர் என்பதையும் இம்மீனவர் பாடல்களின் உள்ளடக்கம் எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

பொதுவாக வழக்கில் உள்ள மட்டக்களப்பு மீனவர்கள் பாடல்கள் கரைவலைத் தொழிலை ஒட்டியதாகவே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் அக்காலத்தில் கரைவலை மூலமே மீன்பிடித் தொழிலை இவர்கள் மேற்கொண்டுள்ளனர் என்பதை இங்கு வாழும் முதியவர்களின் கூற்றிலிருந்து அறிய முடிகின்றது.

கரைவலைத் தொழிலில் ஒரு கரைவலையை இழுப்பதற்கு ஒரே நேரத்தில் ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் ஈடுபடுவர். தென்னந் தும்பினால் திரிக்கப்பட்ட கயிறு கொண்டு முடியப்பட்ட ஐந்து ஆறு அடி கண்களைக் கொண்ட வலைகளே பயன்பாட்டில் உள்ளன. இந்த வலையை மரப்பலகைகளால் தயாரிக்கப்பட்ட பாதை எனப்படும் 30 அடி நீளமும் 7 அடி அகலமும் கொண்ட கடற்கலத்திலே ஏற்றித்தான் வளைப்பர்.

பாதையைத் தரையில் இருந்து கடலுக்குள் தள்ளுவது தொடக்கம் வலையின் மடி கரை வந்து சேர்ந்து மீண்டும் பாதையைக் கரைக்கு இழுக்கும் வரை பலவித இனிமையான இசையுடன் கூடிய -

பாடல்களைப் பாடுவர். மீனவர்களின் களைப்பு தெரியாமல் இருப்பதற்கும், ஒருவித மகிழ்ச்சியான மனப்பாங்குடனும் உற்சாகத்துடனும் தொழிலை மேற்கொள்வதற்குமாகவே இப்பாடல்கள் பாடப்படுகின்றன. பாதையைத் தள்ளும்போது இப்பாடலைப் பாடுவர்.

"அடி மாமரம் சுவாமி
மாமரமாம் சுவாமி
தம்பிராண்ட கோவிலடி
மாமரமாம் சுவாமி
மண்டியிட்டு கும்பிட்டோம்
மாமரமாம் சுவாமி "

இந்தப்பாடல் தெய்விகத் தன்மை பொருந்தியதாகவும், முதலில் இறைவனைத் தொழுதே தமது தொழிலை ஆரம்பிப்பது போலவும் அமைந்துள்ளது.

கடலிலே பாதையைத் தள்ளியதும் பாதையில் ஏறிய பத்துப் பேர் தண்டு வலிக்க ஒருவர் சவள் பிடிக்க, இருவர் வலையைக் கடலிலே போடுவர். தண்டு வலிக்கும்போது பாடப்படுவதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

"சோழகக் காற்றாம் வள்ளிக்கு
சொன்ன பக்கம் நடையாம் வள்ளிக்கு
அரிப்பு மோதிரமாம் வள்ளிக்கு
தெறிப்பு குணமாம் வள்ளிக்கு
மாமரத்தடியாம் வள்ளிக்கு
மகிழ்ந்த நன்னிழலாம் வள்ளிக்கு"

வள்ளி என்ற ஒரு கிராமத்துப் பெண்ணைச் சுட்டிப்பாடுவதாக இப்பாடல் அமைந்திருந்தபோதும் தமக்கு இணக்கமில்லாத ஒரு மண்டாடியின் மகளை அல்லது மனைவியை கேலி செய்வதாகவே இப்பாடல் அமைந்துள்ளது என்பதை ஊகிக்க முடிகின்றது.

வலை வளைத்துக் கரைக்கு வந்ததும் வலையிலே பொருத்தப்பட்டிருக்கும் தும்பினால் திரிக்கப்பட்ட தடித்த கம்பான் எனப்படும் கயிற்றை இழுப்பர். அப்போது இந்தப் பாடலைப் பாடுவர்.

"ராமா ராமா
கோவிந்த ராமா
குரங்குத் தலையிலே
கொள்ளி வைத்த ராமா
இராவணா இவன் யாரடா
ராமசாமி தூதண்டா
குரங்கு வந்ததேனடா
ராமசாமி பாவண்டா "

இந்தப்பாடல் பாடும்போது மிக இனிமையாக இருக்கும். இது இராமாயணச் சம்பவத்தை நினைவூட்டுவது போல் உள்ளது.

கம்பான் இழுத்த பின் அதனைத் தொடர்ந்து இணைக்கப்பட்டுள்ள வலை வந்ததும் வேறொரு பாடல் பாடப்படும். இப்பாடல் இருவரால் மாறி மாறி இரண்டு அடிகளாகப் பாடப்படும். ஏனையோர் ஏலெலோ என்று பின்னணி பாடுவர். மிக நீளமான இப்பாடலின் விரிவஞ்சி சில அடிகளைமட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

ஏல வலை ஏலை ஏல வலை
ஓவெலம்மா ஏலை ஏலவலை
நானொண்டு ஏலை சொல்லவர
நடுங்குதடி ஏலை உன் சதிரம்
உன்னநல்ல ஏலை விரும்புவது
ஒண்டுக்குமே ஏலை இல்லையடி
உன்னைவிட்டா ஏலை எந்தனுக்கு
உற்றதுணை ஏலை ஏதுமில்லை
கொண்டல்லோ ஏலை போறனடி
குருசிலே ஏலை மறைவனடி
எண்டகிளி ஏலை இரக்கமெண்டா
இளநி வெட்டி ஏலை மூள்திறப்பேன்

இந்தப் பாடல் ஒரு மீனவ இளைஞன் ஒரு மீனவ இளம்பெண் மீது காதல் கொண்டு தன் விருப்பத்திற்கு இணங்குமாறு கெஞ்சிக் கேட்பது போல அமைத்திருப்பது இலக்கிய கால அகவொழுக்கத்தை நினைவூட்டுகின்றது.

இந்தப்பாடல் தொடரிலே இத்தகைய பாடல் வரிகளும் இடம்பெறுகின்றன.

கட்டி உன்னை ஏலை முத்தமிட
காட்டோரம் ஏலை வாடி புள்ளே
பெண்மயிலே ஏலை உந்தனுக்கு
எந்தன்மேலே ஏலை கோபமென்ன
கோபமுள்ள ஏலை நாகம் போல
அடிச்சிப் போட்டா ஏலை எந்தற்கு

இப்பாடலிலே பெண்ணொருத்திக்கு நையாண்டி செய்தபோது அவள் தாக்கிய செய்தி இங்கு கூறப்படுகிறது. ஆனால் இந்த இளைஞன் திருப்பி ஏதும் செய்யாமல் ஏன் எனக்கு அடித்தாய் என வினவுகின்றான். இப்படிப் பல சிறப்பம்சங்கள் மட்டக்களப்பு மீனவர் பாடல்களிலே காணப்படுகின்றன.

கரைவலைத் தொழிலின் இறுதிக்கட்டமாக கால்வலை, இறகு, மடி என்பவற்றை இழுப்பர். அந்த வேளையில் அவர்கள் வெகுவாக களைத்திருப்பர். அந்தக் களைப்பு தெரியாமல் இருக்கும் பொருட்டு இந்தப் பாடலைப் பாடுவர்.

எந்த நாளும் உந்தன்மேல் சின்னப்பெண்ணே தண்ணி கொண்டா
சந்தனப்பூ வாசமென்ன சின்னப் பெண்ணே தண்ணி கொண்டா
கொண்ட குலையுதடி சின்னப்பெண்ணே தண்ணி கொண்டா
கொண்டைப்பூ வாடுதடி சின்னப்பெண்ணே தண்ணி கொண்டா
தண்ணி தவிக்குதடி சின்னப்பெண்ணே தண்ணி கொண்டா
தாங்க முடியல்லடி சின்னப்பெண்ணே தண்ணி கொண்டா
மாண்டா லும் மாளுதண்டி சின்னப் பெண்ணே தண்ணி கொண்டா
சீமான்ட கரைவலையில் சின்னப்பெண்ணே தண்ணி கொண்டா

இவர்கள் களைத்துப் போனதால் தண்ணீரைச் சிறுமி ஒருத்தியிடம் கெஞ்சிக் கேட்கும் பாவனையில் இப்பாடல் அமைந்துள்ளது. அதாவது மீனவர்கள் சோர்வடைந்த நிலையையும், அந்தச் சோர்வுக்கு தெம்பு ஊட்டுவது போலவும் இந்தப் பாடல் அமைந்துள்ளது.

இப்படி ஏராளமான தமிழ் மணங்கமழும் மீனவப் பாடல்கள் மட்டக்களப்பு தமிழன்னைக்கு உரித்தாக இருக்கின்றன. இப்பாடல்கள் செவிவழி மரபு ரீதியானவையாக இருந்தபோதும் இலக்கியச் சுவையும், சிறந்த சொல்லாட்சியும் மிக்கனவாகக் காணப்படுகின்றன. பாமர மக்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் இம்மரபு வழிப்பாடல்கள் ஒவ்வொன்றும் தமிழன்னையின் கழுத்தில் மணம் வீசும் வாடாத மலர் ஆரங்களே என்றால் மிகையாகாது.

## HISTORICAL NOTE:-

Isvarams:- Long before the arrival of Vijayan, there were in Ceylon Five recognised Isvarams of Siva which claimed and recognised adoration of All India.There were Thiruketeeswaram near Manthai; Muneeswaram dominating Silawathai and the pearl fishery; Tondeswaram near Manthotam; Thirukoneswaram near the great bay of Kottiya and Nakuleswaram near Kankesanthurai.

***By-Paul Pieris.E.***



# பாரதியின் வசன கவிதைகளும் காற்றும்

*கலாநிதி செ. யோகராசா,*
*கிழக்கு பல்கலைக் கழகம்*

க.பொ.த உயர்தர வகுப்பிற்குரிய தமிழ்ப் பாடத்திட்டத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட பாரதியார் கவிதைகள் சில இடம்பெற்றுள்ளன. காற்று என்பது அவற்றுள் ஒன்று. (காற்று8.9) அது பாரதியார் கவிதைகளில் வசன கவிதை என்ற பகுதியில் அடங்குவது. காற்று பகுதியைப் புரிந்து கொள்வதற்கு பாரதியாரின் வசன கவிதை முயற்சி பற்றியும் அப்பிரிவில் அடங்கும் ஏனைய கவிதைகள் (காட்சி, சக்தி,கடல்,ஜகத்சித்திரம்,,விடுதலை) பற்றியும் கவனிப்பது அவசியமானது.

பாரதியாரின் வசன கவிதை வடிவ முயற்சி தமிழிற்கு புதியது என்று கருதப்படுகின்றது. பாரதியார் வசன கவிதை என்று வெளிப்படையாக இப்பகுதி பற்றி எவ்விடத்திலும் குறிப்பிட்டிருக்கவில்லை. இதனால் பாரதியார் வசன கவிதை முயற்சியில் ஈடுபட்டமைக்கு ஒன்றிற்கு மேற்பட்ட வெவ்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. அவையாவன——

*01. வால்ட்விட்மனின் செல்வாக்கு.....................*

பாரதி மேலைத்தேயக் கவிஞர் பலரது படைப்புக்களை ரசித்தவர். மேலைத்தேய வசனக் கவிதை முன்னோடியான வால்ட்விட்மனும் பாரதியைக் கவர்ந்தவர்களுள் ஒருவன்.வால்ட்விட்மனின் செல்வாக்குக் காரணமாக பாரதி இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம்.

*02.பாரதியாரின் பரிசோதனை நாட்டம்..............*

தமிழிற்குப் புதிய புதிய வடிவங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்பது பாரதியின் வேணவா. சொனற்பா வடிவம், தன்னுணர்ச்சிப் பாடல், கதைப் பாடல், நவீன காவியம் என்றவாறு இத்தகைய பட்டியல் நீண்டு செல்கிறது. இவ்விதத்தில் வசன கவிதை முயற்சியிலும் ஈடுபட்டிருக்கலாம்.

அது மட்டுமன்று; பொருளுக்கும் வடிவத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்றும் பொருள் மாற வடிவமும் மாறுமென்றும் கருதியவன் பாரதி. **“சக்தி”** (5) என்ற வசன கவிதைப் பகுதியில் வரும் பின்வரும் பகுதியை இவ்விதத்தில் பலரும் சுட்டிக் காட்டுவது வழக்கம்.

"என் முன்னே பஞ்சுத் தலையணை கிடக்கிறது. அதற்கு ஒரு
வடிவம் ஓரளவு ஒரு நியமம் ஏற்படுகின்றது.
அதனை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டிருந்தால் அந்த
வடிவத்திலே சக்தி நீடித்து நிற்கும். புதுப்பிக்காவிட்டால் அவ்வடிவம் மாறும்.
மேலுறையைக் கந்தை என்று வெளியில் எறி. அந்த வடிவம் அழிந்து விட்டது.
வடிவத்தைக் காத்தால் சக்தியைக் காக்கலாம்.
வடிவம் மாறினும் சக்தி மாறுவதில்லை. வடிவத்தைக் காப்பதுநன்று.சக்தியின்
பொருட்டாக.
ஆனால் வடிவத்தை மாத்திரம் போற்றுவோர் சக்தியை இழந்து விடுவர்."

( பழங்கந்தை-பழைய வடிவம், சக்தி-நிரந்தர உண்மை, உறை-ஊடகம்.)

அத்துடன் பாஞ்சாலி சபதச் சூரியோதய வர்ணனைப் பகுதியையும் இவ்விதத்தில்கவனத்திற் கொள்வர். சூரியோதய வர்ணனையை முதலில் கவிதையூடாக நிகழ்த்திய பாரதி பின்பு ஒரு கட்டத்தில் (அநுபந்தத்தில்) வசனத்தினூடாக அதனை மேற்கொள்கின்றான்.அவனது உணர்ச்சி வெளிப்பாட்டிற்கு யாப்பு தடையாக இருந்திருக்க வேண்டும். இதனாலேயே இத்தகைய முயற்சியில் இறங்கியிருக்க வேண்டும் என்று ஊகிக்கின்றனர்.

*03. தாகூரின் கீதாஞ்சலி மொழிபெயர்ப்பு...........*

வசன கவிதைப் பாணியில் அமைந்த கீதாஞ்சலியை தமிழில் பாரதி மொழிபெயர்த்துள்ளான். அதன் புதிய வெளிப்பாட்டு வடிவம் பாரதியைக்கவர்ந்திருக்க வேண்டும்.

*04.. வேதப்பாடல்களில் ஈடுபாடு...............*

பாரதியின் வசன கவிதை முயற்சி தொடர்பாக அண்மைக்கால ஆய்வாளரால் முன்வைக்கப்படும் புதியதொரு கருத்து இதுவாகும்.

பாரதி புதுச்சேரியில் தலைமறைவாக இருந்த காலகட்டத்தில் அவனும் அவனது சகபாடிகள் சிலரும் வேதப்பாடல் ஆராய்ச்சியில் ஈடுபாடு காட்டினர். வேதப்பாடல்களின் உள்ளடக்கம் மட்டுமன்றி வேதப்பாடல்களின் செறிவு, எளிமை, இனிமை, அழகு, நேரடியாக விடயத்தை அணுகுதல் முதலான பண்புகளும் பாரதியைக் கவர்ந்தன. இத்தகைய பண்புகள் கொண்டவேதரிஷிகளின் கவிதைகள் அவனால் எழுதப்பட்டன. இவற்றின் இன்னொரு வெளிப்பாடே வடிவப் புதுமை கொண்ட வசனகவிதைகள் என்று கூற முற்பட்டுள்ளனர் அண்மைக்கால ஆய்வாளர்.

எவ்வாறாயினும் பாரதி அறிமுகப்படுத்திய வடிவம் – வசன கவிதை வடிவம் – தமிழிற்குப் புதியது என்பதில் ஐயமில்லை.

இவ்வசன கவிதைப் பகுதியில் உள்ளடக்கம் பற்றிச் சிந்திக்கும்போது கூட மேலே (இறுதியாகக்) குறிப்பிட்டுள்ள வேதப்பாடல்களின் நாட்டம் பற்றித் தொடர்ந்து கவனிக்க வேண்டியுள்ளது.

வேதப்பாடல்களில் கொண்ட நாட்டம் பாரதியை வேதகால வாழ்வு நோக்கித் திசை திருப்புகின்றது.

வேத் கால வாழ்வு எத்தகையது? வேதகால மக்கள் வாழ்க்கை இயறகையுடன் பின்னிப் பிணைந்திருந்து இயற்கையை கூறுகளை அவர்கள் தெய்வம் என்ற நிலையில் வழிபட்டனர். மந்திரங்களால் அவற்றை அர்ச்சித்தனர். போற்றிப் புகழ்ந்து வணங்கினர். இவ்வுலக வாழ்க்கையிலே இன்பமும் அமைதியும் கண்டு கொண்டனர். இத்தகைய வேதகால வாழ்க்கையினை மீண்டும் காணவிழைந்தார் பாரதியார். இத்தகைய பின்னணியில் நின்றே இவ்வசன கவிதை உள்ளடக்கம் பற்றி அணுக வேண்டும்.

இவ்வசன கவிதைப் பகுதியில் ஆறு விடயங்கள் பற்றி – காட்சி,சக்தி,காற்று,ஜகத்சித்திரம், விடுதலை என்பன – பேசப்படுகின்றது.

காட்சியில், இன்பம், ஞாயிறு என இரு கிளைகள் உள்ளன. காட்சி பிரபஞ்சக் காட்சியைக் கருதுகின்றது. பிரபஞ்சக் காட்சியின் இன்பம் பற்றி விபரிக்கப்படுகின்றது. இரண்டாம் கிளையில் ஞாயிறு போற்றப்படுகிறது. ஞாயிறுடன் காற்று, கடல், என்ற பகுதிகளையும் இணைத்துப் பார்க்கும்போது ஐம்பூதங்களும் நிலம், ஆகாயம் தவிர்ந்த ஏனையவையும் போற்றப்படுகின்றமை புலப்படுகின்றது. தனித்துப் பேசப்படாவிட்டாலும் நிலம், ஆகாயம் என்பன ஆங்காங்கே போற்றப்படுகின்றன. சுருங்கக் கூறின் ஜகத்சித்திரம்,விடுதலை தவிர்ந்த ஐந்து பகுதிகளிலும் அவ்வப்பாடு பொருள்களின் அறிமுகம் வடிவ நிலைகள், தெய்வீகப் பண்புகள், மனித வாழ்வில் அது வகுக்கும் பங்கும் பணிகளும், புகழ், வாழ்த்தலும் வணங்குதலும் என்ற ஆறு நிலைகளில் பஞ்சபூதங்கள் வணங்கப்படுகின்றன

ஜகத்சித்திரம், விடுதலை ஆகியன இரு சிறு நாடகங்களாம். முதல் நாடகம் அகப்பகை பற்றியது. அடுத்தது, அரசியல் உள்ளடக்கம் கொண்டது.

வணக்கப் பாடல்கள், சிறுசிறு தொடர்களும் அவ்வப்போது நீண்ட தொடர்களும் கொண்டவை. முற்கூறியது போல் செறிவும்,எளிமையும், புதுமையும், வலிமையும், வனப்பும் மிக்கவை. வேதப்பாடல்களுக்குரிய – மந்திரங்களுக்குரிய – ஓசைப் பண்பு கொண்டவை.

"காற்று" பதினைந்து அலகுகள் கொண்டது. இவற்றில், காற்றின் ஆற்றல் அதன் பல்வேறு செயல்கள், அதனை வாழ்த்துதல், வரவேற்றல் என்பன இடம்பெறுகின்றன.

எட்டாம் ஒன்பதாம் அலகுகளில் பாரதியின் வழமையான குணம் தலைநீட்டுகின்றது.பாரதி எது பற்றிச் சிந்திப்பினும் உலகத்து மனிதர்கள் பற்றி அல்லது தமிழர்கள் பற்றி நினைவுகூரத் தவறுவது இல்லை.எட்டாம் அலகில் உடல்வலுவும் உள வலிமையும் அற்ற மனிதர்கள் எச்சரிக்கப்படுகின்றார்கள். ஒன்பதாம் அலகில் தமிழ் மக்களின் சோம்பல், அறியாமை, ஆரோக்கியமின்மை, விதி மீதான அதீத நம்பிக்கை என்பன கூறப்படுகின்றன. உண்மையான சாஸ்திரங்கள் இல்லாநிலை எடுத்து உரைக்கப்படுகின்றது. அது மட்டுமன்று. பார்ப்பனக் கவிஞன் என்று சிலரால் முத்திரை குத்தப்பட்ட பாரதி அத்தகையனல்லன் என்பதும் தெளிவாகின்றது. இவ்வாறு பார்ப்பனரை விமர்சிக்கின்றான் பாரதி.

"உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல்
இருப்பவற்றையும் மறந்து விட்டுத்
தமிழ்நாட்டுப் பார்ப்பார் பொய்க் கதைகளை
மூடரிடம் காட்டி வயிறு பிழைத்து வருகின்றார்கள்.

"க.பொ.த உயர்தர வகுப்பிற்கு "காற்று" வசன கவிதையின் எட்டாம் ஒன்பதாம் அலகுகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன. கற்பிக்கும் ஆசிரியர் இதுவரை கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து மேலும் சிந்திப்பது அவசியமானது.

## இலங்கை அனுபவம் பற்றி
## சுவாமி விவேகானந்தர்

இலங்கையில் அத்வைதமும், வீர சைவமும் அனுஷ்டிக்கப்படுகின்றன. இந்து என்ற பெயருக்குப் பதில் சைவம் எனக் கூற வேண்டும். ஸ்ரீ சைதன்ய தேவர் வங்காளத்தில் பரவச் செய்த இறைவனின் திவ்ய நாம சங்கீர்த்தனமும் நடனமும் ஆதியில் தென்னாட்டிலே தமிழர்களிடையே பிறந்தன. இலங்கையில் வழங்கும் தமிழ் சுத்தமான தமிழாகும். இங்கு பின்பற்றப்படும் மதமும் கலப்பற்ற சைவ மதமேயாகும். பல்லாயிரக்கணக்கான மக்கள் பரவசமாக ஒருங்கே மறை நூல்கள் ஓதுதலும் சிவனைப் பரவிப் பாடுதலும் ஆயிரக்கணக்கான தாள வாத்தியங்களின் முழக்கமும். இனிய ஓசையும்,சிறந்த அடியாராக அனுமனை ஒத்த தோற்றமும் சிவந்த கண்களும், உயர்ந்த ஆகிருதியும் கொண்ட தமிழர்கள் உடல் முழுவதும் நீறு பூசி கழுத்திலே உருத்திராட்சமாலை அணிந்து மெய் மறந்து ஆடுவதும் ஆகிய இவற்றை நேரில் பார்க்காமல் ஒருவரால் புரிந்து கொள்ள முடியாது.

*ஆதாரம்: –விவேகானந்தன் (சிறப்பு மலர், 1998)*



# தமிழில் மருத்துவ அறிவியல் நூல்கள்

*வல்வை ந. அனந்தராஜ்*

ஈழத்து மருத்துவ அறிவியல் நூல்களின் மரபானது ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த செகராசசேகரம், பரராசசேகரம் ஆகிய இரு மருத்துவ நூல்களுடன் ஆரம்பமானது எனச் சொல்லப்படுகின்றது.

இவ்விரு நூல்களும் வட மொழியில் உள்ள ஆயுள்வேத நூலகளைத் தழுவியே இயற்றப்பட்டனவாதலால் இவை வெளியிடப்பட்ட காலத்தில் ஈழத்தில் சித்த மருத்துவம் பரவியிருக்கவில்லையெனத் தெரியவருகின்றது. ஆனால் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தை அடுத்துள்ள போர்த்துக்கேயர் காலத்தில் சித்த மருத்துவம் இருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன.

ஈழத்தில் எழுந்த இவ்விரு மருத்துவ நூல்களும் பெரும்பாலும் விருத்தப்பாக்களால் பாடப்பட்டிருப்பினும் பரராசசேகரத்தில் சில இடங்களில் ஆசிரியப்பாவும், கலி வெண்பாவும் இடம் பெற்றிருக்கின்றது. அதே போன்று செகராசசேகரம் என்ற மருத்துவ நூலில் சில பாடல்கள் வெண்பாவில் அமைந்துள்ளன.

இந்நூல்களில் குறிப்பிட்ட நோய்களுக்கும், அவற்றிற்கான சிகிச்சை முறைகளையும் பார்க்கும் போது, ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் பெரும்பாலான நோய்களுக்கும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

பரராசசேகரம் என்ற மருத்துவ நூலில் சுரத்தில் 64 வகைக்கும், சன்னியில் 40 வகைக்கும் பித்த ரோகத்தில் 40 வகைக்கும் சிலேற்பன ரோகத்தில் 96 வகைக்கும் மேக ரோகத்தில் 40 வகைக்கும் உதர ரோகத்தில் 108 வகைக்கும், மூல ரோகத்தில் 13 வகைக்கும் மருந்துகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை விட நீரிழிவு, பிளவை, கரப்பன், கிரந்தி, குட்டம், வலி, விக்கல், கசம் வாந்தி ஆகிய நோய்களுக்கும் வைத்தியக் குறிப்புகள் உள்ளன. 1

அதே போன்று, செகராசசேகரத்தில் சுரத்தில் 15 வகைக்கும் சன்னியில் 13 வகைக்கும், வாதத்தில் 85 வகைக்கும், மூலத்தில் 21 வகைக்கும் மருத்துவ குறிப்புக்கள் உள்ளன. 2

ஆயுள்வேத வைத்திய நூல்களைத் தழுவிய பரராசசேகரமும் செகராசசெகரமும் விஷ கடிக்கு எதுவும் கூறாதமையால் அதற்கான மருத்துவத்தைக் கூறும் நூல் ஒன்றின் தேவை 18 ஆம் நூற்றாண்டில் உணரப்பட்டது.

அதனாலேயே ஒல்லாந்தர் காலப்பகுதியில் சித்தர் ஆருடத்தை முதனூலாகக் கொண்டு அதில் கூறப்பட்ட,

"ஊரும் உரகஞ் சிலந்தி
தீண்டினால் வந்துறு குணப்பண்பு
உரைத்து அதனை
ஓர்ந்து தேர்ந்து நேரு மருந்துகள்" 3

என்று கூறும் விஷ வைத்திய நூலாக எழுந்ததே "அமுதாகரம்"இந் நூலை அ.வரதபாண்டியர் இயற்றியதாக கூறப்படுகின்றது. இதனை அடுத்தே ஈழத்தமிழரிடம் சித்த மருத்துவம் பரவத் தொடங்கியது எனலாம்.

எனவே அக்காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு மருத்துவம் தொடர்பான தகவல்களை வழங்கும் ஊடகமாக அந் நூல்களே இருந்ததாக கூறப்படுகின்றது.

பிற்காலத்தில் ஈழத்தில் தமிழில் மருத்துவத் துறை சார்ந்த நூல்களின் தோற்றமானது அமெரிக்க மிஷனரிமாரின் வருகையுடன் உத்வேகம் கொண்டது எனலாம். 19 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்து சேர்ந்த மிஷனரி மாரில் தமிழில் மருத்துவ அறிவியல் துறைக்கும் பெரும் பங்காற்றியவர் தான் டாக்டர் சாமுவேல் ஃபிஸ்க் கிறீன் *(Fisk Green)* என்பவர் ஆவார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள "மானிப்பாய் கிறின் ஞாபகார்த்த வைத்தியசாலை" *(Manipay Green Memorial)* இருக்கும் வரை இவரது பெயரையும் பணியையும் தமிழர்கள் எவரும் மறந்துவிடமாட்டார்கள்.

இவர் 1822 ம்ஆண்டில் அமெரிக்காவின் மசாசுசெற்ஸ் மாநிலத்தில் உள்ள கிறீன் உறில்*(Green Hill)* என்னும் ஊரில் பிறந்தவராக இருந்த போதும், யாழ்ப்பாணத்தைத் தன் பிறப்பிடம் போலவே கருதி உழைத்தவர். அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் பட்டம் பெற்று, சமயத் தொண்டு செய்வதற்காக இலங்கைக்கு வந்து சேர்ந்தவர். இவரே முதன் முதலில் தமிழில் மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்து 1850 இல் இருந்து இலங்கையின் மருத்துவ கலாநிதிகளை உருவாக்கியவர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

அதே வேளை தமிழ் மொழியிலான மருத்துவ அறிவியல் நூல்களைப் படைத்தளித்த முதலாவது அறிஞர் என்ற சிறப்பையும் டாக்டர் கிறீன் அவர்களே பெற்றுள்ளார்.அத்துடன் அறிவியல் சார்ந்த நூல்களை தமிழில் வெளியிடுவதற்கு அடியெடுத்து வைத்த முதல் நாடு இலங்கை என்ற பெருமையையும் அடைவதற்கு டாக்டர் சாமுவேல் கிறீன் அவர்களின் உழைப்பே காரணம் எனலாம்.

1872-1883 காலப்பகுதியில் மேலைத்தேய மருத்துவ அறிவியல் நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தும், பொருத்தமான கலைச் சொற்களைத் தமிழில் ஆக்கியும், அரும்பணியாற்றிய டாக்டர் கிறீன் அவர்களின் முயற்சியே, இன்று தமிழில் மருத்துவ அறிவியல் கல்விக்கான அடித்தளமாக இருந்தது எனலாம்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாததிரங்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
இற வாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வெண்டும்." 4

என்று பாடிய பாரதியாரின் பாட்டின் இலக்கணமாக டாக்டர் சாமுவேல் கிறீன் திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.

ஆம்— அந்த வகையில் டாக்டர் கிறீன் அவர்கள் ஆங்கில மொழியில் இருந்து, மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து, புதியதொரு சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தார் எனலாம்.

டாக்டர் கிறீன் அவர்கள் வைத்திய கலாநிதி கொல்வின் காட்டர் எழுதிய *(Anatomy Physiology And Hygiene)* என்னும் ஆங்கில நூலைத் தமிழில் "உடற் கூற்று உடல்நலத்துறை என்னும் பெயரில் முதன் முதலில் மொழிபெயர்க்கத் தொடங்கினார்". அதனைத் தொடர்ந்து டாக்டர் கிறீன் பல நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து தமிழ் மருத்துவ உலகுக்கு வழங்கியுள்ளார். அவர் மொழி பெயர்ந்த அறிவியல் நூல்களுள் குறிப்பிடக் கூடியவையாக,

இரண வைத்தியம் *(SURGERY) 1867*
மனுஷ அங்காதிபாதம் *(HUMAN ANATOMY) 1872*
கெமிஸ்தம்*(CHEMISTRY)*
மனுஷ சுகரணம் – *1883*
வைத்தியாகரம் – *1872*
மருத்துவச் சரக்குகளின் பெயர் – *1875*

போன்ற மருத்துவ அறிவியல் நூல்களைக் குறிப்பிடலாம்.

1855 ஆம் ஆண்டில் இவர் மருத்துவத் துறை தொடர்பான ஆங்கில, தமிழ்ச் சொற்களைத் திரட்டி, "தமிழில் மருத்துவ விஞ்ஞான அகராதியையும் *(A DICTIONARY OF TAMIL MEDICAL SCIENCE)* தொகுத்து வெளியிட்டுள்ளார். இவ்வாறு மருத்துவ அறிவியல் நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்த அதே வேளையில் தனது சொந்த ஆராய்ச்சியின் மூலமும், வைத்தியப் பணியில் பெற்ற அனுபவங்களைக் கொண்டும் காதுகள், தோல், கரங்கள் என்று மனித உடலில் அங்கங்கள் தொடர்பாகப் பல மருத்துவக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

டாக்டர் கிறீன் அவர்களின் இம் முயற்சிகளே தமிழிலும் மருத்துவுக் கல்வியைப் போதிக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது எனலாம் .

1865 இல் டாக்டர் கிறீன் அவர்கள் முன்னெடுத்து வைத்த முயற்சியின் பயனாகவே மெல்ல மெல்ல தமிழில் அறிவியல் சார்ந்த நூல்கள்,சஞ்சிகைகள்,பத்திரிகைகள் இலங்கையில் வெளிவரத்தொடங்கின.

ஈழத்தில் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வரலாற்றில் 1905 இல் எம்.ஞானப்பிரகாச பண்டிதர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியாகிய, "பூலோக ஔஷ தோகாரி" என்ற பத்திரிகையே முதன் முதலில் மருத்துவ முறைகளைப் பற்றி எழுதுவதற்காக எழுந்த பத்திரிகையாகும். ஆயுள்வேத வைத்தியத்தை ஊக்குவிப்பதற்கு எழுந்த இப் பத்திரிகை கொழும்பு சோனகத்தெரு வைத்திய சீவன அச்சகத்தில் வெளியிடப்பட்டது.

டாக்டர் கிறீன் அவர்களின் பாதையில் தரமான மருத்துவ நூல்களை ஈழத்துக்கு வழங்கியவர்களில் பேராசிரியர் டாக்டர் அ.சின்னத்தம்பி அவர்களின் பங்களிப்பு மகத்துவமானது. குறிப்பாக அவரது,

"மகப்பேற்று மருத்துவம்" என்ற நூல் தாய்மைப் பேறு அடைந்த பெண்களுக்கு ஒரு சிறந்த அனுபவ ஆசான், இந் நூல் உடற்கூற்று மருத்துவம் தொடர்பான செய்திகளைத் தமிழில் விளக்கியுள்ளதுடன் ஒரு பெண் கர்ப்பந்தரித்த நாளில் இருந்து எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயங்களையும், மகப்பேற்றுச் சிகிச்சை முறைகளையும் கூட தமிழில் விளக்குகின்றது. பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களின் மருத்துவ அறிவியல் நூல்கள், மருத்துவக் கருத்துக்களைத் தமிழில் எடுத்துக் கூறிய போதும் இதில் இடம் பெற்றுள்ள கடினமான சொற்பிரயோகம், சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருக்கவில்லை. ஆயினும் இவை பல்கலைக்கழக மாணவர்களுக்கும், மருத்துவத்தை அறிய விரும்புவோர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகவே இருந்தன என்று கூறப்படுகின்றது.

பேராசிரியர் அ.சின்னத்தம்பி அவர்களின் இப் பணியைத் தொடர்ந்து நீண்ட இடைவெளியின் பின்னர், டாக்டர் ச.இராசரத்தினம் அவர்களின் "தாயும் பிள்ளையும்" என்ற நூல் 1934 இல் முதற் பதிப்பாக வெளியிடப்பட்டு, மீண்டும் 1974 இல் மறு பிரசுரம் செய்யப்பட்டது. இது மகப்பேற்று மருத்துவம் தொடர்பாக தமிழில் எழுதப்பட்ட ஒரு சிறந்த நூலாகும்.

இதே போன்று டாக்டர். தி.ராஜேந்திரனின் 1979 இல் "அறுவை வைத்திய நலன் பேணல் கை நூல்" என்ற நூலும் 1983 ல் "நச்சுப்பாம்புகளும் அவற்றின் கடிகளும், தீர்வுகளும்" என்ற நூலும் வெளியிடப்பட்டதன் மூலம் மருத்துவ அறிவியல் அறிவை மேலும் நளினப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவர்களைத் தொடர்ந்து மருத்துவ அறிவியல் செய்திகளை சாதாரணமக்களும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எளிமையாக எழுதிப் பல நூல்களை வெளியிட்ட பெருமை பேராசிரியர் டாக்டர் சிவஞானசுந்தரம் அவர்களையே சாரும். "நந்தி" என்ற புனைப்பெயரில் ஆக்க இலக்கியத்துறையில் தடம்பதித்த பேராசிரியர், மருத்துவ பீட பேராசிரியராக இருந்த அனுபவத்தையும், எழுத்துத் துறையில் பெற்ற அனுபவத்தையும் கொண்டு, வெளியிட்ட நூல்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றிருந்தன.

டாக்டர் நந்தியின் பல்வேறு தரத்திலான நூல்களுள்
அன்புள்ள நந்தினி
நந்தினி உன் குழந்தை
இதய நோய்களும் தடுப்பு முறைகளும்
அன்புள்ள தங்கைக்கு

ஆகிய நூல்களில் சிக்கலான மருத்துவக் கருத்துக்களை மிக எளிமையாகக் கதைசொல்லும் சொல்லும் பாணியில் தமிழில் சுவைபடக் கூறியமை குறிப்பிடத்தக்கது. இவை அறிவியல் இலக்கியத் துறையில் ஒரு பாரிய பங்கை வகிக்கின்றன.

1980 களில் இருந்து மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஒரு மருத்துவ நிபுணராகக் கடமையாற்றும் டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்கள் ஆக்க இலக்கியத்துறையிலும் பெயர்பெற்று விளங்கியவராக இருந்தார்.

இலக்கிய முயற்சிகளினூடாக அவர் பெற்ற அனுபவங்களும்,சிருஷ்டி இலக்கியத்திறனும் மருத்துவ அறிவியல்துறை சார்ந்த நூல்களை ஆக்குவதற்கு டாக்டர் எம் .கே.முருகானந்தனுக்கு உதவியது.

அவர் எழுதிய மருத்துவ அறிவியல் நூல்களுள் 1998 ல் வெளியிடப்பட்ட நலவியல் நூலான "நீங்கள் நலமாக ..." என்ற நூலுக்கு இலங்கை தேசிய வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணராகக் கடமையாற்றும், டாக்டர் ம.கணேசரத்தினம் வழங்கிய வாழ்த்துரையில்,

" வைத்திய கலாநிதி எம் கே முருகானந்தன் அவர்கள் நீங்கள் நலமாக ... என்ற வைத்திய நூலை வெளியிட்டு எமது மக்களின் வைத்திய அறிவை முன்னேற்றுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. மிகவும் சுலபமாக விளங்கக்கூடிய விதத்தில் கேள்வி- பதில் வடிவத்தில் அவர் தனது நூலை எழுதியுள்ளார். இந்நூல் அவரது பரந்த வைத்திய அனுபவத்தையும் நவீன அறிவையும் பிரதிபலிக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

இந் நூலை அவர் சாதாரண அறிவுள்ளவர்களுக்காக எழுதியிருந்தாலும் வைத்திய மாணவர்களுக்கும் வைத்தியர்களுடன் தொழில் செய்பவர்களுக்கும் மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் ஒரு வித ஐயமுமில்லை..."

என்று குறிப்பிட்டுள்ளமை மருத்துவ அறிவையும் கூட எளிய முறையில் சாதாரண மக்களுக்கும் பரிமாற்றம் செய்ய முடியும் என்பதை உணர்த்துகின்றது.

ஒரு தகவல் பரிமாற்றத்தில் மிகச் சிறந்த ஊடகமாக "நூல்கள்" விளங்குகின்றன என்பதற்கு டாக்டர் எம்.கே.முருகானந்தனின் நூல்கள் எடுத்துக்காட்டுக்களாக உள்ளன. அந்த வகையில் டாக்டர் எம்.கே. முருகானந்தன் தமிழில் பல்வேறு மருத்துவ அறிவியல் துறை சார்ந்த நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். அவரது நூல்களுள்,

- ★ சிறுவர்களின் கண்களைக் காக்க வாரீர்
- ★ தாயாகப் போகும் உங்களுக்கு
- ★ எயிட்ஸ்
- ★ போதையைத் தவிருங்கள்
- ★ பாலியல் நோய்கள்
- ★ நீங்கள் நலமாக

என்பன எளிய தமிழில் சுவையாக சாதாரண மக்களுக்கென ஆக்கிய நூல்களின் வரிசையில் முதன்மை வகிப்பவையாகும். இவை மருத்துவத்துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது சாதாரண மக்களுக்கும் கூடப் பயன்படும் வகையில் உள்ளமை அறிவியல் இலக்கிய நூல் வரிசையில் இன்னொரு சாதனையாகும்.

இக் காலப்பகுதியில் தமிழில் மருத்துவத்துறை சார்ந்த பல்வேறு நூல்கள் வெளியாகிக் கொண்டிருந்த நேரத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசம் எங்கும் போர் மேகங்களால் சூழப்பட்டு, மக்கள் அல்லலுட்டுக்கொண்டிருந்த ஒரு சூழ்நிலையில் காலத்தில் தேவையறிந்து மருத்துவத்துறையின் ஒரு பிரிவான முதலுதவிச் சிகிச்சை முறைகளுக்கான நூல்கள் பல வெளிக்கொணரப்பட்டன. இப் பெரும் பணியில் டாக்டர் ந. சிவராஜனின் " முதலுதவி " நூல் டாக்டர் கனகசுகுமாரின் "முதலுதவிச் சிகிச்சை, நா.போஜனின் "முதலுதவி" டாக்டர் எஸ். பத்மலோசினியின் " போர்க்காயங்களும் அவற்றுக்கான முதலுதவிகளும் " ஆகிய நூல்களும் காலத்திற்கேற்ப பயனுள்ள நூல்களாக அமைந்திருந்தன.

1994 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சுகாதார நிலையத்தினால் வைத்திய கலாநிதி எஸ்.பி.ஆர். சீர்மாறனால் எழுதப்பட்ட "சில நோய்களும் சில ஆலோசனைகளும் " என்ற வைத்திய நூலில் பொதுவான நோய்களும் அவற்றைத் தடுப்பதற்கான ஆலோசனைகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதில் உள்ள ஆலோசனைகள் பலவற்றுக்கு விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் கொடுக்கப்பட்டு வாசிப்போரின் சிந்தனையைத் தூண்டும் வகையில், தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை போன்ற எளிமையான மருத்துவ நூல்கள் மருத்துவ தொழில் நுட்பம் தொடர்பாக அடிப்படை அறிவையேனும் பெற்றிருக்காத சாதாரண மக்களின் மருத்துவ அறிவை வளர்க்கும் வகையில் சிறந்த ஊடகங்களாக இருக்கின்றன.

1983- 1987 காலப்பகுதியில் யாழ்ப்பாணக்குடா நாட்டில் பரவலாக எறிகணைத் தாக்குதல்களும், விமானக்குண்டு வீச்சுக்களுக்கும் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுக்கொண்டே வந்தனர். இவற்றுள் இரத்தப் பெருக்கினாலேயே பெருமளவில் மரணங்கள் ஏற்பட்டன.

இந்த நேரத்தில் இவை போன்ற முதலுதவி நூல்களும் வைத்திய ஆலோசனை நூல்களும் சாதாரணமான மக்களும் வாசித்து மருத்துவ அறிவைப் பெறக்கூடியதாக இருந்தமையால், இரத்தப் பெருக்கினால் ஏற்படக் கூடிய மரணங்கள் பெருமளவில் தடுக்கப்பட்டிருந்தன.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒவ்வொருவரும் நடமாடும் மருந்தகமாகவே செயற்பட்டமைக்கு இத்தகைய அறிவியல் துறை சார்ந்த நூல்களே காரணமாக இருந்தன எனலாம்.

1989 ல் பலாலி ஆசிரியர் கலாசாலை விஞ்ஞான மன்ற வெளியீடான "போதை", டாக்டர் கனக சுகுமாரின் "மது அடிமை நிலையும், மதுப் பிரச்சனைகளும்" போன்ற நூல்கள் போதை வஸ்துக்களில் அடங்கியுள்ள இரசாயனப் பொருட்களைப் பற்றியும் அவற்றால் மூளையின் மைய நரம்புத் தொகுதி, சுற்றயல் நரம்புத் தொகுதி ஆகியவற்றில் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியும் விஞ்ஞான ரீதியாக விளக்குகின்றன. இவை மனித. சமூக நடத்தைகள், அவர்களது பண்பாட்டு விழுமியங்களில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பற்றியும் ,அவற்றுக்கான தீர்வுகள் பற்றிய ஒரு தெளிவை ஏற்படுத்தும் நூல்களாக இருந்ததுடன், ஒரு மனிதனை சமூகப் பிறழ்வு நடத்தையில் இருந்தும் காப்பாற்றும் சாதனங்களாகவும் விளங்குகின்றன.

"சீனியைக் கூடுதலாகச் சாப்பிட்டால்
சலரோகம் வரும்......"


என்ற மூட நம்பிக்கையில் இருந்து மீளாது, நீரிழிவு நோய் தொடர்பான அறிவைப் பெற்றிராத சாதாரணமக்களுக்கு "நீரிழிவு" நோய் ஏற்படுவதற்கான மருத்துவக்காரணங்களையும், அவற்றுக்கான தீர்வுகளையும் விளக்கும் வகையில் "நீரிழிவுக் கைநூல்" என்னும் நூல் அமைந்துள்ளது.

1984ல் டாக்டர் செ.நாகநாதனால் வெளியிடப்பட்ட "நீரிழிவுக் கைநூல்" வீட்டில் உள்ள ஒவ்வொருவரதும் மருத்துவ ஆலோசகனாக விளங்குகின்றது.

எனவே அறிவியல் நூல்களுக்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்ததில் அகராதிகள் ஆக்கத்தையடுத்து, தமிழில் வெளிவந்த மருத்துவ நூல்களின் தோற்றம் எடுத்துக் காட்டுகின்றது. இன்று மருத்துவ தொழில் நுட்ப வளர்ச்சியானது. முன்னேற்றமடைந்துள்ள இந்த நேரத்தில் புதிய மாற்றங்களின் தேவைகளை அடியொற்றியதாகவே மருத்துவ அறிவியல் நூல்களும் வெளியிடப்பட வேண்டியதும் அவசியமாகின்றது.

**அடிக்குறிப்புகள்**


1. பரராசசேகரம், ஐ.பொன்னையா பதிப்பு – பாகம்1 – 7 மல்லாகம் – 1934
2. செகராசசேகரம் ஐ.பொன்னையா பதிப்பு – பாகம்1 – 7 மல்லாகம் – 1934
3. வரதபாண்டியர். அமுதாகரம், கற்சிறப்பாயிரம் செய்.4 அ.தம்பையாப்பிள்ளை பதிப்பு,சென்னை.1892
4. சுப்பிரமணியபாரதியார் "பாரதியார் கவிதைகள்" .
5. முருகானந்தன்.எம்.கே. "நீங்கள் நலமாக ..." கொழும்பு 1998 ப(1)

# இலங்கையின் மாறிவரும் சனத்தொகையும் வரலாற்றுச் சிதைவுகளும்

*சிவானந்தி நடராஜா, புதுக்குடியிருப்பு*

வட இந்தியாவிலிருந்து விஜயனும் அவனுடைய தோழர்களும் இலங்கைக்கு வந்து குடியேறியதாகக் கூறப்படும் காலத்திற்கு அதாவது சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் தனித்துவமான இனமாக நாகர்களும் இயக்கர்களும் வாழ்ந்து வந்தனர் என்பதை மகாவம்சம் கூறுகின்றது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது 3000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பெருங்கற் பண்பாட்டை ஒத்ததாக இங்கு பரவலாகப் பல பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை இலங்கையிலும் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழினம் சிறந்த நாகரிகத்தோடு வாழ்ந்தமையை எடுத்துக் காட்டுகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையில் நிறுவப்பட்டுத் தமிழ் வளர்த்துச் செயல்பட்ட தமிழ்ச் சங்கத்தில் ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள் பலர் வீற்றிருந்து தமிழ் இலக்கியம் படைக்கும் அளவுக்கு இலங்கையில் தமிழர்கள் நிலையாகவும் செழிப்பாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

மகாவம்சம் என்ற பௌத்த வரலாறு கூறும் நூலில்:-

> "விஜயன் எழுநூறு பேருடன் இலங்கைக்கு வந்த ஓராண்டுக்குள்
> தமிழ் இளவரசி மற்றும் 700 பெண்கள், கைவினைக் கலைஞர்கள்
> பதினெண் குடிகளைச் சேர்ந்த 1000 குடும்பங்கள் எனப்
> பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வந்து குடியேறினர்"எனவும்

பூஜாவளி என்னும் சிங்கள வரலாற்று நூல்:-

> "முதலாம் கஜபாகு காலத்தில் (கி.பி 113-135) 12000 தமிழர்கள்
> இங்கு கொண்டு வந்து குடியேற்றப்பட்டனர்"என்றும் கூறுகின்றது.

அந்த வகையில் இலங்கையில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளான நாகர், இயக்கர்களைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்தே தமிழர்களும் சிங்களவர்களும் இங்கு குடியேற்றப்பட்டதை வரலாறுகள் தெரிவிக்கின்ற போதிலும் இலங்கை முழுவதிலும் தமிழர்கள் 3000 ஆண்டுகளுக்கு மேலாகத் வாழ்ந்து வருவதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. 2300 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர்களும் சிங்களவர்களும் மாறி மாறி இலங்கையை அனுராதபுரத்திலும் அதற்குத் தெற்கேயும் ஆட்சி நடத்தியிருக்கின்றனர். வடக்கில் பல ஆண்டுகளாகத் தமிழ் மன்னர்களின் தனி ஆட்சி நிலைத்திருந்திருக்கின்றது. அதே வேளை ஒரு சில சிங்கள அரசர்களும் குறிப்பிட்ட சில ஆண்டுகள் வடபகுதியையும் சேர்த்து ஆட்சி புரிந்துள்ளனர்.

கி.பி 1215 ஆம் ஆண்டு மாகன் ஆட்சிப்பீடமேறியதன் பின்னரேயே இலங்கையின் வடக்கு கிழக்கு,, வடமேற்குப் பகுதிகள் தமிழ் பேசும் மக்களின் பகுதியாகவும், தென்மேற்குப் பகுதியும் மலையகப் பகுதியும் சிங்கள மக்களின் பகுதியாகவும் மாறி விட்டன.

13 ஆம் நூற்றாண்டில் இருந்து 16 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இலங்கையின் வலிமைமிக்க அரசாக "யாழ்ப்பாண இராச்சியம்"விளங்கியது. இன்றைய வடக்கு கிழக்கு மாகாணத்தையும், சிலாபம் புத்தளம் கரையோரப் பகுதிகளையும் உள்ளடக்கிய பகுதி தமிழ் மன்னர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக விளங்கியது.

17ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியடைந்தபோதிலும் யாழ்ப்பாணத்தைத் தனியான நிர்வாக அமைப்பாகவே நிர்வகித்து வந்தனர். போர்த்துக்கேயரும், அவரின் பின்னர் ஆட்சி செய்து வந்த ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப் பகுதி முழுவதையும் கைப்பற்றி ஆட்சி செய்து வந்தபோதிலும் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரங்களோடு கண்டி இராச்சியத்தையும் 1815இல் கைப்பற்றியதன் பின்னர்தான் இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. ஆங்கிலேயர்கள் தமது நிர்வாக வசதி கருதித் தமது ஆட்சியின் கீழ் இலங்கையை 1833 இல் வடக்கு – கிழக்கு – தெற்கு – மேற்கு – மத்தி என ஐந்து மாகாணங்களாகப் பிரித்து ஆட்சி செய்தனர். வடக்கு கிழக்கு மாகாணத்தினுள் பல சிங்களப் பிரதேசங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. வெவ்வேறு பண்பாடுகள், மொழி, மத வழிபாடுகளைக் கொண்ட தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஒன்றாக நிர்வகிப்பதில் பல இடையூறுகளை எதிர்கொண்ட ஆங்கிலேய ஆளுநரான சேர் வில்லியம் கிரெகரி, 1873 இல்வடக்கு கிழக்கு மாகாணத்துடன் சேர்க்கப்பட்டிருந்த சிங்களப் பகுதிகளான நுவரகலாவி(அனுராதபுரம்) தம்மங்கடுவ (பொலனறுவை) ஆகியவற்றை மீண்டும் தனியாக பிரித்து வடமத்திய என்ற புதிய மாகாணம் ஒன்றை உருவாக்கினார்.

நீண்ட காலமாகத் தனித்துவமான பண்பாடு பாரம்பரியங்களைப் பேணி வந்த வெவ்வேறு இனங்களைப் பலாத்காரமாக ஒன்றிணைத்து ஆட்சி நடத்துவதில் உள்ள சிரமங்களை உணர்ந்த ஆங்கிலேயர், 1873 இல் வடக்கு கிழக்குப் பிரதேசத்தைத் தனியாகப் பிரித்துத் தனித்துவமாக இயங்க விட்டனர்.

இப்பிரதேசம் ஏறத்தாழ இருபதினாயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களுடன்,புத்தளம் சிலாபக் கரையோரப் பகுதியை உள்ளடக்கியதும், இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 32 சத வீதமுமாகும்.

பின்னர் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின், ஆங்கிலேயர் இந்த நாட்டை விட்டு வெளியேறும் பொழுது ஒற்றையாட்சியின் கீழ் கொண்டு வந்து சிங்களத் தலைவர்களிடம் கையளித்துச் சென்றனர்.

1948 இல் இருந்து பாராளுமன்றப்பிரதிநிதித்துவம் மற்றும் நிலப்பரப்புக்கள், குடியேற்றத் திட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம் தமிழ்மொழியிலான பாரபட்சம், இனரீதியிலான தரப்படுத்தல் போன்றவற்றினால் சிங்களதமிழ் மக்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் வலுப்பெற – அதன் விளைவாக பண்டா – செல்வா

ஒப்பந்தம் டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பன ஏற்பட்டபோதும் அவை தோல்வி அடைந்ததன் விளைவாகவே இலங்கையின் ஆயுதப் போராட்டத்திற்கான வித்திடப்பட்டது. அதன் உச்சக்கட்டமாகவே 1987 இல் ராஜிவ்,ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இருவரிடமும் எழுந்த உடன்பாடு காரணமாக இலங்கை – இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு எல்லைகள் வரையறுக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண அரசு மீண்டும் தோற்றம் பெற்றது.அதனுடன் சேர்த்து இலங்கையில் எட்டு மாகாண அரசுகள் உருவாக்கப்பட்டன.

வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள்:-

2500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடமாக இருந்து வந்த வடக்கு கிழக்கு பிரதேசத்தின் மூன்றில் ஒரு பகுதிக்குக் கூடுதலான பகுதியில் 1948 இல் படிப்படியாகக் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிங்கள மக்களின் விகிதாசாரம் படிப்படியாக அதிகரித்து வந்தது.

இலங்கையில ஏற்படுத்தப்பட்டுள்ள குடியேற்றத் திட்டங்கள் பின்வருமாறு:-

1. கந்தளாய் வேளாண் குடியேற்றத் திட்டம்
2. வெருகல் ஆற்றை மறித்துக் கட்டிய அல்லை நீர்ப்பாசனக் குடியேற்றத் திட்டம்
3. முதலிக்குள (மொறவேவா) குடியேற்றத் திட்டம்
4. மணலாறு குடியேற்றத் திட்டம்
5. பதவியா குடியேற்றத் திட்டம்
6. அம்பாறை குடியேற்றத் திட்டம்
7. யான் ஓயா குடியேற்றத் திட்டம்
8. பெரியவிளாங்குளம் குடியேற்றத் திட்டம்
9. அல்லை-கந்தளாய் தெரு சூரியபுர குடியேற்றத் திட்டம்

இத்தகைய குடியேற்றத் திட்டங்களினுடாகவே வடக்கு கிழக்கின் இன விகிதாசார நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டு வந்ததைத் திருகோணமலையில் ஏற்பட்ட பின்வரும் மாற்றங்கள் புலப்படுத்துகின்றன:-

1827 இல் 81.5 %தமிழரும் 4.21 %சிங்களவரும்
1881 இல் 64.84 %தமிழரும் 4.21 %சிங்களவரும்
1946 இல் 44.51 %தமிழரும் 20.68 %சிங்களவரும்
1971 இல் 38.15 %தமிழரும் 28.80 %சிஙகளவரும்
1981 இல் 36.41 %தமிழரும் 33.62 %சிங்களவரும்

இருந்ததாகக் குடிசன மதிப்பீடு தெரிவிக்கின்றது. 2001 இல் மேலும் இந்த விகிதசார இடைவெளி குறைந்து கொண்டே வரும் நிலைமையே காணப்படுகின்றது.

இவ்வாறான சிங்கள மக்களின் குடியேற்றத்திட்டங்களின் ஊடாக வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்ப் பெயர்கள் பல சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டு அவையே இன்றைய கச்சேரிப் பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

உதாரணத்திற்கு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல தமிழ் ஊர்களின் பெயர்கள் படிப்படியாக சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டு வந்துள்ளதைப் பின்வரும் ஊர்களின் பெயர்கள் காட்டுகின்றன.

| தமிழ்ப் பெயர் | மாற்றப்பட்ட சிங்களப் பெயர் |
|---|---|
| முதலிக்குளம் | மொறவேவா |
| புடவைக்கட்டு | சாகரபுர |
| பெரிய விளாங்குளம் | மகாதிவுல்வேவா |
| குமரேசன் கடவை | கோமரங்கடவல |
| வான் ஆறு | வான் எல |
| அரிப்புச் சந்தி | அலிஒலுவ |
| கல்லாறு | சோமபுர |
| பனிக்கட்டிமுறிப்பு | பனிக்கட்டியாவ |
| ஆண்டான்குளம் | ஆனந்தவேவா |
| கஞ்சி மடம் | அபயபுர |
| சீனன்குடாவின் ஒரு பகுதி | நாலந்தபுர |
| சீனன்குடாவின் இன்னொரு பகுதி | தானியகம |

வடக்கு கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத்திட்டங்களினால் சனத்தொகை மாறி வருவது ஒருபுறம், இன்னொரு புறத்தில் பின்வரும் காரணிகளாலும் சனத்தொகை விகிதம் மாறுபடுகின்றது.

1. தொடரும் யுத்த நடவடிக்கையினால் ஏற்படும் மனித அழிவுகள்
2 போர் நெருக்குதல்களினால் ஏற்படும் புலம்பெயர்வுகள்
3. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களினால் ஏற்படும் புலம்பெயர்வுகள்

தனித்துவமான சில பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த சில பிரதேசங்களில், இத்தகைய இடப்பெயர்வுகளும், புலம்பெயர்வுகளும் இயல்பாகவே பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

பண்பாட்டு மாற்றங்களை மொழி ரீதியான மாற்றங்கள், உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள், நடை, உடைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள், பாரம்பரிய சடங்குகளில் ஏற்படும் மாற்றங்கள் என வகைப்படுத்தலாம். இவற்றினூடாகத் தனித்துவமான, தொன்மை வாய்ந்த தமிழ்மொழியைப் பேசுகின்ற மக்களின் தனித்துவமும் அழிந்து கொண்டு போவதும் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இந்த நிலையில் அந்த மொழியும், அந்த மொழியைப் பேசுகின்ற மக்களும் அழிக்கப்பட்டு வரும்பொழுது அந்த இனத்திற்கான பாரம்பரியப் பிரதேசம் ஒன்றிற்கான கோரிக்கைகளை விடுக்கும் குரலும், அந்த இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான குரலும் மௌனமாகி விடும்.

♦♦♦♦♦♦

# அரக்கர் குலத்திலும் ஓர் அற்புத ஆன்மா

## கும்பகர்ணன் பற்றிய ஒரு பார்வை

**ச.கு.கமலசேகரன்,** அதிபர்
மட் /புலிபாய்ந்தகல் அ.த.க. பாடசாலை, கிரான்

ஒரு காவியத்தின் உயிர்நாடியாக விளங்குவது அதன் கருவில் திருப்புமுனையை ஏற்படுத்தும் உச்சக்கட்டமாகும். இந்த வகையில் கம்பராமாயணத்தின் உயிர்நாடியாக அமைவது யுத்த காண்டமாகும். யுத்தகாண்டத்தின் முக்கிய பகுதியான கும்பகர்ண வதைப்படலம் இராமாயணத்தின் ஒரு திருப்புமுனை எனலாம்.

"தர்மம் அழிந்து அதர்மம் எங்கே தலைதூக்குகின்றதோ, அங்கே நான் தோன்றி அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டுவேன்" என்பது கண்ணனின் கீதை மொழியாகும். அதனை முன்கூட்டியே செயற்படுத்தும் வகையில் 'துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்' செய்யப் பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமன் காகுத்த வேடம் தாங்கி மானிடனாகப் பிறந்தான். அறம் பிறழ்ந்த அரக்கர் கூட்டத்தை அழித்து, அறத்தினை வாழவைப்பதே, அவனது அவதார நோக்கமாக இருந்தது. ஆயினும் அதர்மத்தின் பல்வேறு கோரங்களையும், தர்மத்தின் தாற்பரியங்களையும் உணர்த்தும் பொருட்டு பல துணைச் சம்பவங்கள் நடைபெற்றபின்னரே அவதாரத்தின் தலையாய நோக்கம் நிறைவேற்றப்படும் என்பது நியதியாகும். இம்மரபு இந்தியபேரிலக்கியங்களிலே விளங்குவதைக் காணலாம். இதன்படி இராவணனை அழிப்பதுதான் இராமனது தலையாய நோக்கமாக இருந்தபோதிலும் இடையிடையே சில சங்காரங்களையும் செய்ய வேண்டியேற்படுவதைக் காணலாம்.

இதே வகையில் அயோத்தியா காண்டத்தில் தாடகை வதம், ஆரண்ய காண்டத்தில் வாலி வதம், யுத்த காண்டத்தில் கும்பகர்ண வதம் என்பன இராமனால் நிகழ்த்தப்படுகின்றன. இவைஇலக்கியஉலகில் பெரும் இரசனைக்குரியனவாகவும், வாத, பிரதிவாதங்களுக்குரியனவாகவும், படிப்பினையூட்டுவனவாகவும் அமைவதைக் காண்கின்றோம். இலங்கை வேந்தனான இராவணனுக்குத் தம்பியர் இருவர். அவர்கள் பிரம்மாவின் வம்சத்தினர். பிரம்மாவின் மகன் புலஸ்தியகுமாரன். அவனது மகன் வஜிரமுனி.வஜிரமுனியின் மக்களே இவர்கள். அறிவாலும் ஆற்றலாலும் இறைபக்தியாலும் அவர்கள் சிறந்தவர்கள். பரஸ்திரீகள் மீது கொள்ளும் காமத்தாலேயே இராவணனின் மகிமை குறைவாக மதிக்கப்பட்டது.. ஆயினும் விபீடணனோ அந்தணர் வாழ்வு வாழ்ந்தவன். கும்பகர்ணன் விபீடணனுக்கு மூத்தவன். பலமும் பக்தியும் மிக்கவன். பிரமனிடம் நித்தியத்துவம் வேண்டித் தவமிருந்தான். ஆனால் இவனது பலத்தினால் பீதி கொண்ட தேவர்கள் செய்த முறைப்பாட்டினால்,"நித்திய வரம் " " நித்திரை வரமாகப் " போகும்படி சரஸ்வதி அவனுடைய நாவிலிருந்து சொற்தடங்கலை ஏற்படுத்தினாள். ஆயினும் இராவணனின் வேண்டுகோளுக்கிணங்க ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக நித்திரையும் சில நாட்கள் விழிப்புமாக வாழ்ந்தான் என்றும் அறியமுடிகின்றது. இவ்வாறான தன்மை பெற்ற கும்பகர்ணன் எனும் பாத்திரத்தைக் கம்பர் சிருஷ்டித்த விதமானது புதுமை பேசுவதாக உள்ளது. மேலும், கும்பகர்ணனது பாத்திரச் சிருஸ்டிப்பின் மூலம் கம்பர் அவனது ஆத்மார்த்தப் பண்புகளை வெளிக்காட்டுகின்ற வகையும்

இந்தப் பாடலின் மூலம், கும்பகர்ணனின் வாயினூடாக கொடிய போர் வந்துவிட்டதா? கற்புமிக்க சீதாபிராட்டியாரின் துயரம் இன்னும் தீரவில்லையா? மேலுலகத்திலும் புவியிலும் வளர்ந்துவிட்ட நம்புகழ் போய்விட்டதா? என்று பதற்றத்துடன் பேசுகின்றான

" அவளை இன்னமும் நீ விடவில்லையா? இது நம் விதிதானோ? புலத்தியன் வழிவந்த குலத்தின் இயல்பு அழிந்தது.வஞ்சமும் பாவமும் வெல்ல முடியுமோ?தருமத்துக்கு ஒருகுறை ஏற்படுமா?" என்றெல்லாம் நல்லறங்கள் உரைக்கின்றான். மேலும் "சீதாபிராட்டியை விடுவித்து இராமனது காலில் வீழ்ந்து வணங்கு. குற்றமற்ற உன் தம்பி விபீடணனுடன் உறவு கொள். ஆதுவே நீ பிழைக்கும் வழி" என்று கூறியதுடன் " அப்படியல்லாது போனால் தனித்தனியே போருக்குப் போகாது, பகுதி பகுதியாக எமது அரக்கர் குலத்தைப் பலி கொடுக்காது, நாம் ஒரு சேரத் திரண்டு போருக்குப் போவோம் " என்றும் மதியுரை கூறுகின்றான். இங்கே கும்பகர்ணனின் நீதி பிறழா மனப்பாங்கும், அறநெறி போற்றும் ஆண்மையும், பழிபாவங்களுக்குப் பயப்படும் பக்குவமும், பெண்ணைப் போற்றும் பெருந்தன்மையும் நன்கு வெளிப்பட்டு நிற்கின்றதல்லவா? இதன் மூலம் கும்பகர்ணன் தனது உடல் தோற்றப்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு உளப்பாங்கைக் கொண்டிருப்பதை நாம் காணமுடிகின்றது.

கும்பகர்ணனின் அறிவுரைகளால் இராவணனுக்குக் கோபம் ஏற்படுகின்றது. "சிற்றியல் சிறுமையாற்றும் சிறு தொழில் மனிதர் இருவரை வணங்கி, கூனுடைய குரங்குகளையும் கும்பிட்டு ஈடேறுவது உனக்கும் உன் தம்பிக்குமே பொருந்தும். யான் அதைப்புரியமாட்டேன்" என்று கோபத்துடன் கும்பகர்ணனைச் சினந்து கொண்டான்.அவனது வார்த்தையைக் கேட்ட கும்பகர்ணன், உடனே போருக்கு ஆயத்தமாகின்றான். இது அவனது கடமையுணர்ச்சியைக் காட்டுகின்றது. கும்பகர்ணன் போகும்போது இராவணனிடம்," நான் வென்று மீளுவேன் என்று கூறமாட்டேன். விதி என்னைப் பிடர் பிடித்துத் தள்ளுகிறது. சில வேளை நான் போர்க்களத்தில் இறந்த பின்பாவது சீதையை விட்டுவிடு" என்று கூறுகின்றான். அவனுக்கு இவ்விடத்தில் சகோதர பாசம் பொங்கிப் பிரவாகிக்கின்றது. "அண்ணா,நான் இற்றைவரை செய்த குற்றங்கள் இருப்பின் அவற்றைப் பொறுத்துக் கொள், உனது முகத்தில் இனி விழிக்கப் போகும் சந்தர்ப்பம் கிட்டுமோ தெரியாது. மேலோனே விடை கொண்டேன்" என்று கூறிப் போர்க்களம் புகுந்தான். இவ்வாறு கும்பகர்ணன் தனது உள்ளக்கிடக்கைளை வெளிக்காட்டுவதன் மூலம் அவனது தெளிந்த புத்திக்கூர்மையையும் தனது சகோதரனிடம் கொண்டுள்ள மேலான மதிப்பையும் எதிர்காலத்தில் நடக்கப்போவதைக் கூறும் தீர்க்கதரிசனமும் அவனை ஒரு உன்னத மனிதனாகவே காட்டி நிற்கின்றது.

இவ்வாறு கூறிய கும்பகர்ணன் போர்க்களத்தில் வந்து நின்றதும், இராமன் அவனை யார் என வினவ, விபீடணன் அவனைப் பற்றி விபரித்தபின், சுக்கிரீவனின் ஆலோசனைக்கிணங்க அவனைத் தம் பக்கம் கூட்டிவருதற்காக, தம்பியான விபீடணன் அரக்கர் கூட்டத்திடையே செல்கின்றான். இதைக் கண்ட அரக்கர்சேனை விபீடணன் திரும்ப வந்து விட்டதாக மகிழ்கின்றது. கும்பகர்ணனும் அவ்வாறே எண்ணியவனாய் ," நீ ஒருவன் தப்பிப்பிழைத்தாய் என்று மகிழ்வுடன் இருக்கும்போது, சித்தம் தெளிவில்லாதவன் போல மீண்டும் வந்தது ஏன்? '' என்று அழுது கேட்கின்றான். மேலும், " நீ இராமனிடம் அபயம் பெற்றது போல் தேவரும் பெறவில்லை. இம்மைக்கு மட்டுமல்ல மறுமைக்கும் நீ பாக்கியம் பெற்றுள்ளாய். ஏன் வந்தாய்? அமுதமென்று நஞ்சையுண்பாயோ. இராமனும் தம்பியும் அறத்தின் நாயகர்கள். அவர்களுடன் நீ சேர்ந்தால் உனக்கு அரக்கப் பிறப்பின் இழிவு இல்லை. அவர்கள் கையால் நாங்கள் இறக்க நேரிட்டால் எமக்குப் பிதிர்க்கடன் செய்வது உன் பொறுப்பல்லவா?.

நீ வந்தாலும், வராவிட்டாலும் விதி எம்மைப் பிடர் பிடித்துத் தள்ளுகிறது. நாம் இறப்பது உறுதி. ஐயனே நீ திரும்பிப் போய் விடு" என்று கூறுகின்றான். இவ்வாறு கும்பகர்ணன் தனது தம்பியாகிய விபீடணனுக்குக் கூறும் கூற்றுக்களில் உள்ள யதார்த்த நிலையும், தர்மத்தின்பால் அவன் கொண்டுள்ள அசையாத நம்பிக்கையும், களங்கமற்ற சகோதரபாசமும், தம்பினத்தில் கொண்டுள்ள பரிவும் வெளிப்படையாகவே தெரிகின்றது. அத்தோடு விதியின் மீது அவன் கொண்டுள்ள நம்பிக்கையும், தானும் தன் அரக்கர்குலமும் போரில் தோற்று அழிவது உறுதி என்று தெரிந்தும் தன் சகோதரனுக்காகவும் அவன் தன்னை வளர்த்துப் பராமரித்தநன்றிக்கடனுக்காகவும் போருக்கு வந்து நிற்கும் கடமையுணர்ச்சியும், வீரமும் அவனை ஒரு உத்தம புருசனாகவே காட்டி நிற்கின்றது எனலாம்.

மேலும் கும்பகர்ணனை இராமன்பால் வந்து சோந்து கொள்ளும்படியாக இறைஞ்சி நின்ற விபீடணன், கும்பகர்ணனை நோக்கி, " உடலில் கட்டி ஏற்பட்டால் அதனை அறுத்தெடுத்து அதனுடைய கெட்ட இரத்தத்தை அப்புறப்படுத்தி, அந்த இடத்தைத் தீயினாற் சுட்டு வேறு மருந்து வைத்துக் கட்டமாட்டோமா? அது போல இராவணனைத் தமையன் என்று பாராமல் விட்டுவிடுவதுதானே முறை. உனது தமையனைக் காக்க முடியும் என்று நினைத்து அவனைக் காக்க நினைப்பது தர்மத்தை மாற்றி எழுதுவதற்குச் சமனானது.உனது வாழ்வில் முக்கிய பகுதிகளை நீ தூக்கத்திலேயே கழித்து விட்டாய். இனியாவது தர்மம் செய். மூவருக்கும் தலைவரான மூர்த்தியானவர் மானிட வடிவத்தில் இராமனாக வந்திருக்கின்றார். சரணடைவாயாக. எனது பிள்ளைகள், உனது பிள்ளைகள், இராவணனின் பிள்ளைகள் ஆகியோரை உயிருடன் உலவ வழி செய். வேதங்களின் நாயகனாகிய இராமனே உன் மீது கருணை கொண்டு என்னை உன்னிடத்தில் அனுப்பியிருக்கிறான். என் மீது உனக்கு அன்பாவது, கருணையாவது இருந்தால் நீ செய்ய வேண்டிய காரியம் இதுதான்," என்று கூறி விபீடணன் கும்பகர்ணனின் கால்களில் விழுகின்றான். காலில் விழுந்த தம்பியை அண்ணன் தூக்கி மார்புறத் தழுவிக் கொண்டு கண்ணீர் சொரிகிறான். இவ்விடத்தில் கும்பகர்ணனின் சகோதரபாசம் கட்டுக்கடங்காது கரை புரண்டோடுவதைத் தொட்டுக் காட்டுகின்றார் கம்பர். அதாவது இங்கே கும்பகர்ணனின் தம்பியாகிய விபீடணனைத் தழுவியவாறு கூறுகின்றான் ," நீர்க்குமிழி போன்ற வாழ்வை நிலையானது என்று நினைத்து, விரும்பி ,என்னை நீண்ட நாட்கள் வளர்த்துக் காப்பாற்றி வந்தவன் நமது தமையன். இன்று எனக்குத் தன் கையால் போர்க்கோலமும் செய்து விட்டுள்ளான். அவனுக்காக உயிர்கொடாது அங்கு வர முடியுமா? எனது துயரை நீ போக்கவேண்டுமாயின் இராமனின் பக்கம் சென்று சேர்வதுதான் வழியாகும்," என்று தம்பிக்குக் கட்டளையிடுகின்றான்.

மேலும், கும்பகர்ணன் " கருத்தில்லாமல் முன்பின் விளைவுகளை எண்ணிப்பாராமல் அரசன் தீமை கருதினால் முடியுமானால் திருத்தலாம். ஆது கூடவில்லையானால் அவனுக்குமுன் சாவது தானே செஞ்சோற்றுக்கடன் கழிப்பதாகும்," என்று செய்ந்நன்றி உணர்தலோடு செஞ்சோற்றுக்கடன் கழிக்க முனைவது அவனது சீரிய மனப்பாங்கையும்,தெளிந்த உள்ளத்தையும் திறந்து காட்டுவதாக உள்ளது. இவ்வாறு பலவாறாகக் கூறிய கும்பகர்ணன் தன் தமையனுக்காகத் தன் உயிரைத் துச்சமாக்கிப் போர்க்களம் புகுந்தான்.

போர்க்களத்தில் இராமனோடு பொருதி தனது சகல படைகளையும் இழந்து தனித்து நிற்கும்போது, சுக்கிரீவனால் காதுகளும் மூக்கும் துண்டிக்கப்பட்டு விட்டன. அப்போது கூட தன் அண்ணனின் ஆணையை ஏற்ற நினைவோடு கும்பகர்ணன் மீண்டும் போர் செய்து இராம பாணத்தினால் கால், கைகளை இழந்தவனாய் தான் பிழைக்கும் வழி அரிதென எண்ணி, இராமனின் முகம் நோக்கி ஒரு வரம் கேட்கின்றான்; "உமது கைக்கு அடைக்கலம் வந்த விபீடணனைக் காக்கக்கடவீர்களாக. என் தம்பி அரக்கர் குலத்தில் பிறந்தமைக்குரிய சிறுமையுள்ள பாவ நெறியை அறியமாட்டான்.அவன் நீதிவான். அவன் உம்மைச் சரணடைந்தான். அவனை இராவணனிடமிருந்து காப்பது உம் கடன்,"என்றான். பின்னர் இப்போர்க்களத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும் தேவர்களும், முனிவர்களும் மூக்கில்லா முகம் என்று என் முகத்தைக் காணாத வகையில் உமது அம்பால் எனது கழுத்தை அறுத்துத் தலையைக் கருங்கடலுள் போக்கி விடு. இது நான் உன்னிடம் வேண்டும் வரமாகும் என்றான். இராமனும் அவ்வாறே செய்து விடுகின்றான். இதை நாம் பார்க்கும்போது மரணத்தின்போது கூட ஒரு மானமுள்ளவனாய், நல்ல வீரனாய் அவன் தன்னை மாய்த்துக் கொண்டதைக் காணமுடிகின்றது. இதன் மூலம் கும்பகர்ணன் ஒரு மான வீரனாக நம்மைக் கவர்ந்து விடுகின்றதைக்காணக்கூடியதாகவுள்ளது.

கும்பகர்ணன் எவ்வளவுதான் கோரத்தனமாக வெளித்தோற்றத்தில் சித்தரிக்கப்பட்டிருந்தாலும், அந்தத் தேகத்திற்குள் நிறைந்திருந்த ஆன்மாவானது பல உயரிய பண்புகளையும் நல்ல சிந்தனைகளையும், அற்புதத் தன்மைகளையும் கொண்டிருந்தது என்பதை கும்பகர்ணனின் சாவு புலப்படுத்துகின்றது. கும்பகர்ணனின் வாழ்வும் வீரமும் இன்றும் மனித குலத்திற்கே உரித்தான. வழிகாட்டியாக உள்ளன என்றால் மிகையாகாது.

## நல்லூர் கந்தசுவாமி கோயில்

ஆறாம் புவனேகபாகு என்ற பெயரில், யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி புரிந்த செம்பகப் பெருமானினால் 1450 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது வரலாற்றுப் புகழ் வாய்ந்த முருகன் ஆலயம்.அதன் பின்னர் 1620 இல் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய போர்த்துக் கேயரினால் இவ்வாலயம் அழிக்கப்பட்டது. பின்னர் 1793 இல் இப்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஒல்லாந்தர் காலத்தில் மீளக் கட்டப்பட்டது. யாழ்ப்பாணமாவட்டத்தின் மிகப் பிரபல்யமான ஒரு முருகன் ஆலயமாக நல்லூர் கந்தசுவாமி ஆலயம் விளங்குகின்றது.

இதே போன்று போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்ட கைலாயநாதர் பரமேஸ்வரர் கோயில் பின்னர் புதுப்பிக்கப்பட்டது.

# சுவாமி விபுலானந்தரின் கல்விக் கொள்கை

*-எஸ். எதிர்மன்னசிங்கம்-*

விபுலானந்த அடிகளாருடைய கல்விக்கொள்கையானது கலையும், அறிவியலும் ஒருங்கு சேர்ந்ததாகக் கீழைத்தேய கலாச்சாரத்திற்கு உகந்த வகையில் அமைந்துள்ளது. உள, உடற் பயிற்சி அடிப்படையில் அமைந்துள்ள பரந்ததொரு தேசிய கல்விக் கொள்கையினை அடிகளார் பின்பற்றினார். இதில் முக்கியமாக குறிப்பிடத்தக்கது புதிய அறிவியல் நூல்களைப் படைத்தல் , பன்மொழிக் கல்வியைப் பரப்புதல், தேசியக் கல்வியை நிலைநிறுத்தல், மறுமலர்ச்சிக் கருத்துக்களைப் பரப்புதல் என்பனவாகும்.

கலையும், அறிவியலும் இணைந்து நடைமுறையில் பயன் தரக்கூடிய கல்வி அமைப்பினை அடிகளார் பெரிதும் விரும்பினார்.அத்தோடு கலை , அறிவியல் , மெய்ஞானம் அகிய மூன்றும் ஒருங்கிணையும் கல்வியே முழுமையான கல்வியாகும் என்னும் கருத்து அடிகளாரிடம் மேலோங்கியிருந்தது. மனித வாழ்வுக்குத் தேவையான காலவரையறை பற்றியும் அதனைப் பயிலுவதற்கான காலவரையறை பற்றியும் அடிகளார் எடுத்துக் கூறியுள்ளதோடு எல்லாக் கலை ஞானங்களும் மனித வாழ்வு மேம்பாடடைய முக்கியமானது. எனவே அவை எல்லாவற்றையும் கற்க வேண்டும் என விரும்பினர். மகாத்மா காந்தி அடிகள் கைக்கொண்ட உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்னும் அடிப்படையிலான ஆதாரக் கல்விமுறையை முதன் முறையாக இலங்கையில் பரீட்சித்துப் பார்த்த பெருமை விபுலானந்த அடிகளாரையே சாரும். ரவீந்திரநாத் தாகூரின் கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சர்வதேச கல்வி முறையிலும் அடிகளாருக்கு அபார நம்பிக்கையிருந்தது. இவற்றுடன் சேர்த்து விஞ்ஞானத்திற்கும் சிறப்பிடம் கொடுத்தார். நியூட்டன், ஐயின்ஸ்ரையின் போன்ற விஞ்ஞானிகளையும் மகாத்மா காந்தி, லிங்கன் போன்ற அரசியல் ஞானிகளையும், கம்பன், காளிதாசன் போன்ற கவிஞர்களையும், விவேகானந்தர், இளங்கோ போன்ற வீரத்துறவிகளையும், செகற்சிற்பியார், பெர்னாட்சோ போன்ற நாடகாசிரியர்களையும் சொக்கநாதன், திருவள்ளுவர் போன்ற பேரறிஞர்களையும் சங்கரர், மெய்கண்டார் போன்ற சமயாச்சாரிகளையும் இன்னும் பல்வேறுதுறைகளிலும் மேதைகளை உண்டாக்குவதே அடிகளாரின் கல்வித் திட்டத்தின் சீரியநோக்கமாக இருந்தது.

1952 ம் ஆண்டு சித்திரைத் திங்களில் அடிகளார் தமது கல்விப் பணியைத் திருகோணமலையில் ஆரம்பித்து வைத்தார். மட்டக்களப்பிலுள்ள சைவப்பாடசாலைகளும் பின்னர் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன. பல காலம் அரசியல் உரிமையில்லாமல் அடிமை வாழ்வு வாழ்ந்த சமுதாயத்திடையே தேசப் பற்று, சமயப் பற்று, மொழிப் பற்று என்பவற்றை உண்டாக்கக் கூடிய ஆதாரக் கல்வி முறையைப் புகுத்தினார். இதற்காக அமரகவி பாரதியாரின் தேசிய கீதங்களையும், வீரத் துறவி விவேகானந்தரின் ஆலயப் பிரசங்கங்களையும் பயன்படுத்தினார். அப் பெரியார்களின் பக்திப் பாடல்களும், சமயப் பிரசங்கங்களும் மாணவரிடையே சமய அறிவையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தின. அடிகளாரது கல்வித் திட்டத்தில் உடல் வளர்ச்சிக்குத் தலையாய இடம் அளிக்கப்பட்டது. மேல் நாட்டு உடற்பயிற்சி ,கீழ் நாட்டு உடற்பயிற்சி என்ற வித்தியாசமேதுமின்றி இரு வகையிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தேகப்பியாச முறைகளை மாணவரின் உடல் வளர்ச்சிக்கு நன்கு பயன்படுத்தினார். தேக பலமே மனவுறுதிப்பாட்டை உண்டாக்க வல்லது என்பது அடிகளாரின் திடமான நம்பிக்கையாகும். இதே போன்று உளப்பயிற்சிற்கு இசையும், ஓவியமும் சிறந்ததெனக் கருதினார்.இதே விடயத்தை மேனாட்டு பிளாற்றோ, ரூசோ போன்ற அறிஞர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

டால்ஸ்டாயும் தமது மாணவருக்கு சங்கீதப் பயிற்சியும், ஓவியப் பயிற்சியும் கொடுத்துக் கற்பித்தலை மேற்கொண்டார். விபுலானந்த அடிகளார் தாய்மொழிக் கல்வியினையே கூடுதலாக வலியுறுத்தினார். இருந்தாலும் மும்மொழிப் பயிற்சி மிக முக்கியமானது என்பதனையுணர்ந்து தமிழ், ஆங்கிலம், சிங்களம் என்னும் மூன்று மொழிகளையும் மாணவர்களைக் கற்கத்தூண்டினார். இதனை மட்டக்களப்புக் கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்தில் செயற்படுத்திக் காட்டினார். 1932 ஆம் ஆண்டு சிவானந்த வித்தியாலயத்தில் தமிழ் மாணவர்கள் சிங்களம் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். அத்தோடு சிங்களவரும், தமிழரும், சமஸ்கிருதம் பாளி ஆகிய இரு மொழிகளையும் கற்க வேண்டுமென அடிகளார் ஆசைப்பட்டார்.

ஈழ நாட்டின் உயர்ச்சிக்கு தொழிற்றுறைக் கல்வி மிக முக்கியமானது என 1941இலேயே வலியுறுத்தியவர் நம் அடிகளாராகும் . மேலும் மேலைத்தேயக் கல்விமுறை இலங்கைக்கு ஒவ்வாததென்று எடுத்துக்காட்டியவரும் அடிகளாரே . அறிவியற் கல்வியை வேதாந்தக் கொள்கை அடிப்படையில் புகட்டுதல் சாலச்சிறந்தது என்று கல்விப் போதனை வரலாற்றிலேயே ஒரு புதுமைப் புரட்சியை ஏற்படுத்தியவர் விபுலானந்த அடிகளாராகும்.

மகாகவி பாரதியாரின் பாடல்களில் நாட்டங்கொண்டிருந்த அடிகளார் பாடசாலைகளில் குழந்தைகளுக்கு வகுப்பிற்கேற்ப பாடல்களைத் தேர்ந்து கொடுத்தார். முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு "செந்தமிழ் நாடென்னும் போதினிலே......2 ம், 3ம், 4ம், வகுப்பு மாணவர்களுக்கு "காக்கைச்சிறகினிலே நந்தலாலா......5ம் வகுப்பிற்கு "பகைவனுக்கருள்வாய்_நன் நெஞ்சே 6 ஆம் வகுப்பிற்கு " வீரசுதந்திரம் வேண்டி நின்றார் " என்ற வகையில் மாணவர் மனதில் இலகுவில் பதியத்தக்கதாக கற்பிக்க வேண்டிய அவசியத்தினையும் வலியுறுத்தினார். பிரபுத்தபாரத சஞ்சிகையிலும் வேதாந்த கேசரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றியபோது தமது கல்விச் சிந்தனைகளை வெளிப்படுத்தக்கூடிய கட்டுரைகள் பலவற்றை எழுதினார். 1938 இல் ஈழகேசரியில் எழுதிய இலங்கைப் புதிய கல்வித்திட்டத்திற்கு ஆதரவு என்னும் கட்டுரை, 1933 இல் குமரன் பத்திரிகையில் எழுதிய " பயனற்ற கல்வி "என்னும் கட்டுரை, 1934 ஆம் ஆண்டு எழுதிய "பயனுள்ள கல்வி" என்னும் கட்டுரை,1940 இல் பிரபுத்த பாரதத்தில் எழுதிய *"The Application of the Vedantic Ideal to Educational Problems"* என்னும் கட்டுரை என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

விபுலானந்த அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழக முதற் தமிழ்ப் பேராசிரியராகவும் பேராதனைப் பல்கலைக்கழக முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணிபுரிந்த காலத்தில் தமது கல்விக் கருத்துக்களைப் பல்கலைக்கழக மட்டத்திலேயே இலகுவாகப் புகுத்தக்கூடியதாகவிருந்தது. கற்றல் முறைகள் பற்றி தாம் கொண்டிருந்த தம் அனுபவத்தை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறினார். தனது தந்தையாரின் வழிகாட்டலில் ஒரு நூலைப்படித்து அதனை நன்றாக விளங்கிக் கொண்ட பின்னரே அடுத்த நூலைப் படிப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்ற கொள்கையை அடிகளார் பின்பற்றினார். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் அடிகளாரது கற்பித்தல் முறை பற்றிக் குறிப்பிடும்போது , அடிகளார் போதனை செய்யத் தொடங்கினால் நேரம் போவதே தெரியாவண்ணம் கற்பித்துக் கொண்டு இருப்பார் என்று குறிப்பிட்டுள்ளார். மாணவர்களுக்கு இலக்கியம் கற்பிக்கும்போது கற்பனாசக்தியை ஏற்படுத்த வேண்டுமென அடிகளார் கூறுகிறார்.

வரலாற்றைக் கற்பிக்கும்போது உலகப்பெரும் சமயங்கள் எல்லாவற்றையும் கொண்டவொரு வரலாற்றுச் சமயப் போதனையே சிறந்த முறையென அவர் விரும்பினார். சகல சமயங்களையும் அதன் பெரியார்களது பணிகளையும் நீக்குவதோ, பிரிப்பதோ பூரணமான வரலாறாகாது என்னும் கருத்துக்கொண்டவர் விபுலானந்த அடிகளார். அறிவியற் கல்வியைக் கூட வேதாந்தக் கொள்கை அடிப்படையில் புகட்ட இவ்வாறான சிறந்த கல்விக் கொள்கையினைத் தம் வாழ்க்கையிலே செயற்படுத்திக்காட்ட வேண்டுமென்னும் பெருவிருப்பு நம் அடிகளார் மனதில் பதிந்திருந்தமையினாற்றான் நல்ல பல சேவைகளை அவராற் செய்யமுடிந்தது.நாவலர் வழியில் ஈழத்தில் மாத்திரமன்றி இந்தியாவிலும் சைவமும். தமிழும்,இசையும் தழைத்தோங்க அரும்பணி புரிந்தார். அடிகளாரது கல்விக் கொள்கை என்றென்றும் பொருந்தக் கூடியதொன்றாகவுள்ளது.

உசாத்துணை நூல்கள்.


1. நடராஜானந்த சுவாமி – விபுலானந்த அடிகளார் தேசியக் கல்வி முறை
   அடிகளார் படிவமலர் – 1969
2. விபுலானந்த சுவாமி – மதங்கசூளாமணி-1926
3. நடராஜா.ந – விபுலானந்தரது கல்வித் கருத்துக்கள்
   தமிழாராய்ச்சி மாநாடு, மட்டக்களப்பு
   1976மார்ச் 19,20,21
4 .விபுலானந்தசுவாமி – "பயனுள்ள கல்வி" வித்தியா சமாச்சாரப் பத்திரிகை (தொகுதி)


❋❋❋❋❋

## போடியார்கள்

வேலிக்கடைக்குப் பிறந்தாலும் போடிப்பட்டம் போகாது என்பது மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கும் பழ மொழிகளில் ஒன்று. ஆகவே போடி என்பது ஒரு பட்டப் பெயராகும். வன்னிபம், போடி, பாளையக் காரர், படை பாட்சி, நாயக்கர், நாயுடு என்ற வரிசையெல்லாம் தமிழகத்தில் பயின்ற மானிய முறை ஆட்சியில் வந்த தலைமைப்பட்டங்கள்.

போடி என்பது மலையாளப் பகுதி முக்குவர்களுள் வழங்கும் தலைமைப்பட்டம் ஆகும். போடிநாயக்கனூர் என்ற ஒரு கிராமம் மதுரையில் உள்ளது. அங்கே 18 ம் நூற்றாண்டில் போடி நாயக்கர் சிலர் தமது பாளையப் பாட்டுக்குத் தலைவராக இருந்தார் என்று இந்தியச் சரித்திரம் கூறுகின்றது. அதே போன்று மட்டக்களப்பிலும் ஒல்லாந்தர் காலத்தில் இருவர் போடியாராக நியமிக்கப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. போடி என்ற பட்டம் பெற்றவர்கள் அதிக நில புலன்களுக்கு உரிமையளராக இருந்தனர். அவர்களது பிள்ளைகளுக்கும் போடிப்பட்டம் வழங்கி வரலாயிற்று. ஆகவே தான் மட்டக்களப்பு பிரதேசத்தில் அதிக நில புலன்கள் உள்ளவர்களை இன்றும் போடியார் என்று வழங்கும் பழக்கம் நிலை பெற்று வரலாயிற்று.

*(மட்டக்களப்பு மக்கள் வளமும், வாழ்க்கையும்)*

# காலத்தினால் அழிந்து விட்ட கந்தளாய்ப் பிரம்மதேயம்

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கந்தளாய் ஒரு ஊரின் பெயராகவும் அங்குள்ள குளத்தின் பெயராகவும் வழங்கி வருகின்றது. அண்மைக்காலம் வரையான நிர்வாக அறிக்கைகளில் கந்தளாய்க் கிராமம் ஒரு தமிழ்க் கிராமமாகவே குறிப்பிடப்பட்டு வந்தது. பிரித்தானியரின் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்ற காலம் முதலாக மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்திட்டங்களின் விளைவாக அது இன்று சிங்கள மக்கள் பெருந்தொகையாக வாழ்கின்ற பிரதேசமாக மாறிவிட்டது.

கி.பி 1000-1250 ஆகிய காலப் பகுதிக்குரிய சாசனங்கள் சிலவும் , தொல்பொருட்சின்னங்களும் அங்கு கிடைத்துள்ளன. அவை அனைத்தும் பிரம்மதேயம் , சைவக் கோயில்கள், பிற இந்து பண்பாட்டு அம்சங்கள் ஆகியன பற்றியவையாகவே உள்ளன. கந்தளாயில் கண்டெடுக்கப்பட்ட சாசனங்களில் மிகப் பழமையானது சோழராட்சிக் காலத்திற்குரிய சாசனம் ஒன்றாகும். சோழ இலங்கேஸ்வரன் என்னும் அரசனின் 10 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற சாசனமான இராஜேந்திரசோழ வளநாடான "வித்தியாதர வளநாட்டுப் பிரம்மதேயம்", இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தினைக் குறிப்பிடுகின்றது.

இச்சாசனம் சதுர்வேதி மங்கலத்துச் சபையினரால் உருவாக்கப்பட்டதை சாசன அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. "தண்டுவான் " ஆகிய மாணி ஒருவனைக் குறித்தும் , குளவாய்க்கால் மூலம் பாசனம் செய்யப்படும் நீர் , நிலம் ஒன்றின் தொடர்பாகவும் சதுர்வேதி மங்கலத்துச் சபை சோழ இலங்கேஸ்வரனது பத்தாம் ஆண்டிலே மாசி மாதத்தில் , பூர்வபட்சத்துத் துவாதசியும் ஆயிலிய நட்சத்திரமும் கூடிய நாள் அன்று இரவில் கூடி மேற்கொண்ட தீர்மானமொன்றைச் சாசனம் பதிவு செய்தது. இது , சம காலத் தமிழகத்திலுள்ள பிரம்மதேயங்களைப் போலக் கந்தளாய்ப் பிரம்மதேயம் நிர்வாக ஆதிக்கம் பெற்ற நிறுவனமாக இருந்தது என்பதைக் காட்டுகின்றது. அதன் சபையானது பெருங்குறிப் பெருமக்கள் என்று வர்ணிக்கப்படுவதுங் குறிப்பிடத்தக்கது

" முத்தங்கைக் கோயில் மானி " ஒருவனைப் பற்றி இச்சாசனம் குறிப்பிடுவதால் ,இது எழுதப்பட்ட காலத்தில் கந்தளாயில் கோயில் ஒன்று இருந்தமை தெளிவாகின்றது.
"மாணி" என பிரமச்சாரிகளான இளம் பிராமணரைக் குறிப்பிடுவது வழமை. இங்கு அம்மன் கோயில் கடமை புரிந்த இளம் பிராமணன் ஒருவன் பிரம்மதேயத்துத் தண்டுவானாய் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அப்பிரதேசத்துக் குடியானவர்கள் செலுத்த வேண்டிய வரிகளைச் சேகரிக்கும் பணியாளரைத் தண்டுவான் என்று அழைக்கப்படுகிறது. எனவே "கந்தளாய்ப் பிரம்மதேயம் " ஊரவர்களிடம் இருந்து வரிகளைச் சேர்க்கும் அதிகாரமுடைய ஒரு நிறுவனமாக விளங்கியதும் உணரப்படுகின்றது.

கந்தளாயில் இருந்த விக்கிரம சோழ வாய்க்கால், வாசுதேவ வாய்க்கால் என்னும் குளவாய்க்கால்கள் பற்றியும், இரண்டாங் கண்ணாறு மூன்றாங் கண்ணாறு என்னும் கிளை வாய்க்கால்கள் பற்றியும் , சதிரம் என்னும் காணிப் பிரிவுகள் பற்றியும், சாசனத்தில்


இச்சாசனம் மூலம் சோழ இலங்கேஸ்வரனின் காலத்தில் கந்தளாய்க் குளத்திலிருந்து tay ;நீர்ப்பாசனம் நடைபெற்றமைக்குச் சான்றாக உள்ளது. குள வாய்க்கால் பெயரிடப்பெற்றதோடு , அவற்றின் கிளைகளும் வயல் நிலப் பகுதிகளும் தென்னிந்திய வழக்கில் உள்ளவாறு எண்கணக்கு முறையில் வர்ணிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

முதலாம் விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தில் ( 1055 – 1110 ) கந்தளாய் பிரம்மதேயம் "விஜயராஜசதுர்வேதி மங்கலம்" எனப் பெயர் மாற்றப்பட்டு அழைக்கப்பட்டது. அங்கிருந்த சிவாலயம் விஜயராஜ ஈஸ்வரம் என்னும் பெயரால் வழங்கியது கந்தளாயில் விக்கிரமசலாமேகத் தெரிந்த வலங்கை வேளைக்காறர் என்னும் படைப்பிரிவினர் நிலை கொண்டிருந்தமை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கஜபாகு ( 1132 – 1153 ) தனது ஆட்சியின் பிற்பகுதியில் கந்தளாயில் அரண்மனை ஒன்றமைத்து அங்கு தங்கியிருந்தான். இவனது காலத்து சாசனங்கள் இரண்டு, கந்தளாய்ப் பிரம்மதேயம் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றுள் ஒன்று பிடி நடத்து பிரம்மதேயத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடுகின்றது.மற்றைய சாசனம், கிழிவை அபிமான ராமன் என்னும் சேனாதிபதி கந்தளாய்ப் பிரம்மதேயத்தின் எல்லைகளை அளந்து வரையறை செய்தமை பற்றிக் குறிப்பிடுகின்றது.

கந்தளாயில் கண்டெடுக்கப்பட்ட நிசங்க மல்லனின் கல்லாசனக் கல்வெட்டு அங்குள்ள பிரம்மதேயத்தைச் "சதுர்வேதி பிரம்மபுரம்" என வர்ணிக்கின்றது. அங்கு அவன் பார்வதி சத்திரம் என்ற நிறுவனத்தை அமைப்பித்தான். நிசங்கமல்லன் கந்தளாய்க்குப் போயிருந்த காலத்தில் அங்குள்ள ஆலயமொன்றில் உற்சவ காலத்தில் நிருத்தம், வாத்தியம் ஆகியவற்றைப் பார்த்து மகிழ்ந்தான் என்று இச்சாசனம் கூறுகின்றது. கந்தளாய்க் குளம் பற்றியும் அவனுடைய கல்வெட்டுக்களில் குறிப்புக்கள் உண்டு.

இவ்வாறு 10 ஆம், 11 ஆம் நூற்றாண்டுளில் கந்தளாயில் செல்வாக்குச் செலுத்தி வந்த நிறுவனமான "பிரம்மதேயம்" மற்றும் சைவக் கோயில்கள், அங்கு வழக்கில் இருந்து வந்த பண்பாட்டு அம்சங்கள் யாவும் இன்று அழிந்து போனமை ஒரு வரலாற்றுச் சிதைவாக உள்ளது மட்டுமன்றி ஒரு இனத்தின் பூர்வீகப் பெருமைகளின் சிதைவுகளாகவுமே மாறி விட்டன.



*நன்றி:-இந்துக் கலைக்களஞ்சியம்*

# அடங்காப்பற்றின் செட்டிகுளப் பிரதானிகளும் அவர்தம் மத வழிபாட்டு மரபுகளும்

*ந.ஞானவேல்* *B.A.Dip.in.Teach,Dip in Edu,*
*ஆசிரியர்,*
*வ/பூவரசங்குளம் மகா வித்தியாலயம்*

இன்றைய செட்டிகுளப் பிரதேசமானது அன்று பல்கிப் பெருகி குளங்களையும் குடியிருப்புக்களையும் கொண்டு காணப்பட்டது. அருவி ஆற்றிற்கு வடக்கேயுள்ள பிரதேசங்களையும் மதவாச்சி, தந்திரிமலை, குதிரைமலை, சூடுவெந்தபுலவு, தம்பனை, பூவரசங்குளம் ஆகிய பிரதேசங்களையும் எல்லையாகக் கொண்டு காணப்படுகின்றது. இதன் தென்கோடி எல்லையில் ஓடும் அருவியாறும் (மல்வத்து ஓயா, கதம்பநதி) இடையறுத்து ஓடும் கல்லாறும் இதன் வளத்துக்குக் காரணமாகின்றன. மேலும் பாவற்குளம், முகத்தான்குளம் (காத்தான்குளம்), வாகை கட்டிய ஓலுக்குளம், மணியர்குளம், செட்டிகுளம், நொச்சிக்குளம், நேரிய குளம், சிப்பிக்குளம், இலுப்பைக்குளம், தம்பன்னாக்குளம், கொங்கராயன்குளம், ஆண்டியா புளியங்குளம் முதலான பெரிதும் சிறிதுமான குளங்கள் செட்டிகுளப்பிரதேசத்தைச் செல்வம் கொழிக்கும் பூமியாக வந்தோரை வாழவைக்கும் பிரதேசமாக மாற்றுவதற்கு மூல காரணங்களாக அமைந்தன.

செட்டிக்குள பிரதேசமானது வன்னிப் பிராந்தியத்தில் பனங்காமம், கருநாவல்பற்று தென்னமரவாடி, கருக்கட்டுமூலை போன்றவற்றைப்போல நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியையும் தனக்கென்ற தனித்துவமான மதப்பாரம்பரியங்களையும் கொண்டுள்ளது. இப்பிரதேசமானது காலத்துக்குக் காலம் குடியேற்றப்பட்ட மக்களைக் கொண்ட பிரதேசம் என்ற கருத்து மேலெழுந்து நிலவினாலும் அங்கு காணப்பட்ட தொல்லியல் சான்றுகள் மூலமாகவும் 16 ஆம் நூற்றாண்டில் வையாபுரி ஐயரால் எழுதப்பட்ட வையா பாடல் என்ற வரலாற்று நூலின் மூலமாகவும், வன்னிப் பிரதேச ஆங்கிலேய அரசின் அதிகாரியாக விளங்கிய ஜே.பி. லூயிஸ் அவர்களது *Manual of Vanni* என்ற நூலின் மூலமாகவும் கர்ணபரம்பரைச் செய்திகள் மூலமாகவும் இன்றும் இப்பிரதேச மக்களால் பேணப்பட்டு வருகின்ற மரபுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற பொழுது நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியம் இங்கு இருந்ததை அவதானிக்க முடிகின்றது.

## *செட்டிகுளமும் ஆதிக் குடியினரும்*

செட்டிகுளப் பிரதேசமானது இலங்கையின் ஆதிக்குடிகளாகிய நாகர், இயக்கர் ஆகியோரது காலத்திலேயே வாழ்வியற்புலமாகக் காணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. மகாவம்சக் குறிப்பின்படி இயக்கர் மகியங்கனையிலும் லக்கலையிலும் நாகர் நாகதீபத்திலும் களனியிலும் இருந்ததாக அறிய முடிகின்றது. அந்த வகையில் இயக்கர் நாகரது பாரம்பரிய மரபில் வந்தவர்களே பிற்கால வேடர்களாக மாறுதல் பெறுகின்றனர். செட்டிகுளப்பிரதேசத்திற்கு அண்மையில் உள்ள தந்திரிமலையில் காணப்படுகின்ற மிருகத்தின் எலும்பினால் வரையப்பட்டிருக்கும் கிறுக்கல் சித்திரங்களையும் எழுத்துக்களையும் இப்பகுதியில்

இருந்த வேடர் வழிவந்தோர் வரைந்துள்ளனர் என அறியமுடிகின்றது. அதனைப் போன்று வேட்டையாடுதலை மையமாகக் கொண்ட மக்கள் கூட்டத்தினர் அண்மைக்காலம் வரை செட்டிகுளப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தமையையும் இன்றும் மகியங்கனையில் வேடர் மரபில் வந்தோர் வாழ்வதையும் அவ்வழி வந்த "திசகாமி" என்பவன் அங்கே வாழ்ந்து அண்மையில் மறைந்தமையையும், அவர்களின் மரபில் வந்தோர் இன்றும் தமது குலவழிமரபுகளை பேணுவதையும் அவதானிக்கலாம். அதனைப் போன்று செட்டிகுளம் பிரதேசத்தில் முக்குத்தி, கொங்கராயன்குளம், கிறித்தொகுகுளம், பாவற்குளம், மதவு வைத்தகுளம் போன்ற இடங்களில் காணப்படுகின்ற பாறைத் தொடர்களிலே காணப்படும் குகைகளில் இத்தகைய வேட்டையாடல் தொழிலை மையமாகக்கொண்டு மக்கள் வாழ்ந்து வந்தமைக்கான பல தடயங்கள் இன்றும் காணப்படுகின்றன. கல் ஆயுதங்கள் எண்ணிக்கைக் கோடுகள் என்பன இவற்றுள் சிலவாகும்.

ஈழத்தில் இன்றைய நீர் வள நாகரிக பண்பாட்டிற்கு வழிகாட்டியனவாக "மகாவம்சம் கூறும் விஜயன் தம்பபன்னியில் வந்திறங்கி மல்வத்து ஓயா (அருவி ஆறு) வழியே நாளடைவில் அனுராதபுரத்தை அடைந்தான் என மகாவம்சம் கூறுகின்றது. மல்வத் ஓயா செட்டிகுளப் பிரதேசத்தின் தெற்கே எல்லையாக அமைவதால் விஜயன் ஆதிமக்களின் வழித்தோன்றியவளாகிய குவேனியை அடக்கியதைப் போன்று இப்பிரதேசத்திலிருந்த மக்களையும் அவன் அடக்கி தன் ஆதிக்கத்தை நிலைநாட்டியதற்கு புவியியல் நிலைமைகள் ஏதுக்களாக அமைந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது.

இதே போன்று வன்னியர்கள் அடங்காப்பற்றில் குடியேறுவதற்கு முன்னர் அங்கிருந்த ஆதிக் குடிமக்களோடு யுத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டதாகக் கூறும் வையா பாடல் 35 ஆவது செய்யுள்

வாழ்ந்திருக்குங் காலமதிற் றனிக்கல் லென்னும்
வரையதனிற் சகரனென்று மகர னென்றும்
தாழ்ந்த குல வேடர்படை யுடனே கூடித்
தரணிதனி லரசாக வாழு நாளி
லாழ்ந்த மனத் தரக்கரிரா மருக்குத் தோற்றே
யகன்றநாட் சதர்கிழக்கு மூலை தன்னி
லாழ்ந்தவிழி யோர்மேற்கு மூலை நாட்டி
லரசுபுரிந் தாரநில முடையோ ரென்ன.

செட்டிகுளப் பிரதேசத்தின் குளங்கள் அதன் குளக்கட்டுக்கள்,கலிங்குகள் என்பனவற்றின் அமைப்புக்களாகக் கொண்டு நோக்குகின்ற போது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் இருந்தே செட்டிகுளப் பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்து வந்ததை அறிய முடிகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த குளங்களில் ஒன்றான பாவற்குளம் விளங்குகின்னது. இலங்கையில் உள்ள மற்றெந்தக் குளத்திற்கும் இல்லாத "கண்மாய்கள்" (*valve pits*) ஐந்து இக்குளத்தில் காணப்படுகின்றன.ஒத்த சிங்களப் பெயர்கள் இல்லாத குளங்களில் இதுவும் ஒன்றாகும். இதனைக் கொண்டே தமிழர்கள் மிகவும் பழங்காலம் தொடக்கம் இப்பிரதேசங்களில் வாழ்ந்துள்ளார்கள் என்பதனை நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது கிறிஸ்துவுக்கு முற்பட்டகால அணைக்கட்டுக்களில் ஒன்றாக கல்லாற்றில் உள்ள குறிஞ்சாக்குளத்தேக்கம் காணப்படுகிறது.

*செட்டிகுளமும் வன்னியரும்*

அக்கினி குலத்தை சார்ந்தவர்களாகிய வன்னியர்கள் மதுரை, காரைக்கால், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மலையாளம், தொண்டைமண்டலம், வடகிரிநாடு ஆகிய பிரதேசங்களில் இருந்து ஈழத்துவன்னிப் பகுதிகளுக்கு வருகை தந்ததாக வையா பாடல், கோணேசர் கல்வெட்டு ஆகியவற்றின்மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

கோணேசர் கல்வெட்டின்படி கோணேஸ்வரர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்த குளக்கோட்ட மன்னன் கோணேஸ்வரநாதருக்கு சேவை செய்யவென மருங்கூரிலிருந்து முப்பது வன்னியர்களையும் கொண்டு வந்து குடியேற்றினான் எனவும், வையா பாடற் குறிப்பின்படி மதுராபுரியில் இருந்து அறுபது வன்னியர்கள் மாருதப் பிரவையின் மகன் சிங்க மன்னனின் (வாலசிங்க வரராசசிங்கன்) திருமணத்திற்காக வந்ததாகவும் வந்தவர்களான அறுபது பேருள் ஒரு வன்னியனைத் தவிர ஏனைய அனைவரும் அடங்காப்பற்றுக்கு அனுப்பப்பட்டனர் எனவும் அறியமுடிகிறது. இவ்வாறு வன்னியரின் குடியேற்றம் கி.மு. ஐம்பதாம் நூற்றாண்டு வரையில் ஏற்பட்டதாக வையா பாடல் கூறுகின்றது.

எனினும் செட்டிகுளம் பிரதேசத்திற்கு வருகை தந்த வன்னியர்கள் போர்வீரர்களாகவோ , அல்லது தொழும்பர்களாகவோ வருகை தராது செல்வம் பொருந்திய வாணிபத் தொழிலைப் புரிகின்ற செட்டிமாரது பரம்பரையில் வந்தவர்களே செட்டிகுள பிரதேசத்தில் சிறப்பான குடியேற்றங்களை அமைத்திருந்ததாகத் தெரிகின்றது.

அப்பொழுது கலிமூவா யிரத்து முந்நூ
றானவரு டல்சென்ற தற்றாடன்னிற்
செப்பரிய வல்லியர சாணி யென்னுஞ்
செந்திருவுக் குலகியல்முத் தருளவேண்டித்
தப்பரிய வசியற்குலத்துதித்தோன் வீர
நாராயண னெனவுரைப்போ னோடமேறித்
தப்பவை சேந் தருபுயலுக் கஞ்சியேகித்
தண்கடலில் மலையதனைச் சார்ந்தானன்றே.

அம்மலையைக் குதிரைமலை யென்ன வோதி
யதனிடைதாய்க் குட்டிமர மமைத்துப் பின்னர்
பொம்மலுறு பொற்றலைக்கஞ் சாச்சஞ் சீவி
பொன்னிரும்பு வெள்ளியெனப் புனையவல்ல
வெம்மருந்து மம்மலையி லியற்றி யானை
யெழுபதினாயிரஞ் சுமந்த பொன்னுங் கூட்டி
யம்மலையினிடைவைத்தே காளி யென்னுந்
தையல்தனை யிறைஞ்சியவன் சார வைத்தான்.

அன்னதற்பின் கரையினிற்கள் ளச்சி லாப
மாழ்ந்தகடற் சிலாபமென வமைத்துப் பின்னர்த்
தன்னிரற் றிலங்கு மெழி லைய னாரைத்
தாவறுசீர்க் கடலதனுக்கருகு வைத்துப்
பின்னரவன் செட்டிகுளப் பதியில் வந்து
பேர் பெறுவவ் வாலையெனு நதியுண்டாக்கி
நன்னகர் செட்டிக்குரிய குளமென்றோர் பேர்
நாட்டினான் நாவலர்கள் நயந்து போற்ற.

-என்ற மேற்படி வையாபாடல் 30, 31, 32 ஆகிய செய்யுட்களை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது

கலியாண்டு 3392 இல் (கிபி199) வீர நாராயணச் செட்டி என்பவன் மன்னாரின் இன்றைய அரிப்பில் பாண்டியனது மகளாகிய சித்திராங்கதை என்ற அல்லி அரசராணிக்கு முத்துக் கொடுப்பதற்காக ஓடத்தில் புறப்பட்டுச் சென்றவன். கடலில் ஏற்பட்ட புயலினால் அஞ்சி அல்லி ராணி இருக்கும் அரிப்புக்குச்செல்லாது அதற்குத் தொலைவில் உள்ள கடல் மலையைச் சார்ந்தான். அம்மலைக்கு குதிரைமலை என்று பெயரிட்டான். தனது ஓடத்தில் கொண்டு வந்த எழுபதினாயிரம் யானைகள் சுமக்கத்தக்க பொன், இரும்பு, வெள்ளி என்பனவற்றை அம்மலையினிடையே புதைத்து வைத்தான். அதற்குக் காவலாக காளி என்னும் தெய்வத்தினை வணங்கி அமைத்தான். கடற்சிலாபமுண்டாக்கி அங்கே ஐயனாரையும் நிறுவி செட்டிகுளப் பகுதி நோக்கி வந்து அங்கே தங்கியிருந்து வவ்வாலை என்ற கேணியையும் அமைத்தான் என அறியமுடிகின்றது.அத்துடன் வீரநாராயணச்செட்டி என்ற பெயருடைய அச்செட்டியார் தான் வந்து தங்கி தன்னோடு வந்த யாதவர்களையும் குடியமர்த்தி தனது ஆட்சி அதிகாரத்தை இங்கு நிலைநாட்டினார். தான் அவ்வாறு வந்திறங்கிய இடத்திற்கு செட்டிகுளம் என்ற பெயரைச் சூட்டினார்.(நன்னகர் செட்டிக்குரிய குளமென்றோர் பேர் நாட்டினான்).

சுமார் கி.பி. 247 இல் மதுரையிலிருந்து பரவர்களுடன் வந்த வீரவராயன் செட்டி என்ற வணிகன் மரக்கலம் உடைந்து மன்னாரின் மேற்குக் கரையை வந்தடைந்தான் என்றும் பின் தன்னைச் சேர்ந்தோருடன் செட்டிக்குளத்திற் குடியேறி அங்கு வவ்வாலை என்ற கேணியொன்றையும் சந்திரசேகருக்கு கோயில் ஒன்றையும் சுமார் கி.பி. 289 இல் அமைத்தான் என்று *Manual of Vanni* என்ற நூலில் யே.பி. லூயிஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார்

வீரநாராயணச் செட்டி தமிழகத்தின் கொங்குநாட்டுக் குதிரைமலை என்ற ஊரில் இருந்து வந்தவனாக இருக்கலாம். அதனாற்போலும் அவன் இலங்கையில் முதல் அடைந்த இடத்திற்கு குதிரை மலையெனப்பெயரிட்டான் எனக்கூறும் சலாநிதி க.செ.நடராஜா அவர்களின் கருத்தும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

அடங்காப்பற்றின் பகுதிகள் எங்கணும் வன்னியரது ஆட்சியும் ஆதிக்கமும் காலத்திற்குக்காலம் அதிகரிக்கலாயின. வீரநாராயணச்செட்டிக்குப் பின்னர் செட்டிகுள பகுதியானது நடுச்செட்டிகுளம், சின்னச் செட்டிகுளம், வெங்கலச்செட்டிகுளம் எனப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு வன்னிப் பிரமுகர்கள் தலைமை தாங்கியதை அறிய முடிகிறது. அந்த வகையில்,

காவலவர் வங்கிஸகத்தோன் தேவராயன்
கதித்திடு நற் கிளைகாத்தான் கோடி தேவன்
ஏவர்களும் புகழ் கந்த வனததானென்போ
னிவர்கள் செட்டிகுளப்பதியின் முதன்மையானார்
தாவுநகர் மன்னவனத் துங்க ராயன்
சதுரகிரி யோன்பனங் காமந் தன்னில்
மேவலர்கள் புகழவீற் றிருந்தான் மிக்க
மேன்மையுடன் யாவர்களும் போற்ற மாதோ

என்ற 78 ஆவது வையாபாடல் செய்யுளின்படி தேவராயன் ,கொடித்தேவன், கந்தவனத்தான் ஆகிய செட்டி மரபில் வந்த வன்னியர்கள் தலைமை தாங்கியுள்ளானர்.

## *செட்டிகுளமும் ஐரோப்பியரும்*

ஈழத்தின் ஏனைய பிரதேசங்கள் எவ்வாறு காலத்திற்குக் காலம் ஐரோப்பியரது ஆதிக்கத்தின் கீழ் வந்ததோ அதனைப் போன்று செட்டிகுளப் பிரதேசமும் ஏனைய அடங்காப்பற்றின் வன்னிப் பிரதேசங்களை விட ஆரம்பத்திலேயே அவர்தம் ஆட்சிக்குள் வந்தது. செட்டிகுளப் பிரதேசத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிய போர்த்துக்கேயத் தளபதிபற்றி வையா பாடலின் 33 ஆவது செய்யுளில் வரும்

"லந்த, நகர் பறங்கியர சாண்டானந்தா
ளதிருட்டா னெனும் பறங்கி யரசை யாண்டான்"

என்ற அடியின் மூலம் திருட்டன் என்ற போர்த்துக்கேய தளபதி ஆண்டதை அறியமுடிகின்றது.

பறங்கியர்கள் (போர்த்துக்கேயர்) செட்டிகுளத்தை ஆண்டமையால் பறங்கிச் செட்டிகுளம் என்ற பிரிவு செட்டிகுளப்பற்றில் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்தது. சி.எஸ்.நவரத்தினம் அவர்கள் தனது வன்னியும் வன்னியர்களும் என்ற நூலில் பறங்கிச் செட்டிகுளத்தில் போர்த்துக்கெயரின் வழிவந்தவர்களை அவர்களது நிறத்தைக் கொண்டு அறியக்கூடயதாக இருக்கின்றதெனவும் அப்பிரதேசத்திற்குரிய ஆடைகளையே அவர்கள் அணிகின்றார்கள எனவும் கூறியுள்ளார்.

இதே போன்று கரவைக்கிழார் எழுதிய தணியாத தாகம் என்ற வரலாற்றுக் கற்பனை நாடக நூல் மூலமும் போர்த்துக்கேயர் எவ்வளவு தூரம் செட்டிகுளப்பகுதியை தமது ஆணைக்கு உட்படுத்தினார்கள் என்பதனை அறியலாம். இன்றும் பறையனாலங்குளத்திலும் போர்த்துக்கேயரது ஆதிக்கம் நிலவியதற்கான தடயங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒல்லாந்தரது காலத்திலும் பூநகரி, பறையனாலங்குளம் போன்ற வன்னி அரசின் பகுதிகள் ஒல்லாந்த அதிபதிகளின் ஆதிக்கத்தில் இருந்ததை அறியமுடிகின்றது. லூயிஸ் அவர்கள் ஒல்லாந்தர் காலத்து வன்னிமைகள் பற்றிக் குறிப்பிடுகையில் புதுக்குடியிருப்பில் இலங்கை நாராயணனும் முள்ளியவளையில் பெரிய மெயினாரும் கருநாவல்பற்றில் அம்பல வன்னியனும் தென்னமரவாடியில் சேதுகாவல வன்னியரும் பூநகரியில் டொன் கஸ்பார் நிச்சொற் தீராயனும் பறையனாலங்குளத்தில் டொன் கஸ்பர் கவுசையனாரும் ஆட்சி புரிந்ததாகக் கூறுகின்றார்.

இதேபோன்று ஆங்கிலேயர் காலத்திலும் செட்டிகுளப் பிரதேசம் மன்னாருக்கான போக்குவரத்துப் பாதையின் மையமாக விளங்கியமையும் ஆங்கிலேயர் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை இப்பிரதேசத்தினூடாகவே அழைத்துச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. இன்றும் செட்டிகுளம், பறையனாலங்குளம் ஆகிய இடங்களில் ஆங்கிலேயர் கால வாடி வீடுகளும் குதிரை லாயங்களும் காணப்படுகின்றன.

## *செட்டிகுளமும் தொல்பொருளியலும்*


பாழடைந்த குளங்களையும் சிதைந்த குள வரப்புக்களையும் அழிந்த மத வழிபாட்டு நிலையங்களையும் இடிந்த குடியிருப்புக்களையும் செட்டிக்குளப் பிரதேசத்தில் இன்றும் காணலாம்.

முசலிக்குத்தியில் ஓர் இராசதானி இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. தோணிக்கல் (தோணி போன்ற கல்லமைப்பு) களிமண்ணினால் செய்யப்பட்ட மட்பாண்டங்கள், சுட்ட களிமண் தகடுகள், இலச்சினைகள், மன்னரது மாளிகை இருந்ததற்கான நீண்ட மண்டபம் ஒன்றின் சிதைவுகள் என்பன இங்கு காணப்படுகின்றன. இம் முசலிக்குத்தியின் கன்னிமடு என்ற இடத்தில் இருக்கும் பாறைத் தொடர் குகைகளுக்கிடையேயும் பல கல்லாசனங்கள் காணப்படுகின்றன. இப்பாறைத் தொடர் ஒன்றில் மூன்று வரிகளில் ஆன பிராமிக் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றது.

மணியர் குளத்தின் வைரவர் ஆலயத்திற்குப் பின்னால் உள்ள காடடர்ந்த (மணியர்குள வாய்க்கால் செல்லும் பிரதேசத்திலும் பல தொல்பொருட் சிதைவுகள் காணப்படுகின்றன. அவை பெரிதும் சிறிதுமான கற்தூண்கள், அத்தூண்கள் நிறுத்தப் பயன்படுத்தப்பட்ட தூண் நிறுத்திகள்.செங்கற்களின் சிதைவுகள், அடைந்த மட்பாண்ட ஓடுகள் எனப் பலவற்றை அவதானிக்க முடிகிறது. இவை போன்ற தொல்பொருட்சிதைவுகள் [illegible]குளம், விறுமன் கல்லு, சின்னப்புளியாலங்குளம், கந்தசாமி நகர், விளாத்திக்குளம். அருவித்தோட்டம், கிறித்தோகுளம். ஆல்லைவெளி, பட்டு வெளி, சாத்தான் அளை, வழுவுசேனைக் குளம் பெரிய [illegible], கப்பாச்சி, முகத்தான்குளம், குறிஞ்சாக்குளம், கொங்கராயன்குளம், துட்டுவாகை, மயில்முட்டை [illegible] குளம்,பூவரசன்குளம், பறையனாலங்குளம் ,மதவு வைத்த குளம், நெடுங்கரைச்சேனை, [illegible]குளம்,ஆனைவிழுந்தான், பெரியகட்டு முதலான இடங்களிலும் காணப்படுகின்றன.

செட்டிகுளப் பிரதேச மக்கள் பாவித்த பாரிய திரிகைக் கற்கள் (ஆட்டுக்கற்கள்) வீரபுரம் , செட்டிகுளம் மகாவித்தியாலய பின்வளவு, முகத்தான்குள புதையல் பிட்டி ஒழுங்கை, செட்டிகுளப் பொலிஸ் நிலையமுன்புறம் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. எனினும் இவற்றைச் சிலர் பாரியதூண்களை நிறுத்தப் பயன்படுத்தப்பட்ட தூண் நிறுத்திகளாகவும் கருதுகின்றனர்.


பாவற்குளம் சின்னத்தம்பனையில் கண்டெடுக்கப்பட்டு வவனியா தொல்பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இரும்பாலான கத்தி, சாக்கூசி, விளக்கு ஏற்றப்பயன்படுகின்ற சிட்டி , கதவுக்கைப்பிடி என்பன வன்னிப் பிரதானிகளது காலத்தைச்சார்ந்தவையாகக் கருதப்படுகின்றன.



கிறிஸ்தோகு ,குளம் கல்லாற்றின் கரையில் உள்ள அல்லக்கட்டில் ஐ.தம்பு என்னும் ஊரவர் கண்டெடுத்த பாசி மணிகளும் உடைந்த வளையல்களும் நீண்ட வரலாற்றைப் பிரதிபலிக்கின்ற தொல்பொருட்களாகும். செட்டிகுளம் இரண்டாம் பண்ணையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மகிடாசுர மர்த்தனியின் சிலை , திரு. உனம்புவ அவர்களால் கல்லாற்றின் கரையோர வயல்வெளியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலை என்பனவும் செட்டிகுளப் பிரதேசத்தின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன.

இன்று வவுனியா தொல்பொருட்காட்சிச் சாலையில் காணப்படுகின்ற பத்மபீடத்தில் நிற்கும் நிலையில் உள்ள ஆணினது உருவமானது செட்டிகுள பிரதேசத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டு வவனியா அரசாங்க அதிபரின் இல்லத்தினால் வழங்கப்பட்டதாக கருதப்படுகிறது. இதுதலையும் இரு கைகளும் சிதைந்த நிலையில் மார்பிலே நீண்ட பூநூலும் கழுத்திலும் இடையிலும்

*செட்டிகுளத்தில் கண்டெடுக்கப்பட்டு வவுனியா தொல்பொருட்காட்சிச்சாலையில் உள்ள அரசனது சிலை* →



பாதத்திலும் ஆபரணங்களும் உள்ளதாகக் காணப்படுவதனால் இச்சிலை மன்னனொருவனின் சிலை எனவே கருத முடிகின்றது. ஆனால் தொல்பொருள் திணைக்கள அறிக்கையில் அகிலேஸ்வரர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.அகிலேஸ்வரர் வடிவம் என்பது பௌத்த மக்கள் புத்த பகவானின் அரச நிலையைக் கருதும் சித்தார்த்தரைக் குறிப்பதாகும்.

இன்றும் செட்டிகுளப்பிரதேசத்தின் பல இடங்களில் பல தொல்பொருள்கள் வெளிப்படுவதும் அவை இன்னதென அறியப்படாமையால் அழிக்கப்படுவதும் வருந்தத்தக்க செயல்களாகும்.

### *சந்திரசேகரீஸ்வரம்*

விஜயன் இலங்கைக்கு வரும்பொழுது இருந்த ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான சந்திரசேகரீஸ்வரம் மட்டும் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் உள்ள தெவிநுவரவில் (தெய்வேந்திரமுனை) அமைக்கப்பட்டிருந்த இவ்வாலயம் போர்த்துகேயரது வருகைக்கு முன்னர் சிறப்பாக இருந்ததை தொலமி, இபின்பதுத்தா, கியூதோ, மக்கன்சி, ஜோன்வில்லே முதலிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். 1588 இல் போர்த்துக்கேய தளபதி கியூநேர் தலைமையில் இது அழிக்கப்பட்டது. இவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயத்தின் எச்சங்களாக வாயில் கற்றூண்கள், சிங்காசனம், நந்தி, இரண்டரை அடி உயர சிவலிங்கம் என்பனவே இங்கு காணப்படுகின்றன. இத்தகைய பெருமை வாய்ந்த இந்த ஆலயத்தை புனருத்தாரணம் செய்து மீண்டும் இந்துக்களின் வழிபாட்டுக்குரியதாக்க எவரும் இதுவரை முன்வந்ததாகத் தெரியவில்லை.

இதேபோன்று சிறப்புக்களைப் பெற்ற சந்திரசேகரீஸ்வரர் என்ற சிவத்தலம் ஒன்று செட்டிகுளப்பகுதியில் இருந்ததாக அறியமுடிகின்றது. வையா பாடல் குறிப்பின்படி,வீரநாராயணச்செட்டி என்பவனால் இவ்வாலயம் அமைந்ததாக அறியமுடிகிறது. (பாடல்கள் 32, 33). இவ்வாலயத்தை யாழ்ப்பாண மன்னனாகிய பரராஜசிங்கனும் வன்னியின் குறுநில மன்னர்களும் வழிபட்டதாகக் கூறப்படுகின்றது.

செட்டிகுளத்திற்கு வருகை தந்த வீரநாராயணச்செட்டி அங்கு வவ்வாலை என்ற கேணியையும், அதற்கு அண்மையிலே சந்திரசேகரர் ஆலயத்தையும் நிறுவினான். அதனைப்பரிபாலனம் செய்வதற்காக அறுபதினாயிரம் யானைகள் சுமக்கத்தக்க பொன்னையும், திரவியங்களையும் வவ்வாலைக் கேணிக்குள் அமைந்திருந்த ஆழக் கிணற்றினுள் புதைத்தான். அவற்றைக் காவல் செய்வதற்காக சடாதமுனி,சாந்தான் ஆகிய தேவதைகளையும் நியமித்தான் என வையா பாடல்கள் கூறுகின்றன.

இக்குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, இன்றுள்ள செட்டிக்குளத்தில் இருந்து சிப்பிக்குளம் பாதையூடாக கப்பாச்சி என்ற கிராமத்தை அடையும்போது காணப்படும் கேணியே வையா பாடல் கூறும் கேணியாக இருக்கலாம் என்று கருதமுடிகிறது. அக்கேணிக்கு அண்மையில் உடைந்த நிலையில் இந்து ஆலயம் ஒன்றின் சிதைவுகள் பரந்து காணப்படுகின்றன. இக்கேணியின் ஆழம் இதுவரை அறியப்படவில்லை. கொடும்வரட்சியிலும் வற்றாது காணப்படுகிறது.

இவ்வாறு காணப்படும் சந்திரசேகரீஸ்வரர் ஆலயத்தின் சிதைவுகளில் பெரிதும் சிறிதுமான கருங்கற்தூண்கள், வாசல் படிக்கட்டுக்கள், செங்கட்டிகள் என்பன காணப்படுகின்றன. இவ்வாலயச் சூழல் தொல்பொருள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுமானால் பல தொன்மையான விக்கிரகங்கள் கிடைக்க வாய்ப்புண்டு.

*மகிடாசுர மர்த்தனி அம்மன் சிலை*


செட்டிக்குளம் பகுதியில் சிவ வழிபாடு இருந்ததைப் போன்று சக்தி வழிபாடும் சிறப்பாக இருந்திருக்கின்றது. வையா பாடல் குறிப்புக்களின்படி,வீரநாராயணச்செட்டி குதிரைமலையில் தான் கொண்டு வந்த புதையலைக் காக்க காளி வழிபாட்டினை ஆற்றியுள்ளான். 1949 ஆம் ஆண்டு செட்டிகுளப் பிரதேசத்தில் காடுகளை வெட்டி புதிய குடியேற்றங்களை மேற்கொள்கையில் புராதன ஆலயத்தின் சிதைவுகள், தெய்வத் திருவுருவங்கள், வன்னியரது இல்லங்களின் இடிபாடுகள் என்பவற்றைக் காண முடிகின்றது. இன்றைய முகத்தான்குளம் பிரதேசத்தில் உள்ள காடுகளை வெட்டும்போது நிலத்தில் புதையுண்டு கிடந்த அழகிய மூன்றேகால் அடி உயரமுள்ள மகிடாசுரமர்த்தனியின் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதனை வழிபாட்டுப் பொருளாகக் கருதாது அனுராதபுரம் தொல்பொருட்காட்சிச்சாலைக்கு அனுப்பினார்கள். தற்போது மீண்டும் வவனியா கொண்டு வரப்பட்டு வவனியா தொல்பொருட்காட்சிச்சாலையில் உள்ளது. இது கிபி 10 ஆம் நூற்றாண்டுக்குரியது என அறியமுடிகிறது.

*கண்ணகி அம்மன் ஆலயம்*

வன்னிப் பிரதேச சக்தி வழிபாட்டு மரபில் கண்ணகி வழிபாடு சிறப்பானது. செட்டிக்குளப் பிரதேசத்திலும் பழம்பெரும் கண்ணகி அம்மன் ஆலயம் இருந்ததைக் கண்ணகிப் பள்ளுப்பாடல் மூலம் அறியலாம்.

"அங்கண்ணம்மைக் கடவை செட்டிபுல மச்சூழ
ஆனதொரு வற்றாப்பளை மீதுறைந்தாய்."

என்ற கண்ணகி பள்ளுப்பாடல் அடியை நோக்குகையில் யாழ்ப்பாணம் கந்தரோடைக்கு அண்மையில் உள்ள அங்கண் அம்மைக் கடவைக் கண்ணகி கோயிலை அடுத்து செட்டிக்குளத்திலும் புகழ்பூத்த கண்ணகி ஆலயம் இருந்ததாக அறிய முடிகிறது.எனினும் தற்போது செட்டிக்குளப் பிரதேச கண்ணகி அம்மன் ஆலயங்களில் பாவற்குளம் 4 ஆம் வாய்க்கால் கண்ணகி அம்மன் ஆலயத்தில் சிறப்பான வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது.



முகத்தான் குளம் இரண்டாம் பண்ணையில் கிடைத்தமகிடாசுர மர்த்தனி அம்மன் சிலை

இவற்றை விட சக்தி வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் பலவற்றை செட்டிக்குளம் பிரதேசமெங்கும் காணக்கூடியதாக உள்ளது. கங்காரன் குளத்திலும் பாவற்குளம் இரண்டாம் வாய்க்கால், 5 ஆம் வாய்க்கால் ஆகிய இடங்களிலும் உள்ள காளி அம்மன் கோயில்களும் செட்டிக்குளம், துட்டுவாகை, அடப்பன்குளம்,நேரியகுளம், அழகாபுரி, வீரபுரம், பெரியதம்பனை இடங்களில் உள்ள முத்துமாரி அம்மன் கோயில்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## *ஐயனார் கோயில்*

ஈழத்தின் எந்தப் பகுதிக்கும் இல்லாத, வன்னிக்கே உரிய வழிபாட்டு மரபாக ஐயனார் வழிபாடு காணப்படுகின்றது. அத்தகைய ஐயனார் வழிபாடு செட்டிக்குளம் பிரதேசத்திலும் வரலாற்றுக் காலம் தொடக்கம் நிலவிவந்துள்ளது. வீரநாராயணச்செட்டியினால் குதிரைமலையில் புதைக்கப்பட்ட புதையல்களுக்குக் காவலாக ஐயனாரையும் வழிபட்டதாக அறிய முடிகிறது.

## *விநாயகர் வழிபாடு*

செட்டிகுளப் பிரதேசத்தில் ஏனைய தெய்வங்களைப் போன்று காட்டுவிநாயகரையும் வழிபட்டதாக வையாபாடல் கூறுகிறது. கல்லாறு அருவித்தோட்டத்தில் உள்ள சிதைந்த ஆலயத்தில் ஆறு அடி சுற்றளவு உள்ள திருமஞ்சனக் கிணறு, கருங்கற்தூண்கள், உடைந்த பானை ஓடுகள், செங்கற்கள் என்பன காணப்படுகின்றன. இவ்வாலயத்தை இவ்வூர் மக்கள் பிள்ளையார் கோயில் எனக்கூறி காட்டுப் பிரதேசத்தில் வேட்டையாடப் போகும்போது வழிபட்டு வருகின்றனர். பாவற்குளம், பூவரசங்குளம், பெரியதம்பனை, கப்பாச்சி .வரவுசேனைக்குளம் முதலான இடங்களில் வன்னிப் பிரதானிகளது கால விநாயரின் சிதைவு ஆலயங்களை அடையாளம் காணக்கூடியதாக உள்ளது கிரித்தோகுளம் அல்லக்கட்டில் ஒரு புராதன விநாயகரது சிலையும் நேரியகுளத்தில் இன்னொரு விநாயகரது சிலையும் கண்டெடுக்கப்பட்டன. பாவற்குளம் ஞானியாவூரில் அமைந்துள்ள சித்திவிநாயகர் ஆலயமும் நீண்ட வரலாறை உடையது. இவ்வாலயத்தின் மூலவரான விநாயகரின் திருவுருவம் இருக்கும் பீடமும் அதில் இடம்பெற்றுள்ள சிற்ப அலங்கார முறையும் சோழர்கால பாணியைப் பிரதிபலிப்பதாக அமைகிறது.

மேற்குறித்த ஆலயங்களை விட பாவற்குளம் பாறைத் தொடரின் மீது அமைக்கப்பட்டுள்ள விநாயகர் ஆலயம் பாவற்குள முடக்குச்சந்தி விநாயகர் ஆலயம், வவ்வாலைக்கேணி விநாயகர் ஆலயம், செட்டிகுளம் விநாயகர் ஆலயம், முகத்தான்குளம் விக்கினேஸ்வரர் ஆலயம், பெரியபுளியாலங்குளம், அழகாபுரி, சின்னக்குளம், பாவற்குளம் முதலாம் பரவம், பூமடு, பாவற்குளம் ஆறாம் பரவம், மணியர்குளம் கோவில். பூவரசன்குளம்,பெரியதம்பனை ஆகிய இடங்களில் உள்ள பிள்ளையார் கோயில்கள், செட்டிகுளம். துடரிக்குளம்,வீதிதான்தோன்றிப்பிள்ளையார் கோயில் முதலான சிறிதும் பெரிதுமான விநாயகர் ஆலயங்கள் இன்று செட்டிகுளப் பிரதேசத்தில் வழிபாடாற்றப்படும் ஆலயங்களாகும்.

வயலில் ஈக்கள் அதிகம் தென்பட்டால் விநாயகருக்குப் பொங்கல் பொங்கி அப்பொங்கல் நீரை வயலில் தெளித்தால் ஈக்கள் அகன்று விடும் என செட்டிகுளப் பிரதேச மக்கள் நம்புகின்றனர். யானைகள் அதிகமாக வந்து வயலை நாசம் செய்தால் காட்டு விநாயகருக்கு நேர்ந்து பொங்கல் பொங்கிவழிபட்டால் யானைகளின் அட்டகாசம் குறைந்து விடுவதாக எண்ணுகின்றனர்.

வயலில் நெல்லை அள்ளும்போது முதலாவது மூடையை அயலில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கெனக் கூறிவைத்த பின்னரே ஏனைய மூடைகளைக் கட்டத்தொடங்குவது செட்டிக்குளப்பிரதேச மக்கள் மத்தியில் ஒரு பொது மரபாக இருந்து வருகின்றது

## *பாத வழிபாடு*

மதவழிபாட்டு இடங்களில் திருவுருவச் சிலைகளை வழிபடுவதைப் போன்று இறைவனது பாதங்களை வழிபடுவதும் இந்திய வழிபாட்டு மரபுகளில் இருந்து வரும் ஓர் அம்சமாகும். ஈழத்தின் சிவனொளிபாதமலையின் உச்சியில் ஒரு பாதச்சுவடு காணப்படுகின்றது. அதனை இந்துக்கள் சிவனது பாதம் எனக்கூறி அம்மலையை சிவனொளிபாதமலை எனக் குறிப்பிடுகின்றனர்.

செட்டிப் பிரதேச மேலாய்வுகளில் ஈடுபட்டபோது பல இடங்களில் சோடி பாதச் சுவடுகள் கருங்கல்லில் சிற்பமாகச் செதுக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்த வகையில் முகத்தான்குளப்பிள்ளையார் ஆலயத்திலும மேற்பாக இடது பக்க மூலை உடைந்த நிலையில் ஒரு பாதச்சிற்ப வடிவம் தாங்கிய கல் காணப்படுகின்றது. அதனை அம்மனது பாதச்சுவடு என இவ்வூர் மக்கள் கூறி வழிபட்டு வருகின்றனர். இதேபோன்று முகத்தான்குளப் புதையல்பிட்டி அமைந்துள்ள இடத்தில் இருந்து நூறு மீற்றர் தொலைவில் உள்ள வீடு ஒன்றின் அருகில் மூன்று அடி சற்சதுர பாதச் சிற்பம் காணப்படுகின்றது. இதன் அடிப்பாகத்தில் பூரண கும்பம் இருப்பதாகவும் அதன் இரு மருங்கிலும் சூரியனதும் சந்திரனதும் வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.. இதேபோன்று செட்டிகுளம் மகா வித்தியாலய பின்வளவிலும் கப்பாச்சியிலும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம் தொல்பொருட்காட்சிச்சாலையின் முன்னாள் பொறுப்பதிகாரியாக இருந்த திரு. மா.போ. செல்வரத்தினம்[1] அவர்கள் ஈழத்தின் பண்டைய கண்ணகி கோட்டங்களில் பாத பீடங்களும் சிலம்புகளுமே வழிபாட்டுப் பொருளாக இருந்ததாக தனது சிலம்பு விளக்கு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். முன்னே நோக்கியதைப் போன்று செட்டிகுளத்திலும் கண்ணகி வழிபாடு ஆற்றப்பட்டமையால் அக்கண்ணகி வழிபாட்டு மரபில் வந்த பாதச்சுவடுகளோ இவை என எண்ணத் தோன்றுகின்றது.

## *ஏனைய வழிபாட்டு மரபுகள்*

கடம்பநதியாகிய அருவி ஆற்றங்கரையில் செட்டிகுளப் பிரதேசம் இருப்பதானால் இங்கு முருக வழிபாட்டு மரபுகளும் சிறப்பாக இருந்திருக்க வேண்டும். எனினும் அவ்வழிபாடு பற்றிய சான்றாதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை. இலங்கையின் நகர்ப்புறங்களில காணப்படுகின்ற முருகன் ஆலயங்களை செட்டி வகுப்பினரே (நாட்டுக்கோட்டைச்செட்டிகள்)பரிபாலனம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் செட்டிகுளப்பிரதேசம் செட்டி வகுப்பினரோடு தொடர்புடையது. ஆதலால் புகழ்பூத்த முருகன் ஆலயங்கள் செட்டிகுளப்பிரதேசத்தில் இருந்திருக்க வாய்ப்புண்டு.செட்டிகுளம் புகையிரத நிலைய முருகன்கோவில், முதலியார்குளம் பாலமுருகன்கோவில், பாவற்குளம் ஐந்தாம் படிவம், கடம்பவனப்பதி முருகன் கோவில், நேரியகுளம் கந்தசாமி கோவில் என்பன இன்றைய செட்டிகுளப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முருகன் ஆலயங்களாகும்.

குருக்கள் புதுக்குளம் இராமயன்கல் விஸ்ணு ஆலயம். தந்திரிமலைச்சந்தி இராமர் ஆலயம். வைரவர் ஆலயங்கள், வீரபத்திரர் ஆலயங்கள் என்பன செட்டிகுளப் பிரதேசத்தின் குறிச்சிகள் தோறும் பரந்து காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே மேற்கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது செட்டிகுளப் பிரதேசமானது தனக்கென்ற தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியங்களையும் மத வழிபாட்டு மரபுகளையும் கொண்டதாகக்காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாய்வின் மூலம் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் நீண்ட வரலாற்று உண்மைகள் மறைந்து கிடக்கும் செட்டிகுளப் பிரதேசத்தின் வரலாற்று ஆய்வு பற்றிய ஒரு முன்மொழிவாகவே கருத்திற் கொள்ள வேண்டும். ஏனெனின் இன்றைய செட்டிகுளப் பிரதேசத்தில் காணப்படுகின்ற பாதுகாப்புத் தன்மைகள், சுதந்திரமாக வரலாற்று இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்வதில் ஏற்படுகின்ற தடங்கல்கள் எனப் பல காரணங்களால் முழுமையான ஆய்வினை மேற்கொள்ள முடியாமல் உள்ளது..

செட்டிகுளப் பிரதேசத்தில் வெளிப்படுகின்ற புராதன கலைச் சின்னங்களை பேணிப் பாதுகாக்க இப்பிரதேச உயர்நிறுவனங்கள் ஆவன செய்தல் வேண்டும். வவ்வாலையில் சிதைந்து கிடக்கின்ற சிவாலயத்தினையும் மீண்டும் புனருத்தாரணஞ் செய்து பண்டைய செட்டிகுளப் பெருமை கூறும் சிவத்தலமாக மிளிர செட்டிக்குளப் பிரதேச சைவஅன்பர்கள் ஒவ்வொருவரும் முனைந்து முன்வருதல் வேண்டும்

### *உசாத்துணைகள்*


01. நடராசா க.செ. வையா பாடல் கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு 1980
02. Lewis J.P. Manual of the Wanni Districts Ceylon,1895
03. Navaratnam C.S. Vanni and the Vanniyas-1963
04. கலாநிதி சிற்றம்பலம் சி.க. கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய வன்னி நாடும் தொல்லியற் சான்றுகளும், — பண்டார வன்னியன் விழா மலர் 1982
05. தனபாக்கியம் ஜி. இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக்கலாசாரமும், சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம் மட்டக்களப்பு-1988
06. Navaratnam C.S.., A short history of Hinduism in Ceylon-1964
07. ஞானவேல் ந. வன்னி மண்ணில் சிதைவுறும் சிறு தெய்வ வழிபாட்டு மரபுகள் North-East Sri Lanka, North East Provincial Council,1998
08. முல்லைமணி சுப்பிரமணியம் வே. புகழ் பூத்த வன்னி மண்ணின் காவலர்கள்- பண்டார வன்னியன் விழா மலர்- 1988
09. செட்டிகுளம் கொத்தணி மலர், செட்டிகுளம் கொத்தணி பாடசாலைகள் வெளியீடு-1993
10. பேராசிரியர் பூலோகசிங்கம் பொ. வன்னி நாட்டின் வரலாறு. சிறு அவதானங்கள் மருத நிலா வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர்-1996
11. இளம்சைவப்புலவர் ஞானவேல் ந. வன்னிச் சிவாலயங்கள் சிவதத்துவமலர் கோவில்குளம் அருள்மிகு சிறி அகிலாண்டேஸ்வரி சமேத சிறி அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா மலர் – 1996



# சிறுவருக்கு உகந்த சிறுவர் அரங்கு

(ஒரு விரிவான நோக்கு)

முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன்

## சிறுவர்களும் அவர்களது விருப்புகளும்

சிறுவர் என்பவர்கள் அளவில் சிறிய மனிதர்கள் என்ற எண்ணம் எம்மில் பலருக்கு வந்து விடுவதுண்டு. இதனால் எமது பலம்,பலவீனம் என்பவற்றை அவர்களுடன் சமமாக பகிரமுறப்படுவதும் அவர்கள் அதனை விளங்கிக் கொள்ளாதவிடத்து அவர்களை கண்டிப்பதும் அல்லது வற்புறுத்துவதும் இடம் பெற ஏதுவாகின்றது. ஆனால் சிறுவர்கள் அளவில் சிறியவர்கள். உடல், உள முதிர்ச்சி பெற வேண்டியவர்கள். அவர்களது உணர்வுகள் மதிக்கப்படவேண்டியவை என்பன போன்ற பல விடயங்களை நாம் இலகுவில் விளங்கிக் கொள்வதில்லை. இவ்வாறான தன்மைதான் நேரடியான செயற்பாட்டிலும் பார்க்க வன்மையும் அபாயமும் பொருந்தியதாகும். இக்கட்டுரையின் மூலம் சிறார்கள் எத்தகையவர்கள், அவர்களின் உணர்வு வெளிப்பாட்டுக்கான களங்கள் யாவை போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

இன்று உலகளாவிய ரீதியில் சிறார்கள் பற்றிய சிந்தனை விரிவுபடுத்தப்பட்டு அதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. சிறுவர் அரங்கு சிறுவர் இலக்கியம் என்பவை சிறுவர் தொடர்பான இம்முக்கியத்வம் எத்தகையது என்பதைப் புலப்படுத்தும். சிறுவர்கள் இயல்பாகவே ஈடுபடக்கூடிய பல்வேறுபட்ட செயற்பாடுகளை அவர்கள் மிக ஆர்வமாயிருக்கின்ற செயற்பாடுகள் இங்கு கருத்தில் எடுக்கப்பட்டன.

சிறார்கள் தொடர்பான உணர்வு வெளிப்பாட்டுக் களங்களாக அவர்கள் இயல்பாகவே ஆர்வமாயிருக்கின்ற விளையாட்டுக்கள், ஆடல், பாடல், கவிதை, கதை சொல்லல், சித்திரம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சிறுவர்கள் புதிய விடயங்களை அறிந்து கொள்வதிலும், தாம் பார்த்த பழகிய அறிந்த பல்வேறு விடயங்களையும் போலச் செய்து பார்த்தலிலும் துடிப்புடன் முன் நிற்கும் தன்மை கொண்டவர்களாக இருப்பர். பாவனை செய்தல் என்பது அல்லது பாவனை செய்து விளையாடுவது என்பது சிறுவர்களின் சிறு பராய கற்றல் முறைமை எனக் குறிப்பிடுவர். எமது வீடுகளில் இவ்வாறு குழந்தைகள் சமைத்து விளையாடுதலை, கோயில் திருவிழா செய்து விளையாடுதல் போன்ற பல பாவனை விளையாட்டை விளையாடுவதைத் தாம் நினைவில் இருத்திப் பார்க்கலாம். இவ்வாறே சிறுவர்கள் இயல்பாக விரும்பும் இன்னுமொரு விடயம் ஆடிப்பாடி மகிழ்தல். சிறார்கள் இசையின் சந்தத்திற்கு ஏற்ப ஆடி, குதிக்க விரும்புவர். இசையின் சந்தம் அவர்களின் உடலுள் சென்று உடலியக்கத்தைத் தூண்டி, மன எழுச்சிகளை ஏற்படுத்தி ஒத்திசைவான ஆட்டத்தை ஏற்படுத்துகின்றது. அத்துடன் இவ்வாட்டமானது.உற்சாகத்தையும் மன அழுத்தங்கள் அற்றஒரு விடுவிப்பு நிலையையும் இதத்தையும் தருவதாக உள்ளது. அத்துடன் இவ்வாட்டத்திற்கு ஏற்பதான சொற்கட்டுக்களைக் கொண்ட எளிமையான பாடலை பாடவும், இதனை இசையுடன் இணைந்து பாடவும் ஆடவும் செய்வதில் மிகக்கூடிய மகிழ்ச்சியினை அடைகின்றனர்.இம்மகிழ்வும், நாட்டமும் பிள்ளைகளைக் கவிதைகள் புனையக்கூடியவர்களாகவும் உணர்வைச் சொற்களில் வெளிப்படுத்தக்கூடிய ஆளுமை உள்ளவர்களாகவும் உருவாக்குகின்றது.

மகிழ்ச்சியினை அடைகின்றனர்.இம்மகிழ்வும், நாட்டமும் பிள்ளைகளைக் கவிதைகள் புனையக்கூடியவர்களாகவும் உணர்வைச் சொற்களில் வெளிப்படுத்தக்கூடிய ஆளுமை உள்ளவர்களாகவும் உருவாக்குகின்றது. சிறுவர்களின் இன்னொரு விருப்பமான களம் கதை கேட்டலும், கதை கூறுதலும் ஆகும். இது விளையாட்டுக்கு அடுத்தபடியாக பிள்ளைகளால் விரும்பப்படும் ஒரு விடயமாகும். எல்லாப் பிள்ளைகளுமே கதை கேட்கப் பிரியப்படுவர். பொறுமையாகக் கதைகளின் பாத்திரங்களாகப் பாவனை செய்து அதற்கேற்பக் குரலை மாற்றி கதை கூறுவதனாலே தான் பாட்டி கூறும் கதைகள் சிறுவர்களால் மிகவும் விரும்பப்படுகின்றன. விருப்புடன் கதை கேட்கும் அவ்வேளைகளில் தாமும் அவ்வாறே மாறி போலச் செய்வதிலும் இன்பமடைவர். மேலும் இக்கதை கூறல் என்பது பிள்ளைகளின் சொல்வளத்திற்கு அப்பால் செல்லாத பேச்சு மொழியில் அமைதலே பொருத்தமானதாகும். மேற்கூறப்பட்ட விடயங்கள் மட்டுமல்லாது சிறார்களின் கற்பனை வளம் ஒரு முக்கிய அம்சமாகும். சிறுவர்கள் இயல்பாகவே கற்பனை வளம் பொருந்தியவர்கள். அதனால் தாம் பார்த்த, அறிந்த விடயங்களை போல் செய்யும்போது தமது கற்பனை வளத்தால் மகிழச்சியடைவர். உதாரணமாக ஒரு தும்புத்தடி, மோட்டார் வாகனமாகவோ, மோட்டார் சைக்கிளாகவோ அவர்களால் நோக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும். ஒரு சிறிய பெட்டி மாட்டு வண்டியாகவோ, தேராகவோ நோக்கப்படும்.

இவ்வாறாக சிறார்கள் தொடர்பானதும் அவர்களுக்கு இன்பம் தரும், அனுபவத்தைத் தரும் களங்களாக இருக்கின்ற விளையாட்டு. ஆடல், பாடல்,கதை கூறல், கற்பனை விநோதம் ஆகிய மேற்கூறப்பட்ட அனைத்து அம்சங்களும் பொருந்திய ஒரு களமே 'சிறுவர் அரங்கு' எனக் கூறினால் அது மிகையில்லை. சிறுவர்களின் இயல்பான குணாம்சங்கள் வெளிப்படக்கூடிய சந்தர்ப்பத்தை இச்சிறுவர் நாடகங்களும் சிறுவர் அரங்கும் வழங்குகின்றன. இதனால் சிறுவர்கள் தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் வாய்ப்பு ஏற்படும். இவ்வாய்ப்பு அவர்களது ஆளுமையினை விருத்தி செய்கின்றது. இதனால் அவர்கள் வெளிப்படையானவர்களாக படைப்பாற்றல் கொண்டவர்களாக வளர்கின்றனர்.

## சிறுவர் அரங்கு; வரைவிலக்கணமும், பண்புகளும்

சிறுவர் அரங்கு என்பது சிறுவர்கள் எல்லோருக்குமே அவசியமான ஒன்றாகும். அதேவேளை பெரியவர்களுக்கும் இது பயன்படக்கூடியது. பெரியர்களுக்கு அவர்களது தன்முனைப்பு எண்ணத்தை (ஈகோ) விடுவிக்க பயன்படுத்தக்கூடியது.சிறுவர் அரங்கு என்பதை ஆங்கிலத்தில் *Children Play* எனக் கூறுவதுபோல் நாம் இதனை சிறுவருக்கான விளையாட்டு எனப் பொருள் கொள்ளமுடியும். சிறுவர் அரங்கு ஒன்றிலே சிறுவர்கள் ஆடியும் பாடியும் விளையாடியும் செயற்பட்டு குதூகலம் மிக்கவர்களாக உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெற்றவர்களாக வெளிவருவர். இத்தகைய ஓர் அம்சம் எல்லாச் சிறுவர்களுக்கும் அவர்களது உளவயதுடன் ஒன்றித்ததாகக் காணப்படும்.

சிறுவர் அரங்கு என்பது பற்றிய விளக்கம் இன்று எம் அகைவருக்கும் அவசியமாகும். பொதுவாக சிறுவர் அரங்கு என்பதை சிறுவர் நாடகம் என்றே எல்லோரும் எண்ணுகின்றனர். ஆனால் அது அவ்வாறு இல்லை. சிறுவர் நாடகம் என்பதையும் சிறுவர் அரங்கு என்பதையும் வெவ்வேறானவையாகவே கொள்ளுதல் வேண்டும்.


சிறுவர் நாடகம் என்பது சிறுவர்களால் தமது வகுப்பறையில் புதிதளிப்பு முறையில் ஆசிரியரோடு இணைந்து உருவாக்கப்படும் நாடகத்தைக் குறிக்கும். நாடகப்பண்பு கொண்ட விளையாட்டுக்கள் பலவும் இந்நாடக ஆக்கத்திற்குப் பயன்படும சிறார்களின் உணர்வு வெளிப்பாட்டுக்கு.கூடுதலான முக்கியத்வம் கொடுக்கப்பட்டு அவர்களின் ஊடாகவே நாடகம் வெளிப்படும். இத்தகைய நாடகங்களுக்கு எழுதப்பட்டதொரு எழுத்துரு பயன்படுத்தப்படமாட்டாது. இந்நாடக ஆக்கத்தின் இறுதியில் மாணவர்களது செயல்கள் கூட்டாகச் சேர்ந்து நாடக எழுத்துரு ஒன்று வெளிவரும்.


மேற்குறிப்பிட்ட பண்புகளுடன் வேறு சில அம்சங்கள் கொண்ட ஒன்றாக அமைவதே 'சிறுவர் அரங்கு' எனலாம். இது சிறுவர்களாலோ, பெரியவர்களாலோ ஆற்றுகை செய்யப்படக்கூடிய சிறுவாகளுக்கான ஆற்றுகையைக் கொண்ட அரங்காகும். அதாவது சிறுவர்களைப் பார்வையாளர்களாகக் கொண்டதும் சிறுவர்களையோ, வளர்ந்தவர்களையோ அல்லது இரு சாராரையுமோ பங்குபற்றுபவர்களாகக் கொண்ட அரங்கினைக் குறிக்கின்றது. இது ஒரு நியம அரங்காகவோ, வேறு வடிவத்தைக் கொண்டதாவோ அமையலாமசிறுவர்களுக்கு, அவர்களது உளவயதுக்கு பொருந்தக்கூடிய அம்சங்கள் கொண்ட எழுத்துரு ஒன்று இங்கு அவசியமாகின்றது. அவ்வாறல்லாமல் புதிதளிப்பு முறையில் உருவாகிய சிறுவர் நாடக எழுத்துரு ஒன்றையும் இவ்வரங்கிற்கு பயன்படுத்த இயலும். மேலும் சிறுவர் கல்வியில் அக்கறை கொண்ட ஒருவரால் அல்லது ஒரு நிறுவனத்தினால் கூட இத்தகைய எழுத்துருவை எழுத இயலும். சிறுவர் அரங்கு மூன்று வகையானஆற்றுவோரைக் கொண்டதாக இருக்கலாம். சிறுவருக்காக சிறுவர்களே நடிக்கின்ற அரங்கு, சிறுவருக்காக வளர்ந்தவர்கள் நடித்தல். அதாவது பார்வையாளர் சிறுவராக இருக்க நடிப்பவர்கள் பெரியவர்களாக இருப்பர். மூன்றாவது, சிறுவரும் வளர்ந்தவர்களும் கலந்து சிறுவர்களுக்காக நடித்தல். எவ்வாறெனினும் சிறுவர் அரங்கின் பார்வையாளர் இவ்வரங்கினைநகர்த்திச் செல்லக்கூடிய பங்குபற்றுபவர்களாகவும் இருத்தலே அவசியமானது. இதன் காரணத்தினாலேயே சிறுவர் அரங்கின் பார்வையாளர் சிறுவரே எனக் குறிப்பிடுவர். சில சமயங்களில் சிறுவரின் பெற்றோர்,சகோதரர், நெருங்கிய உறவினர் ஆகியோரும் பார்வையாளராக அனுமதிக்கப்படலாம். ஏனெனில் அரங்கில் சிறுவர்கள் மகிழ்வுடன் செயற்படும் பட்சத்தில் சிறுவர் மட்டுமே பார்வையாளராக இருப்பது விரும்பப்படுகின்றது. ஏனெனில் முன்னர் குறிப்பிட்டதுபோல் பிள்ளையின் உணர்வுடன் ஒன்றி தன்னுடைய மட்டத்தில் இருந்து இறங்கி பிள்ளையின் உளவயதுடன் ஒன்றக்கூடியவர்களே இவ்வரங்கில் பார்வையாளராக கலந்து கொள்வது மிகவும் பொருத்தமானதாகும். அதாவது பிள்ளைகளின் பால் அனுதாபமாக நோக்கக்கூடியவர்கள் பங்குகொள்ளலாம்

சிறுவர் அரங்கில் கவனிக்க வேண்டிய மற்றுமொரு விடயம் இவ்வரங்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படையான போதனையினைக் கொண்டதாக இருத்தல் கூடாது என்பதாகும். சிறுவர்களது உள முதிர்ச்சிக்கு அல்லது உளவயதுக்கு பொருத்தமான நல்ல கருத்துக்கள் அரங்கில் தொக்கு நிற்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்

எளிமையான சொற்கள், பாடல்கள், சிறுவருக்குப் பொருத்தமான சிறிய கதைகள். கதை சொல்லும் (ஆச்சரியம்)பாங்கு, சுயாதீனமான அவர்களின் செயற்பாடு என்பவை இங்கு முக்கியத்வம் பெறுகின்றன. ஒற்றுமை,உண்மை,அன்பு,மகிழ்ச்சி, வெளிப்படை, சுயாதீனம் போன்ற விடயங்களும் உதவும் மனப்பான்மை. பிறரை மதிக்கும் தன்மை, பிழையை ஏற்றுக் கொள்ளும் தன்மை, தட்டிக் கேட்கும் பண்பு, என்பவையும் சிறுவர் அரங்கில் இருக்க வேண்டிய அல்லது எடுத்தாள வேண்டிய அம்சங்கள் எனக் கூறலாம்.









அதாவது சிறார்கள் சூழலை, தான் வாழுகின்ற சமூகத்தை, கலாசாரப் பாரம்பரியங்களை நேசிக்கவும் விழுமியங்களை மதிக்கவும் பின்பற்றக்கூடிய மனப்பாங்கினையும் குழுவாகச் செயற்படக்கூடிய தன்மையினையும் முரண்பாடுகளைச் சுயமாக தீர்த்துக் கொள்ளக்கூடிய திறமையினையும் பெறுவதற்கு சிறுவர் அரங்கு சிறப்பான ஒன்றாக இருக்கின்றது.

சிறுவர் அரங்கில் 'சொல்லுதல்' என்பதை விட 'நிகழ்த்திக் காட்டுதல்' என்பதே முதன்மை பெறும். உரையாடல்கள் குறுகியதாகவும் பிள்ளைகள் விரும்பும் வகையிலும் இருத்தல் வேண்டும்.

ஒப்பனையைப் பொறுத்தளவில் எவ்வித ஒப்பனையும் பிள்ளையின் முகத்தை முற்றாக மறைப்பதாக இருத்தல் கூடாது. குறித்த பாத்திரத்தின் தன்மை புலப்படும் வகையிலும் இப்பாத்திரமாக நடிக்கும் சிறுவன் யார் என்பது தெரியக்கூடிய வகையிலும் ஒப்பனைகள், வேடப் புனைவுகள் இருத்தல் அவசியமானதாகும். முற்றாக முகத்தை மூடிய முகமூடிகள், ஒப்பனைகள் சிறுவர் அரங்கைப் பொறுத்தவரையில் பொருத்தமற்ற ஒன்றாகும். தமது சக நண்பன் தான் குறித்த பாத்திரமாக வருகின்றான் என்பது இவ் வரங்கில் கலந்து கொண்டிருக்கின்ற ஏனைய சிறார்களுக்கு துலாம்பரமாகத் தெரிதல் வேண்டும்.இச்சிறுவர் அரங்கு சிறார்களின் உணர்வுடன் ஒன்றிவிடக்கூடியது என்பதால் பகுத்தறிவற்ற விடயங்களைக் கையாளுதல் கையாழுதல் தவிர்க்கப்பட வேண்டும். பாரதூரமான விடயங்களச் சிறார்களின் மனதில் அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் பயன்படுத்தலாகாது. உதாரணமாக ஒரு நாடகத்தில் சிங்கம், மான், மரை போன்ற மிருகங்களை பிடித்துக் கொல்வதாகக் காட்டும்போது சிங்கம் பிடித்து இறந்த மான் நாடகத்துக்காகப் பொய்யாக இறந்தது போல் கிடக்கின்றது என்பது சிறுவர்களுக்குப் புரிய வேண்டும். அவர்கள் பார்க்கும்போது மான் எழுந்து ஓடலாம். இறந்த மானைச் சுற்றி ஏனைய மிருகங்கள் அழுவதாக இருந்தால் அது அழுவது என்றில்லாமல் நகைச்சுவையாக இடம்பெறுதல் வேண்டும். இவ்வாறான விடயங்களில் மிக அக்கறையுடன் இவ்வரங்கில் ஈடுபடுபவர்கள், வழிகாட்டுபவர்கள் தொழிற்படுதல் அவசியமாகும்.

வளர்ந்தவர்களுக்குரிய அரங்குகளில் பயன்படுத்தப்படும் உறைநிலையில் நிற்றல் *(still)* என்பதுவும் சிறார்களின் அரங்கில் பொருத்தமற்ற ஒன்றாகும்.

## சிறுவர் அரங்கின் பயன்

சிறுவர் அரங்கினால் சிறார்கள் அடையக்கூடிய பயன்கள் பலவுள்ள முக்கியமாக அவர்கள் அழுத்தங்களிலும் பல்வேறுபட்ட உள அழுத்தங்களில் இருந்து விடுபவர். இதனால் தெளிவான சிந்தனையும் படைப்பாற்றலும் வியாபகமான நோக்கும் ஏற்படும். விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் உருவாகும். சமூகத்தில், நண்பரிடையே, வகுப்பில் கூடிக் கருமமாற்றும் இயல்பும், தன்னடக்கம், கற்பனை விருத்தி என்பவை ஏற்படும். எதையும் யோசித்து அனுபவித்து இரசிக்கத் தெரிந்த இரசனைத் திறன் வளர்ச்சியடையும். உயர்வான குணங்கள். நேர்மை, அன்பு, உயிர்களிடத்து நேசம் என்பவை இயல்பாகவே ஏற்படும். உண்மையான மகிழ்வு, நகைச்சுவை என்பவையும் இயல்பாகும். இவை எல்லாம் ஒருங்கிணைந்து கல்வியிலும் குணத்திலும் மேம்பட்ட ஆளுமை கொண்ட மனிதனாக வருவதற்கு வழி செய்யும் எனக் கூறலாம். எனவே நல்ல மனிதர்களை உருவாக்குவோம்.

துரதிஷ்டவசமாக இலங்கை போன்ற நாடுகளில் நிலவும் முரண்பாடுகளும் அதனால் கிளர்ந்தெழுந்துள்ள யுத்தமும் சிறுவர்களுக்கு மிக மோசமான பாதிப்புக்களையே ஏற்படுத்தியுள்ளது. இங்கு பலவிடங்களில் சிறார்களுக்கு தமது உள வயதுக்கேற்ப பொருந்தி வாழக்கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. இவ்வாறு இயல்பான இந்த உள வயதுக்கு பொருந்தக்கூடிய வாய்ப்புக் கிடைக்காத சிறார்கள் எத்தகையவர்கள் என நோக்கினால்...

1 மிக வறுமையான குடும்பச்சூழல், வறுமையான நாடு, பொருளாதார தடை விதிக்கப்பட்டு வறுமையாக் கப்பட்ட சமூகச் சூழல்களில உள்ள சிறார்கள்
2 மிக மோசமான போர்ச் சூழல் காணப்படுகின்ற நாடுகள், பிரதேசங்கள், போராடவேண்டிய நிர்ப்பந்தங்கள் காணப்படும் பகுதிகளில் உள்ள சிறார்கள்
3 இனமுரண்பாடுகள் காணப்படுகின்ற சூழல். எல்லைப் பகுதிக் கிராமங்கள் நிதமும் பயமுடன் வாழவேண்டிய சூழல்களில் உள்ள சிறார்கள்.
4. பொருளாதாரக் காரணங்களுக்காக சிறுவர்களைத் தொழில்களில் ஈடுபடுத்தும் சமூகங்களில் உள்ள சிறார்கள்.
5. சிறுவர் சிறுமியரைப் பாலியல் தொழில்களில் ஈடுபடுத்தக்கூடிய, சூழலில் உள்ள சிறார்கள்
6. அடக்குமுறை, சர்வாதிகாரப் போக்கு கொண்ட கல்வி நிறுவனங்களில் கல்வி கற்க வேண்டிய சிறார்கள்

மேற்குறிப்பிட்ட சூழலகளில் சிறார்கள தமது வயதுக்கும் தமது உள வயதுக்கும் பொருத்தமற்ற செயல்களில் ஈடுபடவும், ஈடுபடுத்தப்படவும் செய்யப்படுகின்றனர். பிரச்சினைகள் அவர்களை மன அழுத்தங்களுக்குள் நுழைத்து விடுகின்றது. சிறுவர்கள் சிறுவர்களாக இல்லாது பெரியவர்களாக செயற்படத் தொடங்குகின்றனர் இத்தகைய நிலை அவர்களது இயல்பான தன்மையில் இருந்து முற்றாக மாற்றி விடுகின்றது. இத்தகைய மன இறுக்கங்களில் இருந்து சிறுவர்களை விடுவிப்பதற்கு சிறுவர்களுக்கான சிறுவர் அரங்கு *( children theatre),* சிறுவர் விளையாட்டுக்கள். *Children Play'* என்பவை மிகப் பொருத்தமானவையாகக் கருதப்படுகின்றன. வன்முறையான மனநிலையில் இருந்து விடுபடக்கூடிய நீதிக்கதைகளையும் அவர்கள் விரும்பும் பொருட்கள் மிருகங்களையும் பாத்திரங்களாகவும் உருவகங்களாகவும் கொண்டு இச்சிறுவர்களுக்கான அரங்கு அமைதல் வேண்டும். எனவே இவ்வளவு சிறப்புப் பொருந்திய சிறுவர்களுக்கான இவ்வரங்கினைப் பயன்படுத்தி நல்ல மனிதர்களை உருவாக்குவோம்.

## வடக்கு கிழக்கில் சிறுவர் அரங்கின் தேவை

வடக்கு கிழக்கு பகுதி நீண்டகாலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் சிறுவர்களிடையே கல்வியில் நாட்டமின்மை, கட்டாய இலவசக்கல்வியை பெற்றுக் கொள்ளாமை, பாடசாலையில் இருந்து இடைவிலகல் போன்ற தன்மைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவது கண்டு கொள்ளப்பட்டுள்ளது. யுத்தம் ,வறுமை என்பன அதன் மூலங்களாக கருதப்பட்டாலும் இவ்வழுத்தங்களில் இருந்து சிறார்களை விடுவிக்கவோ அல்லது இத்தகைய சிறார்களை அடையாளம் காணவோ சாதாரண கற்றல் கற்பித்தல் நடைமுறைகளால் சாத்தியப்படவில்லை. எனவே இக்குறைபாடுகள் ஸொடர்ச்சியாகவே இருந்து கொணடே வருகின்றன.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் எல்லைப் பகுதிகளிலும் கிராமப் புறங்களிலும் உள்ள சிறார்களை அவதானித்தபோது பின்வரும குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டன.

1. சிறார்கள் தமது தாய் தந்தையர் அல்லது உறவினர்களின் அகால மரணங்களை கண்ணுற்றவர்களாகவும் கேள்விப்பட்டவர்களாகவும் இருத்தல்.
2. தாய் தந்தையரை இழந்து அற்று உறவினர் மற்றும் வெளியாரில் தங்கியிருக்கின்றவர்களாக இருத்தல்.
3. நீண்டகாலமாக முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து மன நெருக்குதல்கள் கொண்டவர்களாக இருத்தல்.
4. கட்டாய இலவசக்கல்வி வாய்ப்புக்கள் இருந்தும் வறுமை, பொருளாதார ரீதியில் வீட்டிற்கு பயன்படவேண்டிய தன்மை என்பவற்றால் பாடசாலையை விட்டு விலகி இருக்கின்றவர்களாக இருத்தல்.
5. மனப்பாதிப்புக்கள்-பயம் என்பவற்றை கொண்டு (இயல்பில்) இயலாதவர்களாக இருத்தல்.
6. தமது திறமைகளை-விருப்பங்களை தாமே அறிந்து கொள்ளாமல் இருக்கின்ற தன்மை உடையவர்களாக இருத்தல்
7. பாடசாலைகளில் கற்பவர்களில் பெருமளவிலான சிறார்கள் கல்வியை சுமையாக கருதுகின்றதன்மை உடையவர்களாக இருத்தல்
8. பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்களில் பெருமளவிலானோர் உணர்வுகளை வெளிப்படையாக பகிர்கின்ற பழக்கம் அற்றவர்களாக இருத்தல்.
9. பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடு கவர்ச்சிகரமான ஒன்றாக இல்லாததால் பாடசாலையை விட்டு இடை விலகல்.
10. விழுமியங்களை மதிக்காமல் தான்தோன்றித்தனமாக வாழ முனைதல்
11. வன்முறையின்பால் விருப்புக் கொண்டவர்களாக இருத்தல்.
12. தமது திறன்களை முற்றிலுமாக வெளிப்படுத்த முற்சிக்காது சோம்பியிருத்தல்.
13. பொருத்தமான இடங்களில் தாம் எதிர்நோக்கும் இடர்களுக்கு முகங்கொடுக்க, தட்டிக்கேட்க திராணியற்றவர்களாக இருத்தல்.

மேற்குறிப்பிட்ட தன்மைகளில் இருந்து சிறாாகளை விடுவித்து 'சகலருக்குமான கல்வி' என்பதை அவர்களும் பெறக்கூடிய வகையில் செயற்படுத்துவதற்கும் அதற்கூடாக அவர்களின் கல்வியில் அபிவிருத்தியை ஏற்படுத்துவற்கும் சிறுவர் அரங்கு மிகப் பொருத்தமானதாகும். மன இறுக்கங்களிலிருந்து சிறார்களை விடுவித்தல் என்ற 'மனவியல்' சார்ந்த செயற்பாடு இக்கட்டத்தில் முக்கியமான ஒன்றாக உள்ளது. இதற்கு சிறுவர் அரங்கை பிரதான ஊடகமாக பயன்படுத்துவதனூடாக பண்படலாம்.





# புறநானூற்றில் அறக்கருத்துக்கள்

**தமிழ் மணி. அகளங்கன்**

தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படுவது சங்க காலமே என்பர். தமிழ்ப் பேரறிஞர், சங்க இலக்கிய நூல்கள் இரண்டாயிரம் ஆண்டுகள் வரை பழைமையானவை என்பது பொதுவான முடிவு. பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள், பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்களை அடியொற்றி சங்க காலத்தை கி.பி முதல் மூன்று நூற்றாண்டுக் காலம் என்று வரையறுக்கிறார்.

கிறிஸ்துவிற்குப் பின்பு தான் தமிழ்ப் புலவர்கள் பாடல்கள் பாடினார்கள் என்றோ, அல்லது கிறீஸ்துவிற்குப் பின்பு வாழ்ந்த புலவர்கள் பாடிய பாடல்கள் மட்டும் தான் இன்று கிடைத்துள்ளன வென்றோ உறுதியாகச் சொல்ல முடியாது.

தமிழர்கள் இலை குழைகளை ஆடையாக்கி உடுத்த காலப் பாடல்களும் சங்க இலக்கியங்களில் உண்டு. குறிப்பாக அகநானூற்றில் ஏழாம் பாடலில் ஒரு பெண் உடுத்த ஆடையைப் பற்றிக் கயமனார் என்ற சங்கப் புலவர் பாடும் போது "ஒலிக்குழைச் செயலை உடைமாண் அல்குல்" என்கிறார்.

இதற்குப் புலியூர்க் கேசிகன் எழுதிய உரையில் "தழைத்த அசோகின் தளிரினால் அமைந்த தழையாடையினை அணிந்தவள். அதனால் மாட்சி பெற்று விளங்குகின்ற அல்குல் தேரினை உடையவள்" எனவிரிவாக எழுதியுள்ளார்.

சங்க காலப் புலவர் ஒருவர் அறுவை வாணிகன் சாத்தனார் எனப் பெயர் பெறுகிறார். அறுவை வாணிகம் என்பது புடவை வியாபாரத்தைக் குறிக்கிறது. நீட்டாக நெய்து விட்டு அறுத்து அறுத்து விற்பதால் அறுவை வாணிகம் என இது பெயர் பெற்றது.

இதே போல் துணித்துத் துணித்து (துணித்தல் -வெட்டுதல்) விற்பதால் துணி எனவும், வெட்டி வெட்டி விற்பதால் "வெட்டி" எனவும் பெயர் பெற்றது. வெட்டியே "வேட்டி" என இன்று வழங்குகின்றது.

துணித்தல், வெட்டுதல், அறுத்தல் என்ற செயற்பாடுகளுக்கு உட்படுவதால் துணி, வேட்டி, அறுவை என்ற பெயர்களை நெய்து வெட்டப் படுகின்ற துண்டுகள் பெறுகின்றன.

தோளில் போடப்படுகின்ற சால்வை, என அழைக்கப்படுவதை தமிழ் நாட்டில் "துண்டு" என்றே அழைக்கிறார்கள். துண்டு என்பதும் துண்டாடப் பட்டு பெறப்படுவது என்ற பொருளிலேயே அமைந்தது.

இங்கே வருத்தத்துக்குரிய விடயம் என்னவென்றால், வெட்டி விற்கப்படுவது "வேஸ்டி" ஆகியதே. பூவைக் கொண்டு செய்வது பூ செய். அது பூசையாக மருவி வழங்க நாம் வீணாக பூஜை எனச் ஆரியச்

சொல்லாகியது போல வெட்டி என்பது வேட்டியாக மருவி வழங்க நாம் வீணாக வேஸ்டி என ஆரியச் சொல்லாக்கிவிட்டோம்.

புற நானூறு என்ற சங்க இலக்கிய நூலின் ஒன்பதாம் பாடலில் பாண்டியன் பல்யாக சாலை முது குடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் என்ற புலவர் வாழ்த்திப் பாடும் போது

"முந்நீர் விழாவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலிலும் பலவே"

எனப் பாடுகிறார். இவ்வரிகள் பற்றி ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் தனது விளக்கவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"பாண்டியன் நெடியோன் காலத்திருந்த பஃறுளியாற்றை நெட்டிமையார் எடுத்தோதி அதன் மணலினும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவதால் அப்பஃறுளியாறு நெட்டிமையார் காலத்தும் உளதாதல் பெறப்படும். எனவே இவரும் இவராற் பாடப்பெற்ற பாண்டியனும் கடல்கோட் காலத்துக்கு முற்பட்டவர் என்பது விளக்கமாம்" என்கிறார்.

"பஃறுளி ஆற்று மணலின் எண்ணிக்கையைவிட அதிக காலம் வாழ்வாய் " என்று வாழ்த்தியதாகக் கருதினாலும் கூட, கடல் கோட்கு உட்பட்டு அழிந்து போன ஒன்றை வாழ்த்துப் பாடலில் உவமையாக்கி ஒப்பிட்டு ஒரு புலவர் பாடுவாரா என்பது சந்தேகமே

பன்மலை அடுக்கத்துப் பஃறுளி ஆற்றுடன் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்வதற்கு முற்பட்ட பாடல் இதுவாயின், சுவாமி விபுலானந்தரின் மாணவராகிய வெள்ளை வாரணனார் குறிப்பிடுவது போல சங்க காலம் என்பது கி.மு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது தானோ என்ற எண்ணமே உள்ளத்தில் தோன்றுகின்றது.

சங்க இலக்கிய நூல்களை பாட்டு நூல்கள் பத்து (பத்துப் பாட்டு) தொகை நூல்கள் எட்டு (எட்டுத் தொகை) என பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் வரையறுக்கிறார்

தொகை நூல்கள் எட்டினுள் புறநானூறு மிகவும் விசேடமானது புறநானூற்றுப் பாடல்களில் மன்னர்களின் வீரத்தையும், கொடைப் பண்பையும் மட்டுமே தான் பெரிதும் எடுத்து ஆராய்ந்துள்ளனர்.

புறநானூற்றில் அரிய வாழ்க்கைத் தத்துவங்களும் அடங்கியுள்ளன என்பதை ஆராய்வோர் குறைவு. அறக்கருத்துக்களாக, ஆன்மீகக் கருத்துக்களாக, அரிய தத்துவங்கள் பல புலவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாண்டு தமிழ்த் தினப் போட்டியில் ஐந்தாம் பிரிவினர்க்கு (தரங்கள் 12,13) பாவோதல் போட்டிக்காக வழங்கப்பட்டுள்ள புறநானூற்றுப் பாடல்கள் ஐந்தில் மூன்று பாடல்கள் இத்தகையனவே.

இதில் ஒன்று பக்குடுக்கை நன்கணியார் பாடிய பாடல். வாழ்க்கை நிலையாமையை மிக அழகாக ஒப்பீடு மூலம் எடுத்துக் காட்டி, இவ்வுலகத்தின் இயல்பை உணர்ந்து கொண்டோரே இவ்வுலகின் இனிமையை அல்லது இவ்வுலக வாழ்வின் மூலம் காணக்கூடிய இனிமையைக் கண்டு கொள்வார்கள் என்று தத்துவமுரைக்கிறார் புலவர்,

ஓரில் நெய்தல் கறங்க, ஓரில்
ஈர்ந்தன் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்
இன்னா தம்ம இல் வுலகம்
இனிய காண்கிதன் இயல்பு உணர்ந்தோரே

(புற-194)

இப்பாடலின் பொருள் வெளிப்படையானது. இருப்பினும் சுருக்கமாகப் பார்ப்போம். ஒரு வீட்டில் நெய்தற் பறையாகிய மரணப்பறை ஒலிக்க, ஒரு வீட்டில் மகிழ்ச்சியைத் தரும் மணமுரசு பேரொலி எழுப்ப, காதலரோடு கூடிய மகளிர் பூவையும் ஆபரணங்களையும் அணியக், காதலரைப் பிரிந்த பெண்களது துன்பத்தையுடைய கண்கள் நீர் நிரம்பி வழிய, இத்தகைய மாறுபட்ட நிலைமைகளை படைத்தவன் நிச்சயமாகப் பண்பில்லாதவனே. இவ்வுலகம் மிகவும் கொடியது. இவ்வுலகத்தின் இயல்பை உணர்ந்து கொண்டாரே வாழ்க்கையின் மூலம் இனிமையைக் காண்பவர் ஆவார்.

இப்பாடலின் பொருள் தமிழர்களுக்கு மட்டுமன்றி மனிதர் யாவருக்கும் தேவையானதே இத்தகைய இயல்பு கொண்ட உல்கில் தான் எத்தனை சண்டைகள், சச்சரவுகள், போட்டிகள், பொறாமைகள்.

இதேபோல கணியன் பூங்குன்றனார் பாடிய பாடலொன்றும் மிக விசேடமானது. கணக்கு என்ற சொல் முற்காலத்தில் இலக்கியத்தைக் குறித்தது. பதின் எண் கீழ்க் கணக்கு என்பதிலுள்ள கணக்கு இலக்கியத்தையே குறித்தது. அதனால் கணியன் என்பது இலக்கியக்காரன் என்ற பொருளில் இவருக்கு அடைமொழியாகிற்று என்பர் சிலர். இருப்பினும் இவர் பாடிய கீழ்வரும் பாடற் கருத்தை நோக்குகையில் இவர் சோதிடர் என்பதால் கணியன் என அழைக்கப்பட்டார் என உறுதியாகச் கூறலாம்.

கம்பன் இராமயாணத்தில் சோதிடர்களை "கணித மாக்கள்" என்றே குறிப்பிடுகின்றார். இவரது பாடலை முதலில் பார்ப்போம்.

யாதும் ஊரெ யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ,ரன்ன
சாதலும் புதுவது, அன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே, முனிவின்
இன்னாது என்றலும் இலமே. மின்னொடு

வானந் தன்துளி தலைஇ யானாது
கல்பொருது இரங்கும் மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. புறநானூறு-192

இப்பாடலின் பொருளை பின்வரும் வகையில் சுருக்கமாகப் பார்ப்போம்.

எமக்கு எல்லாம் ஊர் எல்லாரும் உறவினர் தீமையும் நன்மையும் பிறர்தர வருவதில்லை. அவை நாம் செய்த வினைகளுக்கு ஏற்ப தாமாகவே வந்து பொருந்துகின்றன. அவற்றைப் போன்றவையே துன்பப் படுவதும், அத்துன்பத்திலிருந்து விடுபடுவதும் ஆகும். இறந்து போவது புதியதொரு நிகழ்ச்சியன்று வாழ்தல இனிதென்று மகிழ்ந்திருப்பதும் இல்லை. வெறுப்பு வந்த நேரத்தில்இன்னாது என்று சொல்வதும் இல்லை.மின்னலுடன் பொருந்திய வானம் குளிர்ந்த நீர்த்துளிகளைப் பெய்த காரணத்தால் அந்நீர்த் துளிகள் கல்லோடு மோதி ஒலித்து பெரும் ஆறாக ஓடும். ஆந்த ஆற்று நீரின் வழியே போகும் தெப்பம் போல அரிய உயிர் ஊழ் வினையின் வழியே செல்லும் என்பதை திறமை மிக்கோர் செய்த நூல்வழி காட்டிய காட்சியினால் கண்டு தெளிவடைந்தோம். ஆதலால் மாட்சிமை பொருந்திய பெரியோரைப் பார்த்து வியந்து புகழ்வதும் இல்லை. அப்படிப் புகழ்ந்தாலும் சிறியோரை இகழ்வதே இல்லை.

வாழ்க்கையில் ஊழின் (விதி) பங்கு என்ன என்பதை இப்பாடலின் மூலம் கணியன் பூங்குன்றனார் அருமையாக விளக்கியிருக்கிறார். ஒரு வகையில் பார்த்தால் இப்பாடல் விரக்தியின் குரலாக ஒலித்தாலும், வாழ்க்கை பற்றிய தத்துவத்தைத் தகுந்த உவமானம் மூலம் விளக்கி அறிவூட்டும் பாடலாகவும் திகழ்கின்றது.

இதே போல் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய பாடலொன்றும் மிகச் சிறப்பானது. சங்க காலத்தில் மன்னர்களும் புலவர்களாக இருந்தார்கள், சிறந்த கருத்துக்களைப் பாடியிருக்கிறார்கள், என்பதற்கு இப்பாடலும் ஒரு சான்று.

கல்வியின் பெருமையையும், கல்வியால் சாதி ஏற்றத் தாழ்வைப் போக்கலாம் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டு அவர் பாடிய அந்த அற்புதமான பாடலையும் பார்ப்போம்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே ( புற-183)

இதன் பொருளையும் சுருக்கமாகக் காண்போம். ஆசிரியருக்கு ஒரு துன்பம் நேர்ந்த போது அதனைத் தீர்ப்பதற்கு உதவி செய்தும் மிகுந்த பொருளைத் தட்சணையாகக் கொடுத்தும், ஆசிரியருக்குப் பணிந்து வழிபாடு செய்கின்ற நிலையை வெறுக்காது கல்வி கற்பது நல்லது அதற்குக் காரணம் என்ன வென்றால் பிறப்பு ஒரு தன்மையாகிய ஒரு தாய் வயிற்றுப் பிறந்தோருள்ளும், கல்வியின் சிறப்பினால் தாயின் மனமும் மாறுபட்டு கல்வி கற்ற மகனிடத்திலேயே அதிக அன்பு செலுத்தும் ஒரு குலத்திலே பிறந்த பல்லோருள்ளும் மூத்தவனை வருகவென்று அழைக்காது, அவர்களுக்குள் அறிவுள்ளவனின் வீட்டு வழிதேடி அரசனுக்கு செல்வான். வேறுபாடு தெரிந்த நான்கு வகைக் குலத்துள்ளும், கீழ்க் குலத்துப் பிறந்த ஒருவன் கற்றால், மேற்குலத்தான் ஒருவனும் அவனிடம் சென்று வழிபடும் நிலையை அடைவான்.

இப்பாடல்களில் மட்டுமின்றி இன்னும் பல பாடல்களிலும் அரிய தத்துவங்கள் பல பொதிந்து கிடக்கின்றன.

நரிவெரூஉத் தலையார் பாடிய பாடலொன்றைப் பார்த்து அதன் பொருளையும் பார்ப்போம்.

பலசான் றீரே பல்சான் றீரே
கயன்முள் என்ன நரைமுதிர் திரைகவுட்
பயனில் மூப்பிற்பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றும் படூஉ நெறியுமா ரதுவே (புற-195)

பலவாயமைந்த குணங்களையுடைய சான்றோர்களே. கயல் மீனினது முள் போன்ற வெள்ளை நிறங் கொண்ட நரையும் முதிர்ந்த தோற்றமுங் கொண்ட பயனில்லாத மூப்பை அடைந்த சான்றோர்களே. மழுவாகிய கூரிய படைக்கலத்தைக் கொண்ட மிகவும் வலிமையுடைய இயமன் பாசக் கயிற்றாற் கட்டி உயிரைக் கவர்ந்து செல்ல வரும் போது வருந்துவீர்கள். இவ்வுலகில் வாழுங்காலத்தில் நல்வினையைச் செய்ய மாட்டீராயினும் தீவினையையாவது செய்யாமல் இருங்கள். அதுதான் எல்லோரும் விரும்புவது. அது மட்டுமின்றி நல்ல நெறியில் செலுத்தும் வழியும் அதுவே என்கிறார் புலவர்.

இப்பாடலில் வரும் " நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்ற அரிய கருத்து சுவாமி விவேகானந்தரால் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது.

" நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாது விட்டாலும் தீமையாவது செய்யா திரு " என எளிய வடிவில் இதனை ஏற்கனவே அறிந்துள்ளோம்.

சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் பாடும் போது

விழவிற்
கோடியர் நீர்மை போல முறை முறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்து

என ஒரு பகுதியைப் பாடுகின்றார். இதற்குரிய பழைய உரையில் "விழாவின் கண் ஆடும் கூத்தரது வேறுபட்ட கோலம் போல அடை வடைவே தோன்றி இயங்கி இறந்து போகின்ற இவ்வுலகத்தின் கண்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள் விளக்க உரை எழுதுகையில் " கோடியர்நீர்மை - கூத்தருடைய வேறுபட்ட கோலம் , கூத்தர்து கோலம் தோன்றி நின்றிலங்கி மறைவது, உலகம் தொன்றி நின்று மறைவதற்கு உவமையாயிற்று " என்று குறிப்பிடுகின்றார்.

இதன் பொருளே ஆங்கில நாடக ஆசிரியரான சேக்ஸ்பியர் பிற்காலத்தில் கூறிய " நாடகமே உலகம் " என்ற கூற்று என்பது மனங் கொள்ளத் தக்கது.

கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி பாடிய பாடலொன்று உலகம் இருப்பதற்கு நல்லதோர் காரணத்தைக் கூறுகிறது. புறநானூற்றில் வரும் அப்பாடலையும் பார்ப்போம்.

உண்டா லம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இனயவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே. முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே (புற-182)

தேவாமிர்தம் கிடைத்தாலும் இனியது எனத் தனித்துண்ணாது பகுத்துண்ணும் பண்புள்ளவர் இன்னும் இருக்கிறார்கள். கோபமில்லாதவர்கள், சோம்பலில்லாதவர்கள், பிறர் அஞ்சத் தகும் துன்பத்திற்கு தாமும் அஞ்சி, புகழ் எனின் உயிரையும் கொடுப்பவர்கள், பழி எனின் அதனால் உலகம் முழுவதும் பெறினும் கொள்ளாதவர்கள், சோர்வில்லாதவர்கள் என அத்தகைய மாட்சி பொருந்தியவராகித் தமக்கென முயலாது பிறர்க்கென முயல்கின்றவர்கள் இன்றும் இருக்கிறார்கள் என்பதால் தான் உலகம் இயங்குகின்றது என்கிறார் இவ்வரசப் புலவர்.

நல்லவர்களுக்காக உலகம் அழியாது இருக்கின்றது. அழியாத இவ்வுலகத்தில் கெட்டவர்களும் வாழ்கின்றார்கள் என்ற பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலின் அடிப்படையிலே தான் ஔவையாரும் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார்.

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை

நல்லவர் ஒருவர் இருந்தாலும் இவ்வுலகம் அவருக்காக இயங்கவேண்டும். அதற்கு மழை பெய்ய வேண்டும். அம்மழை புல்போன்ற அற்பர்களுக்கும் பயன்படும் என்கிறார் ஔவையார்.

சங்க காலப் புலவர்கள் தமிழ்ச் சமூகத்தின் உயர்வுக்குக்காகக் கூறிய சிறந்த கருத்துக்கள் இன்று உலகம் முழுமைக்கும் அவசியமாகின்றது. இக்கருத்துக்களைப் படித்துப் பயன்பெற வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

# நாவலும் காவியமும்

ஏ.எஸ்.உபைத்துல்லா, மூதூர்.

தமிழ் இலக்கியத்தின் பிரிவுகளில் நாவல் தவிர்க்க முடியாததொன்றாக இப்போது வளர்ச்சியடைந்திருக்கிறது. காவியங்களது இடத்தைத் தற்போது நாவல்கள் பிடித்துக் கொண்டதாகப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

சமுதாயப் பிரச்சனைகளையும் தனிமனிதப் போக்குகளையும் நன்கு சித்திரித்துக் காட்ட நாவல்கள் மிகவும் வேண்டப்படுவதான ஒரு சாதனம் என்ற எண்ணம் இலக்கியவாதிகளிடயே வெகுவாக வேரூன்றி இருக்கிறது. திண்ணையிற் படுத்துக் கொண்டு வாசிக்கத் தக்கதான வாசகர்களுக்கென விருத்தியடைந்த நாவலிலக்கியம் இன்று அரசியல், சமூக, பொருளாதார தத்துவ விசாரணைகளை சாதனமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனாலும் தமிழ் நாவல் இலக்கியத்தின் வயது நூற்றாண்டு தான்.

ஆரம்ப காலத் தமிழ் நாவல்கள் எப்படியிருந்தன என்ற விசாரணையைத் தொடங்க முன்னர் தமிழுக்கு நாவல் வந்த வரலாற்றை தெரிந்து கொள்வதும் வேண்டப்படுவதே. சர்வ உலகிலும் விளாபித்து நிற்கும் நாவலிலக்கியம் தமிழுக்கு எப்படி வந்தது ? என்பதைத் தெரிந்து கொள்ள எத்தனிக்கும் போது ஆங்கில மொழியின் தாக்கம் தான் தமிழில் நாவலைத் தோற்றுவித்தது என்று நிரூபிக்கப்பட்ட கேத்திர கணிதத் தாட்டாந்தம் போலத் தமிழக இலக்கிய விமர்சர்களில் ஏறத்தாழ எல்லோருமே சொல்வதை நாமும் ஏற்றுக் கொள்வோம்.

ஆனாலும், தொல்காப்பிய நூற்பா ஒன்று,

"தொன்மைதானே
உரையோடு புணர்ந்த பழமை நேற்றே"

"பாட்டிடைவைத்த குறிப்பினாலும்
பாவின்றெழுந்த கிளவியானும்
பொருளொடு புணராப் பொய்ம் மொழியாயினும்
பொருளொடு புணர்ந்த நகை மொழியாயினும் என்று
உரை நடை வகையே நான் கெ மொழிய "

என்ற சூத்திரத்தால் தமிழில் உரை நூல்கள் தொல்காப்பியர் காலத்திலிந்தே இருந்தன எனக் கருத வேண்டி இருக்கிறது.

பொருள் மரபில்லாப் பொய் மொழியும், பொருயோடு புணர்ந்த நகை மொழியும் ஒரு பொருளின்றித் தொடர்ந்து செல்லும் நூல்களையும், பொருளோடு தொடர்ந்து நகைப்பிற்கேதுவாய் நூல்களையும் உரைநடைப் படைப்பிலக்கியங்கள் என்றே தோன்றுகின்றன எனக் குறிப்பிடுகிறார் டாக்டர் இரா.தண்டாயுதம் ஏறத்தாழ இதே கருத்தை "இலக்கிய விமர்சனம்" என்ற தனது நூலில் தெ.மு.சிதம்பர ரகுநாதன் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தார், ஆனாலும் உரைநடைப் படைப்பிலக்கியம் எனக் கருதப்படும் பண்டைய தமிழ் நூல்கள் எதுவும் நமக்கு கிடைக்கவில்லை.

மனிதன் தன் உணர்வுகளை பேச்சாக அதாவது உரைநடை மூலம் வெளியிட்டானா ? அல்லது பாட்டாக அதாவது கவிதையாக வெளியிட்டானா ? என்பது இரசமான ஆராய்ச்சி ஆனாலும் எந்த மொழியிலும் இலக்கியச் சரித்திரத்தைப் படித்தாலும் செய்யுள் இலக்கியமே முதலில் வந்ததாகக் குறிப்பிட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

மனிதன் தன் உணர்வுகளை உரைநடையால் வெளியிட முன் பாட்டாகவே அவற்றை வெளியிட்டானா? பாட்டு, மொழி ஓரளவு பண்பட்ட பின்னரே பிறந்திருக்கக் கூடும் அப்படி இருந்தும் இலக்கியம் என்றால் அது கவிதை என்றே நாம் பல தலை முறைகளாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். தொடக்க காலத்தில் பேச்சு மொழிக்கும் பாட்டிற்கும் அதிக வித்தியாசம் இருக்கவில்லை என்பதை சங்ககாலப் பாடல்கள் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. கட்டுப்பாடுகள் மிகக் குறைந்ததான அகவற்பாற்களில் பேச்சோசையோடு சங்கப் பாடல்கள் காணப்படுகின்றன.

பிற்காலத்தில் இறுக்கமான சில மரபுகளும் இலக்கணங்களும் தோன்றிற் செய்யுள் பேச்சு மொழியிலிருந்து தூரமாகி விலகி, கற்றோர் மட்டுமே சுவைக்கக் கூடிய கவிதைகளாகின. அவைகளின் சரித்திரமே தமிழ் இலக்கியத்தின் சரித்திரம் ஆகியது.

கம்பன் இந்த 20 ஆம் நூற்றாண்டிற் பிறந்தால் காவியம் எழுத மாட்டான். நாவலே எழுதுவான் என்று சாதாரணமாகச் சொல்லப்படுவதுண்டு. இக்கருத்து காவியங்கள் காலப் போக்கில் நாவல்களாக வெளி வருகின்றன. காவியங்களுக்கும், நாவல்களுக்கும் தொடர்புண்டு என்ற எண்ணத்தை இலக்கிய விரும்பிகளுக்கு கொடுத்திருக்கின்றது. பலர் காவியங்களின் தொடர்ச்சியாகத்தான் நாவல்கள் வெளி வருகின்றன என நம்புகிறார்கள்.

காவியங்களுக்கும், நாவல்களுக்கும் ஏதாவது தொடர்புண்டா ? காலத்தின் தேவையே புதிய புதிய இலக்கிய வகைகளைத் தோற்றுவிக்கிறது. என்பதைப் பலர் சிந்திப்பதும் இல்லை. அதனைஒப்புக் கொள்வதும் இல்லை. காவியங்கள தான் தற்போது வசன நடையில் நாவல்களாக வெளி வருகின்றன. என்பவர்களுக்குச் சிறந்த பதிலைத் தரும் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் தமது பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நாவலின் முன்னுரையில்,

“ தமிழில் இம் மாதிரி உரை நடை நவீனம் பொதுமக்களுக்கு இதுவரை அளிக்கப்படவில்லை ஆகையால் இந்த நூல் வாசகர்களுக்குரமாகவும் போதனை நிறைந்ததாகவும் இருக்காலம் என பெருமை கொள்கின்றேன். இம்மாதிரிப் புதிய முயற்சிகளில் ஏதாவது குற்றங் குறைகள் இருப்பின் பொறுத் தருளுமாறு பொது மக்களை வேண்டிக் கொள்கின்றேன் ” எனக் கூறுகின்றார். முன்னுரையின் கடைசியாக அமைந்துள்ள இப்பந்தியில் பொது மக்கள் என்ற சொற்றொடர் இரு தடவைகள் வருவதை நாம் அவதானிக்க வேண்டும். மாயூரம் வேதநாயகம் பிள்ளை பொதுமக்களுக்கு இதை அளிக்கிறேன் என்கிறார். முதலில், “ இதிலிலுள்ள குற்றங் குறைகளை பொதுமக்கள் மன்னிக்க வேண்டும் என வேண்டுகிறார். இரண்டாவதாக (ஆகவே) நாவல் பொதுமக்களுக்காக எழுதப்பட்டது என்பதுவலியுறுத்தப்படுகின்றது.”

ஆனால் காவியங்கள் யாருக்காக படைக்கப்பட்டன. அது நிச்சயமாக பொது மக்களுக்காகப் பாடப்படவில்லை. சமீப காலக் காவியமான "இரட்சணிய யாத்திரிகம் " என்ற காவியத்திற் கூட அதன் ஆசிரியர் எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை அவர்கள் தாம் அதைப் பொதுமக்களுக்காக எழுதியதாக குறிப்பிடவில்லை. அவருக்குப் பின்னர் வந்த "மனோன்மணியம் " எழுதிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களும், " கல்வி வேள்விகளால் நிறைந்த இத்தலைமுறை சிரேஷ்டர்கள் அங்கீகரித்து அருள் பொழியா தொழியா" என்றுதான் முன்னுரையில் எழுதினார்.

அரசர்களதும், நிலக்கிழார்களதும் ஆதரவில் வாழ்ந்து கொண்டு காவியம் பாடிய புலவர்கள் பொதுமக்களைப் பற்றி எண்ணவே இல்லை. நம் படைப்புக்களை உயர்ந்தோருக்காக -அதாவது கல்வியில் உயர்ந்தோருக்காகவே எழுதினார்கள். உயர்ந்தோரே அக் காவியங்களை கற்றனர். அப்படிக் கற்றவர்கள் பொது மக்களுக்காக கோயில்களிலும், பொது இடங்களிலும் பொதுமக்களுக்கு அந்தக் காவியங்களை உபன்னியாசம் செய்தனர். தமிழ் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும். இராமாயண உபன்னியாசங்களும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கந்த புராணச் சொற்பொழிவுகளுமே இதற்குச் சான்று.

இந்த வல்லடிகள் பொதுமக்கள் நேரடியாகவே படித்து இன்புறுவதற்காகவே தன் நாவல் எழுதப் பட்டிருப்பதாக வேதநாயகம் பிள்ளை சொல்வதே நாவலுக்கும் காவியத்திற்கும் தொடர்பே இல்லை. அதுவேறு எனக் குறிப்பிவதாகக் கொள்ளலாம்.

மேலும் காவியம் எழுதுபவர் தண்டியலங்காரச் சூத்திரத்தை அளவு கோலாக வைத்துக் கொண்டனர். தம் காவிய நாயகனாகத் தன்னிகரில்லா தலைவனையே- சிரிஷ்டித்தார்கள் அத் தன்னிகரில்லாத் தலைவன் தெய்வமாகவோ அல்லது அரசனாகவே இருப்பார்கள். இராமனும், முருகனும் தெய்வங்கள் அதிவீரராம பாண்டியன் பாடிய "நைடதம் " என்ற காவியத்தின் தலைவன் நளன் அரசன் நமக்குத் தெரிந்த வரையில் சிலப்பதிகாரக் கோவலன் மட்டுமே அரசனல்லாத வணிகன்.மேலும் காவியம் பாடுவதற்கு சில பந்தாக்களுண்டு. கடவுள் வாழ்த்து – வேறு இஷ்ட தெய்வங்களின் வரித்து – அவையடங்கும் முதலான பந்தாக்கள் - வராத காவியமே இல்லை " நைதடம் " பாடிய அதிவீர ராம பாண்டியன் தன் காவியத்திற்கு அவையடக்கம் பாடவில்லை. காவியம் அரங்கேற்றப்பட்ட போது அங்கிருந்த புலவர்கள் அதனை ஓர் குறையாக எடுத்துக் காட்டினார்களாம். தன் குறையைஉணர்ந்த அதிவீர ராம பாண்டிய மன்னன் அவையில் "யாம் எழுத்த மாத்திரததால் அவையடக்குவதாலும் அவையடக்கம் பாடிய காவியங்கள் சில இனிதாக முற்றுப் பெறாமையாலும் யாம் அவையடக்கம் விடுத்தனம்" என்று சொல்லிச் சமாளித்தாலும் எனச் சொல்லிப்படித்த நினைவு வருகின்றது. இப்படியான பந்தாக்கள் ஏதுமின்றி,

" இந்த தேசம் இங்கீஸ் துரைத்தனத்தார் சுயாதீனமாகிச் சில காலத்தின் பின்பு சத்தியபுரி எனும் ஊரிலே தொண்டை மண்டல முதலியார் குலத்திலே நான் பிறந்தேன். "

நேரடியாகவே கதை சொல்லத் தொடங்குகிறார் வேதநாயகம் பிள்ளை.


இப்படியாகக் காவியத்துக்கும் , நாவலுக்கும் ஒட்டும் உறவும் இல்லாத வகையில் வேதநாயகம் பிள்ளை அவர்கள் நாவலை எழுதினாலும் அவர் தம் நாவலில் "ஞானம்பாள் "என்ற முக்கிய பாத்திரம்,

" இங்கிலிஸ் பிரான்ஸ் முதலிய பாசைகளில் இருப்பது போல தமிழில் வசன காவியங்கள் இல்லாமலிருப்பது பெருங்குறையென நாம் ஒப்புக் கொள்கின்றோம்.நம்முடைய சுய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்கின்ற வரையில் இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாது என்பது நிச்சயம் "எனச் சொல்கிறது. தன் கதாபாத்திரம் மூலமாகக் குறிப்பிடும் "வசன காவியம் " என்ற சொற்றொடர்தான் காவியங்களுக்கும், நாவல்களுக்கும் தொடர்பு இருப்பதாகப் பலரை எண்ணச் செய்தது போலும்.

மேலும் ஆங்கில இலக்கியத்திலும் நாவல், காவியத்தின் தொடர்ச்சியாக வந்தது தான் என்ற மயக்கம் இருந்தது. 18 ஆந் நூற்றாண்டிலே ஆங்கில நாவல்கள் பல எழுதிப் புகழ் பெற்றவரான கென்றி பில்டிற் என்பவரை " ஆங்கில வசன காவியத்தின் தந்தை" என்றே குறிப்பிட்டனர். பில்டிற்கும் தன் படைப்புகளைப் பற்றி எழுதுகையில் வசனத்தில் எழுதப்படும் வேடிக்கையான காவியம் என்ற பொருள்படும் (A Comeepic Poem in Prose ) என்றே குறிப்பிட்டார். பண்டைக் காவியங்களிலிருந்து நாவல்களை வேறுபடுத்திக் காட்டவே அவர் வேடிக்கைக் காவியம் என்று நாவலைக் குறிப்பிடாமலும் அவர் வசன காவியம் எனக்குறிப்பிட்டது. மட்டுமே காவியத்துக்கும் - நாவலுக்கும் தொடர்புண்டு என்பதாகப் பலரும் குழம்பினர். அத்தகைய குழப்பந்தான் நாவல்களில் "வசன காவியம் " என வேதநாயகம் பிள்ளை சொல்லியதும் - நாவல் காவியத்தின் தொடர்பு அடுத்து நிகழ்த்தப்படுவதுதான் என்ற கருத்தைத் தந்தது. அந்தக் குழப்பத்தினாற்தான் கம்பன் இன்றைக்குப் பிறந்து இருந்தாலும் காவியம் பாடாது நாவலே எழுதுவார் என்ற எண்ணத்தையும் தோற்றுவித்தது.

ஆனால் காவியமும் , நாவலும் ஒன்றல்ல இரண்டும் வேறு வேறான இலக்கிய வடிவங்கள். இதை உறுதிப்படுத்த இன்னும் பல்வேறு காரணங்களையும் திருஷ்டாந்தங்களையும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

◇◇◇◇◇◇


அலுவலகத்தில் அயர்ந்தால்



# பழம் மொழிகள்

-தா.பி சுப்பிரமணியம்-
*(மூத்த கலைஞர் விருது, ஆளுநர் விருது பெற்றவர்)*

நமது முன்னோரது அனுபவத்திலும், அறிவிலும் கனிந்த ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்த தமிழ்ச் சொற்றொடர்களே 'பழம் மொழிகள்' எனப்படும். அவை தமிழில் ஆயிரக்கணக்கில் உள்ளன. முன்னோர்கள் நமக்களித்த அருஞ்செல்வங்களில் இதுவும் ஒன்று எனக் கொள்ளலாம். இவை தமிழர் நாகரிகத்தின் சான்றுகளாகவும் தமிழரின் தொன்மையான நாகரீகச் சிறப்பிற்கும், அதன் செழுமைக்கும் சான்றுகளாக மிளிர்கின்றன. தமிழ் பழம் மொழிகள் பற்றி விரிவாக ஆய்வு செய்யப்படுதல் அவசியமாகும்.

நமது மூத்த பாட்டன் பாட்டிமார் தமக்கிடையே நடைபெறும் உரையாடல்களிலும் எமக்கு ஏதாவது செய்திகளைத் தரும் போதும் அடிக்கடி தேவை நோக்கி சரளமாக பழம் மொழிகளைப் பயன்படுத்துவதை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் கேட்டிருக்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் சொல்வது மட்டுந்தான் பழம் மொழிகள் என்ற சிந்தனை எங்களிடத்திலும் இருக்கத்தான் செய்கிறது. எப்படியிருப்பினும் அவ்வாறான பழம் மொழிகளை, அதன் சரியான கருத்துக்களை ஆராய்ந்தறிவது நமது பண்பாட்டுக் கருவூலங்களை இன்னும் ஆழமாக விளங்கிக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

பழம் மொழிகளை ஆராய்வதனால் இன்னுமொரு உண்மையை நாம் கண்டு கொள்ள முடியும். அதாவது பழந் தமிழுக்கும் தற்போது நம்மால் பேசப்படும் தமிழுக்கு வேறுபாடு இருப்பதை உணரலாம். கல்லாதவர் கற்றவர் ஆகிய இரு பிரிவினர்க்கும் பொதுவானதாக பழந்தமிழ் இருந்திருக்கின்றது.

தற்கால தமிழ் பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்டு பெரும்பாலும் செயற்கைத் தன்மை உடையதாகவே காணப்படுகின்றது என்று கூறலாம்.சுருக்கமாகக் கூறுவதாயின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தது பழந்தமிழ் என்றால் புலமைக்கு மதிப்பளிப்பது தற்காலத் தமிழ் என்றும் கூறலாம்.

இனி பழம் மொழிகள் என்றால் என்னவென்று பார்ப்போம். பழம் மொழிக்கு தொல்காப்பியர் இவ்வாறு வரைவிலக்கணம் கூறுகின்றார்.

நுண்மையுஞ் சுருக்கமு மொளியு முடையு
மென்மையு மொன்றினை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉ
மேது நுதலிய முதுமொழி யென்ப ' (பொரு.செய்யுள் 177 )

இதன் படி தொல்காப்பியர் பழம் மொழிக்கு ஏழு கூறுகள் இருத்தல் வெண்டும் என்கிறார்
1. நுண்மை 2 சுருக்கம் 3 .ஒளி 4. உடைமை 5 .எளிமை 6. குறித்த பொருளை முடித்தல்
7. ஏது நுதலும் (ஆதாரம்)

இதனைவிட வேறு வகையில் பழம் மொழிகளின் இயல்புகளை எடுத்துக்காட்டுவதானால் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1.. எளியோராலும் எடுத்துக்கூறக்கூடிய தன்மையைக் கொண்டிருத்தல்
2. எதுகையாகவோ,மோனையாகவோ அல்லது வேறுவகையினாலோ ஏதாவதொரு வகையில் ஓசை நயம் இருத்தல் வேண்டும்.
3. அதன் கருத்தை நேரடியாகத் தருதல் வேண்டும்
4. உண்மைகளாக,கண்ணால் காணத்தக்கவைகளாக இருத்தல் வேண்டும்
5. பழம் மொழி கூறும் கருத்து, பலவாறு அனுபவப்பட்டதாக இருத்தல் வேண்டும்
6. சுருக்கமான எளிய சொற்களால் அமைதல் வேண்டும்
7. உணர்வு பொங்க அமைதல் வேண்டும்.
8. அதில் வரும் ஒரு சொல்லை, அல்லது சொற்களை எடுத்து விட்டு வேறு சொல்லை அல்லது சொற்களை புகுத்திக் கொள்ளத்தக்கவாறு நெகிழ்ச்சி உடையதாக இருத்தல் வேண்டும்
9. பலரும் பயன்படுத்தி உலக வழக்காக அது ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.
10. தீர்மானமான நடை அல்லது அழுத்தமான நடை இருத்தல் வேண்டும்.
11. ஏதேனும்ஒரு நோக்கைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
12. பழமையானதாக இருத்தல் வேண்டும்

இவை போன்ற பண்புகளால் நிரம்பியதே பழம் மொழிகள் என்று நாம் கொள்ளலாம் பழம் மொழிகளை ஆராய்ந்தால், அவை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு கூறுகளாகக் காட்சியளிப்பதைக் காணலாம். எடுத்துக் காட்டாக:-

ஐந்திலே வளையாதது – ஐம்பதிலே வளையுமா?
அடுத்துக் கெடுப்பவன் கபடன்–தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை
உண்டு ருசி கண்டவனும் --பெண்டு ருசி கண்டவனும் விடான்
காத்திருந்தவன் பெண்டாட்டியை–நேத்து வந்தவன் கொண்டு போனான்
பழம் மொழிகள் எந்தக் குறிப்பிட்ட காலத்தில் எழுந்தது என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. பழம் மொழி என்னும் பண்புக்கு காலங் கூறுவது கடினம். ஆயினும் குறிப்பிட்ட சில பழம் மொழிகளுக்கு காலம் கூற முடியும்.

'குண்டு பட்டுச் சாகாதவன் வண்டு கடித்துச் செத்தானாம்'
இந்தப் பழம் மொழி , உலகில் வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னரே தோன்றியிருக்க வேண்டும்.இவ்வாறு சில பழம் மொழிகளுக்குக் காலம் கூறமுடியும். ஆனால் பெரும்பாலான பழம் மொழிகளுக்கு உரிய காலத்தைக் கூறுவதற்குரிய சான்றுகள் இல்லையென்றே கூறலாம்.

இனி, பழம் மொழிகள் சிலவற்றைப்பார்ப்போம்:-

கல்வி:-

1. இளமையில் கல்வி சிலையில் எழுத்து 2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
3. விளையும் பயிரை முளையில் தெரியும் 4. அடியாத மாடு படியாது
5. இறைத்த கிணறே ஊறும், இறையாத கிணறு நாறும்.

### மருத்துவம்

1. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
2. சுத்தம் சோறிடும் எச்சில் இரக்க வைக்கும்.
3. நொருங்கத் தின்றால் நூறு வயதிருப்பாய்
4... மருந்தாயினும் விருந்தோடு உண்.
5. மருந்தும் விருந்தும் மூன்று நாள்
6 சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை
7 மாதா ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டும்
8. போன சுரத்தை புளி விட்டு அழைக்காதே

### வாழ்வு முறை

1. அழையாத விருந்திற்குள் நுழையாதே
2. ஆழமறியாது காலை விடாதே
3. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு
4 ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
5. உண்மை சொல்லிக் கெட்டார் இல்லை

**நான்கு கோடிப் பாடலை இரண்டு வினாடியில் பாடிய ஔவையார்**

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீ ருண்ணீரென றுபசாரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைய நாக்
கோடாமை கோடி பெறும்

### இறைவனின் இரக்கம்

1. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்
2 அரகரா என்பது பெரிதோ ஆண்டிக்கு இடுவது பெரிதோ
3 உயிரைக் கொடுத்த சாமிக்கு மயிரைக் கொடு
4 எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத் தெய்வம் கேட்கும்
5 கொடுக்கின்ற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொடுக்கும்

### சேமிப்பு

1. அழகுக்கு அணியும் ஆபரணம் ஆபத்திற்கு உதவும்
2. அளகேசனானாலும அளவறிந்து செலவு செய்
3. எழுதி வாழாதான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்
4. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்
5. ஒரு காசு பேணின் இரு காசு தேறும்.

### தர்மம்

1. இட்டுக் கெட்டார் எவருமில்லை
2. இறைத்த கிணறு ஊறும் இறையாத கேணி நாறும்
3. உண்ணாச் சொத்து மண்ணாப் போகும்
4. எட்டிப் பழுத்தென்ன ஈயாதார் வாழுந்தென்ன?
5. தர்மம் தலை காக்கும்.

### பண வலிமை

1. ஈட்டி எட்டிய மட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்
2. பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்
3. பணம் பந்தியிலே குலம் குப்பையிலே

### விடா முயற்சி

1. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
2. அழுத பிள்ளை பால் குடிக்கும்
3. இருந்த கால் மூதேவி நடந்த கால் சீதேவி
4. குந்தித் தின்றால் குன்றும் மாளும்
5. பாடின்றி பட்டமில்லை
6. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

### தகாதவை

1. அற்ப ஆசை கோடி தரித்திரம்
2. அடாது செய்தவன் படாது படுவான்
3. ஆசை வெட்கமறியாது
4. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு
5. இன்றைக்கு இலையறுத்தவன் நாளைக்கு குலையறுப்பான்.

### ஒற்றுமை

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
2. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்

### காலம் தவறாமை

1. ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா?
2. கண்கெட்ட பின் சூரியநமஸ்காரமா?



### சிறியதையும் இகழாமை

1. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்
2. சிறு துளி பெரு வெள்ளம்
3. கடுகு சிறிது காரம் பெரிது

### அடக்கம் நன்று

1. துள்ளின மாடு பொதி சுமக்கும்
2. நிறை குடம் தளும்பாது.
3. பதறாத காரியம் சிதறாது

### பேராசை

1. பேராசை பெரும் தரித்திரம்

### வெளிவேஷம்

1. படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்
2. பார்த்தால் பசு பாய்ந்தால் புலி

### எதுகை


1. இக்கரைக்கு அக்கரை பச்சை
2. அச்சு இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
3. காட்டிலே செத்தாலும் வீட்டிலே தீட்டு
4. தாய் முகம் பார்க்கும் சேய் போல
5. தூர இருந்தால் சேர உறவு

### மோனை

1. ஆனைக்கும் அடி சறுக்கும்.
2. கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?
3. கை ஊன்றிக் கரணம் போடு
4. பெண் என்றால் பேயும் இரங்கும்.
5. மந்திரம் கால் மதி முக்கால்

### உவமை

1. அடியற்ற மரம் போல
2. ஆடி ஓய்ந்த பம்பரம் போல
3. இஞ்சி தின்ற குரங்கு போல
4. இரண்டு ஓடத்தில் கால் வைத்தது போல



**இயைபு**

1. அசைந்து தின்கிறது மாடு
அசையாமல் தின்கிறது வீடு

2. அள்ளாது குறையாது
இல்லாது புகையாது

3. ஆள் பாதி
ஆடை பாதி

4. ஆறு போவதே கிழக்கு
அரசன் சொல்வதே வழக்கு

## பிழையான கருத்து பழம் மொழிக்கு ஏற்படுமா?

தற்போது நம்மிடையே வழங்கி வரும் பழம் மொழிகளில் பல தவறான கருத்துடன் அல்லது ஏற்றுக் கொள்ளமுடியாத தன்மையுடன் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கலாம்.

ஒரு பழம் மொழி, ஆரம்பத்தில் ஒரு சிறிய குழுவிடமிருந்தே தோன்றியிருக்க வேண்டும். அ த  னை அவதானித்தவர்-கேட்டவர் தவறான அர்த்தத்தில் விளங்கிக் கொள்வாராயின் அவரால் பரப்பப்பட்ட தவறான வடிவத்திலேயே அப்பழம் மொழி நடைமுறையில் காணப்படுகிறது.இவ்வாறான கருத்தைத் திருத்தி அதன் முறையான கருத்தைப் பெற முயற்சித்த போதிலும், காலம் காலமாச் சொல்லப்பட்டு வரும் வடிவத்தையும், அதன் பொருளையும் தவறானது என்று கூறலாமா என்ற ஒரு மலைப்பு, காரணமாகச் சொல்லப்படுகிறது. அதேவேளை, இவ்வாறான தவறான கருத்து பல சந்தர்ப்பங்களில் சுற்றாடல் சூழ்நிலைகளில் பழம்மொழியைச் சரியாக்கக் காட்டி நிற்பது மற்றொரு காரணமாகும்.

### *தமிழர்களின் எழுதுகோல்*

பொது மக்கள் நலம் நாடிப் பொதுக் கருத்தைச் சொல்க !
புன் கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம் வந்தாலும்
அதற்கொப்ப வேண்டாமே! அந் தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை

*புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்*

'அவ்வாறான பழம் மொழிகள் சிலவற்றைப் பார்ப்போம்

**'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்'**

சாதாரண கிராமம் ஒன்றிற்குள் சண்டை நடந்தால்,மக்கள் இரு பிரிவுகளாக்கப்படுவர். இதனால் இடைநடுவில் கூத்தாடி இலாபமடைவான் என்றே பொருள் அறிகின்றோம்.

ஊர்-தொண்டை, இந்த அர்த்தத்தில் பார்க்கும்போது, தொண்டை இரண்டு பட்டால், சத்தம் ஓங்கி பெரிய அளவில் இருத்தல் கூத்தாடிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகளில் ஒன்றாக அக்காலத்தில் இருந்துள்ளது. ஒலிபெருக்கி வாய்ப்பற்ற அக்காலக் கூட்டத்தில் தொண்டைச் சத்தம் ( ஊர்) கணீரென்று இருந்தால் கூத்துப் பண்ணுகிறவர்களுக்கு மதிப்பாகும். ( கொண்டாட்டமாகும்) என்பதே சரியான கருத்தாகும்.

**'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்'**

பாம்பினைக் கண்டு படை நடுங்குமானால் அது எந்தப் படையாக இருக்கும்? படை-கம்பு ஈட்டி போன்ற கருவிகள், பாம்பைக் கண்டால் மனிதன் சும்மா இருக்கமாட்டான். உடனே செயல்படுவான். கம்பு தடி எதையென்றாலும் எடுப்பான். அதனை ஆட்டி அடிக்க முற்படுவான். அதாவது பாம்பைக் கண்டால் படையும் (ஆயுதமும் தடியும்) நடுங்கும். அப்படி இப்படி ஆடும் என்பதாகும்.

**'ஆகும் காலத்தில் ஆகும், போகும் காலத்தில் போகும்'**

விதிக் கொள்கையை வலியுறுத்தும் விதத்திலேயே இதன் விளக்கம் நம்மிடையே நிலவி வருகிறது. ஆவதும் போவதும் விளைச்சலைப் பற்றியே ஆகும். விளைச்சல் விளையும் (ஆகும்) காலம் ஒன்று இருக்கிறது. அதே போல் விளைச்சல் (போகும்) விற்பனைக்குச் செல்லும் காலம் ஒன்று இருக்கிறது.

**'கல்லைக் கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டால் கல்லைக் காணோம்'**

நமது நடைமுறையில் பல சந்தர்ப்பங்களில் நாயை அடிப்பதற்கு கல்லைத் தேடினால் கிடைப்பதில்லை.அதேவேளை கல்லுக் கிடைக்கும்போது அடிப்பதற்கு நாய் கிடைப்பதில்லை என்பது உண்மைதான்.ஆயினும் கலைக் கண்ணோட்டத்துடனான அர்த்தம் ஒன்றினையும் இப்பழம் மொழி விளக்குகின்றது என்பதையும் நாம் அவதானிக்கலாம்.

அதாவது, கல்லினால் செதுக்கப்பட்ட நாயின் உருவத்தை கலைக் கண்ணோட்டத்துடன் பாக்கும் ஒருவருக்கு அங்கே கல் தென்படுவதில்லை. மாறாக நாயே தென்படும். ஆனால் சாதாரணமாகப் பார்க்கும்போது அங்கே நாய் தென்படுவதில்லை, கல்தான் தென்படும் என்பதனையும் இப்பழம் மொழி விளக்குகின்றது.'

**'ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கலியாணத்தைத் செய்'**

இன்றைய காலகட்டத்தைப் போல் அல்லாமல் அக்காலத்தில் பாலியக் கல்யாணமே பெரும்பாலும் நிகழ்ந்துள்ளது. மேலும், இன்றைய மாதிரி 'இவர் இவ்வளவு சம்பாதிக்கின்றார். எனவே,இவ்வளவு சீதனம் தேவை' என்ற சிந்தனைக்கே இடம் இல்லாத அந்தக் காலகட்டத்தில் ஏன் பொய் சொல்லி கல்யாணத்தைக் கட்டவேண்டும்?

பொய்-அடுப்பு, கல்யாணம்-பொன் (நகை).இதன்படி ஒரு நகையைச் செய்வதற்கு குறைந்தது ஆயிரம் முறைகளாவது பொய்யில் (அடுப்பில்) வைத்து (சொல்லி) எடுக்க வேண்டும் என்பதே கருத்தாகும்.

**'ஆத்துல ஒரு கால் சேத்துல ஒரு கால்'**

ஓடுகின்ற ஆற்றில் ஒரு காலையும் சேற்றில் ஒரு காலையும் வைத்து இடர்ப்படுவதைக் குறிப்பதாக கருத்து நிலவுகிறது. கால்-துணிவு, ஆத்துல-ஆற்றுதல் ,சேத்துல-சேர்ப்பது ஆற்றில் ஒரு காலும் ( பிறர் துன்பத்தை ஆற்றுவதற்காக ஒரு பங்கும்) சேற்றில் ஒரு காலும் (நமக்காகச் சேர்ப்பதற்காக ஒரு பங்கும்) வைத்துக் கொள்.

**'இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவான்'**

ஒருவனுக்கு இருக்க இடம் சிறிது கொடுத்தால் அவன் சிறிது சிறிதாக அந்த இடத்தையே பிடித்துக் கொள்வான் என்பதே தற்போதைய வழக்கு. மடம்--மடமை (அறியாமை) இதன்படி பார்த்தால்,பொதுவாக சிலருக்கு அறியாமைத் தன்மை இருக்கிறது. என்பதை நாம் அறிவோம் இது எதனால்? அவனுக்கு அதற்குரிய விடயங்களைச் சொல்லித்தர ஆளில்லாமலேயே காரணமாகும். எனவே இடம் (வாய்ப்பு) கொடுத்தால் அவன் தன்னிடத்தில் உள்ள மடத்தை (அறியாமையைப்) பிடுங்கிக் (நீக்கிக்) கொள்வான்.

**'ஏழை சொல் அம்பலம் ஏறாது'**

வறுமையாளனின் பேச்சு பெரிய சபைகளில் எடுபடாது என்பதே தற்போதைய கருத்து. ஏழை-கெடுதி, ஏழைசொல் – கெட்ட சொல் (தீய சொல்). நல்ல சொல்தானே அம்பலம் ஏறவேண்டும். எனவே, ஏழை சொல் (தீய சொல்) அம்பலம் ஏறாது (ஏறவே கூடாது).

**'கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்'**

எதற்கேனும் நீதி தேவைப்படுமானால் சண்டை ஏற்பட வேண்டும். அதன் பின்னே நியாயம் பிறக்கும் என்பதே தற்போதைய வழக்காகும். கலகம்--கலத்தல் ( இரு பக்க வாதமும் கலப்பது). நியாயம் பிறக்க வேண்டுமானால், வழக்குத் தொடர்பவரின் கருத்தையும், தொடுக்கப்பட்டவரின் கருத்தையும் நன்றாகக்கேட்டு அறிதல் வேண்டும். இவ்வாறு இரு சாராரையும் கலத்தலே ( கலகம் பிறந்தாலே) நியாயத்திற்கு வழி வகுக்கும்.



**கற்காலமும் தற்காலமும்**

**'களவும் கற்று மற'**

திருட்டாக இருந்தாலும் அதையும் கற்று பிறகு மறந்து விடு என்பதே தற்போதைய கருத்து. எதையும் கற்றுக் கொள் என்பதே பெரியோர் வாக்கு. சரி.பரவாயில்லை. களவையும் கற்றுக் கொள், பிறகு மறந்து விடு என்று கூறியிருப்பார்களா? நிச்சயமாக இருக்காது. "களவும் கற்று மறை" என்பதே சரியான பழம் மொழி. (களவு–மறைவு, மறைப்பு.)

வாழ்க்கையில் அகத்திலும் புறத்திலும் மறைவு தேவை. குடும்பத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளில் சில மறைத்து வைக்கப்பட வேண்டியன. இது அகநிலை. வீடு கட்டும்போது நித்திரை கொள்ளும் அறை சிறிது மறைவாக இருப்பது நல்லது.இது புறநிலை. இந்த இருநிலை மறைவுகளையே பழம்மொழி வற்புறுத்துகிறது.

**'பழைய குருடி கதவைத் திறடி'**

ஏதோ வயதான குருட்டு கிழவி கதவைத் திறந்து விடுவது என்பதே நமக்குக் கொடுக்கப்பட்ட கருத்து (மீண்டும் ஒரு பிழையான காரியத்தைச் செய்வதையும் இது விளக்கும்)

பழைய குருடி–பிறவிக் குருடி , கதவு–அசைவு, கதவத்து–அசைவு இல்லாதது, இருடி – இருப்பாயாக.

பிறவியிலேயே கண் பார்வை அற்றவளே, நீ அசைவற்று இருந்த இடத்திலேயே இருப்பாயாக என்பதே சரியான கருத்து.

**'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'**(அகம்–வீடு , முகம்–முகப்பு.)

ஒரு வீட்டின் அழகு அந்த வீட்டின் முகப்பைப் பார்த்ததுமே ((முகப்பிலேயே) தெரியும். உள் அழகினைப் பெரும்பாலும் விளங்கிக் கொள்ளலாம்

**'அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான்'**

சிறு குழந்தைகளை அடித்து வளர்க்க வேண்டும் அல்லது தேவையற்ற சண்டைகளுக்கு நல்ல அடி கொடுத்தால் சரி வரும் என்பதே வழக்கிலிருக்கிறது.

அடி–உழவு, மாடு அடித்தல் என்பதை மாடு உழுதல் என்று கூறுவதும் உண்டு.

உழவின் பெருமையைக் கூற வந்த பழமொழிகளில் இதுவும் ஒன்று. உழவுதான் பழம் நாளில் பெரும் சொத்து என்பது யாவருக்கும் தெரிந்ததே. அதனைச் சரியாகப் பேணிக்கொண்டால், அதுவே அவனுக்கு உதவும். அண்ணன் தம்பி எல்லாம் உதவுவது பிறகுதான்.

**'அடிக்கிற கைதான் அணைக்கும்'**

அடிக்கிற கை–உழுகிற கை,அணைத்தல்–வரப்பு அணைத்தல்.அடிக்கிற கைதான் (உழுகிற கைதான்) அணைக்கும்.

**'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே**

பந்தி–ஒழுங்கு, குணம்– குடம்

பணத்தை எப்பொழுதும் ஒழுங்காக வைத்திருத்தல் வேண்டும். அதேபோல் குடம் எப்போதும் மேட்டில்தான் வைக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அது உடைந்து விட உருண்டு விட வாய்ப்பு உண்டு.

**'கண்டது கற்க பண்டிதன் ஆவான்.'**

கண்டதையும் படித்தால் அவன் நாளடைவில் பண்டிதன் ஆகிவிடுவான் என்பது தற்போதைய நடைமுறைக் கருத்தாகும். கண்டது – நம் முன்னோர்கள் அறிவாற்றல்களால் கண்ட உண்மைகள். பண்டிதன்– திறமை மிகுந்தவன்.

தனக்கு முந்திய அறிஞர்கள் அந்தத் துறையில் ஆய்ந்து கண்ட உண்மைகள் நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. அவற்றைப் பற்றி அறிதலே பண்டிதன் ஆவதற்கு ஏதுவாக இருக்கும்.

**'வீட்டைக் கட்டிப் பார். கல்யாணத்தைப் பண்ணிப் பார்'**

வீடு கட்டுதலும், திருமணம் செய்தலும் துன்பமான அல்லது கஷ்டத்தில் ஆழ்த்தும் செயல் என்பதே இப்போது வழங்கும் கருத்தாகும். வீடு கட்டினால் அது ஒரு அழகு. அதே போல் தனது மகன் அல்லது மகளை திருமணக் கோலத்தில் பார்ப்பதில் காணும் அழகு, இன்பம். வேறு எதனில் கிட்டும்? இவையிரண்டும் மனதிற்கு நிம்மதியைத் தரும் அழகுச் செயல்களாகும் என்பதே பொருள்.

**'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'**

ஆல்-ஆல மரம் , வேல் – வேப்ப மரம். இவற்றின் குச்சிகளால் துலக்குவது பற்களுக்கு உறுதி தரும் செய்திதான். சொல்லுக்கு நாலும் (நாலடியார்) இரண்டும் (திருக்குறள்) என்றே கருத்து நிலவுகிறது.இதன்படி பார்த்தால் தமிழில் காணப்படும் ஏனைய இலக்கியங்கள் சொல்லுக்கு உறுதி தராது என்று கூறிவிடமுடியுமா?

நாலும்– நாக்கு, சொல்லைச் சரியாக உச்சரிக்க நமக்கு 'நாக்கு' எந்தளவு அவசியம் என்பது அனைவருக்கும் தெரியும்.

இரண்டு –இரண்டு வரிசைகளாக அமைந்துள்ள பற்கள். சொல்லுக்கு பற்கள் எத்தனை அவசியம் என்பதை பல்லுப்போன வயதானவர்களைப் பார்க்கும்போதே நாம் உணர்ந்து கொள்கிறோம்.

பல்லுக்கு உறுதியான இரு மரங்களைக் குறிப்பிட்டனர். இரண்டும் புழங்கக்கூடிய பொருட்கள், அறிவோடு தொடர்பற்றவை. அதே போன்றே மீதி இரு பொருள்களாக நாக்கையும் பல்லையும் பழம் மொழியில் கூறியுள்ளனர் என்றே நாம் கொள்ளுதல் வேண்டும்.

**'பாடை ஏறிடினும் ஏடதைக் கைவிடேல்'**

பாடை--- பிணம் தூக்கும் பாடை ( இறப்பு )

செத்துப் பாடையில் நீ போகும்போதும் நீ படித்த ஏட்டைக் (சுவடியை) கைவிடாதே என்பது பழம் மொழியின் கருத்தாகும்.சுவடியைக் கைவிடாது, படிக்கும் பழக்கத்தை இறுதி வரை கைக்கொள் என்றே கருத்து இருத்தல் வேண்டும் என்றும் ஒரு சாரார் கருத்துச் சொல்வர்.

ஆனால் பாடமேறியும் ஏடதைக் கைவிடேல் என்ற வகையில் பார்க்கும்போது மிகப் பொருத்தமாக அமைவதைக் காணலாம். பாடம் ஏறுதல் – பாடம் மனப்பாடமாக நெஞ்சில் பதிய வைத்தல் படித்த பாடம் நன்றாக மனப்பாடம் ஆனாலும், சில சந்தேகங்கள் பின்பு ஏற்படும்போது, அல்லது வேறு பாடங்கள் புதிதாகக் கற்கும்போது முன்பு கற்ற பாடம் மறக்கும் நிலையும் ஏற்படலாம். இப்போது ஏற்கனவே படித்த சுவடி கையில் இருந்தால், மீண்டும் ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொள்ளலாமே. எனவே 'பாடமேறியும் ஏடது கைவிடேல்' என்பதே சரியாகும்.

## வீரமாமுனிவர் கையாண்ட பழம் மொழிகள்

கத்தோலிக்க குருவான வீரமாமுனிவர் ( பெஸ்கி சுவாமியார்) மத போதனைக்காக தமிழை உரிய முறையில் கற்று தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், சதுரகராதி திருக்குறள் தமிழ் உரை போன்றவற்றைத் தந்தமை தமிழ் நெஞ்சங்களால் மறக்கக்கூடாத காரியமாகும்.

வீரமாமுனிவர் தனது ' பரமார்த்த குருவும் சீஷர்களும் ' என்ற உரைநடைக் கதை நூலில் பல பழமொழிகளைக் காட்டுகிறார். நதி உப்பைத் திண்ட கதை என்ற பகுதியில் ' தோலிருக்கச் சுளை விழுங்கி போல்' என்று குறிப்பிடுவது போல், ' மட்டியும் மடையனும் குதிரைமுட்டை வாங்கிய விநோதம் ' என்ற பகுதியில் ஒரே பந்தியில் ஏழு பழம் மொழிகளை காட்டுவது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுக்குறிப்பு: –

## ஊர்காவற்றுறைக் கடற்கோட்டை

ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள கடற்கோட்டை இயற்கை அரண்களை உடைய ஒரு கோட்டை. இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு அருகில் உள்ள காரைநகருக்குத் தென் கிழக்கிலும், எழுவைத்திவு அனலைத்தீவு என்பவற்றிற்கு வட கிழக்கிலும் அமைந்துள்ள தீவும் குறிப்பாக அதன் மேற்குப் பகுதியில் உள்ள துறைமுகம் சார்ந்த பகுதியும் ஊர்காவற்துறை என அழைக்கப்படுகின்றது. யாழ்ப்பாண நகருக்கான கடல் வழிப் பாதையிலே காரைநகரும் ஊர்காவற்றுறையும் அமைந்திருப்பதால் அவை புராதன காலத்தில் இருந்தே கேந்திர முக்கியத்துவம் கொண்ட இடங்களாகக் கருதப்பட்டு வந்தன.

17 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராட்சியத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்றியதும் ஊர்காவற்துறை அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. கி.பி 1658 இல் யாழ்ப்பாண இராட்சியத்தின் பகுதிகள் யாவும் ஒல்லாந்தர் வசமாகின. அவர்களே ஊர்காவற்துறைக்கு "கைற்ஸ்"*(KAYTS)* என்ற பெயரைச் சூட்டினர். அவர்கள் தமது கடல் போக்குவரத்து பாதுகாப்பு என்பவற்றுக்காக ஊர்காவற்றுறை துறைமுகத்திற்குச் சமீபமாக ஒரு சிறிய கோட்டையினை அமைத்து அதற்கு ஹம்மென்சீல் எனப் பெயரிட்டனர். இதுவே கடல் கோட்டை எனப்படுகின்றது. இது நான்கு புறமும் கடலால் சூழப்பட்டு இன்று இலங்கைக் கடற்படையினரால் பயன்படுத்தப்படுகின்றது.

**அதற்கு மடையன்** ' இதில ஆலோசனை ஏன்? பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் என்று சொல்வதைக் **கேட்கவில்லை**யா? நமது குரு உள்ளபடியே புண்ணிய ஆத்துமா என்பது அவருக்கு இப்பொழுது கிடைத்த **குதிரையினள**விலேயே ' உள்ளங்கை நெல்லிக்கனி ' போல் தெரிகிறது. இன்னுமொரு திருஷ்டாந்தம் என் **தகப்பன்**தான் பரம யோக்கியன் என்றும் யோகசாலி என்றும் தனக்கு நான் 'கிருஷ்ண விக்கிரகம் போல் **பிள்ளை**யாய்ப் பிறந்ததினாலல்லவோ தெளிவாகக் கண்டு பெரு மகிழ்ச்சி கூர்ந்தான்' என்று சொல்ல, மட்டி 'அதைக் குறித்தும் சந்தேகமா? விரையொன்று போடச் சுரையொன்று காய்க்குமா? ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா? நல்வினை நன்மையைத்தான் தரும். தீவினை தீமையைத்தான் தரும். நன்மை விதைத்தால் நன்மை விளையும். தீமை விதைத்தால் தீமை விளையும், நன்மையும் தீமையும் பின்வரக் காரணலாம்' என்று கூறுகிறான்.

மேலும் அவன் கூறும் பழம்மொழிகள் ' கூண்டோடு போயிற்று குளிரும் காய்ச்சலும்' ,கொடாக்கண்டனும் விடாக் கண்டனும் சேர்ந்தது போல' ' ஆசன சீதம் சீவன நாசம்'.


இவ்வாறாக நமது முன்னோர்கள் நமக்களித்த அரும் பெரும் செல்வங்களில் ஒன்றான பழம் மொழிகளைப்பற்றி நன்கு ஆராய்ந்து அதன் ஆரம்ப காலத்தில் அது தோன்றியபோது நிலவிய உண்மையான கருத்தினை வெளிக் கொணர்ந்து மக்களுக்குத் தருவது கல்வியியலாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரின் கடமையாகும்

## ஏடு தொடக்குதல்

கல்வி கற்கும் பருவத்தையடைந்த சிறுவர்களுக்கு குரு மூலமாக நல்ல நேரத்தில் கல்வி தொடக்குதலையே ஏடு தொடக்குதல் என்பர். சைவ சமயத்தில் இது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது. இதனை வித்தியாரம்பம் என்பர்.இலங்கையில் உள்ள சகல தமிழ் பாடசாலைகளிலும் இன மத வேறுபாடுகள் இன்றிக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வரும் கலைமகள் விழா எனப்படும். நவராத்திரி விழா புரட்டாதி மாதத்தில் நடைபெறும். அவ் விழாவின் இறுதியில் இந் நிகழ்ச்சி இடம் பெறும். இக் காலத்தை தெரிவு செய்வதற்கானகாரணம் வருமாறு:-

சூரியன் கன்னிராசியில் நுழையும் காலம் புரட்டாதி மாதமாகும். அப்போது உலகில் உள்ள சக்திகள் எல்லாம் விருத்தியடைகின்றன. அதாவது புரட்டாதி மாதத்தில் சூரிய கிரகணங்களின் பயனும் பூமியில் உள்ள பலவித பௌதிக சக்திகளும் சம்பந்தப்படுவதால் எல்லாப் பொருட்களும் விருத்தியடைய ஆரம்பிக்கப்படுகின்றன.

சூரியன் கன்னிராசியில் நுழையும் காலம் என்பது ஆன்மாவுக்குரிய – சூரிய புத்திக்குரிய புதன் வீடாகிய கன்னியில் இருக்கும் காலமாகும். அதனாலேயே அக் காலமாகிய புரட்டாதி மாதத்தில் பிள்ளைகளுக்கு 'ஏடு தொடக்குதல்' ஏற்றதாகக் கருதப்படுகிறது.



# குழந்தையின் உடல் உள மேம்பாட்டில் நாட்டார் பாடல்கள்

*செ. மெற்றாஸ் மயில்*

நவீன உலகில் நவீன கண்டுபிடிப்புக்கள், நவீன சிந்தனைகள், நவீன வாழ்க்கை முறைகள் உருவாகிய இன்றைய காலத்தில் வாழுகின்ற மனித இனத்திற்கு, நவீன நோய்களும், புதிய மருந்துகளும் ஆட்கொண்டுள்ள வேளையில், புராதன காலத்தில் எம் முன்னோர்கள் நோயற்ற வாழக்கையுடன், நீண்ட ஆயுளையும் கொண்ட பூரண மனிதர்களாக வாழ்ந்ததற்குரிய இரகசியங்கள் இல்லாமல் இல்லை. அதற்கு அவர்களின் கிராமிய வாழ்க்கை முறை தான் காரணமென அச்சொட்டாகக் கூறலாம். அவர்களின் கிராமிய வாழக்கை முறையில் நாட்டார் பாடலானது குழந்தை வளர்ந்து பருவமடையும் காலங்களில் பெறும் உடல், உள மேம்பாடு முக்கியமானது. அம்மேம்பாட்டின் மூலம், பண்பாடான உள வளர்ச்சி மிகுந்த, நோயற்ற உடல் வளர்ச்சி பெற்ற, பூரண சுகமுடைய பிரசைகள் அக்காலச் சமூகத்தில் உருவாகியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

கிராமத்தவர் ஆட்டமும் பாட்டமும் இசையோடு சேர்ந்து தெம்மாங்கு பாடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இதனால் கிராமத்தோறும் கிராமத்துப்பாடல்கள் தோன்றின. உழுதல், விதைத்தல், களைபிடுங்கல், அருவி வெட்டுதல், உப்பட்டி கட்டுதல், சூடடித்தல், நெல்குற்றுதல், வண்டியோட்டுதல், மரமரிதல், படகு ஓட்டுதல், மீன்பிடித்தல் முதலிய பல்வேறு தொழில்களை களைப்பின்றி, அலுப்பின்றி செய்ய கிராமத்து இலக்கியங்கள்தோன்றின.இன்னும் இளைப்பாறும் நேரங்களில், வருடப்பிறப்புக் காலங்களில், கோயில் திருவிழாக் காலங்களில் இடம்பெறும் ஊஞ்சலாடல், பல்வகை விளையாட்டுக்கள், கரகம், காவடி போன்ற கிராமத்துக் கலைகளுக்கு கிராமத்துப் பாடல்கள் தோன்றின. இவற்றை விட குழந்தை பிறந்ததிலிருந்து இறப்பு வரையும் உள்ள ஒவ்வொரு பருவத்திலும் இடம்பெறும் நிகழ்வுகளுக்கும் பாடல்கள் தோன்றின. இந்த வகையில், குழந்தை பிறந்து விளையாட்டுப் பருவத்தை அடையும் வரையிலான நாட்டார் பாடல்கள் அவர்களின் மேம்பாட்டுக்கு எந்தளவு உதவுகிறது என்பதனை நோக்குவதே எனது முக்கிய நோக்கமாகும்.

தாய் தன்குழந்தையைத்தாலாட்ட எடுத்த முதல் நிகழ்வே குழ்ந்தை இலக்கியமாகிறது. எந்த கருவூலம் குழந்தையின் கருத்தையும் உள்ளத்தையும் கவருகிறதோ அதுவே குழந்தை இலக்கியமாக பரிணமித்தது.இதில் தாலாட்டு முதல் இடத்தைப் பெறுகிறது. ஆது உலகெங்கினும் ஓர் உள்ளத்தின் பாசவுணர்வில் ஊற்றெடுக்கும் ஒரு ஜீவ நதியாக விளங்குகிறது.அதில் தாயும் சேயும் சங்கமமாகின்றனர்.

ஓசையுணர்வை உணர்த்துவது செவிப்புலனாகும். இப்புலனுணர்வு, இளமையிலேயே செவ்வையாக ஊட்டி வளர்க்கப் பெறுதல் வேண்டும். இது உடல், உள விருத்தியிற் பெரும் பங்கினைப் பெறுவதால், அது செம்மையாகப் பேணப் பெறுதலும் வேண்டும். குறிப்பாக, குழந்தையின் விடயத்தில் இவ்வுணர்வை மிகவும் கவனமாகவும் கரிசனையாகவும் கட்டிக் காக்கப்படல் வேண்டும்.ஏனெனில் குழந்தையின் உடல், உள வளர்ச்சியிற் செவியுணர்வு கூடிய தாக்கத்தை உண்டு பண்ணுகிறது என்பதனாலாகும். குழந்தையின் வயது, பருவம் முதிரச்சிக்கு ஏற்ப, அதன் தூண்டற்பேறுகளும், இயல்பூக்கங்களும்வெளிப்படும். அந்த

வகையில் குழந்தையின் மணப்பதிவுக்கும், மனவிருத்திக்கும் முதற்கண் உறுதுணையாக நிற்பது குழந்தைப் பாடலேயாம். அதிலும் 'தாலாட்டு'ப் பாடலே குழந்தைக்கு முதன்முதலில் தன்தாய் மூலம் அறிமுகமாகும் ஒரு சிறந்த கருவூலமாம் என்றார் நம்நாட்டு அறிஞர் ஒருவர்.

குழந்தை பிறந்தவுடன் "குவா!... குவா!..." என்ற இசை ஓசை, எழுப்புகின்றது. அதற்குப் பதிலாக குழந்தையின் தாய் கொடுக்கும் இசையில் தன்வசப்பட்ட குழந்தை அமைதியாகி தூங்குகின்றது. குழந்தையின் மெதுமையான உள்ளத்தில் தொடும்படியாக, தாலாட்டில் பொருளோடு சேர்ந்த தாயின் இனிமையான இசை ஓசை குழந்தையின் செவியினூடாக ஊடுருவுகிறது. இசைக்கு அடிமை கொள்ளாதவர்கள் யாவருளர்? தாலாட்டின் இசையின்பத்திலே குழந்தை எல்லாவற்றையும் மறந்து கண்ணுறங்குகிறது. இத்தாலாட்டானது குழந்தைகளின் மெதுமையான இதயங்களைச் சுண்டி இழுத்து அவர்களை ஆனந்தக் களிப்பில் ஆற்றுப்படுத்துகின்றது. தாயின் பசுமையான நினைவுகளும், பக்குவமான கற்பனைச் சுவையும், எதுகைமோனை சேராத கவிச்சுவையும், பாசத்தை வளர்க்கும் பாங்கான அழகும் கொண்ட பாடல்கள் குழந்தையின் உள்ளத்தில் தூய்மையான சிந்தனையை வளர்க்க உதவுகின்றன.

"ஆராரோ... ஆரிவரோ
ஓரொரோ.. ஓரகண்டே
ஆரா...ரார-ராராரோ
ஆராரோ...ஆராரோ...ஆரிரரோ"

ஏன ஆரம்பிக்கும் தாலாட்டின் மூலம் பிள்ளையை அழைக்கின்ற பண்பான சில வார்த்தைகள் அக் குழந்தையைக் கழிப்பூட்டக்கூடியதாகவும் குழந்தையின் மனக்கருவில் சந்தோஷத்தைஏற்படுத்தி தாய், சேய் பாச உணர்வை தூண்டும் சக்தியாகவும் விளங்குகின்றது.

( உ-ம்)

என் கண்ணே! என் கண்மணியே! பூவே! பூமலரே!
சந்தனப்பூமேனியரே! செல்வமகனே! கற்பகமே!
பொன்னே பொக்கிஷமே பொன்மகளே
மானே! மயிலே! வளர்பிறையே! வாடாத
பூவே! மானீன்ற கன்றே தேடாத திரவியமே
மயில் பொரிச்ச நற்குஞ்சே

இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம்.இப்படியான முன்னிலைப் பெயர்களின் பொருளை. விழிப்பை குழந்தை அறிய,அறிய தானும் சிறந்த பண்பான குழந்தையாக ஆவதற்கும் தாலாட்டு மூலவேராகவிருக்கிறது. குழந்தை ஓரளவு வளாந்த பின் ஆனால் நடக்க முடியாத பருவத்திற்கு முன்பாக, தவழும் பருவத்தில் அக்குழந்தையை சந்தோஷப்படுத்துவதற்காக பல விளையாட்டுக்களை நாட்டார் பாடலுடன் தாய் சொல்லிக் கொடுப்பாள். தாயின் பாட்டுக்கு குழந்தை சில அசைவுகளையும் காட்டிக் கொடுப்பாள். இந்நிகழ்வே நாட்டார் பாடல்களில் அதிமுக்கியமான குழந்தையின் உடல்,உள வளர்ச்சிக்கு பெரும் பங்கை வகிக்கின்றது

இது எந்தத் தாயும் தெரிந்து கொண்டு விளையாட்டாக நாட்டார் பாடலைப் பாடியதாக எந்த ஆய்வுகளும் கூறியதாக இல்லை. ஆனால் அவள் பாடுகின்ற நாட்டார் பாடலின் ஊடாக அவளுக்குத் தெரியாமலே குழந்தை உடல்-உள பயிற்சியைப் பெறுகிறது எனத் திடமாகக் கூறலாம். ஆது எவ்வாறு எனப் பார்க்கலாம்.

பிள்ளை சிரித்து விளையாடும்போது தாய் சகோதரர்கள்,தந்தை, பாட்டன், பாட்டி. ஆகியோர் பிள்ளையுடன் சேந்து செல்லங் கொஞ்சுவார்கள். பிள்ளை சாய்ந்தாடும், தலையசைக்கும், கைகொட்டும், சந்தோஷத்தால் மனம் சிரிக்கும். ' தலையாட்டி வந்தான் தலையாட்டி' என்று பாட குழந்தை தலையை ஆட்டி விளையாடும். ஆப்பொழுது தலைப் பயிற்சி பெறுவதை அவதானிக்க முடிகிறது.

சாய்ந்தடம்மா சாய்ந்தாடு' என்ற பாடலையும் 'ஆனை ஆடுவான் தம்பி ஆனை ஆடுவான்' என்ற பாடலையும் பாடும்போது குழந்தை காலை மடித்து இருந்து விளையாடிக் கொண்டு இடுப்புக்கு மேற்புறத்தே உள்ள பகுதி முழுவதையும் அசைத்து இசை ஓசைக்கேற்ப சாய்ந்தாடும். தாயின் கனிவான ஓசைமிகுந்த இசையும் குழந்தையை மனமகிழக்கூடிய நிலையில், முன்னிலைப் பெயர்களினால் குழந்தையை விழித்துப் பாடுவதினாலும் சாய்தாடும்போது களைப்பின்றி சிரித்துக் கொண்டு விளையாடும்.இதனால் உள்ளத்தில் ஏற்படும் குதூகலம் மனவளர்ச்சிக்கு உந்து சக்தியாகவும் சாய்ந்தாடும்போது ஏற்படும் உடற்பயிற்சி, உடல் வளர்ச்சிக்கும் உந்து சக்தியாகவும் இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு பலவிதமான பாடல்கள் மூலம் குழந்தை தவழும் பிராயத்தில் நாட்டார் பாடலூடாக உடல், உள மேம்பாட்டினைப் பெறுகிறது.ஆனால் இப்பாடலை பாடும்போது அக்குழந்தையின் அசைவை ரசிக்கும் நோக்குடனேயெ பாடப்பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தை நடக்க ஓடி விளையாடக்கூடிய பருவத்தை அடைந்தவுடன் விளையாட்டிற்கான நாட்டார் பாடல்கள் பெருவாரியாகவுள்ளன.ஒவ்வொரு பாடல்களுடனும் தொடர்பான விளையாட்டுக்கள் உடலிலுள்ள சகல அங்கங்களுக்கும் பயிற்சி கொடுக்கக் கூடியனவாகவே உள்ளன.பாடசாலைகளில் சென்று பயிற்சி வகுப்பு நடத்தி குறியீடு சொல்லி பயிற்சி வழங்குவது அக்காலத்தில் இல்லை. திண்ணைப் பாடசாலைகளில் கல்விபயின்றவர்களுக்கு ஏது உடற்பயிற்சி வகுப்புக்கள் இருக்கும். எப்பொழுது கிராமிய வாழ்க்கை முறைகள் அருகி சிதையத் தொடங்கியதோ அதன் பின்புதான் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை பாடசாலையில் பாடங்களாக வகுத்து கற்பிக்க வேண்டிய அவசிய மேற்பட்டது. இவ்வவசியம் ஏற்படுவதற்கு முன்பு கிராமிய வாழ்க்கை முறையோடு உடல்-உள வளர்ச்சிக்கு தேவையான கூறுகள் கலந்து காணப்பட்டன.

கிராமத்துச் சுழலில் பூத்துக்குலுங்கும் பூக்களையும், காய்களையும், கனிகளையும், பாடிப் பறக்கும் பறவைகளையும், ஓடித்திரியும் மிருகங்களையும், உலவித்திரியும் பிராணிகளையும், ஓங்கி நிற்கும் மரங்களையும், மலைகளையும், சுனைகளையும் ரசித்துப் பாடிய பாடல்களாகவே நாட்டார் பாடல்கள் மிளிர்கின்றன. இப்பாடல்களில் குழந்தைகளின் விளையாட்டின் தன்மைக்கேற்ப பாட்டின் ஓசையுடன் விளையாடிய குழந்தைகள் களைப்பின்றி நீண்ட நேரம் விளையாடினர். இப்பருவத்துக்கான விளையாட்டுக்கள் பலவுள்ளன. அவற்றில் பூப்பறித்தல், பூமதித்தல், கண்பொத்தி விளையாடுதல்,கலியாணம் பேசுதல், புள்ளிப்பீங்கான்,மட்டைக்குடில் கட்டி விளையாடல், மாஸ் கொட்டை தெத்துதல், பறவை விளையாடல், கண்ணாமூச்சி கங்காம்புளம்,கீச்சுக் கீச்சுத் தம்பலம்,ஊசாவாசா, பொறுக்கி விளையாடல்,, அப்படா விளையாட்டு, கிட்டியடித்தல் என்பன குழந்தைப் பருவத்துக்குரிய விளையாட்டுக்களாகும்.

இந்த விளையாட்டு ஒவ்வொன்றுக்கும் பாட்டுக்கள் உள்ளன.உதாரணமாக ஒரு சில விளையாட்டுக்களை நோக்குவோம்.குழந்தைகள் வட்டமாக நின்று துள்ளிக்குதித்துக் கொண்டு பின்வருமாறு பாடுவார்கள்,

“மூசா மூசாப் பள்ளியிலே
முப்பத்திரண்டு தென்னமரம்
காய்க்கும் பூக்கும் கலகலக்கும்
காக்கா நிக்காரு கொப்பிலே”

இதனால் வியர்வை சிந்துமளவுக்கு உடற்பயிற்சி பெறுவர். அத்துடன் பாட்டுக்களைப் பாடுகின்ற, சொற்களை உச்சரிக்கின்ற பயிற்சியையும் பெறுவர்.

குழந்தைகள் வட்டமாகத் தரையில் குந்திக் கொண்டிருப்பார்கள். அப்பொழுது ஒரு குழந்தை தன்கையில் ஒரு கொத்தை வைத்துக் கொண்டு குந்தி இருக்கும். குழந்தைகளைச் (சில இடங்களில் திரியைப் வைத்திருக்கும் ) சுற்றி வட்டமாக ஒடுவார். ஓடும் போது பாடும் பாடல்,

“கொத்திருக்கோ கொத்து
என்ன கொத்து
ஆலிங்கொத்து
போட்டுட்டுப் போங்க”

இவ்வாறு கேள்வியும் பதிலுமாக பாட, குந்தியிருக்கும் குழந்தைகளில் ஏவராவது ஒன்றுக்குப் பின்னால், கொத்தை வைத்து இருக்கும் குழந்தை வைத்துவிட்டு ஓடி இருக்கும். பின்பு கொத்து வைத்திருக்கும் குழந்தை திரும்ப ஓடிச் சுற்றுவார். இவ்வாறு ஒவ்வொருவரும் ஓடுவர். இது ஓட்டப்பயிற்சிக்கு மிகவும் சிறந்த விளையாட்டாகும்.

இரும்புக் கோட்டம் உடைத்தல் விளையாட்டு சிறுவர்களுக்கு உகந்த விளையாட்டாகும். சிறுவர்கள் சுற்றி வட்டமாக நிற்பார்கள். வட்டத்திற்கு உள்ளே ஒருவரும் வெளியே ஒருவரும் நிற்பார்கள் வெளியே உள்ளவர் உள்ளே நிற்பவரைப் பிடிக்க வேண்டி பின்வரும் பாடலை பாடி ஓடி சுற்றி வருவார்.

சங்கிலி புங்கிலி கதவத்தொர
ஏன்மாற்றேன் தேங்காப்புலி
பசுமாட்டைக் கண்டியா
இல்லை
ஓ..... ஓ..... எங்கே
வீட்டுக்குள்ளே
ஓடைக்கேலுமா ? ஓடைக்கேலாது
என்னவேலி இரும்புவேலி

அத்துடன் பலவந்தமாக உடைத்து உள்ளே நிற்பவரை துரத்தி ஓடிப்போய் பிடிக்க வேண்டும். இவ்விளையாட்டுப் போன்றதே “பசுவும் - புலியும்” விளையாட்டு. இவ்விளையாட்டின் மூலமும் குழந்தைகளுக்கு நல்ல ஓட்டப்பயிற்சி தேகப்பயிற்சி போன்றவை கிடைக்கின்றன.

குழந்தைகள், பறவைகள் போன்று கையை அசைத்து பாடி விளையாடுவார்கள் தரையில் அமர்ந்து கொண்டு தங்கள் கரங்களைப் பறவைகள் சிறகுகளை ஆட்டிப் பறப்பது போல் ஆட்டி ஆட்டிப் பாடுவார்கள் பாடும் பாடலானது,

ஆலாப்பற –பற
ஆழகு பற–பற
கோழியே பற–பற
கொக்கே–பற
குருவியே பற பற

வேறுமுறையிலும் பாடல்கள் உண்டு. இவ்வாறு கையசைச்சு பாடி ஆடும் போது முழுமையான உடற்பயிற்சியைப் பெறுகிறார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு விளையாட்டிலும் உடல் - உள மேம்பாட்டுக்கான கூறுகள் இடம் பெறுகின்றன. இவ்விளையாட்டுக்கள் பாட்டினோடு தான் இடம் பெறுகின்றன. எனவே நாட்டார் பாடல்களினூடாக குழந்தைகள் உடல், உள மேம்பாட்டைப் பெறுகின்றனர் எனலாம்.

வரலாற்றுக் குறிப்பு

*வானவன் மாதேவி ஈஸ்வரமுடையார் சிவன் கோயில்:-*

பொலநறுவைக் காலத்தில் இலங்கையையும் சேர்த்து ஆட்சி புரிந்த இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழன் தனது தாயின் நினைவாகக் கட்டிய சிவன் கோயில். இக் கோயிலுடன் சேர்த்து மேலும், பத்து சிவாலயங்களையும், நான்கு விஷ்ணு ஆலயங்களையும் கட்டுவித்தான். இச் சிவன் கோயில், பாழடைந்து போன நிலையில் இன்றும் பொலநறுவையில் உள்ளது. பொலநறுவைக் காலத்தில் தமிழர்களின் ஆட்சி சிறப்பாக இருந்தமையைக்காட்டும் இச் சிவன் கோயில் புனரமைக்கப்படுமாயின் எவ்வளவு சிறப்பாக இருக்கும்?

# பாரம்பரிய கலைகளைப் பேணிக் காப்பதில் கல்வியியற் கல்லூரிகளின் பங்கு



*ச. இரமணீகரன்*
*விரிவுரையாளர்,*
*ஸ்ரீபாத தேசிய கல்வியியற்கல்லூரி*

தமிழ் மக்களின் பாரம்பரியத்தை, பண்பாட்டினை எடுத்துக்காட்டுகின்ற கலை வடிவங்களுள் சிறந்து நிற்பவை நாட்டுகூத்துக்களும் நாட்டார் பாடல்களுமே. வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் இத்தகைய கலை வடிவங்கள் தமிழ் மக்களின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

வடக்கு கிழக்கிலே காத்தவராயன் கூத்து, வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து என்ற பலவகைப்பட்ட கூத்துக்களும் ஒயிலாட்டம் நாட்டார் பாடல்கள் போன்ற கலைவடிவங்களும் அரிச்சந்திர மயான காண்டம், சத்தியவான், சாவித்திரி, ஞானசௌந்தரி , பூதத்தம்பி, ஏழு பிள்ளை நல்ல தங்காள், இராவணேஸ்வரன் போன்ற பல்வேறு இசை நாடகங்களும் மலையகத்திலே சிறப்பாக காமன் கூத்து, பொன்னர் சங்கர், அருச்சுனன் தபசு போன்ற கூத்துக்களும் நாட்டார் பாடல்களும் சிறப்பானவையாகக் காணப்படுகின்றன.

மேற்கூறிய கலை வடிவங்கள் அண்மைக்காலத்தில் அருகிக் கொண்டு வருகின்றமை அவதானிக்க முடிவதோடு, பல இடங்களில் இவ்வகைக் கலைவடிவங்களின் பாரம்பரியத் தன்மைகள் நலிந்து வேறு வடிவங்களில் ஆடப்படுகின்ற நிலைமைகள் தோன்றியுள்ளன.

இக்கலைவடிவங்கள் பாரம்பரியத்தை இழந்து அழிந்து செல்வதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. குறிப்பிட்ட சாதியினர் அல்லது பரம்பரையினர் மட்டும் இத்தகைய கலை வடிவங்களில் அதிகம் ஈடுபட்டு வந்ததனால் மற்றையவர்கள் இவற்றைக் கௌரவக்குறைவாகக் கருதிக் கொண்டமை.

2. பாரம்பரியக் கலை வடிவங்களில் ஈடுபட்டோர் பொதுவாகவே வறியவர்களாகக் காணப்பட்டமையும், உரிய கௌரவம் கொடுக்கப்படாமையும்.

3. ஆலய விழாக்களில் மேடையேற்றப்பட்ட பாரம்பரிய கலைகளுக்குப் பதிலாக வீடியோ படங்கள் காண்பிக்கப்பட்டமை.

4. திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் வளர்ச்சியாலும், கவர்ச்சியாலும் இளைஞர் சமுதாயம் அவற்றின் பால் ஈர்க்கப்பட்டமை.

5. இக் கலை வடிவங்களை மேடையேற்றம் செய்வதற்கு (பயிற்சியின் போது, ஆடை அணிகலங்கள், ஒப்பனை போன்றவற்றிற்கு ) குறிப்பிட்டளவிலான செலவுகள் ஏற்படுகின்றமை.

6. தேர்ச்சி பெற்ற அண்ணாவிமார்கள் பலர் மரணித்தமையும், புலம் பெயர்ந்து சென்றமையும்.

7. தேர்ச்சி பெற்ற அண்ணாவிமார்கள் அல்லது கலைஞர்கள் இக்கலை வடிவங்களை அடுத்த தலை முறையினருக்கு கையளிக்கும் முயற்சியில் ஈடுபடாமை.

இத்தகைய கலை வடிவங்கள் அழிந்து போவதை உணர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம், சில தனியார்களின் முயற்சியுடன் உருவான கலைக் கழகங்கள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியன நாட்டுக்கூத்துப் போட்டிகள், பட்டறைகள், விழாக்கள் ஆகியவற்றை நடாத்தி பாரம்பரியக் கலைகளைப் பேணி வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. அதே வேளை மலையகத்திலே அத்தகைய பணிகள் குறைந்தளவிலேயே காணப்படுகின்றதெனலாம்.

## கல்விக் கல்லூரிகளின் பணிகள்

பாரம்பரியக் கலைகளின் தனித்துவம் பற்றி பேசும் போது குறிப்பாக கூத்துக்களின் ஆட்ட முறைமைகள், ஆடை அணிகலன்கள், அவைக்காற்றுமுறை, ஒப்பனைகள், பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டனவாகக் காணப்படுவதோடு வாதப்பிரதிவாதங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனவே தவிர, தனித்துவத்தைக் கொண்டதான ஒரு கூத்து வடிவத்தைக் காண்பதில் பல சிரமங்கள் உள்ளது. ஒரு கூத்து வடிவத்துள் இன்னொரு கூத்து வடிவத்தின் ஆட்ட முறைகள், ஆடை அணிகலன்கள், அவைக் காற்று முறைகள் புகுந்துள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் பாரம்பரியக் கலைகள் பற்றிய சரியான தகவல்களைப் பெறுவதில் கல்விக்கல்லூரிகளின் பணி இன்றியமையாததாகின்றது. இதற்காக கல்விக் கல்லூரிகள் பின்வரும் வழிகளில் தமது பங்களிப்பை வழங்க முடியும்..

1. பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் கல்விக் கல்லூரிகளுக்கு வருகை தரும் ஆசிரிய மாணவர்களைக் கொண்டு அவ்வப்பிரதேசங்களில் காணப்படும் பாரம்பரியக் கலைகள் சம்பந்தமாக ஆய்வுகளைச் செய்வித்தல்

2. பாராம்பரியக் கலைகளுக்கான ஆடை அணிகலன்கள், அருங்கலைப் பொருட்கள் போன்ற கலைப் பொக்கிஷங்களைத் தேடிப் பெற்று, அரும் பொருட் காட்சிக் கூடமொன்றை கல்லூரியில் அமைத்து அவற்றைப் பேணிப் பாதுகாத்தல்.

3. பாராம்பரியக் கலைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற கலைஞர்களை அழைத்து, அவர்களை கௌரவித்து கல்விக் கல்லூரிகளில் பட்டறைகளை நடாத்தி ஆசிரியர் பயிலுனர்களுக்கு அவற்றை பயிற்றுவித்தல்.

4. பாரம்பரியக் கலைகள் சம்பந்தமாக இதுவரை வெளிவந்த நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பவற்றைச் சேகரிப்பதோடு கிராமங்களுக்குச் சென்று திரட்டிய தகவல்களை ஒலி,ஒளி நாடாக்களில் பதிவு செய்தல்.

5. கல்விக் கல்லூரிகளுக்கிடையே பாரம்பரியக்கலைகள் தொடர்பான போட்டிகளை நடாத்துதல்.


இதுபோன்ற நடவடிக்கைகளில் ஆசிரிய மாணவர்களை ஈடுபடவைப்பதனூடாக அவர்களின் ஆளுமையை விருத்தி செய்ய முடிவதோடு, இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு துணையாகவும் அமையும். பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் அறியக்கிடைக்கும் விடயங்களை தமது பிரதேசங்களிலும், பாடசாலைகளிலும் வளர்த்துச் செல்லவும் வாய்ப்பாக இருக்கும் எனலாம். இதனூடாக எமது பாரம்பரியக்கலைகளின் தனித்துவத்தைப் பேணமுடிவதோடு அவை சகல பிரதேசமக்களையும் சென்றடையும். இதற்கு இக்கல்வியியற் கல்லூரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானதொரு பணியாகின்றது.

எனவே பாரம்பரியக் கலைகளை அழியவிடாது காக்கும் பணியில் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து கல்வியற் கல்லூரிகளும் தமது பங்களிப்பை மேற்கொள்வதன் மூலம் பாராம்பரியத் தமிழ்க்கலைகள் பாதுகாக்கப்படுவதுடன், மக்கள் மயப்படுத்தவும் உதவுவதாக இருக்கும்.

வரலாற்றுக் குறிப்பு:-

## மருதமடு மாதா

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மருத மடுத் திருத்தலம் வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு தேவாலயமாகும். 1659 இல் மன்னார் பிரதேசம் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. ஒல்லாந்தரின் ஆட்சியின் போது கத்தோலிக்க மதத்திற்கு எதிரான பல சட்ட திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற வேத கலா பனையின் போது, கத்தோலிக்க மக்கள், மாந்தையில் இருந்து வன்னிக் காட்டில் உள்ள குளத்தை அண்டியுள்ள ஒரு இடத்திற்கு புனித ஆரோக்கிய அன்னையின் சொருபத்துடன் சென்று குடியேறினர். அவ்வாறு அன்னையை அமர்த்திய இடமே மடு ஆகும். அதனை வளம்படுத்தி மருத மரங்கள் நிறைந்த சோலைகளாக்கி கருணை இல்லமாக அமைத்தனர். இவ்வாறு மருதம் நிறைந்த மடு என்ற இடத்தில் அன்னை வீற்றிருந்து அருள் பாலிக்கச் சித்தம் கொண்டதால் ''மருத மடு மாதா'' என்று ஈழ மக்கள் போற்றி வணங்கும் புகழைப் பெற்றார்.



# கவிதைக் களம்

# மொழியை வளர்த்திடு தம்பி

*(மகாகவி பாரதியார் தன் உயிர் நண்பர் நெல்லையப்பருக்கு எழுதிய இக் கடிதம், இந் நாட்டின் இளைஞர்களின் எண்ணங்கள் சிறக்க எழுச்சி தரும் ஓர் உந்து சக்தி யாக விளங்கட்டும்)*



என் தம்பி நெல்லையப்பப் பிள்ளை தன்னை
என் அன்னை பராசக்தி காக்க! தம்பி,
உன்னறிவு நாளுக்கு நாள் வளர்ந்து
ஒளி பெற்று வருவதினைக்காணுகின்றேன்!
நின் உள்ளக் கமலத்தில் அறிவுச் சூர்யன்
நிறைகதிர்கள் தாக்கி நல் லின்பம் கூட்டும்!
நம் உள்ளம் விரிவெய்த அறிவு சேரும்!
நமக்கு நிகர் பிறர் என்றால் வலிமை கூடும்

ஒ உனக்கு மராட்டி, இந்தி வடபுலத்தின்
ஓங்கு மொழி பல தெரிந்தால் அம் மொழியின்
சாகாத புதுமைகளைத் தமிழ்மொழிக்குத்
தரலாமே நெல்லையப்பா! எப்போதும் நீ
தீ ராத காதலுடன் தமிழ் பரப்பு!
தினம் புதிய செய்தியுடன் ஆக்கம் பெற்று
நாம் மொழியை வளர்த்திடவே வேண்டும்! தம்பி
நெல்லையப்பப் பிள்ளாய்! நான் ஏது செய்வேன்?

தமிழை விட பிறமொழியின் வளர்ச்சி பார்த்தால்
தாரையென இரு கண்கள் நீரை கொட்டும்!
தமிழனுக்கு மேல்பிற மொழியார் வாழ்வு
தரம் உயர்ந்தால் அது எனக்குப் பிடித்தம் இல்லை!
தமிழச்சியை விடுத்து மற்றைப் பெண்கள்
தளிர்மேனி அழகெனினும் மனம் வருந்தும்!
அமுதான என் தம்பி நெல்லையப்பா,
அண்டம் எது? உள்ளம்தான்! ஏறு மேலே!

நிற்கின்ற இடமிருந்து வீழா வண்ணம்
நெடுங்காலம் கயிறுகட்டி வைத்துக் கொண்ட
அற்பர்களைக் கண்டு நீ குடல் குலுங்க
ஆர்ப்பாட்ட மாய்சிரிப்பாய் ! உனக்கு இன்றே
ஊற்பத்தியாகட்டும் இரு இறக்கை !
உடன் பறந்து மேன்மேலே உயர்ந்து போ நீ!
எப்போதும் தமிழ்நாடு வாழ்க ! நோய்கள்
இல்லாத நிலை சூழ்க ! என்று வாழ்த்து !

வீதியெல்லாம் செந்தமிழ்நற் பள்ளிக்கூடம்
விளங்கட்டும் என்றெழுது ! அக் கூடத்தின்
ஜோதியினால் நம் நாட்டின் அறியா மைப்பேய்
தொலையட்டும் என்றெழுது ! தமிழ்நாட்டிற்குள்
ஜாதி என்றால் ஒன்றேதான் ! ஆணும் பெண்ணும்
சரிநிகர்தான் ! தன் கண்ணைக்குத்திக் கொள்ளும்
பேதமைதான் பெண்ணடிமை என்றே தீட்டு!
பூக்கட்டும் தொழிற்கலைகள் என்றே கூவு!

மறை தவறாய்ச் சொல்வோனை விடவும் நன்கு
மழிப்பவனே மேல் என்று கூறு ! நாட்டில்
சிறக்கட்டும் வியாபாரம்! சிற்பம் ! கீதம் !
திகழட்டும் வான்,பூமி இயற்கை நுட்பம் !
நிறையட்டும் தமிழ்நாட்டில் வளமை என்றே
நெல்லையப்பா நீ எழுது ! உன் மடல் தான்
அறிந்து கொண்டும் உடன் பதிலைஎழுத வில்லை!
அருமை மகள் உடல் நிலைதான் சரியாய் இல்லை!

இப்போது குழந்தை நலம் ! 'நாட்டுப் பாட்டும்'
இனிதான 'புதுமைப் பெண்'பாட்டும் உன்றன்
ஒப்பரிய அன்பிற்குக் கட்டுப்பட்டு
உடன் அனுப்பியுள்ளேன் நான் ! அச்சில் ஏற்று!
எப்பாடு பட்டேனும் பணத்தைக் கண்டு
என் நண்பா எனக்கனுப்பு! இதுவே உன்றன்
தப்பாத கடமையடா! தம்பி, உன்னைத்
தாய்காப்பாள் ! இப்படிக்கு, பாரதி யார் !



–பாரதி–

# புறநானூற்றுச் செய்யுள் வழி புதுப் பாடல்

போரில் மடிந்த ஒரு வீர மறவனைப் போற்றிப் பாடும் ஒரு புலவனின் புகழ் வார்த்தைகளுக்கு,"நெஞ்செலாம் கோயிலிட்டு அமர்வர்" என்ற கவிதை வரிகளினூடாகப் புது வடிவம் கொடுத்துள்ளார் நெடுந்தீவு மகேஷ்.

ஆம்!......சங்க காலத் தமிழகத்தில், தான் பிறந்த நாட்டைக் காப்பதற்காகப் போர்க்களம் சென்று, பகைவர்களைத் துரத்திச் சென்றவனது மார்பிலே படைக்கலங்கள் தைத்தன. தீரமுடன் சமராடிய வீரன்,பகைவர் எறிந்த படைக்கலங்களால் தாக்குண்டு வீழ்ந்து கிடக்கின்றான். அவனுடைய உடலில் ஓடிய குருதியும்,உருக்குலைந்து சிதறிப்போன அவனது முறுக்கேறிய தசைகளும், அந்த மண்ணின் வித்துக்களாக ஊறிப்போய் இருக்கின்றன. துண்டு துண்டாக உடைந்த அவனது கேடகந்தான் களத்திலே சிதறிக் கிடக்கின்றது. தன் நாட்டுக்காக வீழ்ந்து காற்றோடும், மண்ணோடும் கலந்து விட்ட அப்பெருஞ்செயலாளன் எங்குளான் எனக் கேட்பீராயின்,

"அவன் எங்கும் போகவில்லை, அவனோ திசை
யெங்கும் பரவும் நற்புகழை நிறுவிச் சொல்லாற்றல்
மிக்க புலவர்களின் வாய் மொழியிலேயே நிலைத்து
அமர்ந்து விட்டானே"என்று புலவர் நெஞ்சுருகப்பாடுவது புறநானூற்றுத் தமிழரின் வீரத்தையும் புகழையும் வெளிக்கொணருவதாக அமைந்துள்ளது.

அப் புறநானூற்றுப் பாடலைப் பாடிய பெருங்கடுங்கோ என்ற புலவரின் பாடல் அடிகள் இதோ.

"எஃகுஉளம் கழிய இருநிலை மருங்கின்
அருங்கடன் இறுத்த பெருஞ்செயலாளனை
யாண்டுளனோ? வென வினவுதி ஆயின்
.......................................................................
வருபடை தாங்கி கிளர்தார் அகலம்
அருங்கடன் இறுமார் வயவர் எறிய
உடம்பும் தோன்றா உயிர் கெட்டன்றே
மலையுநர் மடங்கி மாறு எதிர் கழியத்
.................................................................
அலகை போகிச் சிதைந்து வேறு ஆகிய
பலகை அல்லது களத்த ஒழி யாதே.
சேண் விளங்கு நல்லிசை நிறீஇ
நாநவில் புலவர் வாய் உளானே.

இப் பாடல் அடிகளைக் கருவாகக் கொண்டு "நெஞ்செலாம் கோயிலிட்டு அமர்வர்" என்ற தலைப்பில் நெடுந்தீவு மகேஷ் அவர்கள் யாத்த பின்வரும் கவிதை பழமையையும், புதுமையையும் இணைக்கும் வகையில் அமைந்துள்ளது.

# நெஞ்செலாம் கோயிலிட்டு அமர்வர்

பகையழித் துயர்ந்து, படைநடு மிளிர்ந்த;
பாட்டுடைப் போர்த்தலை மறவன்
தொகை தொகை வெற்றி தொடர்ந்திட விளைந்த
தோள்வலு மிகுந்தமா வீரன்.
தகைமை கொள் தமிழோன் தாய் நிகர் மண்ணில்
தன்னுடல் வீழ்த்தியோ மகிழ்ந்தான்.
நகைதரு முகத்தோன் நல்லுளன் எங்கே?
நவில்கவென் றெவருமே கேட்பின்!

திசைகெட எட்டுத் திக்கினும் சிதறித்
திகைத்தொளித் தோடிய பகைவர்
வசைகெடத் திரும்பிப் பார்த்தயர்ந் தார்த்த
வகையினால் மார்பிலே புண்கள்
அசைவுறத் தாங்கி வீழ்ந்தனன் செம்மண்
அசைந்தது அழுதது புவனம்,
இசைபெறும் வீரன் இல்லையென் னாது
இருக்கிறான். எங்கணும் நிறைந்தான்.

கலைவுறு கைவேற் கலங்களும் நொருங்கிக்
களத்திடை வீழ்ந்திடப் பொய்யாய்
அலைவுறு மெய்யும் அதனுறை உயிரும்
அகன்றது ஓரிடத் தில்லை.
விலை தரும் வீரம் விளைத்தமா வெற்றி
விடுதலை உணர்வு சேர் திண்மை
நிலை பெற வாழ்ந்தான் நீடுவாழ் புலவோர்
நிதம் புகழ் வாய் மொழி அமர்ந்தான்.



கொடுமையின் பிடியில் குமைந்திடும் தாய் மண்
கொண்ட போர்க் குயிருடல் ஈந்தோர்
விடுதலை வேட்கை வித்தெனப் புதைந்தோர்
விளங்கிடு தாய்நிலத் தொளிர்வர்
படுவதோ இல்லை அவர் திறன் புகல்வர்
பசுமையாய் இளமையாய் வாழ்வர்
நெடுந்தொகை நாட்கள் நீள் நிலம் சிறக்க
நெஞ்செலாம் கோயிலிட் டமர்வர்.

நெடுந்தீவு மகேஷ்

# குறிக்கோள்

கீழ்வானில் இருள் விலக எழும்பவேண்டும்!
கேடுதரும் கழிவுகளை நீக்கவேண்டும்!
பாழ் ஆகும் முன்னால் பல் விளக்கவேண்டும்!
பதமாக உடல் தேய்த்து கழுவவேண்டும்!
ஆழ் நெஞ்சால் இயற்கையினை அளக்கவேண்டும்!
அருங்குறளில் ஓர் இரண்டை அலசவேண்டும்!
கூழ் எனினும் ஊட்டமுடன் குடிக்கவேண்டும்!
கொஞ்சு தமிழ் பயில்வோர்க்கோர் குறிக்கோள்வேண்டும்.!

பள்ளிக்கு வேளைக்கே போதல்வேண்டும்!
பாடத்தைத் தெளிவாகப் பயிலல்வேண்டும்.!
தெள்ளுதமிழ் கலவாமல் தீட்டவேண்டும்!
செந்தமிழைக் கண்ணாகக் கருதவேண்டும்!
உள்ளியே உள்ளத்தால் உருகவேண்டும்!
உயர்ந்த தமிழ் நூல்களையே தேடவேண்டும்!
எள்ளாமல் பிறர் கண்டு வியக்கவேண்டும்!
எப்போதும் பயில்வோர்க்கோர் குறிக்கோள்வேண்டும்!

நம் இனத்து வரலாற்றை அறிதல்வேண்டும்!
நல்ல திராவிடத்தார் என்றுணரல்வேண்டும்!
எம்மவரை ஏய்த்தோரை இகழ வேண்டும்!
இழிவு தரும் ஏடுகளை ஒதுக்கவேண்டும்!
நம் பழைய சங்கத்தை வாழ்த்தவேண்டும்!
நலிவுற்ற செயல் எண்ணி வருந்தவேண்டும்
மும்மறையோ டெம் வாழ்வை முடிக்கவேண்டும்
முத்தமிழைப் பயில்வோர்க்கோர் குறிக்கோள்வேண்டும்!

காதலினை வீரத்தோடிணைக்கவேண்டும்!
கண்ணிரண்டும் அவை என்றே கருதவேண்டும்!
பேதங்கள் பிளவுகளை மூட வேண்டும்!
பெருமனங் கொண்டுலகோடு சேரவேண்டும்!
போதனைகள் எளிதென்று உணரவேண்டும்!
பொழுதுகளைப் பயனோடு போக்கவேண்டும்!
சாதனைகள் நிலைநாட்டிச் சாகவேண்டும்!
தண்டமிழைப் பயில்வோர்க்கோர் குறிக்கோள்வேண்டும்!

நடனம் இசைக் கல்வி கலை பேணவேண்டும்!
நாளும் நாம் வல்லவராய் வாழவேண்டும்!
உடலெனும் கோயிலினை ஓம்பவேண்டும்!
உள்ளத்து மாசை உடன் போக்கவேண்டும்!
இடமான நம் மண்ணில் இருக்கவேண்டும்!
இது காக்க என்றும் போர் ஆடவேண்டும்!
வடவர் உரை பின்னாலே வைக்கவேண்டும்!
வண்டமிழைப்பயில்வோர்க்கோர் குறிக்கோள்வேண்டும்!

ஒன்று குலம் தேவன் என உணரவேண்டும்!
ஒருவன் அவன் பாதத்தை பணிதல் வேண்டும்!
நன்றின்றேல் தீது செயா திருக்கவேண்டும்!
நாடு மொழி நெறி எண்ணம் நாளும்வேண்டும்!
வென்றாலும் தோற்றாலும் முயற்சி வேண்டும்!
விழிப்போடும் காகம் போல் வாழவேண்டும்!
இன்றுள்ள செயல் நாளைக் காகவேண்டும்!
இன்தமிழைப் பயில்வோர்க்கோர் குறிக்கோள்வேண்டும்!

நோய் நொடிகள் வாராமற் காக்கவேண்டும்!
நொடிக்கு நொடி புது வாழ்வு வாழவேண்டும்!
நோய் வந்தால் மருத்துவத்தை நாடவேண்டும்!
நூல் தகடு பேய்ச் செலவை நீக்கவேண்டும்!
காய் கீரை பழம் விதைகள் தின்னவேண்டும்!
கண்டதெலாம் தின்னாமல் தவிர்க்கவேண்டும்!
வாய் கட்டிச் செயல் மூலம் வாழவேண்டும்!
வண்ணமொழி பயில்வோர்க்கோர் குறிக்கோள் வேண்டும்!

முதியோருக் குதவுவதில் முந்தவேண்டும்!
முயற்சிபல தோற்றாலும் முயலவேண்டும்!
விதி எழுத்து ஊழெல்லாம் விடுதல்வேண்டும்!
வேண்டாத கற்பனைகள் விலக்கவேண்டும்!
எதனையுமேன் எவ்வாறென் றாய்தல்வேண்டும்!
எட்டாத வற்றையெல்லாம் தவிர்த்தல் வேண்டும்!
பதவிவரின் பணியாற்றி மகிழவேண்டும்!
பைந்தமிழைப் பயில்வோர்க்கோர் குறிக்கோள்வேண்டும்!

**"தாமரைத் தீவான்"**

# ஆன்ம உழல்வு



நான் கீலங்களாய் கிழிந்து போகிறேன்
அவை என்னுள் ஊடுருவும் போது,
விழிகளின் வழியே பிதுங்கும்
உறைந்துபோன குழந்தைகளின் உயிர்,
முகங்களில் ரேகைகளை உழுகிறது பயம்.
விர்ரெனப் பறந்து, வேகமெடுத்துக்
குத்திப் பதிந்தவை துப்புகையில்
சிதைந்து கருகும் வாழ்வு ;
அழிவையும் அவலத்தையுமென்னுள் தாங்கி
வெந்து தணிவேன் நான்.
குருதிதசை உயிர் மூச்சு புகை சாம்பர் துணுக்குகளாய்
குலைந்து போகிறதென் ஆன்மா.
துப்பிமுடித்தவை திரும்புகையில்
கோபமும் சாபமுமாய்க் குரல்கள்
என்னுள்ளே கலக்க
வெம்பித் தணிவேன் நான்

இங்கும் அங்கும் வியாபித்திருப்பது நானே

அவை அங்கு கிளம்புகையில்
துப்பிவிட்டுச் சென்று இறங்குகையில்
மனங்கள், முகங்கள் விரிய;
இங்கோ .............
மானுடம் சிதைந்து
ஓலங்கள் எழுகையில்
வெம்பி வெடிக்கிறேன் நான்.

**பு. சத்திய மூர்த்தி**
*வலயக் கல்விப் பணிமனை,*
*முல்லைத்தீவு.*

# என் பாடல்!

என் கவிதை அத்தனையும் தத்துவம் – வரும்
இளைய தலைமுறையினர்க் கோர் பொக்கிஷம்!
அன்புவழி எனும் வாழ்க்கைச் சித்திரம்! – பூவில்
அம்மணமாய் திரிவோருக்கு வஸ்திரம்!

அளிக்குமது நல்லவர்க்கு கௌரவம்! – வாழ்வில்
அல்லலுறு மாந்தருக்கு ஔடதம்!
ஒளியூட்டி இருளோட்டும் சந்திரன்! – பாடல்
ஒவ்வொன்றும் உலகுய்யும் மந்திரம்!

வாழ்க்கையதன் வழிசொல்லும் வித்துவம் – என்
வரலாற்றின் கதை கூறும் புத்தகம்!
சூழ்க நலம்; என்பாட்டின் ஆசைகள்! – இது
சுயநலத்தார் அறியாத பாசைகள்!

அடிமைவிலங் குடைகின்ற சுத்தியல்! – காணும்
அவலத்தை ஓட்டுகின்ற பெரும்புயல்!
மிடிமையுறு மானிடர்க்கு நெம்புகோல் – மேலும்
மேலாகச் சொல்வதெனில் அம்புபோல்!

சட்டத்தை மதிக்குமென் பாடல்கள்! – யாவும்
சமதர்மச் சிந்தனையின் தேடல்கள்!
கொட்டுமழை– அருவியென ஓடிடும்! – என்றும்
குறைவில்லா யாப்பணிகள் சூடிடும்!

இறையச்சம் தனைநாளும் பேணிடும் – பால்
இயல்கூற சிறிதளவு நாணிடும்!
குறைவில்லா இல் வாழ்க்கைப் பெட்டகம்! – சுமை
கொண்டேகிக் கரைசேர்க்கும் ஒட்டகம்!

காசுக்குக் கரையாத இரும்பது! – நல்ல
கலையுள்ளத் தோருண்ணும் கரும்பது!
மாசுபடி யாத சுடர் நெருப்பது– எனை
மதிக்கின்ற மனிதர்களின் விருப்பிது!

-அ .கௌரிதாசன்-

# அவலம்

ஆறு தொடக்கம் பதினான்கு அகவை வரை
அடிப்படைக்கல்வி அனைவருக்கும் அவசியம்.
அரசாங்கச் சட்டம் அடித்துச் சொன்னது
அடிப்படையுரிமை என வரையறை
செய்தது..........
வீதியோரத்தில் "பேணி கிலுக்கிய"
நாதியற்ற சிறுவனைக் கேட்டேன்
"விழல் கதை" என்றான்"
வேதனைச் சிரிப்புடன் ..........!
வேலைக்குப் போன தந்தையும் தாயும்
வீடு திரும்பாமல் ஆண்டு ஒன்றாச்சு
இருந்த ஊரினை விட்டு விரட்டி
இன்றுடன் மாதங்கள் மூவிரண்டாச்சு .
அழுகின்ற தங்கையின் வயிற்றினை நிரப்ப
அடிப்படை உரிமைச்சாசனம் உதவுமோ..........?
போரின் தீயிலே வெந்த மழலைகள்
தீயில் தீய்ந்த தேசத்தின் பசுமைகள்
"பேணி குலுக்கிடும்" அவலம்தொடர்கையில்
அடிப்படைக்கல்வி அனைவருக்கும் கிடைக்குமா?
கேள்விக்குறிகள் முற்றுப்புள்ளியைத் தேட
ஆச்சரியக்குறிகள் அவசியம் தேவை
அதுவரைக்கும் ..........
பேணிகள் குலுக்கப்படும் ..........!



**திரு க. ஜெயவீரசிங்கம்.**
*(ஆசிரியர்)*
*ஸ்ரீ கலைமகள் வித்தியாலயம்,*
*முள்ளியவளை.*

## எது அரசியல்?

மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு அவர்களின் சுமைகளை நாமும் தாங்கி அவர்களின் கஷ்டங்களை போக்குவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலை.

**ஒரு தலைவரின் கூற்று**

# "அம்மாவும் நானும்"

சின்னஞ் சிறுவனாயென் அம்மாவுடன் பள்ளிசெல்கையில்
சிரித்து மகிழ்ந்தவள் கைபிடித்து நடக்கும் போது;
கன்றிடும் கண்ணேயுன் பிஞ்சுப்பாதங்களிரண்டுமென
கட்டி யணைத்தெனைத் தூக்கியிடையிருத்திப் பொலீஸ்
சென்றிகள் தடையில்லையென்பதா லோட்டமுநடையுமாய்
சென்றென் பள்ளியிலெனைச் சேர்த்தும் மகிழ்வாள்;
அன்றிலிருந் தவளென்தெய்வம்; வாய் வார்த்தைகளோ வேதம்;
அவள் மடியே. யென்றன் சிம்மாசனமென எண்ணியகாலப்



நாட்டு நடப்புத் தெரிந்திடாப் பருவமுலகின்
நல்லது கெட்டது புரிந்திடாப் பருவம் ;நடிப்பும்
பாட்டும் கூத்துமே வாழ்க்கையென மயங்கி
பலவகைக் கனவுடன் வாழ்ந்திட்ட பருவம்; தோழரைக்
கூட்டுச் சேர்த்துக் குதூகலங்காண விழைந்திட்ட பருவம்;
கூவும் குயிலின் சிறகொடித்தும்; கானகத்து
வேட்டுவப் பிள்ளைபோல் வில்லம்பு பூண்டு; பிறர்க்கு
வேடிக்கைகாட்டி விளையாடிக்களித்த பருவம்!

என்னையே நானுணர்ந்து ; சுற்றிநடப்பதைத் தானுணர்ந்து
எட்டடி அறைக்குள்ளே என்குடும்பத்தின் வாழ்நிலையுணர்
தன்னையே மெழுகாக்கி யுருக்குலையுமன்னையின் அன்புணர்ந்து;
தமையன், தமக்கை, தங்கையின் பாசவுறவுணர்ந்து;
பொன்னையே வெள்ளித்தட்டில் பார்ப்பதுபோலென்குடும்பம்
பொலிவுறச் செய்யவேண்டுமெனும் பெருவெண்ணம் மூண்
என்னையே நாளும் பொழுதும் வாட்டிவதைத்திட;எழுச்சிகொண்ட
ஏற்றமிகு கல்வியைக் கருத்தாய் கற்றிடத் துணிந்தேன்!

படியடா தம்பி படியடா! வென்றென்னை அல்லும் பகலும்
படிக்கவைத்துப் பார்த்திருந்து; அருகிருத்திக் கதைசொல்வாள்;
படித்ததனாலேயே பாரிலுயர்ந்தோர் கோடி யென்பாளின்னும்
படிக்கல்போல வாசலில் கிடத்தல் தீது மென்பாள்;

தேடி வருமே படித்தவர் தமக்குப் பதவியும் வாழ்வுமந்தத்
தெய்வம் கூட இரங்கி வந்து துணையாயிருக்குமென்பாள்;
நாடி வருவார் நன்மைகள் வேண்டி நலிந்தோரெல்லாம்
நாடேயுந்தன் காலடிவீழும் நம்பிடு வென்பாள் !

பிள்ளைகள் வளர்ந்து பெரியவராகிக் கல்வியிலோங்கி
பிறந்த மண்ணில் பெருமையாய் வாழ்வார்;வெறிக்கும்
கள்ளையும் பாலையும் வேறாய் காணும் பக்குவம் பெற்று
கவினுறு காசினியில் வாழ்வைத் தொடர்வார்; இன்னும்
கொள்ளையடிப்பார்; அன்புறு நெஞ் சமெல்லாம்; நல்ல
கொள்கை சுமந்து இவ்வுலகை யாள்வாரென்று
பிள்ளைகளான எம்மைப்பற்றி யம்மா கண்ட கனவுடன்
பிரிந்தபோது நாங்கள் மரத்தால் வீழ்ந்த சருகுகளானோம் !

பாதைகள் மாறி வாழ்வின் பயணங்கள் மாறியதால்
பட்ட துயரமோ அளவில்லை பாரில்; படிப்பென்பதும்
போதைதா னென்பது போகப்போகப் புரிந்து போக
பொறுப்புடன் படிப்பை முடித்துத் தலை நிமிர்ந்தேன்;
மேதையா யுலகில் வாழ்தலொன்றே வாழ்வின்
மேலான செயலெனச் சொன்னவள் அம்மா
வாதைகள் பலவும் பட்டதுண்மை யுதற்காயெனினும்
வசந்தங்களேனோ எம் வாசற் கதவைத் தட்டவேயில்லை!

பட்டம் பெற்றும் பலனேயில்லை;பெருமைதரு
பதவியிலுள்ளோர் முன்பணிந்து கேட்டும் பலனேயில்லை;
விட்டம் தன்னைப்பார்க்க மல்லாந்து கிடந்து
விம்மியழுதும் பலனேயில்லை;விளையாட்டாயெண்ணி
குட்டக் குட்டக் குனிந்ததால் எங்கள் மண்ணில்
குட்டுவோர் கூடினரன்றிக் குறைந்திடவில்லை; இதனால்
நட்டம் நமக்கெனப் புரிந்ததோர் நாள்; அந்நாள்
நாமும் குட்டினா னிமிர்வோமெனும் நம்பிக்கை துளிர்த்தது!

**கவிஞர் புரட்சிபாலன்**
**திருகோணமலை**



# மாணவர் களம்

# கரை தேடும் கானல்...

மாசி மாதப் பனியின் போர்வையை ஊடறுத்து கோயில் மணியோசை என் காதுகளை ஊடுருவியது... போர்வையை விட்டு விலகியிருந்த கால்களை உள்ளிழுத்தவாறே பாயில் சுருண்டு படுத்துக்கொண்டேன்... ஆஹா...என்ன சுகம்..."தம்பி மோனே... எழும்படா கெதியா... போயிலைக் கண்டுக்குத் தண்ணி வாக்க வேணுமெல்லே... கொப்பரும் இந்த வயதிலே குளிரெண்டும் பாராம எழும்பி கோயிலுக்கு போயிட்டாரணை... என்ர ராசா எழும்பணை..." அம்மாவின் காலை நேரப் பல்லவி என் காதைத் தொட்டதும் "சீய்ய்" என அலுத்துக் கொணடே "சும்மா இரணை... இந்தப் பனிக்குளிருக்குள்ள உப்ப ஆர் தண்ணி வாக்கிறது... கொஞ்சம் விடியட்டுமேன்..." என்றேன் போர்வையைக் குலைக்காமலேயே:

"என்னடா மோனே... பத்தாயிரம் கண்டல்லே... உப்ப போனாத் தான் பத்து மணிக்காவது முடிக்கலாம்... எழும்பணை.... இந்த முறை போயில வெட்டினா உனக்கு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கித் தருவனணை..." அம்மாவின் "ஐஸ்" என்னைப் பாதிக்கவில்லை.

"சும்மா போணை... உன்னக் கும்பிட்டன் என்னக் கொஞ்சம் நித்திர கொள்ள விடு.."

"என்னவாம் உன்ர மோன்... இன்னும் எழும்பல்லியோ... கொஞ்சம் வேளைக்கு எழும்பி படிச்சிருந்தா அந்த ரெண்டு மாக்ஸ்ஸையும் சோதினையில எடுத்திருக்கலாமே.. இந்த லெட்சணத்தில இரண்டு தமக்கயள எப்படி கரை சேர்க்கப் போறாராம்.. இஞ்சரப்பா ஒரு செம்புத் தண்ணி கொண்டா நான் எழுப்பிக் காட்டுறன்..."

ஓ கோயிலுக்கு போன அப்பர் அறுக்க வந்திட்டார். போயிலக்கு தண்ணி ஊத்தப் போகாததுக்கு ஏஎல் சோதனையில இரண்டு மாக்ஸால கம்பஸுக்கு எடுபடாம தட்டுப்பட்டத சுட்டிக் காட்ட வேணுமா..." பல்லைக் கடித்தபடியே ஆத்திரத்துடன் போர்வையை விலக்கிக் கொண்டே கம்பஸுக்கு கூட ஆக்கள எடுத்தினமெண்டா நானும் போவன் தானே..." என்றேன் முகத்தை கடுகடுப்பாக வைத்தபடியே "சும்மா போவனடா ஒரு மாக்ஸ் குறைச்சாலும் அம்பது பேர் உனக்கு முன்னால இருப்பானவை... உனக்காவது..." அப்பாவின் "பூசாரித்தனம்" என்னை மேலும் வெறுப்பூட்டியது.

"ஓமோம்.. என்ன முறைக்கிறீர் கெதியாய்ப் பல்லைத் தீட்டி வெளிக்கிடும். விடியப் போகுது. என்ற அப்பாவின் கனைப்பைக் கேட்டு எனக்கு முகம் சிவந்து விட்டது. இதைக் கண்ட அம்மா," சும்மா இருங்கோவேனப்பா.. பாவம் படிச்சபிள்ள உந்தக் குளிருக்குள்ள போறதெண்டா விளையாட்டே" என என்னை ஆசுவாசப்படுத்த முயன்று "என்ர ராசாவெல்லே கொஞ்சம் சுறுக்காய் வெளிக்கிடணை.." என என்னைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள்.

அவசரமவசரமாக முகத்தைக் கழுவிக் கொண்டு வாசலுக்கு விரைந்தேன் "மூதேசி... சனியன் படுத்த பாய் சுத்தத் தெரியாதே.. உன்னையும் சீதேவி தேடி வருமே.." மூத்தக்காவின் ஆலாபனை ஆரம்பித்துவிட்டது. "ஏனாம்..இந்த விடியத்தில தலய விரிச்சிப்போட்டு உப்பிடி நிண்டயெண்டா எங்க சீதேவி வாறது.." என நானும் பதிலுக்கு கூறியபடி சைக்கிளை எடுத்து மிதிக்க ஆரம்பித்தேன்.. உன்ன.." என்றபடி தும்புத் தடியோடு வாசலுக்கு அக்கா ஓடி வருவது தெரிந்தது.

இந்த தோட்டத்தால எப்பிடி ரெண்டு பேரையும் கர சேக்கிறது.. ஏஎல் படிச்சிற்று வேலை தேடுறது எண்டாலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் சாதாரண காரியமே.. வெளிநாட்டுக்குப் போனாப் பரவாயில்ல போல கிடக்கு. உங்க சுப்பரண்ணையின்ர பெடி போனது தான்.. அவையின்ர குடும்பம் எழும்பின எழுப்பம்.. கூலி வேல செய்து கொண்டு திரிஞ்ச குடும்பம்.. இப்ப ரெண்டு பெட்டயள் சுவிஸ்ஸில..

ஓ.. அண்டைக்கு வரதன் கடிதம் போட்டவன் "மச்சான் இங்கையடா எங்களின்ர தமிழ்ச் சாதி செய்யாத வேலையே.. அங்க பெரிய உத்தியோகம் செய்தவ. உங்க குப்பை அள்ளத் திரியுறாங்கள்.. பட்டப் படிப்பு படிச்ச பலன் அண்ண.. கார் சேவிஸ் பண்ணுறாரெல்லே.. மார்க்கண்டு வாத்தியார்.. அதுதான் பழைய பிரின்சிப்பல்.. இங்க பெற்றோல் செற்றில பெற்றோல் அடிக்கிறாரடா.. என எழுதியதை சொல்லிச் சொல்லி எங்களின்ர பெடியள் சிரிப்பாய்ச் சிரிச்சவையள்.

உவன் காந்தன்.. ஏஎல்லில பாஸ் பண்ணி கம்பஸிற்கு எடுபட்டவன். உவன்ர தமயன் கூப்பிட்டவனெண்டு யூகே போகப் போறானாம். நானும் போனால்.. உந்த தோட்ட மண்ணைக் கவ்விக்கவ்வி என்னத்தக் காணப்போறம்.. வெளி நாடெண்டா.. கார்.. பணம்.. ஆசை நெஞ்சில் முகிழ சைக்கிளை வேகமாக மிதிக்கத் தொடங்கினேன். தோட்டம் தெரிந்தது.

"மிசினை இறக்கி விட்டேனப்பா.". என்றதும் மிசினை அப்பா ஸ்ராட் பண்ணி விட்டார். பாத்திகளுக்கு தண்ணீரை மாற்றி விட்டு மண் வெட்டியை எடுத்துக்கொண்டு வீடு திரும்பினேன்.... ஒரு தீர்க்கமான முடிவை எடுத்த திருப்தியுடன்.

"அம்மோய்.. இஞ்சரணை.. உவன் ராசாண்ணையின்ர காந்தன் வெளிநாடு போகப் போறானாம்.. என்னையும் அனுப்பனணை.. நானும் வெளிநாடு போய் உழைச்சா நீயும் நகை நட்டென்று வாங்கி.. அக்காமார கரை சேர்க்கலாம் தானணை.." அம்மாவின் நாடியைத் தடவியபடி கேட்டேன்.

"என்ன.. இருந்தாப் போல .. இந்த ஆசை வந்திட்டுது குஞ்சுக்கு.. அந்த நேரமே யாழ்ப்பாணம் வந்த கையோட கொப்பர் கேட்டவர் எடேய் இப்ப இளந்தாரிப் பிள்ளயள் வீட்டிலே இருக்கிறது பயமடா.. நாளைக்கு பிறகு காணேல்ல எண்டு தேடித்திரியேலாது.. வெளிநாட்டுக்கு அனுப்புறன் போவன் எண்டு... நீதான் வீறாப்புப் பேசினாய்.. படிக்கப்போறன் எண்டு.. இப்ப என்னண்டு புத்தி வந்தது.." என்றாள் அம்மா கேலியாக. "மோனை அந்த நேரம் கனகம்மாமி கேட்டவதானே உன்ர மோன நான் அனுப்புறன் எண்டு.." இப்ப கேட்டுப் பாக்கிறதே!"

என்னிடமிருந்து வந்த கிறீன் சிக்னல்.. எல்லோருக்கும் பரவி என்னை ஜெர்மனியில் கொண்டு போய் விட்டது.

ஜெர்மனிக்கு வந்ததும்தான் வெளிநாட்டில் வாழுகின்ற கஸ்டம் எனக்குத் தெரிந்தது. யாழ்ப்பாணத்தில மாசிப் பனியெண்டாலே போர்வைக்குள் முடங்குகின்ற நான் வேலைக்குப் போய் வர வேண்டிக்கிடக்கு- இரத்தமே உறைஞ்சு போற அளவிற்கு குளிர்.. சென்ரி கிறேட் மைனஸில் உள்ளது.. இதற்காகவா எவ்வளவு இலட்சங்களை இழந்து வந்தோம்.

அம்மாவையும் அப்பாவையும் சாகக் கொடுத்திட்டு அநாதையாக இருக்கிறம்.. அகதி எண்டு பொய் சொல்லித்தானே களவாய்ப் புகுந்தனாங்கள். இங்க வந்தாப் பிறகு தானை ஊரின் அருமையும், உறவுகளின் இனிமையும் எவ்வளவு இதமானது என்பது புரிந்தது. நான் பிறந்து வளர்ந்த ஊரைவிட்டு உறவை விட்டு கடல் கடந்து வந்து காலம் போக்குவதற்காகவா நான் பிறந்தேன் என நினைக்கும் போது சில வேளைகளில் மனம்

தனிமையில் ஓலமிடும்.. இங்கை வந்தும் ஐந்து வரிசமாச்சு. எத்தனை லட்சத்தை உழைச்சு வீட்டை அனுப்பிப் போட்டன்.. ரெண்டு அக்காமாரும் கல்யாணம் முடித்து, வீட்டையும் இடிச்சு மொடனா கட்டினதெண்டு படம் அனுப்பினவை. அப்பா இப்பவெல்லாம் கொண்டாவிலதானாம் சந்தைக்குப் போறார்.. சாமான் விக்கவல்ல.. வாங்க..! போயிலத் தோட்டக் காணியெல்லாம் குத்தகைக்குக் கொடுத்தாச்சாம்.

அனுமதி பெறாமல் தங்கியிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டதாக வழக்கு சென்ற கிழமை அம்மாவின்ர கோல் வந்தது "தம்பி ரெலிபோன் எடுத்திட்டம்.. அக்காவின்ர மோளுக்கு ஐந்தாவது பிறந்த நாள் ஊருக்குச் சொல்லி பெரிசாச் செய்யப் போயினம். சாறி சட்டையெல்லாம் எல்லாருக்கும் எடுக்க வேணும். அப்பருக்கும் அத்தான்மாருக்கும் வேட்டி சேட்டெல்லாம் எடுக்க வேணும்.. அத்தோட உன்ர பேரால ஐஞ்சு பவுணிலயாவது மால செய்து போட வேணுமணை... வீடியோ கொப்பி உனக்கு அனுப்புறம்.. கொஞ்சம் காசு அனுப்பணை..!" உந்த ஊரில இருக்கிறதுகளுக்கு புத்தி கெட்டுப் போச்சே.. நாங்கள் என்ன.. காசு காய்க்கிற மரமே.. இல்லாட்டி மனசு இல்லாத ஜடமோ.. சத்தியமாய் சொல்லுறன் இவ்வளவு நாளும் உழைச்சன் எனக்கெண்டு ஒண்டும் சேர்க்கயில்ல.. சொந்தக்காரன் அது இது என்று அத்தான்ர சிபார்சில ரெண்டு பேர ஜேர்மனிக்கு எடுத்தன் அவன்களும் ஒரு சதம் இன்னும் தரல்ல.. தாறமெண்டாலும் எப்படிக் கேக்கிறது எனக்குத் தெரியும்தானே பாம்பின்காலை."

அண்டைக்கு அம்மாவிடம் சொன்னேன் "அம்மா நான் ஊருக்கு வரப்போறன் இஞ்சயும் இருக்கேலாது. தனிய இருக்க விசர் வரும்போல கிடக்கு" என்று. அதற்கு அம்மா, வேண்டாமடா.. இங்க நாட்டு நிலைமை சரியல்ல.. வராத மோன.. இன்னும் ரெண்டு வரியம் நிண்டு உழைச்சுப் போட்டு வாவன்" என்கிறார். நாங்கள் என்ன இயந்திரமே. மணிக்கணக்கா தொடர்ந்து வேலை செய்ய ஓய்வேயில்லாமல் எங்களுக்கென்றொரு வாழ்க்கை.. இன்பம்.. அது வருமா என நாளும் ஏங்குவேன்.

எங்கள் நிலையின் போக்கையே சிதறடிப்பதாய் எனக்கு சென்றவாரம் ஒரு கடிதம் வந்தது. ஜேர்மனி அரசின் அனுமதி நடந்தது.. என்னால் என்னை நிரூபிக்க முடியவில்லை.. நாடு கடத்தும் உத்தரவு வழங்கப்பட்டது. எனினும் இனம் புரியாத நிம்மதி... உற்சாகம்.. சொந்த மண்ணில் வாழப் போவதை எண்ணி நெஞ்சில் இனம் புரியாத பரவசம், எனது மண்ணில் எனது சொந்த மண்ணில் உழைத்து வாழ வேண்டும் என்ற உத்வேகம்.. நான் நாடுகடத்தப்பட்டு திரும்பி வருவது ஊருக்கு தெரியாது.

சிறிலங்காவின் மண்ணை விமானம் முத்தமிட்டது. எல்லையில்லாத மகிழ்வுடன் கீழேயிறங்கியபோது எங்களை பாதுகாப்புப் படை வரவேற்றது. தேசத்துரோகம் என்ற குற்றம் சாட்டப்பட்டு ஊர் தெரியாத சிறையில் மறுநாளே அடைக்கப்பட்டேன்.. நான் இன்னும் ஜேர்மனியில் இருப்பேன் என்ற நம்பிக்கையில் அம்மா அப்பா இருப்பார்கள். ஆனால் நானோ..?

**இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா,**
யா/இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(2001 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித் தினப் போட்டியில் பிரிவு 5 இல் முதலாம் இடம் பெற்ற சிறுகதை)


# சமாதானம் வராதோ!

விடியலைக் காண்போம்
  விழித்தெழுந்து வா தோழா!
சமுதாயச் சாக்கடையைக்
  கழுவித் துடைத்தே வா!
சமத்துவ வாழ்விற்காய்
  ஒரணி திரள்வோம் நாம்!

பௌத்தம், இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம் - எனும்
  நான்கு மதங்களின் சங்கமத் தொடரிலும்
நிம்மதி இல்லை நித்திரை இல்லை
  குண்டொலிகள் பாட்டொலிகள் ஆயின
தசை உண்ணும் கழுகுகள்
  வான் எங்கும் வட்டமிட
புகல் தேடி அலையும்
  அகதிகளாய் ஆனோம் நாம்.

மின்னலும் முழக்கமும் சூறாவளியும்
  வெப்பச் சுழல் காற்றும்
புழுதி மண்ல் மழையும்
  வெளிச்ச மற்ற அமாவாசை இருட்டுமாய்
ஏதோ வெல்லாம் வந்து போகின்றன
  சுடர்விடும் அமைதியோ வரவேயில்லை
நிதம் வாட்டும் துன்பம் தான்
  நாளும் எமை நெருடுதம்மா!

மலையேறி தளை பறிக்கும் மாரியம்மா
தலைநிறையப் பொதி சுமக்கும் தர்மதாசா
வலைபோட்டு மீன் பிடிக்கும் மரியதாசும்
நிலையான கொள்கையிலே ஒன்று பட்டால்
ஒரு நிசியில் வந்திடாதோ சமாதானம்!



**ச.எனிடா,**
மன்/சென் சேவியர் பெண்கள் கல்லூரி,
மன்னார்.

(2001 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித் தினப் போட்டியில் பிரிவு 4 இல் முதலிடம் பெற்ற கவிதையில் இருந்து சில அடிகள்)

# புயலாக மாறும் பூக்கள்



பெண்ணென்று பேர்
கொண்டழைத்தால் போதுமா!
பேதை அவளின் அடிமை
விலங்கொடிய வேண்டாமா!
உலகின் கண்ணவளே என்று
கவித்திருந்தால் போதுமா!
உண்மையாய் அவளின்
உயுர்வெண்ண வேண்டாமா? — அவளைத
தண்மை நிலவென்றால் போதுமா!
தம்மோடு சரிசமமாய் தாங்கி நிற்க வேண்டாமா?

மென்மை பெண்மை என்று நிதம்
வெறும் கவிகள் பேசாதே!
வன்மையும் உண்டவளின்
வாழ்விலென நீ எண்ணு!
அன்னையாய் இருப்பாள் - ஆனால்
அடிமையாய் இருக்க மாட்டாள் - அவள்
சன்னமாய் உலகைத் துளைத்து — புதிய
சரித்திரம் படைக்க வேண்டும்
சட்டி பானை கழுவுதலால் அவள்
சமத்துவத்தை குலைக்காதீர்
கட்டிய கணவனுக்குள்
பெட்டி பாம்பாய் இருப்பதுதான்
பெண்ணவள் கடமையெனப்
பிதற்றாதீர்! பேசாதீர்!

பூவாக இருப்பவளைப்
புயலாக நீ மாற்று
பூகம்பம் ஆன அவளை
பூமியின் விளக்காய் நாட்டு
புன்னகை மலரக் காட்டு

அவள் இன்றே
வேதனைகள் தாண்டி வந்து
சாதனைகள் புரியச் செய்வோம் - மரபு
வேலிகள் தாண்டிச் சொந்தக்
காலிலே நிற்க வைப்போம் - அடிமை
விலங்கொடித்து அவளின் பெண்மை
வீரத்தைப் புரிய வைப்போம்
துலங்கிடும் அவளை வெற்றி
அரங்கிலே ஏற்றி வைப்போம்

**தட்சணாமூர்த்தி அகிலன்,**
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி.

(2001 ஆம் ஆண்டின் வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித் தினப் போட்டியில் பிரிவு 5 இல் முதலிடம் பெற்ற கவிதையில் இருந்து சில அடிகள்)

# எனது பொழுது போக்குகள்

நாம் எமது ஓய்வு நேரத்தை பயனுள்ள விதத்தில் கழிக்க பொழுதுபோக்குகளை நாடுகின்றோம். ஒவ்வொருவரையும் வாழ்க்கையில் சிறந்தவராக மாற்றுவதில் பொழுதுபோக்குகளுக்குப் பெரும் பங்கு உண்டு. நாம் பொழுதுபோக்கை சிறந்த முறையில் கழிப்பதால் சிறந்த வழிகளில் நாம் செல்ல வாய்ப்புண்டு. நான் எனது பொழுதைக் கழிப்பதற்கு புத்தகங்களை வாசிக்கின்றேன். முத்திரைகள், சுவரொட்டிகளையும் விரும்பிச் சேர்க்கின்றேன். படங்களை வரைவது எனக்கு பிடித்தமானதொன்றாகும்.

விண்வெளி ஆராய்ச்சிப் புத்தகங்கள், விஞ்ஞானப் புத்தகங்கள், உலகின் விஞ்ஞான மாமேதைகள் பற்றிய புத்தகங்களையும் சிறுவர் நாவல்களையும் நான் விரும்பிப் படிக்கின்றேன். புத்தகங்கள் என்றால் எனக்கு அலாதிப் பிரியம். ஓய்வு நேரத்தில் நான் நூல் நிலையத்திற்கு சென்று புத்தகங்கள், பத்திரிகைகள் வாசிப்பது எனது வழக்கம். எனது இவ்வாசிப்புப் பழக்கத்தை எனது அம்மாவே எனக்கு ஊக்குவித்தார்.
“வாசிப்பே ஒரு மனிதனைப் பூரணமாக்குகின்றது”

இது ஒரு பிரபலமான கல்வியாளரின் கூற்று. வாசிப்பது எம்மை உலக நடைமுறைக்கு ஏற்றதாக நடக்க வழிவகுக்கின்றது. அறிவியல் புத்தகங்களை நான் வாசிப்பதால் எனது விஞ்ஞான பாடம் இலகுவானதாக உள்ளது. புத்தகங்களை வாசிப்பது மனமகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. எமக்கு கவிதை, கட்டுரை வரையும் ஆற்றலை உண்டுபண்ணுவது வாசிப்பே. இதனாற்தான் நமது பாடசாலையும் அரசாங்கமும் நூல் நிலையங்களை அமைப்பதில் முன்னுரிமை கொடுக்கின்றன.

என்னிடம் ஐந்நூறிற்கும் கூடிய முத்திரைகள் உள்ளன. இவை பல்வண்ண முத்திரைகளாகவும், பலநாட்டு முத்திரைகளாகவும் உள்ளன. இந்தியா, இலங்கை, பிரிட்டன், அமெரிக்கா, நியூசிலாந்து போன்ற நாடுகள் வெளியிட்ட முத்திரைகள் உள்ளன. அவற்றிலே உலகப் புகழ் பெற்ற மாமேதைகள், அந்நாட்டு வளங்கள், உலக அதிசயங்கள் என்பன பொறிக்கப்பட்டுள்ளன.

இம்முத்திரைகள் பிறநாட்டு வளங்களைப் பற்றி நாம் அறிய வழிவகுக்கின்றன. உலக அதிசயங்கள் பற்றியும் அவை உள்ள நாடுகள் பற்றியும் அவை தோன்றிய ஆண்டுகள் பற்றியும் அறிய இம்முத்திரைகள் வழிகாட்டிகளாகின்றன.

சுவரொட்டிகள் சேர்ப்பது ஒரு பயனுள்ள பொழுது போக்காகும். சுகாதாரக் கழகங்களாலும், பல நிறுவனங்களாலும் வெளியீடப்படும் சுவரொட்டிகளைச் சேர்க்க எனது நண்பர்கள் உதவி செய்கின்றனர்.
இதன் காரணமாக நோய்கள் பற்றியும் அவற்றைத் தடுக்கும் முறைகள் பற்றியும் அறிந்து பிறருக்கு வெளியிடுவதால் பிறரின் பாராட்டுதலுக்கு உரித்தாகின்றேன். வைபவங்கள் நடந்த நாட்கள் பற்றியும் அவற்றின் விபரம் பற்றியும் அறிந்து பொது அறிவு சம்பந்தமான தகவல்களைப் பெறுகின்றேன்.

வரைதல் எனது மிக விருப்பமான பொழுதுபோக்கு இதை நான் எனது ஐந்து வயதிலேயே ஆரம்பித்துவிட்டேன். எனது சித்திரக் கொப்பியிலே பல மாமேதைகளின் படங்களையும், இயற்கைக் காட்சிகளையும் வரைந்துள்ளேன். இதை நான் ஒரு பாடமாகவே கருதிப் படிக்கின்றேன். சித்திரம் வரைவதால் பிறரின் பாராட்டிற்கு உள்ளாவதால் மனதில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. எனது பொழுது போக்கை சிறந்த முறையில் கழிப்பதால் எனக்குப் பொது அறிவும் மற்றும் பாடங்களும் இலகுவானதாக உள்ளன.

"பொழுது போகவில்லையே" என தமது பொழுதுபோக்கை வீணாக கழிப்பவர்களும் ஓய்வு நேரத்தைத் தீய வழிகளில் பயன்படுத்துவோரும் முயற்சி அற்ற மனிதர்கள்.

"சோம்பும் உள்ளம் பிசாசின் தொழிற்சாலை"

இது ஒரு ஆங்கிலப் பழமொழி. சுறுசுறுப்பற்ற மனிதர்களே ஓய்வு நேரத்தை ஒழுங்காக கழிக்காது தீயவழிகளில் செல்வோராவர்.. மாணவர்களாகிய நாம் எமது மிஞ்சுகின்ற நேரத்தை சிறந்த முறையில் கழித்துப் பயன் பெறுவோமாக.

**சிவலிங்கம் தாட்சாயினி,**
மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

(2001 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித் தினப் போட்டியில் பிரிவு 2 இல் முதலிடம் பெற்ற கட்டுரை)

வரலாற்றுக் குறிப்பு

## கந்தபுராணக் கலாசாரம்

1959 ஆம் ஆண்டு கார்த்திகைத்திங்களில் வெளியிடப்பட்ட கந்தபுராணக்கலாசாரம் என்னும் நூல் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. யாழ் பரமேஸ்வராக் கல்லூரியில் (தற்போதைய யாழ் பல்கலைக் கழகம்) நடந்த இலட்சிய ஜயந்தி விழாவில், யாழ்ப்பாணக் கலாசார மூலம் கந்தப்புராணக் கலாசாரம் என்ற தலைப்பில் அவர் ஆற்றிய சொற்பொழிவின் விரிவாக்கமே இந் நூலாகும்.

1. கந்தப்புராணப்பெருமை – 1
2. கந்தப்புராணப் பெருமை – 2
3. கண்ணூறு
4. வித்துவச்சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை
5. புராண படனம்
6. பெறுபேறு
7. ஏகாத்ம வாதம்
8. சைவசித்தாந்த கலாநிதி
9. செந்திநாத ஐயர் நிறுவிய உண்மை
10. சூதசங்கிதையில் ஏகாத்ம வாதிகளின் விளையாட்டு

எனப் பத்துத் தலைப்புகளின் பொருளை விரித்துப் பேசுகின்றது இந் நூல். கந்தபுராணம் காட்டும் கலாசாரப் பெருமையையும், அது யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையை வளம்படுத்தியதையும் கூறுவதோடு நாவலர்,செந்திநாதையர் போன்ற மகான்கள் இயற்றிய பணியையும் வித்துவ சிரோன்மணி ஆற்றிய கந்தபுராண விளக்கத்தையும் அது யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு ஊட்டிய உரத்தையும் நன்கு விளக்குகின்றது.

# யுத்தமும் சமாதானமும்

மனித சமூகம் தோன்றி இற்றைக்கு எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிட்டன. மனிதனின் தோற்றத்துடன் ஆரம்பமாகிய நாகரிகத்துடன் வளர்ந்து வந்த நவீன தொழில் நுட்ப வளர்ச்சியுடனான இன்றைய காலம் வரை மனிதன் ஏதாவதொரு பிரச்சினைக்கு உள்ளாக்கப்பட்டு அல்லது உட்படுத்தப்பட்டு வருகின்றான். அன்றைய மனிதன் தனக்குக் கிடைத்த சொற்ப பொருளாதார வளத்துடன் தனது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றி நிம்மதியாக வாழ்ந்து வந்தான். அதனைத் தொடர்ந்து எப்பொழுது சொத்துக்களையும், பொருட்களையும் சேமிக்கத் தொடங்கினானோ அப்பொழுது பிரச்சினைகளும் ஆரம்பித்தன. அதிக சொத்துக்களை வைத்திருப்பவன், அவனிலும் குறைவான சொத்துக்களை வைத்திருப்பவன், அவனிலும் குறைவான சொத்துக்களையும், சேமிப்பையும் கொண்டவனை அடக்கி ஆளத் தொடங்கினான். அடங்கிப் போனவன் சிந்திக்கத் தொடங்கியபோது, அடக்கி ஆள்பவனுக்கு எதிராகப் போராட முற்பட்டான். இதனாலேயே உலகம் அன்றில் இருந்து இன்றுவரை ஒரு போராட்ட பூமியாகவே வளர்ந்து வருகின்றது.

இவ்வாறான போராட்டங்களிடையில் மோதிக்கொள்வது என்னவோ இரு தரப்புத்தான் என்றாலும் பாதிக்கப்படுவது பல தரப்புக்கள் என்று குறிப்பிட்டுக்கூற வேண்டிய ஒன்று. இன்று உலகெங்குமுள்ள நாடுகளில் நடைபெறும் போராட்டங்கள், இன ஒடுக்கல்கள், இனரீதியான வன்முறைகள் இவற்றையே கோடிட்டு காட்டுகின்றன. இலங்கையில் நடைபெறும் யுத்தம் தமிழர்களை காப்பதற்காக "நடாத்தப்படுகின்றது. அது போன்று பலஸ்தீனத்தில் நடைபெறும் போராட்டம் இஸ்ரேலியர்களிடமிருந்து பாலஸ்தீனத்தை மீட்க நடைபெறுகின்றது. எமது அண்டை நாடான இந்தியாவின் காஷ்மீர் பிரச்சினையும் இதையே வலியுறுத்தி நிற்கின்றது.

இவ்வாறாக உலகின் ஒவ்வொரு இடமும் யுத்தகளமாகிவிட்டது, அததகைய யுத்த களம் ஒன்றில்தான் நாமும் வாழ்ந்து வருகின்றோம். எமது இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையின் வரலாறு மிக நீண்டது. அதனால் ஏற்பட்டு வரும் அனர்த்தங்களின் அளவும் நீண்டது. அதனால் உலகம் பெற்றுக் கொண்ட படிப்பினைகளும் அதிகம்.

இலங்கையின் இனப்பிரச்சினை பிரித்தானியர் இலங்கையினை கைப்பற்றியபின் உருவான ஒன்று. அந்த வேளையில் சிறிது சிறிதாக புகைந்து கொண்டிருந்த இன முரண்பாடுகள் இன்று கொழுந்துவிட்டு எரிகிறது. பிரித்தானியர் முழு இலங்கையையும் 1815 இல் கைப்பற்றினர். அதன்பின் சுதந்திரத்தை பெறும் நோக்கோடு 1919 இல் தேசிய இயக்கம் ஒன்றை இலங்கை சுதேசிகள் ஆரம்பித்து பிரித்தானியருக்கு எதிராகப் போராடத் தலைப்பட்டனர். அவ்வியக்கத்திற்கு சிறுபான்மை இனத்தவரான சேர் பொன் அருணாச்சலத்தையும் தலைவராக்கினர். ஒரு சிறுபான்மை இனத்தவரின் கீழ் நாம் கட்டுப்பட்டு நடக்கிறோமே என்ற காழ்ப்புணர்ச்சியோ, தாழ்வுச்சிக்கலோ இன்றி பெரும்பான்மையினரான சிங்களவர்களும் நன்றாக செயற்பட்டனர். இதுதான் இலங்கையில் சிறுபான்மையுடன் பெரும்பான்மை ஒத்திருந்த கடைசி சந்தர்ப்பம். இவர்களின் ஒற்றுமை தமக்கு அச்சுறுத்தல் என்க் கருதிய ஆங்கிலேயர் அவர்களை அரசியல்ரீதியாக பிளவுபடுத்த முயன்றனர். வெற்றியும் பெற்றனர். அதன் பயன் 1921 இல் தமிழர்கள் தனியாக பிரிந்து சென்று "தமிழர் மகாசபை" என்ற இயக்கத்தை ஆரம்பித்து செயற்பட்டனர். அது முதல் பெரும்பான்மையினரான சிங்களவர்கட்கும், சிறுபான்மை தமிழர்கட்கும் இடையிலான குரோதம் அவர்களை அறியாமலே வளர்ந்தது என்பதை விட வளர்த்து விடப்பட்டது என்றே கூறலாம்.

இனப்பிரச்சனைக்கு அத்திவாரமிட்ட ஆங்கிலேயர் அவர்களை அரசியல் ரீதியாகவே பிரித்தாலும், தமிழ் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் விட்டுக்கொடுப்புடன் நடந்திருந்தால் இன்று இலங்கை சோபையிழந்து சுடுகாடாக மாறும் நிலைக்கு வந்திராது என்பதையும் கூறத்தான் வேண்டும்.

ஆங்கிலேயர் இலங்கையை விட்டு சென்ற பின் சுதேச அரசியற்றலைவர்களால் இலங்கை ஆளப்பட்டது. அதன்போது ஆங்கிலேயர் விட்டுச் சென்ற பிரித்தாளும் தந்திரத்தை அவர்கள் கைக்கொண்டனர். அதில் மிக முக்கியமாகக் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க ஆவார். 1956 பொதுத் தேர்தலில் தன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 24 மணி நேரத்தினுள் இலங்கையின் அரச கருமமொழியாக சிங்களத்தை ஆக்குவேன் எனக் கூறி ஆட்சிக்கு வந்து சொன்னதைச் செயலிலும் காட்டினார். இதுவே சிறுபான்மைச் தமிழர்களை அதிகளவில் பாதித்தது. அதன் பயன் அந்தக் கால முதற்கொண்டே பல தமிழ் இளைஞர்கள் சிங்கள அரசுக்கெதிராக ஆயுத போராட்டத்தில் குதித்தனர். அதன் பயன் இன்றும் அவ்வாயுத மோதல் தொடர்ந்து கொண்டிருக்க மனிதர்கள் அகதி முகாம்களில் ஆடு, மாடுகள் போல அடைக்கப்பட்டு அல்லலுக்குள்ளாகிக் கொண்டுள்ளனர்.

“சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி”

என்ற பழமொழி போலத் தாமுண்டு தம் வேலையுண்டு என்றிருந்த தமிழர்களைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்த்த பேரினவாதிகளும் இன்று சிக்கலில் மாட்டிக் கொண்டு விழி பிதுங்கி நிற்கின்றனர்.

ஒரு ஜனநாயக நாட்டினை பொறுத்த வரையில் அங்கு சகல பிரஜைகளுக்கும் உரிமைகள் சுதந்திரங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஓரினத்திற்கோ அல்லது தனி நபருக்கோ விஷேடமாக எந்தவொரு உரிமையோ சலுகையோ வழங்கப்படக்கூடாது. ஆனால் இலங்கையில் நடந்தது இந்தக் கதைதான். பெரும்பான்மையினரின் உரிமைகள் பேணப்பட்டு சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டதால் ஏற்பட்ட சிக்கலே இவ்வினப்பிரச்சினையாகும். அன்றிருந்து ஆட்சிக்கு வந்த அரசுகள் எல்லா இனத்தினரையும் ஒரே நோக்கில் நோக்கியிருந்தால் இன்று இந்தச் சிக்கல் எழ வாய்ப்பின்றிப் போயிருக்கும். ஆனால் அன்றைய பேரினவாத ஆட்சியாளர்களும் சரி. இன்றைய ஆட்சியாளர்களும் சரி அப்பணியை ஒழுங்காக நிறைவேற்றவில்லை. நிறைவேற்ற தயங்குகிறார்கள். அவர்களின் தயக்கம் ஆயுத கலாசாரத்தை மேலும் ஓங்கச் செய்கிறது என்பதும் வருந்தத்தக்க விடயந்தான்.

இனப் பிரச்சினை இலங்கையில் உக்கிரமடைந்து இருபது வருடங்கள் பூர்த்தியடைந்துவிட்டன. அதன் ஆரம்பம் முதற்கொண்டு இன்றுவரை இலங்கையின் அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் கூறும் வார்த்தைகள் ஒன்று:- சமாதானம், இரண்டாவது:- பேச்சுவார்த்தை. இவ்விரண்டு வார்த்தைகளும் எமது நாட்டின் அரசியல்வாதிகளுக்கு பொழுது போக்கு சாதனங்களாகிவிட்டன. எங்கெங்கு மேடைப் பேச்சு நடந்தாலும் அங்கு இவற்றை நாம் கேட்கலாம். கூறத்தான் ஆட்கள் இங்குண்டு. செய்வதற்கு யாருமில்லை. இதை ஒரு புதுக்கவிஞன் கீழ்வருமாறு கூறினான்.

“நம் நாடும் NATO தான்
எப்படி?
No Action Talk Only”

இது இன்றுள்ள அனைவருடைய ஆதங்கந்தான். அதன் ஒரு சிறுதுளிதான் அப்புதுக்கவிஞனின் புலம்பல்.

யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அது முடியாமல் விடாது எந்த வகையிலாவது முடிந்துதான் தீர வேண்டும். ஆனால் அதன் முடிவை நாம் தீவிரப்படுத்த வேண்டும். தொடங்கியது முடியத்தானே வேண்டும் என நினைத்து நாம் உறங்கிக் கொண்டிருந்தால் ஒரு நாள் எம் கழுத்தில் கத்தி பாயும் போதுதான் ஞானம் வரும். அந்நிலையிலிருந்து எம்மை காக்க அதற்கு முன்பே செயற்படுவது எமது கடமை. இன்று நாட்டிலுள்ள அனேகமான அரசியல்வாதிகள் நாடு சமாதானத்தை அடைவதை அவ்வளவாக விரும்பவில்லை. ஏனெனில் அவர்கள் வாழக்கை வண்டி ஓடுவது இந்த யுத்தத்தினாற்றான் என்பதால் யுத்தம் முடிந்தால் சோற்றுக்கு வழி? என்ற கேள்விக் குறியுடன் நாட்டினை சீர்கேட்டுக்குள்ளாக்கும் யுத்தத்திற்கு மறைமுகமாக எண்ணெய் வார்த்துக் கொண்டு வெளியே "சமாதானம், சமாதானம்" என் வாய்கிழியக் கத்துகின்றனர்.

இந்த யுத்தத்தினால் நாடு சந்திதத இழப்புக்கள் எத்தனை உயிர் உடமை என யாவற்றையும் இழந்தோர் தொகைதான் மட்டிடமுடியுமா, கோர யுத்தத்தின் பயனாக இலங்கையின் இளம் சந்ததிகள் கவனிப்பாரற்று வீதிகளிலும், விடுதிகளிலும் சீர்கெட்டு திரிகிறது. இதன் மூலம் என்ன, அடிப்படை யாது? எல்லாக் கேள்விகட்கும் ஒரே விடை யுத்தந்தான் என்பது வெளிப்படையாகும்.

அன்று, இனங்களிடையே ஏற்பட்ட முறுகல் நிலையை கவனித்து அதை தீர்க்க, கொடுக்க வேண்டியதை கொடுத்துச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளைச் சீரான முறையில் நிறைவேற்றியிருந்தால், நாட்டின் வளங்கள் யாவும் பாதிக்கப்பட்டிருக்குமா? இல்லை, இல்லவே இல்லை. "யாழின் கற்பகதரு" என்றழைக்கப்படும் பனைகள் இன்று வடநாட்டில் அதிகமாக அழிந்துவிட்டன. அழிக்கப்பட்டுவிட்டன. அதன் பயன் பனையை மூலப்பொருளாக கொண்டு செய்யப்படும் உற்பத்திப் பொருட்களிற்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்குக் காரணம் யுத்தமே. இன்று எமது இலங்கை நாட்டின் பிரஜைகள் திக்குக் திசைகெட்டு உலகின் ஒவ்வொரு மூலையிலும் அகதி என்ற முத்திரையுடன் வாழ்கின்றனர். அவர்களின் தாயக மண்ணை கண்ணால் காண கூட அருகதையின்றி அலைக்கழிகின்றனர். இதற்கெல்லாம் காரணம் இனத்தின் மீதான மற்றய இனங்களின் காழ்ப்புணர்வே.

இல்ங்கையின் வ்ளங்களை இவ்யுத்தம் பெரும்பாலும் தின்று தீர்த்துவிட்டது. இன்னும் சிறு காலத்திற்கு தொடருமாயின் எம் நாட்டில் நீரிற்கு கூட அடிதடி நடாத்தும் காலம் வரலாம். அதை நாம் தவிர்க்க வேண்டும் எனில் யுத்தம் இளைப்பாற வேண்டும். இலங்கை சீராக மூச்சு விட வேண்டும். இலங்கையின் இளைய சந்ததிகள் புன்னகை தவிர எமக்கேதும் தெரியாது எனக் கூற வேண்டும். சமாதானத்திற்காக நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்போம்.

**எம்.எம்.சர்ஹூரான்,**
கமு/அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி.

(2001 ஆம் ஆண்டின் வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழித்தினப் போட்டியில் 5 ஆம் பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை)

## வரலாற்றுக் குறிப்பு

# கன்னியா வெந்நீரூற்று

திருகோணமலையிலிருந்து இருந்து வவனியா செல்லும் பாதையில் 8 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளகன்னியா கிராமத்தில் வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஏழு வெந்நீற்றுக் கிணறுகள் அமைந்துள்ளன. இவ்வெந்நீர் ஊற்றுக்கள் தொடர்பான கர்ணபரம்பரைக் கதை ஒன்று இராவணனோடு சம்பந்தப்பட்டதாக உள்ளது. அவன்தன் தாயாரின் அந்திமக்கிரியை செய்வதற்காக ஏழு இடங்களின் நீரூற்றை வரவழைத்தான். அதுவே கன்னியாவில் உள்ள ஏழு வெந்நீர்க் கிணறுகள் எனக் கூறப்படுகின்றது. இவ்வேழு கிணறுகளிலும் உள்ள நீர் வெவ்வேறு அளவிலான சூடு கொண்டவை. உலகில் மிக அபூர்வமாகவே வெந்நீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றன. கன்னியா வெந்நீர் ஊற்றுக்களில் நீராடுவதால் நோய்கள் குறையும் என்பது நம்பிக்கை.

1817 இல் ஜோன் டேவி என்பவர் இங்குள்ள வெந்நீர்க்கிணறுகளின் வெப்பத்தைப்பற்றி பின்வருமாறு கணித்துக் கூறியுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1ஆவது | 101 பாகை | 5ஆவது | 86 பாகை |
| 2ஆவது | 101.5 பாகை | 6ஆவது | 105 பாகை |
| 3ஆவது | 107 பாகை | 7ஆவது | 90 பாகை |
| 4ஆவது | 88.5 பாகை | | |

இங்கு இந்துக்களும் பௌத்தர்களும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் வருகை தந்து நீராடிச் செல்வர். முஸ்லிம்களும் இந்த இடத்தைப் புனிதமாகக் கருதுகின்றனர். கன்னியாய் மலையில் இஸ்லாமியப்பெரியார் ஒருவரின் சமாதி உள்ளது. அதை 40 அடிக் கல்லறை என அழைக்கின்றனர்

கன்னியா வெந்நீரூற்றுக்கள் பற்றி புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கன்னியா திரு என்ற தலைப்பிற் சில பாடல்களைப் பாடியுள்ளார்.

## வரலாற்றுக் குறிப்பு

# வற்றாப்பளை கண்ணகை அம்மன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை கிராமத்தில் நந்திக் கடலாலும், வயல் வெளிகளாலும், பாலை மரச் சோலைகளாலும் சூழப்பட்டு எழில் மிகுந்த தோற்றத்துடன் காணப்படும் புகழ்பெற்ற ஆலயம் இதுவாகும். வடபுல மக்களில் நம்பிக்கைகுரிய தெய்வமாக விளங்கும் கண்ணகை அம்மனுக்கு வைகாசிப் பௌர்ணமி தினத்துடன் அண்டிவரும் திங்கட்கிழமையில் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். வைகாசிப் பொங்கல் நடைபெறுவதற்கு முந்திய திங்கட்கிழமை புதிய பானையுடன் ஊர்வலமாகச் சென்று சிலாவத்தை கடற்கரையில் தீர்த்தம் எடுத்து வந்து அங்குள்ள கூட்டு விநாயகர் ஆலயத்தில் வைத்து விளக்கு ஏற்றப்படும். பொங்கல் தினத்தன்று நடைபெறும் இன்னுமொரு சிறப்பான நிகழ்ச்சி சிலம்பு கூறல் பட்லம் வாசித்தலாகும்.

மதுரையில் கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு பாண்டியனிடம் வந்த கண்ணகி, சிலம்பினை உடைத்துக் காட்டி கோவலன் கள்வன் அல்லன், பாண்டியனே கள்வன் என்று உணர வைத்ததும் பாண்டியனும் கோப்பெருந்தேவியும் இறந்தனர். கோபம் மாறாத கண்ணகி, கண்ணகை அம்மனாக மாறி மதுரையை எரித்த பின் பல திக்குகளுக்கும் சென்று பின் சக்தி வடிவம் பெற்று இறுதியாக வற்றாப்பளையில் நந்திக் கடற்கரையில் வந்து அமர்ந்ததால், இவ்வாலயம் பல சிறப்புக்களையும் புதுமைகளையும் கொண்டதாக விளங்குகின்றது.

அடங்காப்பற்றை பண்டார வன்னியன் ஆட்சி செய்தகாலத்தில் முல்லைத்தீவு நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்து ஆட்சி செய்த நெவில் என்ற வெள்ளையன், வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை அழிப்பதற்குச் சென்றபோது அங்கிருந்த பூசகருக்கும் அவனுக்கும் தகராறு ஏற்பட்டது. குறிப்பிட்ட தினத்தில் வந்து, அம்மன் புதுமை செய்யாவிட்டால் ஆலயத்தை அழித்து விடப்போவதாகக் கூறிச் சென்றான். பின்னர், பூசகரின் கனவில் தோன்றிய அம்மன், அவரூடாகச் சில பணிகளை இட்டார் அதன்படி கோயிலை அழிக்க வந்தபோது, ஆலயத்தின் முன் உள்ள பனிச்ச மரத்தின் காய்கள் எல்லாம் உதிர்ந்து அவை வெள்ளையர்கள் மேல்குண்டுகளாக வீசத் தொடங்கின. அதனால் அச்சமடைந்த வெள்ளையர்கள் தலைதெறிக்க ஓடியதாகக் கூறப்படுகின்றது.

## அகில இலங்கை தமிழ் மொழித்தினம் – 2000
## தேசிய ரீதியில் வெற்றி பெற்ற வடக்கு கிழக்கு மாணவர்கள்

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 4.3 | ஆக்கம்-எழுத்து | 1 | மு. ப .றியாஸத்றிஜா | கமு/அல்.மஸ்ஹர் பெண்கள். உயர்தர பாடசாலை | கல்முனை | 3 |
| 2. | 4.1 | வாசிப்பு | 1 | சி. சங்கீர்னா | மட்/வின்சன்ட் மகளிர் .கல்லூரி | மட்டக்களப்பு | 2 |
| 3. | 4.15 | நடனம்- தனி | 1 | அ .மதுஞ்சலா, | வ/இறம்பைக்குளம் மகளிர். கல்லூரி | வவுனியா | 1 |
| 4. | 4.1 | இசையும் அசைவும் | 1 | க. தனுஷியா | மட்/புனித சிசிலியா ம கல்லூரி | மட்டக்களப்பு | 2 |
| 5. | 4.1 | பாவோதல் | 1. | சே. நிஷாத்தி- | தி/இகிமி கோணேஸ்வரா இந்துக் கல்லூரி | திருகோணமலை | 1 |

## அகில இலங்கை தமிழ் மொழித்தினம் – 2000

## தேசிய ரீதியில் வெற்றி பெற்ற வடக்கு கிழக்கு மாணவர்கள்

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 6. | 4.1 | வாசிப்பு | 2 | க.கிருத்திகா | மட்/வின்சன்ட் மகளிர் கல்லூரி | மட்டக்களப்பு | 1 |
| 7. | 4.4 | கட்டுரை | 2 | ம.மீரா | வ/சைவப்பிரகாச மகளிர். கல்லூரி | வவுனியா | 3 |
| 8. | 4.10 | பேச்சு | 2 | வி.கோகுலன் | வ/தமிழ் ம.ம.வி | வவுனியா | 1 |
| 9. | 4.11 | பாவோதல் | 2 | கு.பிரதீபன் | ம/சித்திவிநாயகர் இந்துக். கல்லூரி | மன்னார் | 2 |
| 10 | 4.13 | இசை-தனி | 2 | ம.விதுஷன் | மட்/புனித மிக்கேல் கல்லூரி | மட்டக்களப்பு | 2 |
| 11 | 4.15 | நடனம்-தனி | 2 | இ.ஹிந்துஜா | வ/இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி | வவுனியா | 1 |
| 12 | 4.10 | பேச்சு | 3 | ம. சரண்ராஜ் | மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி | மன்னார் | 2 |

## அகில இலங்கை தமிழ் மொழித்தினம் – 2000
## தேசிய ரீதியில் வெற்றி பெற்ற வடக்கு கிழக்கு மாணவர்கள்

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | 4.15 | நடனம் தனி | 3 | பு. அமிர்தினி | தி/ஸ்ரீசண்முகா இந்து.ம. கல்லூரி | திருகோணமலை | 2 |
| 14 | 4.11 | பாவோதல் | 3 | ம. யுதிக்ஷினி | தி/ஸ்ரீசண்முகா இந்து .ம. கல்லூரி | திருகோணமலை | 1 |
| 15 | 4.13 | இசை தனி | 3 | நா. சுஜித்தா | மட/வின்சன்ட மகளிர் கல்லூரி | மட்டக்களப்பு | 2 |
| 16 | 4.5 | கட்டுரை | 4 | செ. சத்தியப்பிரியா | வ/இ.த.ச.கலவன் பாடசாலை | வவுனியா | 3 |
| 17 | 4.5 | பாவோதல் | 4 | ம. பிரஷனா | மட்/புனித சிசிலியா மகளிர் கல்லூரி | மட்டக்களப்பு | 3 |
| 18 | 4.8 | கவிதை ஆக்கம் | 4 | கே. ஹரிஷானந் | கமு/கார்மேல் பாத்திமாக் கல்லூரி | கல்முனை | 2 |
| 19 | 4.9 | சிறுகதை | 4 | டிலான் ஜெயந்தன் | தி/இ.கி.மி.ஸ்ரீகோணேஸ்வரா.இ. கல்லூரி | திருகோணமலை | 1 |

# அகில இலங்கை தமிழ் மொழித்தினம் – 2000
## தேசிய ரீதியில் வெற்றி பெற்ற வடக்கு கிழக்கு மாணவர்கள்

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 20 | 4.10 | பேச்சு | 4 | ஜெ.ஜனனி | தி/புனித மரியாள் கல்லூரி | திருகோணமலை | 1 |
| 21 | 4.13 | இசை தனி | 4 | பு.கலிஸ்ரா | மட்/வின்சன்ட் மகளிர் கல்லூரி | மட்டக்களப்பு | 1 |
| 22 | 4.15 | நடனம் தனி | 4 | இ.பிரதீபா | வ/இறம்பைக்குளம் ம.மவி | வவுனியா | 1 |
| 23 | 4.6 | கட்டுரை திறனாய்வு சொற்பொழிவு | 5 | ம.ரமணசுந்தரன் | மட்/இந்துக் கல்லூரி | மட்டக்களப்பு | 1 |
| 24 | 4.8 | கவிதை ஆக்கம் | 5 | அ. வதனி | மட்/செங்கலடிமத்திய .கலலூரி | கல்குடா | 2 |
| 25 | 4.10 | பேச்சு | 5 | மு.மயூரன் | தி/இ.கி.மிஸ்ரீகோணேஸ்வரா.இ. கல்லூரி | திருகோணமலை | 1 |
| 26 | 4.11 | பாவோதல் | 5 | ம.ஹம்சானந்தி | தி/ஸ்ரீ சண்முகா இந்து ம. கல்லூரி | திருகோணமலை | 1 |

## அகில இலங்கை தமிழ் மொழித்தினம் – 2000

## தேசிய ரீதியில் வெற்றி பெற்ற வடக்கு கிழக்கு மாணவர்கள்

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 27 | 4.13 | இசை தனி | 5 | சு.சுகந்தினி | மட்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி | மன்னார் | 2 |
| 28 | 4.15 | நடனம் தனி | 5 | தி.பிரவினா | தி/சண்முகா இந்து. ம.கல்லூரி | திருகோணமலை | 1 |
| 29 | 4.18 | வில்லுப்பாட்டு | தி போ | குழு | வ/இறம்பைக்குளம்ம.க | வவுனியா | 2 |
| 30 | 4.16 | விவாதம் | தி போ | குழு | தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி | திருகோணமலை | 1 |
| 31 | 4.20 | தமிழ் | தி போ | குழு | தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி | திருகோணமலை | 1 |
| 32 | 4.16 | நடனம் | தி போ | குழு | தி/ ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருகோணமலை | 1 |
| 33 | 4.21 | முஸ்லிம் நிகழ்ச்சி | தி போ | குழு | கல்/ சாகிதாக் கல்லூரி | கல்முனை | 1 |
| 34 | 4.22 | சிங்கள மாணவர் உறுப்பெழுத்து | I | சகிலா ஆரியபாலா | தி/ திஸ்ஸ மகா வித்தி. | திருகோணமலை | 3 |
| 35 | 4.22 | சிங்கள மாணவர் உறுப்பெழுத்து | II | ரி. கே. சானிகா பியுமி | தி/ திஸ்ஸ மகா வித்தி. | திருகோணமலை | 2 |

# வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் – 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 4.1 | வாசிப்பு | 1 | சி. சங்கீர்னா<br>ந. அபிலா<br>பாத்திமா பர்சான | மட்/வின்சன்ட் மகளிர். க<br>தி/புனித மரியாள் கல்லூரி<br>சது/முஸ்லிம் மகளிர். க | மட்டக்களப்பு<br>திருகோணமலை<br>சம்மாந்துறை | 1<br>2<br>3 |
| 02 | 4.1 | வாசிப்பு | 2 | க. கிருத்திகா<br>ச. சதீசன்<br>தீ. கெலன் மேரி | மட்/வின்சன்ட் மகளிர். க<br>வ/வவுனியா தமிழ் ம.ம.வி<br>மன்/புனிதசவேரியர் பெ.தே.பா | மட்டக்களப்பு<br>வவுனியா தெற்கு<br>மன்னார் | 1<br>2<br>3 |
| 03 | 4.2 | ஆக்கத்திறன் கதை கூறல் | 1 | ஐ.பாத்திமா ஜெஸா<br>த. சறோமிக்கா<br>பா. திவாஜினி<br>வி. விஜயதர்ஷிகா | கமு/அல்–மனார் மத்திய.க<br>மட்/செங்கலடி ம.ம.வி<br>தி/சாம்பல் தீவு ம. வித்தி<br>மன்/சித்திவிநாயகர் இ.க | கல்முனை<br>கல்குடா<br>திருகோணமலை<br>மன்னார் | 1<br>2<br>3<br>3 |
| 04 | 4.3 | ஆக்கம் எழுத்து | 1 | மு. ப.றியாஸ்நிஜா<br>க .தபித்தா<br>க. சர்மதா | கமு/அல்-டஸ்ஹர்பெ.உ.த.பா<br>மன்/புனித சவேரியார் பெ.க<br>மட்/புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை ம.வி | கல்முனை<br>மன்னார்<br>பட்டிருப்பு | 1<br>2<br>3 |
| 05 | 4.4 | கட்டுரை வரைதல்கடிதம் எழுதுதல் | 2 | ம. மீரா<br>எம்.ஜ.எம்.முன்சீப்<br>ஏ. ஆர். றக்சானா | வ/சைவப்பிரகாசம் ம..க(கனிஷ்ட)<br>கமு/அஸ்ரக் தே.பாடசாலை<br>சது/சம்மாந்துறை ம.ம.வி | வவுனியா தெற்கு<br>கல்முனை<br>சம்மாந்துறை | 1<br>2<br>3 |

# வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் – 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 06 | 4.4 | கட்டுரை வரைதல்கடி தம்எழுதுதல் | 3 | வீ. மைதிலி<br>சி. அகலிகை<br>அ. சத்தியவாணி | தி/ஸ்ரீ.சண்முகா இந்து ம. க<br>அக்/தம்பிலுவில் ம.வித்தி<br>கமு/சண்முக வித்தி | திருகோணமலை<br>அக்கரைப்பற்று<br>கல்முனை | 1<br>2<br>3 |
| 07 | 4.5 | கட்டுரை – சுருக்கம் – கவிதை நயத்தல் | 4 | செ.சத்தியப்பிரியா<br>எஸ் சோபன்<br>ந.மு.இர்வான் | வ/இ.தி.ச கலவன் பாடசாலை<br>தி/புனித சூசையப்பர்.க<br>தி/கிண்ணியா மத்தியம.வித்தி | வவுனியா தெற்கு<br>திருகோணமலை<br>மூதூர் | 1<br>2<br>3 |
| 08 | 4.6 | கட்டுரை திறனாய்வு இலக்கிய சொற்பொழிவு ஆக்கம் | 5 | ம. ரமணசுந்தரன்<br>க. கருணாகரன்<br>அ.கிளான்சி பீரிஸ் | மட்/இந்துக் கல்லூரி<br>கமு/விபுலானந்தா. கல்லூரி<br>மன்/பற்றிமா ம.வித்தி | மட்டக்களப்பு<br>கல்முனை<br>மன்னார் | 1<br>2<br>3 |
| 09 | 4.7 | குறுநாடகம் ஆக்கம் | தி/ போ | ஸ்ரீ .தேவானந்<br>தி. கோகுலன்<br>மொஹமட் பாறுக் சிபானி | அக்/இராமகிருஷ்ணமிசன்.கல்<br>வ/பூந்தோட்டம் அ.த.க.பா<br>மட்/வாழைச்சேனை அந்-நூர் மத்திய கல்லூரி | அக்கரைப்பற்று<br>வவுனியா தெற்கு<br>மத்தியகல்குடா | 1<br>2<br>3 |
| 10 | 4.8 | கவிதை ஆக்கம் | 4 | கே. ஹரிஷானந்<br>எஸ். கிரிசாந்தன்<br>வி. விதுஜா | கமு/கார்மேல் பாத்திமாக் .கல்.<br>தி/புனித சூசையப்பர். கல்.<br>மட்/செட்டிப்பாளையம் .ம.வ | கல்முனை<br>திருகோணமலை<br>பட்டிருப்பு | 1<br>2<br>3 |

## க்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் – 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | 4.8 | கவிதை ஆக்கம் | 5 | அ . வதனி<br>வி.ஜெயகாந்தன்<br>அப்துல் பாரிஸ் | மட்/செங்கலடி மத்திய .க<br>தி/சம்பூர் ம.வித்தியாலயம்<br>தி/புனித சூசையப்பர். க | கற்குடா<br>மூதூர்<br>திருகோணமலை | 1<br>2<br>3 |
| 12 | 4.9 | சிறுகதை ஆக்கம் | 4 | டிலான்ஜெயந்தன்<br>அபுல்ஹசன்ஜப்பார்<br>ஏ.சுஹைரா | தி/இகிமி.ஸ்ரீ கோணேஸ்வராஇ.க<br>மட்/வாழைச்சேனை அந்நூர்<br>அக்/அட்டாளைச்சேனை.ம.வி | திருகோணமலை<br>கல்குடா<br>அக்கரைப்பற்று | 1<br>2<br>3 |
| 13 | 4.9 | சிறுகதை ஆக்கம் | 5 | க.பா.சர்மிளா<br>பா.துளசிகா<br>பா.கேதீசன் | மன்/சித்திவிநாயகர் இ.க<br>வ/கணேஸ்வரா ம.வித்தி<br>தி/இகிச.ஸ்ரீ.கோணேஸ்வரா இ.க | மன்னார்<br>வவுனியா தெற்கு<br>திருகோணமலை | 1<br>2<br>3 |
| 14 | 4.10 | பேச்சு | 1 | மா. சாயுக்தினி<br>பொ.றொ.நிஷந்தி<br>ர. தில்கா | தி/சண்முகா இந்து மகளிர்<br>மன்/புனித சவேரியர் பெ. க<br>மட்/உதயபுரம் தமிழ். வி | திருகோணமலை<br>மன்னார்<br>மட்டக்களப்பு | 1<br>2<br>3 |
| 15 | 4.10 | பேச்சு | 2 | வி கோகுலன்<br>மு. ஜெய்ஷன்யா<br>எச்.எம்.எப்.ஹஸ்மத் | வ/வவுனியா தமிழ் ம.ம.வி<br>அக்/இராமகிருஷ்ண மிஷன். வி<br>மட்/மீரா பெண்கள் ம.வி | வவுனியா தெற்கு<br>அக்கரைப்பற்று<br>மட்டக்களப்பு | 1<br>2<br>3 |

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் – 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | 4.10 | பேச்சு | 3 | மா .சரண்ராஜ்<br>வி.ஜயந்த ரூபிகா<br>சி.கிருபானந்தகுமார் | மன்/சித்திவிநாயகர் இ. க<br>தி/ஸ்ரீ.சண்முகா இ.ம.கல்லூரி<br>வ/வவுனியா தமிழ் ம.ம.வி | மன்னார்<br>திருகோணமலை<br>வவுனியா தெற்கு | 1<br>2<br>3 |
| 17 | 4.10 | பேச்சு | 4 | வி ஜனனி<br>தே.வித்தியாதரன்<br>ஜே. றாசிமுகம்மட் | தி/புனித மரியாள் கல்லூரி<br>மட்/புனித மிக்கேல் கல்லூரி<br>அக்/முஸ்லிம் மத்திய ம.வி | திருகோணமலை<br>மட்டக்களப்பு<br>அக்கரைப்பற்று | 1<br>2<br>3 |
| 18 | 4.10 | பேச்சு | 5 | மு.மயூரன்<br>தே.செல்ரன்அன்ரனி<br>எஸ். யதர்ஷனி | தி/இகிச.ஸ்ரீ.கோணேஸ்வராஇ.க<br>வ/விபுலானந்த ம.வி (சிரே)<br>கமு/உ.வெஸ்லி உயர்தர .ப | திருகோணமலை<br>வவுனியா தெற்கு<br>கல்முனை | 1<br>2<br>3 |
| 19 | 4.11 | பாவோதல் | 1 | சேகர் நிஷாத்<br>பா.சுகிர்தா<br>கு.இலக்சனா | தி/இகிமி.ஸ்ரீ.கோணேஸ்வராஇ.க<br>மன்/சித்தி விநாயகர் இ. க<br>மட்/ஆரையம்பதி இகிமி.ம.வி | திருகோணமலை<br>மன்னார்<br>மட்டக்களப்பு | 1<br>2<br>3 |
| 20 | 4.11 | பாவோதல் | 2 | கு.பிரதீபன்<br>வி டயானா<br>ந. நவஜீவனா | மன்/சித்திவிநாயகர் இந்துக்.க<br>வ/இறம்பைக்குளம் ம.ம.வி<br>தி/சேனையூர் மத்திய கல்லூரி | மன்னார்<br>வவுனியா தெற்கு<br>மூதூர் | 1<br>2<br>3 |

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் – 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 21 | 4.11 | பாவோதல் | 3 | மா. யுதீக்ஷனி<br>பா.கிருஷ்ணவேணி<br>வி. மாதுரி | தி/ ஸ்ரீ.சண்முகா இந்து ம. க<br>மட்/தேத்தா தீவு ம.வி<br>வ/இறம்பைக்குளம் ம.ம.வி | திருகோணமலை<br>பட்டிருப்பு<br>வவுனியா தெற்கு | 1<br>2<br>3 |
| 22 | 4.11 | பாவோதல் | 4 | ம. பிரஷனா<br>அ. ஸ்யந்தவி<br>ஸ்ரீ. சாமந்தி | மட்/புனித சிசிலியா ம.ம.வி<br>தி/ஸ்ரீ சண்முகா இந்து ம, க<br>அக்/இராமகிருஷ்ண மிஷன்.க | மட்டக்களப்பு<br>திருகோணமலை<br>அக்கரைப்பற்று | 1<br>2<br>3 |
| 23 | 4.11 | பாவோதல் | 5 | ம.ஹம்சானந்தி<br>ம.அ சிறீன்<br>செ.திருச்செல்வன் | தி/ஸ்ரீசண்முகா இந்து ம. க<br>மட்/வின்சன்ட் மகளிர் க<br>மன்/புனித சவேரியார்.பா | திருகோணமலை<br>மட்டக்களப்பு<br>மன்னார் | 1<br>2<br>3 |
| 24 | 4.12 | இசையும் அசைவும் | 1 | க. தனுஷியா<br>ர. சரண்யா<br>த.வாமனன் | மட்/புனித சிசிலியா ம.ம.வி<br>தி/சல்லி அம்பாள் வித்தி.<br>மன்/சித்தி விநாயகர் இ. க | மட்டக்களப்பு<br>திருகோணமலை<br>மன்னார் | 1<br>2<br>3 |
| 25 | 4.13 | இசை-தனி | 2 | ம..விதுஷன்<br>இ.மால்மருகன்<br>செல்வி .க .காவேரி | மட்/புனித மிக்கேல் கல்லூரி<br>தி/இகிமி கோணேஸ்வரா இ.க<br>அக்/தம்பிலுவில் ம. ம.வி | மட்டக்களப்பு<br>திருகோணமலை<br>அக்கரைப்பற்று | 1<br>2<br>3 |

# வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் – 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 26 | 4.13 | நடனம்-தனி | 3 | நா.சுஜீத்தா<br>சிவரஞ்சனி ஸ்ரீதரன்<br>சி.சஞ்ஜீவன் காந்தி | மட்/வின்சன்ட் மகளிர் .க<br>தி/ஸ்ரீசண்முகா இந்து ம. க<br>அக்/திருக்கோவில்மெ.மி.க.பா | மட்டக்களப்பு<br>திருகோணமலை<br>அக்கரைப்பற்று | 1<br>2<br>3 |
| 27 | 4.13 | இசை-தனி | 4 | பு. கலிஸ்ரா<br>க. ஜெயந்தன்<br>சி. பிரவீனா | மட்/வின்சன்ட் மகளிர். க<br>வ/விபுலானந்தா ம.வி.(கனிஸ்)<br>அக்/திருக்கோவில் மெ.மி.பா | மட்டக்களப்பு<br>வவுனியா தெற்கு<br>அக்கரைப்பற்று | 1<br>2<br>3 |
| 28 | 4.13 | இசை-தனி | 5 | சு.சுகந்தினி<br>த.சஞ்சயன்<br>ஆர். வாசுகி | மன்/சித்திவிநாயகாஇந்துக் க<br>மட்/புனித மிக்கேல் கல்லூரி<br>வவு/தமிழ் ம.ம.வி(சி) | மன்னார்<br>மட்டக்களப்பு<br>வவனியா தெற்கு | 1<br>2<br>3 |
| 29 | 4.14 | இசை-குழு | தி/<br>போ | .......<br>.......<br>........ | மட்/புனித மிக்கேல் கல்லூரி<br>தி/புனித சூசையப்பர் கல்லூரி<br>கமு/சாஹிரா கல்லூரி | மட்டக்களப்பு<br>திருகோணமலை<br>கல்முனை | 1<br>2<br>3 |
| 30 | 4.15 | நடனம்-தனி | 1 | அ.மதுகுஞ்சலா<br>இவனா இவாஞ்சனி<br>ரா. பத்மசாலினி | வ/இறம்பைக்குளம் ம.ம.வி<br>மட்/புனித சிசிலியா ம.ம.வி.<br>மன்/சித்திவிநாயகர் இந்துக் க. | வவுனியா தெற்கு<br>மட்டக்களப்பு<br>மன்னார் | 1<br>2<br>3 |

# வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் - 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 31 | 4.15 | நடனம்-தனி | 2 | இ .சிந்துஜா<br>ஜீ. ஜனனி<br>மு. அமிர்தவர்ஷனி<br>பே. பிருந்தா<br>தே. மாதுரி | வ/இறம்பைக்குளம் ம.ம.வி<br>மட்/சிசிலியா ம.ம.வி.<br>மன்/சித்திவிநாயகர் இந்துக்.க.<br>தி/மெதடிஸ்த மகளிர் .க<br>அக்/சரஸ்வதி வித்தியாலயம் | வவுனியா தெற்கு<br>மட்டக்களப்பு<br>மன்னார்<br>திருகோணமலை<br>தம்பிலுவில் | 1<br>2<br>3<br>3<br>3 |
| 32 | 4.15 | நடனம்-தனி | 3 | பு. அமிர்தினி<br>ம. யுமைரூபி<br>இ. நிவேதனா | தி/ஸ்ரீ சண்முகா இந்து. ம.க<br>வ/இறம்பைக்குளம் ம.ம.வி<br>மட்/புனித சிசிலியா ம.ம.வி. | திருகோணமலை<br>வவுனியா தெற்கு<br>மட்டக்களப்பு | 1<br>2<br>3 |
| 33 | 4.15 | நடனம் தனி | 4<br>பே. | இ. பிரதீபா<br>பேபிசர்மிளா | வ/இறம்பைக்குளம். இ.ம.க.<br>தி/மெதடிஸ்த பெண்கள். க. | திருகோணமலை<br>திருகோணமலை | 1<br>3 |
| 34 | 4.15 | நடனம் தனி | 5 | தி.பிரவினா<br>ம. கேசிதா | தி/ஸ்ரீசண்முகாஇ.ம.க.<br>ச/இறம்பைக்குளம் ம.ம.வி | திருகோணமலை<br>வவுனியா தெற்கு | 1<br>2 |
| 35 | 4.16 | நடனம் குழு | தி/<br>போ | குழு<br>குழு<br>குழு | தி/சண்முகா இந்து ம. க.<br>மட்/வின்சன்ட் பெண்கள். க.<br>வ/இறம்பைக்குளம் ம.மவி | திருகோணமலை<br>மட்டக்களப்பு<br>வவுனியா தெற்கு | 1<br>2<br>3 |

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின பெறுபேறுகள் – 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 36 | 4.17 | இலக்கிய நாடகம் | தி | குழு | தி/புனித சூசையப்பர். க. | திருகோணமலை | 1 |
| | | | போ | குழு | வ/சைவப்பிரகாச மகளிர்.க. | வவுனியா தெற்கு | 2 |
| | | | | குழு | ம/இந்துக் கல்லூரி | மட்டக்களப்பு | 3 |
| 37 | 4.18 | வில்லுப்பாட்டு | தி | குழு | வ/இறம்பைக்குளம் ம.ம.வி | வவுனியா தெற்கு | 1 |
| | | | போ | குழு | ம/புனித மிக்கேல் .க | மட்டக்களப்பு | 2 |
| | | | | குழு | தி/உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி | திருகோணமலை | 3 |
| 38 | 4.19 | விவாதம் | தி | குழு | தி/இகி.ஸ்ரீ கோணேஸ்வராஇ. கல்லூரி | திருகோணமலை | 1 |
| | | | போ | குழு | மட் சென்/மைக்கல் கல்லூரி | மட்டக்களப்பு | 2 |
| 39 | 4.20 | தமிழறிவு வினாவிடை | தி | குழு | தி/இகிமி ஸ்ரீகோணேஸ்வரா இ. கல்லூரி | திருகோணமலை | 1 |
| | | | போ | குழு | மட்/மீரா பெண்கள் ம. | மட்டக்களப்பு | 2 |
| | | | | | ம/புனித ஆனாள் ம.வி | மன்னார் | 3 |
| 40 | 4.21 | முஸ்லிம் நிகழ்ச்சி | தி | குழு | க/சாகிராக் கல்லூரி | கல்முனை | 1 |
| | | | போ | குழு | ம/ஒட்டமாவடி மத்திய கல்லூரி | கல்குடா | 2 |

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் – 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 41 | 4.22 | தமிழ்வாசிப்பு சிங்.மாணவர் | விசேட பிரிவு 1 | ஸகிலாஆரியபால | தி/திஸ்ஸ ம. வித்தி | திருகோணமலை | 1 |
| 42 | 4.22 | தமிழ்வாசிப்பு சிங்.மாணவர் | விசேட பிரிவு 11 | சு போதா வத்தேகம | தி/திஸ்ஸ ம. வித்தி | திருகோணமலை | 1 |
| 43 | 4.23 | தமிழ் உறுப்பெழுத்து சிங்.மாணவர் | விசேட பிரிவு 1 | ரெந்திலா நிலாசனி | தி/திஸ்ஸ ம.வித்தி | திருகோணமலை | 1 |
| 44 | 4.23 | தமிழ் உறுப்பெழுத்து சிங் மாணவர் | விசேட பிரிவு 11 | சாணிகாபியுமிபிகே<br>புதரிந்துநவன்குமார | தி/திஸ்ஸ ம.வித்தி<br>வ/பரக்கும் ம.வித்தி | திருகோணமலை<br>வவுனியா தெற்கு | 1<br>2 |
| 45 | | நாட்டிய நாடகம் | தி போ | குழு<br>குழு | வ/இறம்பைக்குளம் ம.ம.வி<br>மட்/வின்சன்ட் மகளிர் .க<br>மன்/சித்திவிநாயகர் இந்துக் .க | வவுனியா தெற்கு<br>மட்டக்களப்பு<br>மன்னார் | 1<br>2<br>3 |

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின் பெறுபேறுகள் – 2000

| தொடர் இல. | விடய இல. | நிகழ்ச்சி | பிரிவு | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 46 | | நாட்டுக்கூத்து<br>இசை நாடகம் | தி<br>போ | ..................<br>..................<br>.................. | வ/பூந்தோட்டம் அ.த.க .பா<br>மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்<br>கமு/கார்மேல் பாத்திமா கல்லூரி | வவுனியா தெற்கு<br>மன்னார்<br>கல்முனை | 1<br>2<br>3 |
| 47 | | நாட்டுக்கூத்து<br>தென்மோடி | தி<br>போ | ..................<br>..................<br>.................. | மட்/பாவற்கொடிச்சேனை .வித்தி.<br>மன்/புனித ஆனாள் ம.ம.வித்தி.<br>வ/விபுலானந்தா மகா வித்தி. | மட்டக்களப்பு<br>மன்னார்<br>வவுனியா தெற்கு | 1<br>2<br>3 |
| 48 | | நாட்டுக்கூத்து<br>வட மோடி | தி<br>போ | ..................<br>.................. | மட்/செங்கலடிமத்தியகல்லூரி<br>வ/விவேகானந்தா ம.வித்தி | கல்குடா<br>வவுனியா தெற்கு | 1<br>2 |
| 49 | | நாட்டுக்கூத்து<br>(சிந்து நடை) | தி<br>போ | .................. | வ/புதுக்குளம் ம. வித்தி | வவுனியா தெற்கு | 1 |
| 50 | | நாட்டுக்கூத்து<br>விசேடகூத்து | தி<br>போ | ..................<br>.................. | தி/விபுலானந்தாக் கல்லூரி<br>வ/இறம்பைக்குளம் ம.ம.வித்தி | திருகோணமலை<br>வவுனியா தெற்கு | 1<br>2 |
| 51 | | சிறுவர்<br>நாடகம் | தி<br>போ | ..................<br>..................<br>.................. | வ/முருகனூர் சாரதா வித்தி<br>தி/புனித மரியாள் கல்லூரி<br>மன்/சித்திவிநாயகர். இ. க | வவுனியா தெற்கு<br>திருகோணமலை<br>மன்னார் | 1<br>2<br>3 |

உதயன் பிரின்டர்ஸ், திருகோணமலை. ☎ 026-20783

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

Cover Printedby U.K. Printerss 98 A. Vivekananda Hill, Colombo 13. Tel: 344046 Fax: 074-614153